A. M. D. G.

உன்னத கவீசுரர், இங்க்லிஷ் ஷேக்ஸ்பியர், உயர்ந்த ஆங்கிலேய பாஷையில் இயற்றி, சென்ற மூன்றேகால் நூற்றாண்டுகாலம், தமிழ் மொழிபெயர்ப்பிலாத

# ஜான் மன்னன்

## நாடகத்தின்

## தத்ரூப தமிழ் அர்த்தம்.

# A VERBATIM TAMIL TRANSLATION

OF

# SHAKESPEARE'S "KING JOHN"

BY

A. PERIANAYAGA CHETTIAR,
CUDDALORE, N.T.

*With an appendix in English containing elucidations on all intricate points of English literature which gave rise to considerable controversy among Shakespearian commentators.*

Printed by Rev. Br. Joseph, S.J., Supdt.,
St. Joseph's Industrial School Press, Trichinopoly.

1921.

[*All rights reserved.*]

# முகவுரை.

---

ஜெகப்பிரிய செஞ்சுடர் சிறப்புற்றோர், ஷேக்ஸ்பியர் என்னும் சிறந்த இங்கிலீஷ் புலவர், செந்தமிழ்க் கிளையான சிங்கார ஆங்கிலேய பாஷையில், செவிக்கினிது விருந்தளிக்குமாறு, சீர்பிரமாணமமைந்த நடையில், செவ்வனே இயற்றி, சிலாக்கிய மிக்க பெற்ற நவரஸ நாடகங்கள் ஒவ்வொன்றும், சொல்வன்மை, பொருள்வன்மை என இவ்விரு வன்மைகளையும் இணைத்தமைத்து, அலங்கரிக்கப்பட்டுள்ள, பாங்கான செய்யுள் திரட்டு. இப்பாஷை அலங்காரத்தை முன்னிட்டு, ஆங்கிலேய பாஷையை முற்றுணர்ந்து கற்கவேண்டிய F.A., B.A. என்னும் மேல்வகுப்பு மாணவர்க்கு, இந்நாடகங்கள், பாடமாக, வருடப் பிரதிவருடம் மாற்றி, ஏற்படுத்தப்பட்டுள. பாஷைநடை கஷ்டத்தை நிவர்த்தித்து, பொருளை கிரகிக்கச்செய்யும் நோக்கத்தை அநுசரித்து, சில மகான்கள் இந்நாடகங்களில் சிலவற்றை, ஆங்கிலேய பாஷையிலேயே, சுலப வசனநடையில், சுருக்கி கதைகளாக, பிரசுரித்திருக்கின்றனர். அவ்வண்ணம் அன்னவர் வரைந்த அந்நூல்கள், மாணவர் மயக்கமின்றி மறைபொருளாயிருக்கும் கருத்தைக் கற்றுணர, மார்க்கமாயிருக்கின்றன வென்பது திண்ணம். ஆயினும், அவ்வாறு உருமாறிய நாடகங்கள்; தோகையிழந்த மயில்போலும், அரசிழந்த வேந்தனைப்போலும், தசையற்ற அஸ்திபோலும், சொல்வன்மையை முற்றிலுமிழந்து, ஆதிசீர் அழிந்துவிட்டன. இக்குறையைக் குறிப்பில் வைத்து, கவீசுரருடைய சொற்சாதுர்யம் சிறிதும் குன்றாது, சர்வரஸத்துடன் அமைந்துள்ள இந்நாடகங்களை, ஆங்கிலேய பாஷை பயிலாது, தம் தாய்பாஷை தமிழையே ஆதாரமாய்க் கொண்டகன ஜனத்திரள் சர்வமும் கற்றுணர்ந்து, களிக்கும்பொருட்டு, பதத்திற்கு பிரதிபதமமைத்தல் பூர்த்தியென்றெண்

ளுது, ரஸம் ததும்பி நிற்கும் பற்பல சிறுபழங்களை யொக்கும் பல பல இங்க்லிஷ் சொற்களின் சாரத்தைப் பிழிந்தெடுத்து, தமிழ்மொழிகளில் புகட்டியதுபோல், மொழிபெயர்க்கப்பட்ட ‘**ஜான் மன்னன்**’ நாடகத்தின் இத்தத்ரூப பதவுரையை கற்றோர் கண்ணோக்கங் கூர்ந்து, கருணையுடன், குற்றங்குறையிருப்பின் குறிப்பிட்டறிவித்து, பட்சத்தோடு பரிபாலித்துவர தயைபுரிவரென்று, இந்நூலை வெளியிடும் யான் நம்புகின்றேன். அன்றியும், ஆரிய அரசியின் அரிய சகோதரியாய் ஆட்சி வகித்து, ஆந்திரம், கன்னடம் முதலிய அரும் பாஷைகளை மைந்தராயீன்று,* காவியமுட்பட கலைஞான மறுபத்து மூன்றோடொன்றை ஆபரணமாயணிந்து, நாற்றிசையும் கீர்த்தி வீசிய நாவலர்தம் நாண்மலர்நாவில் நர்த்தனம் புரிந்து, வீரகண்டாமணி பூண்ட வித்வசிகாமணிகள் விசித்திரவாக்கை விமானமாய்க்கொண்டு, திராவிட நற்றிருநாடெங்கும் “இனிமையே” என போற்றிட ஏகசக்ராதிபத்தியம் செலுத்திவந்து, தற்காலம், தக்கோரால், தற்காப்பற்று, தன் நகரிலேயே, தன் நிலையிழந்து, தயங்கி நிற்கும் நமது “தமிழ்” அரசியின் சீரும் சிறப்பும் செழித்தோங்கவேணுமென்பதும் அடியேனின் அபேட்சை.

இங்ஙனம்,

A. பேரியநாயகம்.

---

* That princely beauty, Tamil who, in days of yore, won the surname “The sweet,” and who, then, gave birth to such admirable languages as Andra (Telugu), Canarese, Malayalam, Thuluvu, etc., is now made the mother of a hybrid tongue formed of corrupt Tamil and ill-tuned English, in indiscriminate proportion, and it is a pity that this mixed-tongue-mistress, as she lifts up her head, does abuse both the beauteous languages contributing to her origin, inasmuch as, her very existence avows that each of them is endowed with an inadequate vocabulary.—A. PERIANAYAGAM.

# ஷேக்ஸ்பியரின் ஜீவிய சரித்திரம்.

இப் பூவுலகிலுதித்த புலவரிலெல்லாம் பூரணபுகழ் பெற்ற புலவர்பெருமானும் ஷேக்ஸ்பியர். இவர் இங்க் லண்டமா ராஜ்யத்தில், ஸ்டார்ட்வோர்ட்-ஆன்-ஆவன் என் னும் தேசத்தில், அத்தியக்ஷ ஜார்ஜ் திருநாளன்று, 1564-ம் ஆண்டு, ஏப்ரில் மாதம் 23-ம் தேதி, பிறந்தார். ஜான் ஷேக்ஸ்பியர் என்னும் சாந்தகுண சீலரும், மேரி ஆர்டன் என்னும் மாதுசிரோமணியும், இப்புலவரின் பெற்றோர். இத் தாய்தந்தையர் புரிந்த தவப்பயனாய், இவர்களுக்குத் தலைப்புதல்வராய் பிறந்த இவர், இத் தாரணிக்கும் தலைப் புலவராய்த் துலங்க, வரம்பெற்றவரென்று சொல்லலாம். இப்புலவரின் பிதா மாதா இருவருமே, மேன்குலத்தைச் சேர்ந்தவர்கள். அதெப்படியென்றால், இவருடைய பிதா வழியில் தோன்றிய முன்னோர் ஒருவர், போஸ்வொர்த் போர்க்களத்தில், ரிச்மாண்ட் இறைவர்பக்கம், போர் புரிந்த தாக வதந்தி. ஆகவே, அம்மூதாதை ராஜபக்தி விசுவா சத்துடன் புரிந்த வீரிய பல நற்கிரியைகளுக்காக, 7-வது என்ற்ரி மன்னரிடம் சம்பாவனையாக, வாரீக் மாகாணத்தில் அநேக பூஸ்திதிகளும், காணியாட்சிகளும், அவர் பெற்று, அவருடைய சந்ததியார், தங்கள் பெயரை சதாகாலத்துக் கும் நிலைநாட்ட உதித்த இக்குழந்தை பிறந்த காலம்வரை யில், அவைகளை சகல செல்வாக்குடன் அநுபவித்து வந் தார்கள். ஷேக்ஸ்பியருடைய தாயாரும் வாரீக் மாகாணத் தில் பூர்வீகமானதும், புகழ்பெற்றதுமான ஓர் வம்சத்தைச்

சேர்ந்த ராபர்ட். ஆர்டன் என்னும் சீமானுக்கு, ஏகபுத்திரியான, செல்வபுதல்வி.

ஷேக்ஸ்பியர் பிறந்த வருடத்தில், ஸ்டார்ட்வோர்டில், பெருவாரி கொள்ளைநோய் பரவியிருந்தமையால், அவ்வருடம் மறக்கக்கூடாத வருடமாயிற்று. ஆனால் அந்நோய், மாட்சிமை வீசிய இக்குழந்தையின் தொட்டில்பக்கம், அணுகாது விலகிவிட்டது. ஷேக்ஸ்பியரின் தகப்பனார் அக்காலத்தில் தனவந்தராயிருந்தமையால், அக்கொடிய வியாதியால் சங்கடத்திற்குள்ளான ஏழைப்பிரஜைகளுக்கு, தம்மால் கூடிய உதவிபுரிந்துவந்தார். அப்படிப்பட்ட நிலைமையிலிருந்த அவ்வுத்தமர்க்கு, குழந்தைக்கு பதினோராம் பிராயம் முடிந்தவாக்கில், சம்பத்து குறைந்து, தரித்திரதசையடைந்து, 1578-ம் ஆண்டில், அவரால் ஏழைகளுக்கேற்பட்ட வரியை முதலாய் செலுத்தமுடியவில்லை. ஆகையால் அவர் வரி செலுத்தவேண்டிய கடமையிலிருந்து நிவர்த்திக்கப்பட்டார். ஆகவே, அக்காலத்திய சட்டதிட்டம் இன்னும் சிலாக்கியமானதே.

ஷேக்ஸ்பியர், தன் பதினோராம் பிராயம் வரையில், ஸ்டார்ட்வோர்டிலேயே இருந்த ஓர் பாடசாலையில், கல்வி பயின்றுவந்தார். பிறகு, எவ்வளவு காலம், எவ்வூரில், கல்வி பயின்றாரென்பதற்கு யாதொரு தகவலும் கிடையாது. ஆனால், இவர் இளமையிலேயே தன் வித்தியார்த்தியை நிறுத்திவிட்டாரென்று ஏற்படுகின்றது. ஏனென்றால், இவருடைய பதினெட்டாம் பிராயத்திலேயே, ஷாட்டரி என்னும் தேசத்தில், தக்க ஐவேஜியுள்ள மிராசுதாரான

ரிச்சர்ட் ஆத்தவே என்னும் குடியானவர் குமார்த்தியாய், தன்னைவிட பிராயத்தில் எட்டு வயது மூப்பான, ஆன்னி ஆத்தவே என்னும் பெயர்பூண்ட கன்னிகையை மணம் புரிந்தார். ஷேக்ஸ்பியருக்கு 21 பிராயமாகுமுன் அவர் மூன்று குழந்தைகளுக்குத் தகப்பனுனர். அதெப்படி யென்முல், சுசான்ன என்னும் பெண்மணி ஜேஷ்டபுத்திரியாகப் பிறந்து, பிறகு, ஒரே சூலில் ஓர் ஆண்குழந்தையும், ஓர் பெண்குழந்தையும், இரட்டைப் பிள்ளைகளாய்ப், பிறந்தன. அவ்விதம் பிறந்த ஆண்குழந்தையின் பெயர் ஆம்னட், பெண்குழந்தையின் பெயர் ஜூடித்.

இவ்விதம் குடும்பவிருத்தி அதிவிளைவில் பெருகியபடியாலும், தகப்பனுடைய ஐவேஜு குறைந்தபடியாலும், இவ்விரு சந்தர்ப்பங்களும் ஷேக்ஸ்பியரை லண்டன்மா நகரடைந்து, பிழைக்கும் வழி தேடும்படி தூண்டிவிட்டன. இவைகளோடுங்கூட, சர். தாமஸ் லூஸி என்பவருடைய மிருகாசயத்திலிருந்து துர்ச்சகவாசத்தால் ஏதோ ஒரு மானை அபகரித்துவிட்டதாய் பரம்பரையாய் வெளியிடப்பட்டிருக்கும் ஆதாரமற்ற கதைக்கு எவ்வித மதிப்பும் கொடாமல், ஏதோ பாலிய சேஷ்டையால் சர்க்காரை மதியாது, சட்டவிரோதஞ் செய்த காரணமும், தன் சொந்த தேசத்தை விட்டகல்வதற்கு, முகாந்தரமாயிற்று என்று சொல்லலாம். அன்றியும் இவருடைய பந்துவும், பேர் போன நாடகதாரியுமான தாமஸ் க்ரீன் என்பவர், அத்தருணத்தில், லண்டன் பட்டணத்தில் வசித்துவந்தார். எல்லாவற்றையும் பார்க்கிலும், தனக்குண்டாயிருந்த புத்தி சாதுர்யம் தனக்கே நாளடைவில் புலப்பட்டு, அதை உப

யோகிக்கக்கூடிய தக்கின இடம் தானே தேடவேண்டிய அவசியம் தனக்கு சுயமாய் தோன்றியிருக்கக்கூடியதும் சகஜம். ஆகவே, இப்படிப்பட்ட ஏதோ சில காரணங்களை முன்னிட்டு இவர் 1586-ம் ஆண்டில், லண்டன்மா நகரடைந்து, அவ்விடத்திலேயே வசித்து வந்தார்.

இவ்விதம் இவர் லண்டன் போய்ச் சேர்ந்து துவக்கத்தில் ஓர் நாடகசாலையில் ஓர் நாடகதாரியாகவும், அந்நாடக சாலைக்கு நாடகங்கள் திட்டஞ்செய்யும் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டார். அதிசீக்கிரத்தில், அதாவது 1589-ம் வருடத்தில், அந்நாடகசாலை வருமானத்தில் தனக்கும் ஓர் பங்கு ஏற்படுத்திக்கொள்ளும் இயல்பு இவர்க்குண்டாயிற்று. இதற்குமேல் இவருடைய நாடகங்கள் பிரபல்யமடைந்து நன்குமதிக்கப்பட்டு வந்தன. அன்றியும், 1592-ம் ஆண்டில், லண்டன் நகரில் பரவியிருந்த கொள்ளைநோயால் இவருடைய நாடகசாலை மூடப்பட்டிருந்தமையால், அவ்வோய்வு நாளில் தன்னுடைய நுண்ணறிவைப் பிரயோகித்து "வீனசும் அதோனிசும்" என்கிற இவருடைய முதல் செய்யுள் தொகுதியை 1593-ம் ஆண்டில் பிரசுரித்து வெளிப்படுத்தினர். அடுத்த வருஷத்திலேயே மற்றொரு நாடகத்தையும் பிரசுரித்தார். இதற்குமேல் இவருக்கு சில மகான்களால் பட்டங்களும், வெகுமானங்களும் கிடைத்தன. பிறகு அக்காலத்திய மகாராணி எலிஸபெத் அரசியே, இவருடைய புத்திகூர்மையை அறிந்து, மகிழும்படி நேர்ந்ததுமல்லாமல் அநேக வீரிய பிரபுக்களும் இவர்க்கு சிநேகிதரானார்கள்.

இவர் இவ்விதம் மென்மேல் விர்த்தியடைந்து சகல சம்பத்துடன் மகத்தாய் வாழ்ந்திருந்த சமயத்தில் இவர்க்கு ஓர் ஆழுத்துயர் நேர்ந்தது. அதென்னவெனில், இவருடைய ஏகபுத்திரனுன ஆம்னட் என்னும் பாலன், அவனுடைய பதினேராம்பிராயத்தில், இறந்து போனுன். இப்பாலன் இறந்தது ஷேக்ஸ்பியருக்குத்தான் நஷ்டமென்று சொல்லலாகாது. இவ்வுலகிற்கே பெரிய நஷ்டமென்று சொல்லத்தகும். ஏனென்றுல் அக்குழந்தை அவ்விளம் பிராயத்திலேயே அவனுடைய குசாக்கிரபுத்தியால் பிரகாசித்தனனும்.

ஷேக்ஸ்பியர் தன்னைப்பெற்றோர்க்கு உவந்த குமாரனுக இருந்ததுமல்லாமல் கிருபை நிறைந்த நெஞ்சமுள்ளவர்; ஆகையால் இவருடைய அன்னையும் பிதாவும் இவர்க்குண்டான பாக்கியத்திற்கு பங்காளிகளானுர்கள். அவர்களுக்கும் தனக்கிருந்த செல்வாக்கையும், செல்வத்தையும் பிரயோஜனப்படுத்தி, அவர்களுடைய கஷ்ட தசையை நிவர்த்தித்து, அவர்களை சுகமாய் வாழ்ந்திருக்கும்படி செய்தார். பிறகு, இவர் தன்புத்தி சாதுர்யத்தை மென்மேல் பிரயோகித்து, கல்வியில் சிறந்த அநேக நூதன செய்யுள் தொகுதிகளும் அடிப்பாக்களும் முடித்து வெளிப்படுத்தி, போதுமான திரவியம் சம்பாதித்தார் அத்திரவியத்தைக்கொண்டு, தன்னுடைய சொந்த தேசமாகிய ஸ்டார்ட் வோர்டிலேயும் தான் பிறந்த மனைக்கருகில், காணி பூமிகளை நெடுகிலும் கிரயங்கொண்டு சேர்த்து, தன்னுடைய சொத்தை விசாலப்படுத்தி, அதிலிருந்து வருஷத்தில் சுமார் 1000 பவுன் கிடைக்கும்படி செய்துகொண்டார். இவ்விதம் இக்காரியங்களை

சீரிட்டவகையிலும், உலக ஸம்பிரதாயங்களில் கூட, இவர்க்கிருந்த வியவகார சக்தியும், யுக்திபுத்தியும் வெளிப்பட்டன.

கடைசியாய் 1604-ம் ஆண்டில், அதாவது அவருடைய 40-ம் பிராயத்தில் தன்னுடைய தொழிலை விட்டொழித்து, தன்னுடைய சுதேசத்திற்கே திரும்பிவந்து, தான் பிறந்த மனை யோரம் தான் சம்பாதித்த சொத்தின் பலனைப் பெற்று, தன்னுடைய தாய்தந்தையரை, அவர்களுடைய அந்திய காலத்தில், ஆதரிப்பதிலும், தன்னுடைய அரும் புதல்வி சுசானவை தக்க கணவனுக்கு கன்னிகாதானஞ் செய்து கொடுத்து, அம்மங்கை கருப்பிணியாயிருந்து, ஒரு குழந்தையைப்பெற்று, தாயானதைக் கண்டுகளிப்பதிலும், தன்னுடைய சிநேகிதர்களை வரவழைத்து உபசரிப்பதிலும், தன்னுடைய பாக்கிஜீவகாலத்தை சிலவழித்துவந்தார். ஆனால் இவர் சமயாசமயங்களில் லண்டன் பட்டணம் போய் வருகிறதும் உண்டு. ஆங்கிவர்க்கேற்பட்டிருந்த பிரபுஸ்தான சிநேகிதர்கள் இவரை மறவாது, நன்கு மதித்து வந்ததுமல்லாமல், எலிஸபெத் அரசியைப்போலவே, அவ்வரசிக்குப்பின்னால், இங்கிலீஷ் சிங்காசனமேறிய ஜேம்ஸ் மன்னரும் ஷேக்ஸ்பியர் பேரில் அன்பு பாராட்டி வந்தனராம். ஆகவே இவர், மேலோர், கீழோர், சிநேகிதர், பகைவர்முதலிய யாவராலும் நேசிக்கப்படவும், புகழப்படவும், பாத்திரரானார்.

இவ்வாறு, ஈராறு வருடங்கள் கழிந்தபின், கல்லும் உருகபாடிய இக்கதா நாயகனையும், காலமென்னும் கிழவன் கைநெகிழவிடவே, விதியென்னும் பாம்பு விரைவில் துரத்த,

விண்ணுலகோர்க்கும் வெண்பா பாடவோ, இப்புண்ணிய புலவர், நடுபிராயத்திலேயே பிணிபட்டு, சின்னாள் துன்புற்று, கடைமுடிவில் மானிடஜென்மத்திற் கேற்பட்ட மரணம் என்னும் கதிக்குள்ளானர். அவ்வந்த்யநாள் என்னுளென்றுலோ 1616-ம் ஆண்டில், அவருடைய 52-ம் பிராயத்தில், அவர் பிறந்த நாளாகிய ஏப்ரில் மாதம் 23-ம் தேதியே.

இவருடைய மனைவியார் ஆன்னி ஆத்தவே என்னும் அம்மையார் தன்னுடைய பர்த்தா இறந்ததும் ஆருத்துயர் கடலில் அமிழ்ந்து, ஆண்டு எட்டுஆனதும் காலஞ்சென்றனர். புலவருடைய பிரிய குமாரத்தி சுசானவை டாக்டர் ஆல் என்பவருக்கு கலியாணஞ்செய்து கொடுத்து, அம்மாது எலிஸபெத் என்னும் ஓர் பெண்ணைப்பெற்றுள். அப்பெண்ணுக்கும் விவாகமானபோதிலும், புத்திர சந்தானமில்லாமல் இறந்துவிட்டனள். ஷேக்ஸ்பியருடைய இரண்டாவது குமாரத்தி ஜூடித் என்னும் பெண்ணும் தக்க கணவனை மணம் புரிந்து, அப்பெண்ணுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தும், அம்மூன்று குழந்தைகளும் 20 பிராயமாவதற்கு முன்னமேயே இறந்துவிட்டன.

ஆகவே ஷேக்ஸ்பியரின் பௌத்திரியாகிய எலிஸபெத் என்னும் பெண்மணி இறந்ததும், புவனம்புகழ் புலவருடைய சந்ததி அழியும்படியான தௌர்பாக்கியம் இப்பூவுலகிற்கு நேர்ந்தது.

---

## ஜான் மன்னனின் வம்சவரிசை கிரமத்தை காண்பிக்கும்

## கோத்திரக்குறிப்பு.

**இரண்டாவது என்ற்ரீ = எலினோர்** (வ்ரான்ஸ்ராஜ்ய ஏழாவது லூயிஸ் அரசனின் விலக்கப்பட்ட பெண்ஜாதி.)

- வில்லியம் — மரணம் 1156
- என்ற்ரீ — ம. 1183
- முதல் ரிச்சர்ட் — சிம்ம இருதயதோர் 1189-1199 ம. 6-4-1199.
  - வால்கன் ப்ரிட்ஜ் (சோரகுமாரன் பாஸ்ட்டார்ட்.)
- ஜெவ்ரோ = கான்ஸ்டன்ஸ்
  - ஆர்தர்
- ஜான்
  - மூன்றுவது என்ற்ரீ
- எலினோர் = அல்வான்சோ.
  - லேடி பிளாஞ்ச்.

# இந்நாடகத்தின் ஆரம்ப சம்பாஷணைக்கு முந்தின வரலாறு.

இங்க்லண்டுமா ராஜ்யத்தை, 1154-ம் ஆண்டுமுதல் 1189-ம் ஆண்டுவரையில், அரசாண்ட இரண்டாவது என்ற்ரீ மன்னருக்கு பாலிய பாவமடைந்த குமாரர்கள் நால்வர் இருந்தனர். மேற்கண்ட கோத்திரக் குறிப்பில் காண்பிக்கப்பட்டிருக்கிறபிரகாரம் அவர்களில் மூத்தவர்க்கு என்ற்ரீ என்றும், அவருடைய தம்பிமார் மூவர்க்கு, ரிச்சர்ட் என்றும், ஜெவ்ரோ என்றும், ஜான் என்றும் பெயர். இவர்களில் என்ற்ரீயும், ஜெவ்ரோயும் தகப்பனுருடைய ஜீவகாலத்திலேயே இறந்துவிட்டனர். ஆகையால் தகப்பனுர் காலஞ் சென்றவுடன் இரண்டாவது குமாரரான ரிச்சர்ட் என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவர் மகா பராக்கிரமசாலியான கீர்த்திபெற்ற வீரர். ஆகையால் இவருக்கு சிம்ம இருதயத்தோர் என்று பட்டப்பெயர் உண்டாயிற்று. இவர் அரசாட்சி வகித்த தருணத்தில் கிறிஸ்துவர்களுக்கு மகா பூஜிதமான புண்ணிய க்ஷேத்திரமாகிய ஜெருசலேமாநகரை செலடின் என்னும் மகம்மதிய அரசன் பிடித்துக்கொண்டதாய் கேள்வியுற்று, கிறிஸ்துவ ராஜாங்க மன்னர்களெல்லாம் மகா மனக்கலக்கமடைந்து, அந்நகரை மகம்மதியரிடமிருந்து மீட்கும்பொருட்டு, ரிச்சர்ட் மன்னரும், இன்னு மற்ற அரசர்களும் (Holy War) என்னும் புண்ணிய போர் புரிவதற்காக ஜெருசலேமாநகர் இருக்கின்ற பால்ஸ்டைன் ராஜயத்திற்குச் சென்று, அவ்விடத்தில் இவ்வரசர்கள் துவக்கத்தில் ஒன்றுகூடி யுத்தஞ்செய்து வெற்றியடைந்தவகையில், ரிச்சர்ட் மன்னருக்கு மிக்க கீர்த்தி உண்டான திமித்தம், மற்ற அரசர்களுக்கு பொருமை உண்டாகி, அவர்கள் தங்கள் தேசங்களுக்குத் திரும்பி வந்துவிட்ட

னர். ரிச்சர்ட் மன்னர் இவ்விதம் தனிமையாய்விட்டபடியால், தான் கொண்ட கோரிக்கையை பூரணமாய் நிறைவேற்றக்கூடாமற் போனபோதிலும், கிறீஸ்துவர்களுக்குக் கூடியவனாயில் .சாதகமான ஓர் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டு திரும்புகையில், கதாநாயகருடைய சரித்திரத் தொகுதிப்பிரகாரம் இவர் ஆஸ்ட்ரியா தலைமை இறைவரால் கொல்லப்பட்டார். இவருக்கு சந்ததியில்லை, இவர் தமையனை என்றிக்குமில்லை. ஆனால் இவருடைய தம்பியாகிய ஜெவ்ரோயுக்குமாத்திரம் ஆர்தர் என்னும் சிறு பாலனிருந்தான். ஆகவே, அவனே ரிச்சர்டுக்குப் பின்னர் பட்டத்துக்குரியோன். ஆயினும் அவனுடைய பாத்தியதையை சிறிதும் மதியாது, அவனுடைய சிற்றப்பனாகிய ஜான் பட்டந்தரித்துக்கொண்டார். அதன்மேல் ஆர்தரின் தாயாராகிய கான்ஸ்டன்ஸ் பெருமாட்டி, வ்ரான்ஸ் ராஜ்ய அரசராகிய விலிப் மன்னரிடம், இவ்வக்கிரமத்தைப்பற்றி முறையிட்டுக்கொண்டு, தன் குழந்தைக்கு பட்டஞ்சூட்டி வைப்பதற்கு உதவி புரியவேணுமென்று கேட்டுக்கொண்டனள். விலிப் மன்னரும் அவ்வேண்டுகோளுக்கிணங்கி, ஜான் மன்னனோடு போர்புரிய கருதி, ஆஸ்ட்ரியா தலைமை இறைவனையும் தனக்கு துணையாக வரும்படி கோரிக்கொண்டு, வ்ரான்ஸ் ராஜ்யத்திலுள்ள இங்கிலீஷ் ஆதீனமாகிய ஆஞ்சியாஸ் நகரத்தை முதலில் பிடித்துக்கொள்ளும்பொருட்டு, போர்கோலமாய் படையெடுத்துச் சென்று, அந்நகரின் கோட்டைவாசலுக்கு முன்னால் பாளையமிறங்கி, அக்கோட்டையை முற்றுகை செய்வதற்குமுன், தன்னுடைய ஸ்தானாபதியாகிய ஜட்டிலன் என்பவனை இங்க்லன்டுக்கு ஜான் மன்னரிடமனுப்பி, சமாதானமாகவே, அவர் அவருடைய தமையன் புத்திரனை ஆர்தருக்கு ராஜாங்கத்தை ஒப்புக்கொடுத்துவிடுவாரா, இல்லையாவென்று கேட்டனுப்புகின்றார்.

---

## நாடகதாரிகளின் ஜாப்தா.

**ஜான் மன்னன்.**

**என்ற்ரீ** ராஜகுமாரன், அவர் மகன்.

**ஆர்தர்,** பிரிட்டேன் மாகாணத்தின் இறைவனும், ஜான் மன்னன் தமையன் மகனும்.

**வில்லியம் மேர்ஷல்,** பெம்ப்ரோக் மாகாணத்தின் பிரபு.

**ஜேfவ்ரோ fவிட்ஸ்** பீட்டர், எஸ்ஸக்ஸ் மாகாணத்தின் பிரபு.

**வில்லியம் லாங்ஸோர்ட்,** சாலிஸ்பரி மாகாணத்தின் பிரபு.

**ராபர்ட் பிகட்,** நார்fவோக் மாகாணத்தின் பிரபு.

**யூபர்ட் தே பர்க்,** ராஜாவின் பராபத்தியன்.

**ராபர்ட் fவால்கன் ப்ரிட்ஜ்,** சர் ராபர்ட் fவால்கன் ப்ரிட்ஜின் மகன்.

**fவிலிப் fவால்கன் ப்ரிட்ஜ்,** அவன் தாய்வழி சகோதரன். (பாஸ்ட்டார்ட்.)

**ஜேம்ஸ் கர்னி,** லேடி fவால்கன் ப்ரிட்ஜின் சேவகன்.

**பீட்டர்,** பாம்fவ்ரட் தேசத்தோர், ஓர் தீர்க்கதரிசி.

**fவிலிப் மன்னன்,** fவ்ரான்ஸ் ராஜ்யத்தின் அரசன்.

**லூயிஸ்,** டாfவீன் ராஜகுமாரன், அவர் மகன்.

**லிமோஜிஸ்,** ஆஸ்ட்ரியா தலைமை இறைவர்.

**கார்டினல்பாண்டல்ஃவ்,** பாப்பானவரின் பிரதிநிதி.

**மேலன்,** ஓர்ஃவ்ராஞ்ச் அதிபதி.

**ஜட்டிலன்,** ஃவ்ரான்ஸ் அரசரின் ஸ்தானுபதி.

**எலினோர்,** ஜான் மன்னரின் தாயார்.

**கான்ஸ்டன்ஸ்,** ஆர்தரின் தாயார்.

**ப்ளாஞ்ச்** ராஜபுத்திரி, கஸ்ட்டீல் ராஜாவின் மகளும், ஜானின் மருமகளும்.

**லேடி ஃவால்கன் ப்ரிட்ஜ்,** ராபர்ட், ஃவிலிப், ஃவால்கன் ப்ரிட்ஜ் இவர்களின் தாயார்.

இன்னும் பிரபுக்கள், பெருமாட்டிகள், ஆஞ்சியர்ஸ் நகரத்தார், நகராதிகாரி, தூதர்கள், உத்தியோகஸ்தர், வீரர்கள், சேவகர் முதலியவர்.

# ஜான் மன்னன் ராஜரீகமும், மரணமும்.

## முதல் பிரிவு.

### முதல் காட்சி.—ராஜாவின் கோலுமண்டபம்.

ஜான், எலினேர், பெம்ப்ரொக், எஸ்ஸெக்ஸ், சாலிஸ்பரி இன்னுமற்றேரும் ஜட்டிலனேடுங்கூடவருக.

**ஜான் மன்.**—ஜட்டிலனே சரி, உடனே சொல்லும், வ்ரான்ஸ் அரசுக்கு நம்மிடம் ஆகவேண்டியதென்ன?

**ஜட்டி.**—வந்தனேபசாரங் கூறியபின், வ்ரான்ஸ் அரசர், பின்வருமாறு, எனது தற்சமய (1) ஒழுக்கத்தையும் சம்பாஷணத்தையுங்கொண்டு, தங்கள் ராஜ் மாட்சிமையினிடம் அதாவது, இங்கு பிரசன்னமாயிருக்கும் இங்க்லன்டின் இரவல் மாட்சிமையினிடம் பேசுகின்றனர்.

**எலினேர்.**—விபரீத ஆரம்பம்: இரவல் மாட்சிமையாமே!

**ஜான் மன்.**—நற்றயே பேசவேண்டாம்; தானுபத்திய சமாசாரத்தைக் கேளுங்கள்.

**ஜட்டி.**—வ்ரான்ஸ் ராஜ்யத்தின் விலிப் அரசர் ஞாயத்தோடும், தங்களுடைய காலஞ்சென்ற சகோதரர் ஜெவ்ரேயின் குமாரனை ஆர்தர் பிளன்டாஜனட் பக்ஷம், உண்மையான விசுவாசத்துடனும், இந்த நேர்த்தியான தீவுக்கும் இதைச் சேர்ந்த மாகாணங்களுக்கும், மேலும் அயர்லன்ட், பாய்க்ட்டியர்ஸ்; ஆஞ்ஜோ, டூரேயின், மேயின் இவைகளுக்கும் ஆர்தருக்குள்ள மகா நீதியான பாத்தியதையை நிலை

(1) See Appendix.

நாட்டி, மேற்கூறிய அநேக அரசாட்சிகளை தாங்கள் துராகிருதமாய் வகித்துக்கொண்டு, எந்த வாளாயுதத்தால் ஆண்டுவருகின்றீர்களோ, அந்த வாளாயுதத்தை இனி கீழே வைத்துவிடும்படிக்கும், அதே வாளாயுதத்தை தங்கள் தமையன் மகனும், கிரமப்படி ராஜரீகத்திற்கேற்ற அரசனுமான பாலிய ஆர்தர் கையில் ஒப்புவிக்கும்படிக்கும், கோருகின்றனர்.

**ஜான் மன்.**—இதற்கு நாம் இணங்காவிட்டால் என்ன சம்பவிக்கும்?

**ஜட்டி.**—இவ்வளவு பலாத்காரமாய் தடுக்கப்பட்டிருக்கும் இப்பாத்தியதைகளைப் பலவந்தத்தால் ஸ்தாபிக்கும் பொருட்டு, பயங்கரமான இரத்தப்பெருக்கு யுத்தம் பராக்கிரமத்துடன் நடத்தப்படும்.

**ஜான் மன்.**—இங்கு யுத்தத்திற்கு யுத்தமும், இரத்தத்திற்கு இரத்தமும், அதிகாரத்திற்கு அதிகாரமும் நம்மிடத்திலுமிருக்கின்றது: இதேபிரகாரம் வ்ரான்ஸ் அரசருக்கு நீர் பதில் தெரிவியும்.

**ஜட்டி.**—அப்படியானல் என் தானபத்தியத்தின் கடை முடிவு விஷயமாகிய என்னரசரின் யுத்த சபதத்தை, என் வாய்மொழி வழியாய் பெற்றுக்கொள்ளும்.

**ஜான் மன்.**—என் சபதத்தையும் நீர் அவருக்கு கொண்டுபோம், இவ்வளவோடு மரியாதையுடன் புறப்படும்: வ்ரான்ஸ் அரசர் கண் முன்னல் (2) மின்னலைப்போல் போம் சேரும்; ஏனென்ருல் நீர் சாவகாசமாய் போய் நம்முடைய பதிலை தெரிவிக்கிறதாயிருந்தால் நாம் அதற்கு முன்னதாகவே அவ்விடமிருப்போம், நம்முடைய பீரங்கிகளின்

---

(2) See Appendix.

இடி முழக்கம் அங்கே அதற்குள் கேட்கப்படும்; ஆகை யால் உடனே இவ்விடத்தைவிட்டு போம்! நீர் நம்முடைய கோபா உக்கிரமத்தின் எக்காளமாயிரும்; நீர் உங்களுடைய அழிவுக்குமுன் தோன்றும் துர்ச்சகுனமாயிரும். இவர்க் கேற்ற கௌரவத்துடன் திரும்பி போகட்டும்; பெம்ப் ரோக் அது விஷயத்தை நீர் கவனியும். ஜட்டிலனே விடை கொடுத்தேன்.

[ஜட்டிலனும் பெம்ப்ரோக்கும் செல்க]

**எலினோர்.**—இப்போது என்ன செய்கிறது என் மக னே! பேராசை பிடித்த அந்த கான்ஸ்டன்ஸ் என்பவள், வ்ரான்ஸ் அரசருக்கும் இன்னும் உலகிலுள்ள அரசருக் கெல்லாம் கோபாக்கினி மூட்டி, அவர்கள் அவள் மகனு டைய சுதந்தரத்தை அனுசரித்து, அவன்பக்ஷம் பரிந்து வரும்படி செய்கிறவளாயில், சும்மாயிருக்கமாட்டாளென்று நான் எப்போதும் உனக்கு சொல்லிவரவில்லையா? மண சம்மந்தமான அதிசுலப ஞாயங்களை பேசி முடித்து, இச் சம்பவத்தைத் தடுத்து, நாம் ஒன்றாய் போயிருக்கலாமே, இந்த தகாராரை இப்போது இரண்டு ராஜாங்கங்கள் பயங்கர போர்புரிந்து, இரத்த சேத முடிவுபெற்றபின், தீர்மானிக்க வேண்டியதாயிருக்கின்றதே.

**ஜான் மன்.**—நம்முடைய பலத்த ஸ்வாதீனமும், நமக்குள்ள பாத்தியதையும் நம் பக்ஷமிருக்கின்றன.

**எலினோர்.**—உன்னுடைய பலத்த ஸ்வாதீனந்தான் உன்னுடைய பாத்தியதைக்கு அதிமேன்மைபட்டதாயிருக் கின்றது, அப்படி இல்லாவிடில், உனக்கும் எனக்கும் கெடு தலாய் முடியும். இவ்வுண்மையை என் மனசாட்சியே உன் காதில் ஓதுகின்றது, இவ்வோதுதலை கடவுளும், நீயும், நானும் அறியவேண்டியதொழிய, வேறொருவருக் கும் தெரியக்கூடாது.

[நகராதிகாரி வந்து எஸ்ஸக்ஸ் பிரபுவினிடம் ரகசியம் பேசுகிருர்.]

**எஸ்ஸக்ஸ்.**--என்னரசே, யான் இதுவரையில் கேள்விப்படாத மகா விநோத விவாதம், தாங்கள் தீர்மானிப்பதற்கென்று, நாட்டிலிருந்து இங்கு, வந்திருக்கின்றது. கட்சிக்காரரை தங்கள் சமுகம் ஆஜர் செய்யட்டுமா?

**ஜான் மன்.**—அவர்கள் வரட்டும். நம்முடைய ஆளுகைக்குட்பட்டிருக்கும் கன்னிகா மடங்களிலிருந்தும், சன்னியாசி மடங்களிலிருந்தும், இந்த யுத்த செலவுக்கு பங்கிடு செய்யப்படும்.

[ராபர்ட் வால்கன் ப்ரிட்ஜும் அவன் சோர சகோதரன் விலிப்பும் (பாஸ்ட்டார்ட்) வருக.]

நீங்கள் எவ்வூர் மனிதர்கள்?

**பாஸ்ட்.**—யான் தங்களுடைய உண்மையுள்ள பிரஜை, நார்தாம்ப்ட்டன்ஷையரில் பிறந்த மேன்மகன், ராபர்ட் வால்கன் ப்ரிட்ஜ் என்பவருக்கு மூத்த குமாரனென்று உத்தேசிக்கின்றேன்; அவர் கீர்த்தி அளிக்கக்கூடிய சிம்ம இருதயத்தோர் என்பவர் கையால் போர்களத்தில் வீரபட்டம் பெற்ற வீரர்.

**ஜான் மன்.**—நீ யார்?

**ராபர்ட்.**—அதேவால்கன் ப்ரிட்ஜ் என்பவருடைய குமாரனும், வாரீஸ் தாரனுமாயிருக்கப்பட்டவன்.

**ஜான் மன்.**—அவன்தான் மூத்தவன், ஆனபோதிலும் நீதான் வாரீஸ்தாரன்? அப்படியானல், நீங்கள் இருவரும் ஓரே தாயிடமிருந்து பிறந்தவர்களல்லவென்று தோன்றுகின்றது.

**பாஸ்ட்.**—வல்லப அரசே, ஓரே தாயிடமிருந்து தானென்பது மிகவும் நிட்சயம்; எல்லாருக்கும் நன்றாய்

தெரிந்த விஷயம்; அன்றியும் ஓரே தகப்பனிடமிருந்து தானென்று யான் நினைக்கின்றேன்: ஆனால், ஓரே தகப்பனிடமிருந்துதானேவென்னும் உண்மையை தாங்கள் நிட்சயமாய் தெரிந்துகொள்ளவேணுமானல், கடவுளையும், என் தாயாரையும் தாங்கள் சாட்சியங் கோரிக்கொள்ளவேணுமென்று, யான் மன்ருடுகின்றேன்: அவ்விஷயத்தைப் பற்றி எல்லா மனிதருடைய பிள்ளைகளுக்கும் சந்தேகமிருக்கக்கூடியதுபோல, எனக்குஞ் சந்தேகந்தான்.

**எலினேர்.**—சீ, சீ, வெட்கங்கெட்ட முரடா! இப்படிப்பட்ட சந்தேகத்தால் உன் தாயை அவமானப்படுத்தி, அவளுடைய கௌரவத்தைப் பங்கப்படுத்துகின்ருய்.

**பாஸ்ட்**—நானு அம்மா? இல்லை, அப்படிப்பட்ட சந்தேகத்திற்கு எனக்கு யாதொரு ஞாயமுமில்லை; அது தான் என் தம்பியுடைய கட்சி, என் கட்சியல்ல; அந்த சந்தேகத்தை அவன் ருசுப்பிப்பானனல், வருஷத்தில் குறைந்தபட்சம் கணிசமாய் 500 பவுன் வருமானமுள்ள சொத்திலிருந்து என்னை உடனே ஓட்டிவிடுவான்: தெய்வந்தான், என் தாயார் மானத்தையும், என் சொத்தையும், காப்பாற்றவேணும்!

**ஜான் மன்.**—இவனெரு நல்ல வெகுளிப்பயல். உனக்கு இளையவனகப் பிறந்து, ஏன், உன்னுடைய சுதந்தரத்திற்கு, அவன் பாத்தியங்கொண்டாடுகிருன்?

**பாஸ்ட்.**—ஏனே எனக்கு தெரியவில்லை, என் சொத்தை அடையவேண்டியதற்காகத்தான் இருக்கவேண்டும். ஆனல்(3) அவன் ஒருதரம் என்னை விபசாரத்தில் பிறந்தவனென்று தூற்றியிருக்கின்ருன். யான் கிரமவழியில் பிறந்தேனே, இல்லையோவென்கிற பழி பாவத்தை யான் எப்போதும் என் தாய் தலையில் போட்டுவிடுகிறது; ஆனல்,

(3) See Appendix.

என்னரசே, இவ்வளவு நல்ல உருவத்துடன் பிறக்க பாக்கியம் பெற்றேனே—என்னைப்பெற சிரமமெடுத்தவர் *அஸ்திகளாகிய ஆன்மா நல்ல கதி அடையவேணும்! எங்கள் இருவர் முகத்தையும் தாங்கள் ஒத்திட்டுப் பார்த்து, கிழ சர் ராபர்ட்டாகிய எங்களிருவர் தகப்பனும், அவரைப் போலவே இம்மகனும் ஓரே உருவமுள்ளவர்களாயிருந்தால்,அப்படிப்பட்ட உருவமுடைத்தாயிருந்த அந்த தகப்பன் எங்களிருவரையும்பெற்றிருப்பாரோ(4)வென்பதைப்பற்றியும், தாங்களே தீர்மானியுங்கள். ஓ கிழ சர் ராபர்ட்டே, என் தகப்பனே, யான் உம்மை ஒத்தில்லாமலிருப்பதற்காக யான் முழங்காலிட்டு கடவுளுக்கு ஸ்துதி செலுத்துகின்றேன்!

**ஜான் மன்.**—சந்தேகமென்ன, வெறியனிலும் எப்படிப்பட்ட வெறியனை தெய்வம் இப்போது நம்மிடம் அனுப்பியிருக்கின்றது!

**எலினோர்.**—சிம்ம இருதயத்தோனின் முகவடிவு இவன் முகத்திலும் தோன்றுகின்றது; இவனுடைய பேச்சுக் குரல் அவன் குரலை ஒத்திருக்கின்றது. இம்மனிதனுடைய பெரிய உருவத்தில், என் மகனின் அம்ஸங்கள் புலப்படுவது, உனக்கு தெரியவில்லையா?

**ஜான் மன்.**—நானும் இவனுடைய ஒவ்வொரு அங்கத்தையும் நன்றாய்க், கண்கூடாகக் கவனித்து, அவைகளைக் கொண்டு இவன் சாட்சாத் ரிச்சர்ட்தானென்று கண்டு கொண்டேன். அடே பயலே நீ சொல்லு, உன் தமையன் சொத்திற்கு நீ பாத்தியம் கொண்டாடுவதற்கு உனக்கென்ன ஞாயமிருக்கின்றது?

---

* கத்தோலிக் கிறீஸ்துவர்களுக்குள் அஸ்தியாலமைந்த உருவந்தான் ஆத்மாவின் அறிகுறி அடையாளம்.

(4) See Appendix.

**பாஸ்ட்.**—ஏனென்றால், என் தகப்பனைப்போலவே அவனுக்கு அரை முகமிருக்கின்றதாம், அந்த அரை முகத்திற்காக என்னுடைய சொத்தெல்லாம் அவனுக்கு வேணுமாம்: அரை முகமடங்கிய *க்ரோட் நாணயத்திற்கு, வருஷத்தில் 500 பவுன், வருமானமாம்!

**ராபர்ட்.**—என் கிருபையுள்ள அரசே, என் தகப்பன் ஜீவகாலத்தில் தங்கள் தமையனார் என் தகப்பனிடம் வெகுவாய் வேலைகொண்டார்,—

**பாஸ்ட்.**—நல்லதுதான் ஐயா, தகப்பனை வேலை கொண்ட விஷயத்தைத் தெரிவிப்பதால் நினக்கு என்னுடைய சொத்து கிடைக்காது: நின்கதை எப்படி இருக்க வேண்டுமென்றால், அவர் என் தாயாரிடம் எவ்வித வேலை கொண்டாரென்றிருக்கவேண்டும்.

**ராபர்ட்.**—அவர் ஒருகாலத்தில், என் தகப்பனை, அக்காலத்திய பெருத்த விஷயங்களைப்பற்றி அவ்விராச்சியத்தின் சக்கரவர்த்தியோடு வியவகாரம் பேசுவதற்கென்று, ஸ்தானாபதியாக அனுப்பினார். என் தகப்பன் அவ்விதமாய் ஊரிலில்லாத சமயத்தை ராஜா கைக்கொண்டு, என் தகப்பன் திரும்புகிறகாலம்வரையில், என் தகப்பன் வாசஸ்தலத்தில் வந்து தங்கியிருந்தார்: அப்போது எவ்விதம் மனதைத் திருப்பினாரென்பதை சொல்ல எனக்கு வெட்கமாயிருக்கின்றது, ஆனால் உண்மை யென்னமோ உண்மையே: (என் தகப்பனார் சொல்ல யான் கேட்டிருந்த பிரகாரம் யான் சொல்லுகின்றேன்) இந்த சாட்சாத் பருத்த துரை ஜனித்த தருணத்தில், மகா நீண்ட நீண்ட கடல்

* க்ரோட் என்பது 1503-ம் ஆண்டில் அடிக்கப்பட்ட ஓர் நாணயம். அது நான்கு பென்ஸ் மதிப்புள்ளது. இந்நாணயத்தில் இராஜ முகசாயை ஒரு பக்கம் மாத்திரம் தெரியும்படி அமைக்கப்பட்டுளது.

களும், மகா நீண்ட நீண்ட பூமிகளும், என் தகப்பனருக்கும் தாயாருக்கும் மத்தியில், கிடந்தன. ஆகையால் என் தகப்பனர் அவருடைய மரணதறுவாயில் அவருடைய காணியாட்சிகளே, மரணசாசன மூலியமாய், எனக்குச் சுதந்தரப்படுத்தினர்; அன்றியும், அவர் மரணித்த சமயத்தில், என் தாயாரின் குமாரனுன இவர், தன்னுடைய குமாரனல்லவென்றும்(5) ஒப்புக்கொண்டார்; என் தகப்பனுடைய குமாரனுயிருந்தால், சாதாரணமாய் கர்ப்பந்தரித்து குழந்தை பிறக்கவேண்டிய காலம் என்னவோ, அக்காலத்திற்கு பூரணமாய் பதினன்குவாரம் குறைவாயிருக்கும்போதே, இவர் பிறந்துவிட்டார். ஆகையால், என் நல்ல அரசே, எனக்கு சொந்தமானது எனக்குக் கிடைக்கும்படி உத்தரவாகவேணும், அதாவது, என் தகப்பனுடைய பூஸ்திதி, என் தகப்பன் கோரிக்கைபிரகாரம்.

**ஜான் மன்.**—அடே பயலே, உன் தமையன் கிரமவழியில் பிறந்தவனே; ஏனென்றால் உன் தகப்பனுடைய மனைவி, உன் தகப்பனுக்கு விவாகபந்தனமானபிறகுதான், அவனை பெற்றிருக்கின்றாள்; அவள் துரோகஞ்செய்திருந்தால் குற்றம் அவளுடையதேயொழிய வேறொருவருடையதுமல்ல; இப்படிப்பட்ட குற்றத்தால் விளையும் தீமை அபாயத்திற்கு மனைவிகளை விவாகம் செய்துகொள்கின்ற எல்லா கணவர்களும் உள்ளாகின்றார்கள். இதை எனக்குச் சொல்லு, நீ தெரிவிக்கிற பிரகாரம் என் சகோதரன் இக்குமாரனை பெற சிரமமெடுத்திருந்தால், இக்குமாரனை தன் மகன் என்பதாக உன் தகப்பனிடம் ஸ்தாபித்து, பிள்ளையை தன்னிடம் ஒப்பிவிக்கும்படி கேட்டாரோ? அப்படி கேட்டிருந்தால்கூட மெய்யாகவே, நல்லசிநேகிதரே, உன் தகப்பனர் தன் பசுவினிடம் ஊட்டிய இக்கன்றுக்குட்டியை உல

(5) See Appendix.

கத்திலுள்ள வேறு யாருக்கும் கொடாமல் தனக்கே இருக்க வேணுமென்றுதான் வைத்துக்கொள்வார்; மெய்யாகவே, அப்படியேதான் செய்திருப்பார். ஆகவே, இவன் என் சகோதரன் மகனுக இருந்தாலும், என் சகோதரனுல் தன் மகன் தனக்கு சேரவேண்டுமென்று, வாங்கவுமுடியவில்லை, உன் தகப்பனும், தன்னுடையதல்லாத இம்மகனை, தனக்கு வேண்டாமென்று தள்ளவுமுடியவில்லை. இக்காரணத்தை முன்னிட்டு தீர்மானமென்னவென்ருல், என் தாயாருடைய குமாரன் உன் தகப்பனுருடைய சுதந்தரவாளியைப் பெற்ருர்; உன் தகப்பனுருடைய சுதந்தரவாளி உன் தகப்பனுருடைய காணியாட்சிகளை அடையவேண்டியதுதான்.

**ராபர்ட்.**—அப்படியானுல், என் தகப்பனுடையதல்லாத அந்த பிள்ளையை விலக்குவதற்கு, என் தகப்பனுடைய சாசனத்திற்கு சக்தியில்லையோ?

**பாஸ்ட்.**—நான் ஜனிக்கும் விஷயத்தில் அவருடைய இஷ்டத்திற்கு எவ்வளவு சக்தியில்லாமற் போயிற்ருே, அதேபிரகாரம் என்னை விலக்குவதற்கும் அவருடைய சாசனத்திற்கும் சக்தியில்லையென்று நினைக்கின்றேன் ஐயா.

**எலினேர்.**—உன் காணியாட்சிகளை அனுபவிக்க வேண்டியதற்காக, உன் தம்பியைப்போலவே நீயும் வால்கன் ப்ரிட்ஜ் வம்ஸத்தைச் சேர்ந்தவனுக விளங்கப்போகின்ருயா, அல்லது யாதொரு சொத்துமில்லாமல் உன்னுடைய கம்பீர உருவத்தையே ஆஸ்தியாகக்கொண்டு, சிம்ம இருதயத்தோனின் மதிக்கக்கூடிய குமாரனுக துலங்க போகின்ருயோ?

**பாஸ்ட்.**—அம்மா, என் தம்பிக்கு என்னுடைய திரேகம் கிடைத்து, யான் அவனுடைய திரேகத்தை, அதாவது சர் ராபர்ட்டுடையதை, அதாவது சர் ராபர்ட்டைபோலொத்

ததை, அடைந்து என் கால்கள் இரண்டும் காலில் கட்டிக்கொண்டு சவாரிசெய்யும் இரண்டு கோல்களைப்போலவும், என் கைகள் விலாங்குமீன் தோல்களில் பஞ்சு திணித்துத் தொங்குவதுபோலும், என்னுடைய முகம் அவ்வளவு ஒல்லியாயுமிருந்து, ஜனங்கள் 'மூன்று* பார்த்திங் நாணயம் எங்கேயோ போகின்றது, அதோ பார்,' என்று சொல்வார்களோ என்கிற பயத்தால் என் ‡காதிடையில் ஒரு ரோஜா புஷ்பத்தை சொறுகிக்கொள்ளத் துணியாத நிலைமையில், இப்படிப்பட்ட அவருடைய உருவத்தை எனக்குக் கொடுத்து, இவ்விராஜ்யத்திற்கெல்லாம் என்னை சுதந்தரவாளியாகச் செய்கிறதாயிருந்தாலுங்கூட, அப்படிப்பட்ட உருவத்தையும், அப்படிப்பட்ட அந்தஸ்தையும் யானடையும்பொருட்டு, யான் நிற்கும் இடத்தைவிட்டு கொஞ்சமும் நகரமாட்டேன், இப்போது எனக்கிருக்கும் முகத்தை யான் உடைத்தாயிருப்பதற்காக, ஒரு அடி நிலமுதலாய் எனக்கில்லாமல் கொடுத்துவிடுவேன்; ஆகவே, எக்காரணத்தை முன்னிட்டும் சர் நாப் என்னும் பெயரை வகித்துக்கொள்ளமாட்டேன்.

**எலினோர்.**—உன்பேரில் எனக்கு ரொம்பவும் பிரியமாயிருக்கின்றது. நீ உன் ஆஸ்தியை கையளித்துவிட்டு,

---

* மூன்று பார்திங் என்பது எலிஸபெத் அரசிகாலத்தில் வழங்கிவந்த ஓர் வெள்ளி நாணயம். அது மிகவும் மெல்லியதானது. அந்நாணயத்தில் அமைக்கப்பட்டிருந்த இராஜ முகசாயைக்குப் பின்னால் ஓர் ரோஜா மலர் வடிவம் அமைக்கப்பட்டுளது. ஆகையால் இந்நாணயத்திற்கு மூன்று பார்திங் ரோஸ் என்று பெயர் வழங்கிவந்தது

‡ எலிஸபெத் அரசிகாலத்தில் இருந்த வாலிபர், இக்காலத்திய ஐரோப்பிய தனவான்கள் தங்கள் சட்டை துளையில் ரோஜா மலரை சொறுகிக்கொள்வதுபோல, பட்டு நாடாவாலமைத்த ரோஜா புஷ்பத்தையாகிலும் அல்லது நிஜரோஜா மலரையாகிலும் தங்கள் காதிடையில் சொறுகிக்கொள்வது வழக்கம்.

உன் பூஸ்திதிகளையும் அவனுக்கு தத்தம் செய்துவிட்டு, என் பின்னே வருவாயா? நானும் ஒரு பண்டத்தலைவி, இப்போது வ்ரான்சுக்கு யுத்தத்திற்கு போகவேண்டிய வளாயிருக்கின்றேன்.

**பாஸ்ட்.**—தம்பி, என்னுடைய பூஸ்திதியை நீ எடுத்துக்கொள். நான் என் அதிர்ஷ்டத்தைக் கைப்பற்றிக் கொள்கிறேன். உன்னுடைய முகத்தால் 500 பவுன் வருஷ வருமானம் உனக்குக் கிடைத்தது, ஆயினும் உன்னுடைய முகத்தை ஐந்து பென்சுக்கு விற்றுப்பார், அப்போதுகூட அது கிராக்கியென்று சொல்வார்கள். அம்மா யான் மரண மடையும் பரியந்தம்(6) தங்களை பின்செல்வேன்.

**எலினோர்.**—அல்ல, மரணமடைவதற்குபோகும்போது நீ எனக்குமுன் செல்லவேணுமென்றுதான் நான் கோருவேன்.

**பாஸ்ட்.**—ஆனால் எங்கள் நாட்டுப்புறத்து ஆசாரம், எங்களுக்கு மேன்மைபட்டவர்களுக்கு வழிகொடுத்து, பின்னே தான் செல்லும்படி கற்பிக்கின்றது.

**ஜான் மன்.**—உன் பெயர் என்ன?

**பாஸ்ட்.**—விலிப், என் அரசே, விலிப் என்னும் பதத்தால்தான் என் பெயர் ஆரம்பிக்கின்றது, கிழநல்ல சர் ராபர்ட்டின் பெண்ஜாதியுடைய மூத்த குமாரனான விலிப்.

**ஜான் மன்.**—இதுமுதற்கொண்டு நீ யாருடைய உருவத்தைப் பெற்றிருக்கின்றாயோ, அவருடைய பெயரை வகித்துக்கொள்: விலிப்பென்னும் பெயரோடு முழங்காலிலிரு, ஆனால் அதிக பெருமையுடன் எழுந்திரு, சர் ரிச்சர்ட் என்றும், பிளன்டாஜன்ட் வம்சத்தினனென்றும் எழுந்திரு.

---

(6) See Appendix.

**பாஸ்ட்.**—என் தாய் வழியில் தம்பி முறையான சகோதரனே, எனக்குக் கைகொடு; என் தகப்பன் எனக்குக் கீர்த்தி கொடுத்தார், உன் தகப்பன் உனக்கு ஆஸ்தி கொடுத்தார். இப்போது யான் செல்வது யாதென்றால், சர் ராபர்ட் வெளியே போயிருந்து, யான் கர்ப்பந்தரித்த மணி நேரம், இரவாயிருந்தாலுஞ்சரி, பகலாயிருந்தாலுஞ்சரி, அம்மணி நேரம் ஆசீர்வதிக்கப்படக்கடவது!

**எலினோர்.**—பிளன்டாஜனட் வம்ஸத்தின் சரியான அம்ஸம் இதுவே! ரிச்சர்டே நானுன் பாட்டியார்; நீ என்னை இனிமேல் அவ்விதமே கூப்பிடு.

**பாஸ்ட்.**—தாங்கள் எனக்கு பாட்டியாரானது அகஸ்மாத்தாய்தான் அம்மா, வாஸ்தவமாயல்ல; அப்படியிருந்தாலுந்தான் என்ன? நேர் வழியிலிருந்து கொஞ்சம் வழுவிய விஷயமே தவிர வேறல்ல, ஜன்னல் வழியாய் உள்ளே போனாலும் கதவு வழியாய் உள்ளே போனாலும் இரண்டும் ஒன்றுதான்: பகலில் வழி நடக்கத்துணியாதவன் இரவில்தான் நடக்கவேண்டும்; பிடிக்கிறவன் எவ்விதம் பிடித்தால்தானென்ன, கிடைத்தது கிடைத்ததுதான். கிட்ட இருந்து சுட்டாலும், எட்ட இருந்து சுட்டாலும், கைக்குக் கிட்டும்படி சுட்டவன், எப்படியும் கெட்டிக்கார வேட்டைக்காரனே, நானாகிய நான், நான்தான், அப்படிப்பட்ட நான் எப்படி பிறந்திருந்தால்தான் என்ன?

**ஜான் மன்.**—வால்கன் ப்ரிட்ஜ் என்பவனே, நீ போகலாம்; நீ கோரியது உனக்கு கிடைத்துவிட்டது; பூஸ்திதி இழந்த வீரன் உன்னை பூஸ்திதியுள்ள மிராஸ்தாரனாக நியமித்துவிட்டான். அம்மா புறப்படுங்கள், ரிச்சர்டே புறப்படு, நாம் ஓடவேணும்; வ்ரான்ஸ்க்கு, வ்ரான்ஸ்க்கு, ஏனென்றால் விஷயம் அவசரத்திற்கெல்லாம் அவசரமானது.

**பாஸ்ட்.**—தம்பி, நானுன்னோடு விடை பெற்றுக்கொள்கின்றேன்; நீ அதிர்ஷ்டசாலியாயிருப்பாயாக! ஏனென்றால் நீ கௌரவமான வழியில் பிறந்தவன்.

[பாஸ்டார்ட் தவிர மற்றெல்லோரும் செல்க.]

நான் முன்னிருந்ததை விட ஒரு அடி மகிமை உயர்ந்திருக்கின்றேன்; ஆனால் எத்தனையோ ஆயிரம் அடி நிலம் கெட்டுப் போய்விட்டது. இருந்தாலும் நல்லது, நானிப்போது எந்த குடியானவன் குமாரியையும் ஒரு பெருமாட்டியாகச் செய்ய முடியும். 'சர் ரிச்சர்டே வந்தனம்!' என்று வணங்குவார்கள்—'கடவுள் உன்பேரில் இரக்கம் வைப்பாராக பையா!'-வென்று பதில் கூறுவேன். அவன் பெயர் ஜார்ஜாயிருந்தால், நான் பீட்டரோ என்று கூப்பிடுவேன்; ஏனென்றால் புதிதாய் மேன்மைக்கு உயர்த்தப்பட்டவர்கள் தங்களுக்கு தெரிந்தவர்கள் பெயரை மறந்துவிட்டதுபோல் தான் காட்டிக்கொள்ளவேண்டும்: இல்லாவிடில், கேவலப்பட்டவர்கள் ஒவ்வொருவரையும் நீ அறிந்தவன்போலும், அவர்களோடு உனக்குள்ள அன்னியொன்னியத்தையும் காண்பிக்கும், அது உன்னுடைய உயர்ந்திருக்கப்பட்ட அந்தஸ்துக்கு அடாது. இதற்கப்புறம் உன்னை நாடிய *யாத்திரைக்காரன், அவன் அவனுடைய பல்லுகுத்தியுடன் எஜமானாகிய என்னுடைய போஜன மேசையில் வந்து அமருவான்; என்னுடையதாகிய கனவான் வயிறு நிரம்பியபின், சாவகாசமாய் என் பல்லை உரிஞ்சுக்கொண்டு, பலவூர் சுற்றி பலபல அதிசய விஷயங்களை தெரிந்துகொண்டிருப்பவனாகிய அவனை கேள்வி கேட்க ஆரம்பிப்பேன்:

---

*பழையகாலத்தில் கனவான்கள் பந்தி போஜன மேசையில் யாத்திரைக்காரரை தருவித்து அமரச் செய்து அவர்களை பலயாத்திரைகளைப்பற்றி தெரிவிக்கும்படி செய்வது பிரபு ஸ்தானத்திற்குரிய கால க்ஷேபம்.

இவ்விதம், என் முழங்கையை ஊன்றி சாய்ந்துகொண்டு 'எனது பிரியமுள்ள ஐயா' வென்று ஆரம்பிப்பேன்: 'நானுன்னை மன்றுடுகின்றேன்' இதுதான் என் கேள்வி என்று சொல்வேன்; அப்போது அகராதியில் அர்த்தம் கிடைப்பதுபோல் பதில்வரும்: பதில் சொல்கிறவன் என்ன சொல்வானென்றால் "ஓ ஐயா, முற்றிலும் தங்கள் கட்டளையின் கீழ்; தங்கள் ஆளுகையின் கீழ்; தங்கள் ஊழியத்தின் கீழ், ஐயா" என்று, அப்போது கேள்வி கேட்போனுகிய நான் சொல்வேன் "அல்ல ஐயா நான் தங்களுக்குள் இனிமையான ஐயா" வென்று: இவ்விதம் பதில் சொல்லுகிறவனுக்கு கேள்வி இன்னதென்று தெரியாமலிருக்கும்போதே பதில் சொல்லிக்கொண்டு இராப்போஜன நேரத்திற்கு நெருங்கிவிடும், (ஆனால் ஒருவரையொருவர் வாழ்த்தும் சம்பாஷணையிலும், ஆல்ப்ஸ், ஆப்பினைன், பிரனியன் மலைகளைப்பற்றியும், போ ஆற்றைப்பற்றியும் பேசும்போது மாத்திரம் அப்படியிராது) இவ்விதம் சம்பாஷணை முடிவுபெறும். இது தான் மேன்மைப்பட்டவர்கள் சபைக்கேற்றது, மென்மேல் உயர்ந்து கிளம்பும் என் சுபாவத்திற்கு தக்கினது; ஏனென்றால், பலவற்றையும் கற்றுணர்ந்ததாய் காட்டிக்கொள்ளக் கூடாதவன் காலமென்னும் தகப்பனுக்கு கிரமவழியில் பிறந்த பிள்ளையல்ல; நான் கற்றுணர்ந்தவனுயிருந்தாலுஞ் சரி, கல்லாதவனுயிருந்தாலுஞ் சரி, நான் கிரமவழியில் பிறந்த பிள்ளையல்லவென்பது உண்மையே; இப்போது எனக்குள்ள ஆடை ஆபரணமும் கிரமமானதல்ல, பஹிரங்கமாய் எனக்கிருக்கும் உருவமும் கிரமமானதல்ல, நான் பூண்டிருக்கும் போர்கோல அலங்காரமும் கிரமமானதல்ல, இவைகளோடுங்கூட நெஞ்சத்திலும் கல்வியுணர்ச்சியுள்ளவனுக மாறி, இக்காலானுசாரமுறைமைப்படி இனிமை இனிமையாய் இச்சகப்பேச்சு

பேசவும் இயல்புள்ளவனுக வேண்டும்; இவ்வியல்பைக் கொண்டு நான் இதராளை வஞ்சிக்கமாட்டேன், ஆயினும் நான் இதராளால் வஞ்சிக்கப்படாமலிருக்கும்பொருட்டு தான் நான் அதை கற்க கருதுகின்றேன்; ஏனென்றுல் என்னுடைய மேல் அந்தஸ்தில், நான் மென்மேல் உயர, உயர, இச்சகஸ்தோத்திரம் எனக்கு அதிகமதிகமாய் எதிர்ப் படக்கூடும். அதோ குதிரை சவாரி உடுப்புடன் இவ்வளவு வேகமாய் வருகிறது யார்? பெண்பிள்ளை தபால்காரியா என்ன? அவளுக்கு புருஷனில்லையோ? இருந்தால் அவ ளுக்கு முன்ஞல் கொம்பு ஊதிக்கொண்டு வருவானே.

[லேடி வால்கன் ப்ரிட்ஜும் ஜேம்ஸ் கர்னியும் வருக.]

அடப்பாவமே! ஆககூடி என் தாயாரல்லவோ. நல்ல தாயே, ஏனிப்படி? இவ்வளவு அவசரமாய் நீதிஸ்தலத் திற்கு நீங்கள் வந்த காரியமென்ன?

**லேடிவால்கன்.**—உன் தம்பி அந்த அடிமைப் பயல் எங்கே? என் மானத்தை, கீழுமேலுமாய், ஊஞ்சலாட ஓட்டுகின்ற அந்த பயல் எங்கே?

**பாஸ்ட்.**—என் தம்பி ராபர்ட்டா? கிழ சர் ராபர்ட் டின் மகனு? *கோல்ப்ரான்ட் என்னும் பெயர்கொண்ட ராட்சதனு? அந்த அதிவல்லப மனிதனு? இவ்வளவு அவ சரமாய் நீங்கள் தேடுவது, சர் ராபர்ட்டின் மகனையா?

---

*கோல்பிரான்ட் என்பவன் டேனிஷ்காரர் சேவகத்திலிருந்த ஓர் ராட்சதன். அவன் எப்படிப்பட்ட அபார வல்லமை பொருந் தியவனுயிருந்தானென்றுல் எந்த நரமனிதனுலும் அவனை எதிர்க்க முடியவில்லையாம். அவனுடைய கைக்கோடரியை எவராலும் கொஞ்சந் தூரங்கூட தூக்கிச்செல்ல முடியாதாம். அப்படிப் பட்ட கோடரியை ஒரு சிறு தடியைச் சுழட்டுவதுபோல சுழட்டு வானும்.

**லேடி வால்கன்.**—சர் ராபர்ட்டின் மகனே! ஏண்டா சங்கைகெட்ட பையா, உனக்கு அவன் சர் ராபர்ட்டின் மகனா? ஏண்டா இப்படி சர் ராபர்ட்டை அவமானப்படுத்துகின்றாய்? அவனும் சர் ராபர்ட்டின் மகன்தான், நீயும் அப்படியேதான்.

**பாஸ்ட்.**—ஜேம்ஸ் கர்னியே, நாங்களிருவரும் சற்று நேரம் தனித்துப் பேசும்பொருட்டு, நீர் விடைபெற்றுக் கொள்வீரா?

**கர்னி.**—நன்றாய் விடைபெற்றுக்கொள்கின்றேன், நல்ல விலிப்புவே.

**பாஸ்ட்.**—விலிப்பா! *(7)ஊர்க்குருவியோ: உலகத்தில் எவ்வளவோ அதிசயங்கள் நடக்கின்றன ஜேம்ஸ்: அதி சீக்கிரத்தில் வெகு சங்கதி நானுனக்குத் தெரிவிக்கின்றேன்.

[கர்னி செல்க.]

அம்மா, நான் கிழ சர் ராபர்ட்டின் மகனல்ல: சர் ராபர்ட், தகப்பன் ஸ்தானமாக, எனக்கு சேர்ப்பிக்கவேண்டிய பாகம் என்னிடமிருக்கப்பட்டதை, அவர் பெரிய †வெள்ளிக்கிழமையில், பூராவும் சாப்பிட்டாலுங்கூட, அவருடைய விரதம் கொஞ்சமும் கெட்டுப்போகாது: சர் ராபர்ட் உண்மையை நன்றாய் வெளியிட்டிருக்கலாம், அவரால் என்னைப் பெறமுடியுமா? சர் ராபர்ட்டால் அது முடி

---

* ஊர்க்குருவி ஒலிக்கும் சுரம் விலிப் என்னும் சப்தம் உள்ளதாகையால் அக்குருவிக்கு விலிப் என்னும் பெயர் வழங்குவதுண்டு.

(7) See Appendix.

† பெரிய வெள்ளிக்கிழமை என்பது சேசுக்கிறீஸ்துநாதர் சிலுவையில் அறையப்பட்டு மரணித்த நாள். ஆகையால் சகல கிறீஸ்துவர்களும் அந்நாளை மகா ஆசாரத்துடன் விரதநாளாய் பாவித்து வருகின்றார்கள்.

யாது: அவர் கைவேலை நமக்கெல்லாம் தெரியும்: ஆகையால், என் நற்ருயே, நானிப்படிப்பட்ட அவயவங்களைக் கிடைக்கப்பெற்றதற்காக எப்படிப்பட்ட தகப்பனுக்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேனென்பதை, எனக்குத் தெரிவியும், சர் ராபார்ட்டால் இப்படிப்பட்ட காலை உண்டாக்கமுடியாது.

**லேடி வால்கன்.**—உன் சுய நன்மையைக் கருதியே நீ என் மானத்தைக் காப்பாற்றவேண்டியிருக்க, நீயும் உன் தம்பியோடு கூடிக்கொண்டு சதியோஜனையாடா செய்திருக்கின்ருய்? இந்த நிந்தையின் கருத்தென்னடா? துற்சனப் போக்கிரிப்பயலே!

**பாஸ்ட்.**—நைட்பட்டம், நைட்பட்டம், என் நற்ருயே, பயங்காளி டம்பன் * பசலிக்கோ என்பவனுக்கு நேர்ந்தது போல். என்ன! நான்கூட பட்டம் பெற்றேனே! தற்சமயங்கூட என் தோளில் வாளால் தட்டியதை உணர்கின்றேன். தவிரவும் தாயே, நான் சர் ராபர்ட்டின் பிள்ளையே அல்ல; எனக்கும் சர் ராபர்ட்டுக்கும் யாதொரு பாத்தியமில்லையென்றும், ஆகையால் என் நிலத்திற்கும் எனக்கும் பாத்தியமில்லை யென்றும், பஹிரங்கப்படுத்திவிட்டேன். கிரமப்பிறப்பு, குடும்பப்பெயர் இவைகளெல்லாம் பறந்துவிட்டன: ஆகையால் என் நற்ருயே, என் தகப்பனை எனக்குத் தெரிவியும்; அவர் யாரோ ஒரு தக்க மனிதனையிருக்கவேணுமென்று நம்புகின்றேன்: அது யாரம்மா?

**லேடி வால்கன்.**—அப்படியானல் நீ, வால்கன் ப்ரிட்ஜ் வம்ஸத்தைச்சேர்ந்தவன் என்பதை, நிராகரித்துவிட்டாயா என்ன?

---

* சொலிமானும் பிரசிடா வென்னும் பழைய நாடகத்தில் வீம்பனும் கோழையுமான பசலிக்கோ என்பவனுக்கு நைட்பட்டம் வேடிக்கையாய் கொடுப்பட்டதைச் சுட்டிக்காட்டுவதுபோலும்.

**பாஸ்ட்.**—*பிசாசை எவ்வளவு உண்மையாய் நிராகரிப்பேனே, அவ்வளவு உண்மையாய்த்தான் நிராகரித்துவிட்டேன்.

**லேடி வால்கன்.**—சிம்ம இருதயத்தோர் என்னும் பெயர்பெற்ற ரிச்சர்ட் மன்னர், உன் தகப்பன்: அவர் நீடித்தகாலமாய், மும்முரவருந்தலால் என் மனதைக் கலைத்ததின்பேரில், என் பர்த்தாவின் படுக்கையில் அவருக்கு நான் இடங்கொடுக்கலாயிற்று: கடவுள் இத்தவறுதலுக்காக என்னைப் பழி (8) வாங்காதிருப்பாராக! (9) அபூர்வமாய் நான் செய்த இக்குற்றத்தால் உற்பவித்த சந்தானந்தான் நீ, இக்குற்றத்திற்கு நான் எவ்வளவு பலவந்தப்படுத்தப்பட்டேனென்றால், என் கற்பை என்னால் காப்பாற்றிக்கொள்ள முடியவே இல்லை.

**பாஸ்ட்.**—இப்போது, இவ்வெளிச்சத்தின்மேல் ஆணையிட்டுச் சொல்லுகின்றேன், நானின்னொருதரம் பிறக்கிறதாயிருந்தால், அம்மா, நான் அவரைவிட மேலான தகப்பனை ஆசிக்கமாட்டேன். சில பாவங்களை உலகம் (10) சிலாக்கியமாய்க் கொண்டாடுவதுண்டு, அப்படிப்பட்ட பாவந்தான் உம்முடைய இந்த பாவம்; உம்முடைய இந்த (11) தப்பிதம் உம்முடைய பிசகால் நேர்ந்ததல்ல: உம்முடைய இருதயத்தை அவர்வசம் நீர் கையளிக்கவேண்டியது அவசியமே; கட்டளையிடக்கூடிய அதிகாரம் வகித்த அவருடைய நேசத்திற்குப் பணிந்து செலுத்தவேண்டிய கப்பம் அது; அவருடைய வீராவேசத்திற்கும், ஒப்பற்ற வல்ல

---

* ஒவ்வொரு கிறிஸ்துவக் குழந்தையும் அதன் ஞானஸ்நான காலத்தில் அதனுடைய ஞானதந்தை மூலியமாய், பிசாசையும், அதன் ஆடம்பரங்களையும் விலக்கிவிட்டேன் என்று சொல்ல வேண்டியது அவசியம்.

(8), (9), (10), (11) See Appendix.

மைக்குமுன்னால் அஞ்சாத [12]நெஞ்சம் படைத்த அகோர சிங்கமுதலாய் அவரோடு சண்டை செய்யவும் முடியவில்லை, அதனுடைய மிருகேந்திர இருதயத்தை ரிச்சர்ட் கைக்குக் கிட்டாமல் காப்பாற்றிக்கொள்ளவும் முடியவில்லை. ஆகவே சிங்கங்களிடமிருந்து அவைகளுடைய இருதயங்களை பலாத் காரமாய் கொள்ளை கொள்ளக்கூடியவராகிய அவருக்கு, ஸ்திரியாகிய உம்முடைய இருதயத்தைக் கைவசப்படுத்திக் கொள்வது, அதிசுலப காரியமே. ஓ என் தாயே, இப்படிப் பட்டவரை நீர் எனக்குத் தகப்பனாகும்படிச் செய்ததற்காக, நானுமக்கு முழுமனதோடு வந்தனமளிக்கின்றேன்! நான் ஜனித்தபோது நீர் கிரமத்தை அனுசரிக்கவில்லையென்று, உயிரோடிருக்கப்பட்டவன் எவனாயிருந்தாலுஞ்சரி, பேசத் துணிவானானால் அப்படிப்பட்டவன் ஆத்மாவை நேரே நரகத்திற்கே அனுப்பிவிடுவேன். வாரும் பெருமாட்டியே, நானும்மை என்னுடைய பந்துக்களுக்குக் காண்பிக்கின் றேன்; ரிச்சர்ட் என்னைப்பெறப் பிரயத்தனப்பட்டபோது நீர் கூடாதென்று சொல்லியிருந்தால், அதுதான் பாவ மென்று அவர்கள் சொல்வார்கள். நீர் சம்மதித்தது பாவ மென்று யாராகிலும் சொல்வானானால், அவன் பொய் பேசு கின்றான்; அது பாவமல்லவென்று, நான் சொல்லுகின் றேன்.

---

(12) See Appendix.

## இரண்டாம் பிரிவு.

---

**முதல் காட்சி:—வ்ரான்ஸ் ராஜ்யம், ஆஞ்ஜியர்ஸ் கோட்டை வாசற்படிக்கு முன்னுல்.**

(ஆஸ்ட்ரியா தலைமை இறைவரும் சைன்யங்களும் ஒரு பக்கத்திலிருந்து வருக. வ்ரான்ஸ் அரசராகிய விலிப்பும் சைன்யங்களும் கூட, லுவி, கான்ஸ்டன்ஸ், ஆர்தர், சிப்பந்திகளுடன் மறுபக்கத்திலிருந்து வருக.)

(13)**விலிப் மன்.**—வீரிய ஆஸ்ட்ரிய அரசே, ஆஞ்ஜியர்ஸ் கோட்டைக்கு முன்னுல் சமயோசிதமாய் சந்திக்கின்றோம். ஆர்தரோ, நின் வம்சத்து முன்னோராகிய ரிச்சர்ட் என்பவர், சிங்கத்தினிடமிருந்து அதன் இருதயத்தைக் கொள்ளைகொண்டவர், பாலஸ்ட்டைன் இராஜ்யத்தில் புண்ணியப் போர்கள் புரிந்தவராகிய அவர், இவ்வீரிய பிரபுவால், இளம்பிராயத்திலேயே, * மரணத்திற்குள்ளாக்கப்

---

* ஆர்தரின் பெரிய தகப்பனுரான ரிச்சர்ட் மன்னர் ஆஸ்ட்ரியா இறைவரால் கொல்லப்பட்டாரென்று சொல்லியிருப்பது, சரியல்ல. அவர் ஜெருசலேம் பட்டணத்தைக் காப்பாற்றும்பொருட்டு, புண்ணிய போர்புரிந்து திரும்புகையில், தன்னுடைய எதிரிகளுக்குப் பயந்து மாறுவேடம் பூண்டிருப்பினும் ஆஸ்ட்ரிய இறைவரால் கண்டுபிடிக்கப்பட்டு, அவரால் சிறையாக்கப்பட்டார். இங்க்லிஷ் ராஜாங்கம் லட்சம் பவுன் அவருக்காக கொடுத்து மீட்கப்பட்டார். பிறகு அவர் தன்னுடைய ராஜரீகத்தை வகித்து ஆண்டுவருகையில் ஐந்துவருஷங்களுக்குப்பிறகு, அதாவது 1199-ம் ஆண்டில், தன்னுடைய சிற்றரசரில் ஒருவராகிய லிமொஜீஸ் அரசின் இறைவராகிய விதொமார் என்பவருக்கு புதையல் கிடைக்க, ரிச்சர்ட் மன்னர் சர்வாதிபதி ஸ்தானத்தில் அத்திரவியத்தை தனக்கு சேர்ப்பிக்கவேண்டுமென்று கட்டளையிட, அச்சிற்றரசர் அக்கட்டளைக்கு அமையாமையால் அவர் கோட்டையை ரிச்சர்ட் முற்றுகை செய்துகொண்டிருக்கும்போது, யுத்தவீரன் ஒருவன் எய்த அம்பு மார்பில் தைத்து ரிச்சர்ட் மன்னர் இறந்தார்.

பட்டார். பிள்ளாய், அஜ்ஜீவவதைக்குப் பரிகாரமாக, அவருடைய சந்ததியாருக்கு உதவிபுரிய கருதி, தன்னுடைய யுத்தக்கொடிகளை நின் பாரிசமாக விரித்து, இயற்கைகுணமற்ற நின் சிற்றப்பனாகிய இங்க்லீஷ் ஜானின் ஆக்கிரமிப்பை அடக்கும்பொருட்டு, போர்புரிய, யாம் கோரிய பிரகாரம், இங்கு வந்திருக்கின்றனர்: ஆகையால் அவரோடு ஆலிங்கனஞ்செய், அவரை நேசி, அவருக்கு முகமன் கூறி, இங்கு வரவேணுமென்று உபசரி.

**ஆர்தர்.**—சிம்ம இருதயத்தோரை தாங்கள் கொன்றதற்காக கடவுள் தங்களை மன்னிப்பாராக. ஏனென்றால், அவருடைய (14) சந்ததியாகிய என்னுடைய சுதந்தரத்தை தங்களுடைய யுத்த சிறகுகளுக்குள் ஆதரித்துக்கொள்வதால், எனக்கு தாங்கள் மெய்யாகவே உயிர்கொடுக்கின்றீர். தங்களை உபசரிக்கின்ற என்னுடைய இக்கைகள் அதிகாரமற்றவைகளாயிருந்தபோதிலும், களங்கமற்ற நேசம்பொருந்திய இருதயத்துடன் உபசரிக்கின்றேன். பிரபுவே, ஆஞ்சியர்ஸ் கோட்டை வாசற்படிக்குமுன் தாங்கள் வரவேணுமென்று, தங்களுக்கு சர்வ உபசரணையுடன் ஆதித்தியம் பண்ணுகின்றேன்.

(13)**லிவிப் மன்.**—ஒரு மேன்மையான பிள்ளை! நினக்கு யார்தான் நன்மைசெய்ய கருதார்கள் ?

**ஆஸ்ட்ரியா** —யான் நின்னை நேசிப்பதாக கட்டுப்பட்ட உடன்படிக்கையின் அடையாள முத்திரையாக நின் கன்னத்தில் என்னுடைய இந்த உருக்கமான முத்தத்தை யான் தருகின்றேன், அவ்வுடன்படிக்கையின் நிபந்தனை யாதென்றால், இந்த ஆஞ்சியர்ஸ் கோட்டையும், வ்ரான்ஸில் நினக்குள்ள சுதந்தரமெல்லாம் நின் கைவசமாகும்வரையில்

(13) (14) See Appendix.

யான் என் ராஜ்யத்துக்குத் திரும்பிப் போகமாட்டேன், அவைகளோடுங்கூட, அதோ தெரிகின்ற அந்த வெளுப்பானதும் * வெள்ளை தோற்றத்தையுமுடைய கடற்கரை, அக்கடற்கரையினேரம் சமுத்திரத்தின் கர்ச்சனை இரைச்சலுடன் மோதும் அலைகளை உதைத்துப் பிரட்டித் தள்ளிக்கொண்டிருக்கப்பட்டதும், தனக்குள்ளிருக்கப்பட்ட சுதேசிகள் இதர தேசத்தாரின் இம்சைக்குள்ளாகாதபடி கூட்டுக்குள் வைத்திருப்பதுபோல் காபந்து செய்துகொண்டிருப்பதும், கண்டமாகிய பூமியுடன் தொடுக்கப்பெற்று நீர்சுவரமைந்த கொத்தளமாயும், அன்னிய அரசர் கவறக்கூடாமையால் எப்போதும் அச்சமற்றும், நம்பிக்கையுடனுமிருக்கப்பட்டதுமான அந்த இங்க்லன்ட் ராஜ்யமும், அதன் மேற்கு கடைக்கோடி மூலைமுதலாய் நின்னை தங்கள் ராஜாவென்று வணங்குகிறவரையில், அழகிய குழந்தாய், யானென் தேசத்தை நினைக்கக்கூடமாட்டேன், அதற்கு விரோதமாய் அதுவரையில் ஆயுதபாணியாயிருப்பேன்.

**கான்ஸ்டன்ஸ்.**—தங்களுடைய வல்லமை பொருந்திய கையிலிருந்து உதவி பெற்று, இவனும் வல்லவனைபிறகு, தங்களுடைய அன்புக்குத் தக்கபடி பதிலன்பு அவன் காண்பிக்கும்வரையில், அவன் தாயின் வந்தனத்தை, அதாவது யான் ஓர் விதவையின் வந்தனத்தை, தற்சமயம், தாங்கள் அங்கீகாரம் செய்துகொள்ளவேணும்.

**ஆஸ்ட்.**—நீதியும் தர்மமும் பொருந்திய இப்போரில், தங்களுடைய வாளாயுதத்தை உயர்த்தி, போர்புரிவோருக்கு மோட்ச சம்பாவனை கிடைப்பது நிட்சயமே.

---

* கென்ட் மாகாணத்தின் டோவர்நகரில் காணப்படும் சீர்மை சுண்ணும்பு செங்குத்துகளை குறிப்பிடப்படுகிறது.

**விலிப் மன்.**—ஆகையால் நல்லது, வேலையை துவக்கு வோம் : நமக்கிணங்காத இப்பட்டணத்தின் முகப்புக்கெதி ராக நம்முடைய பீரங்கிகளை குறிப்பிட்டு நாட்டுவோம். நமக்கு அனுகூலமாயிருக்கக்கூடிய ஸ்தானங்களை தெரிந்து கொள்வதற்காக யுத்தாப்பியாசத்தில் தேர்ந்த் நம்முடைய முக்கிய பிரதானிகளை கூப்பிடுங்கள். அவசியமானல் ராஜா வாகிய நாமே இப்பட்டணத்திற்கு முன்னல் மடியவேண்டு மானலுஞ்சரி, அல்லது ப்ரஞ்சுக்காரருடைய இரத்தவெள் ளத்தில் வழிகிழித்துக்கொண்டு இப்பட்டணத்தின் கடைத் தெருவுக்கு நடக்கவேண்டியிருந்தாலுஞ் சரி, எவ்விதத்தி லும் இப்பட்டணத்தை இப்பிள்ளைக்கு வசமாகும்படி செய் வோம்.

**கான்ஸ்ட.**—தங்களுடைய தானுபத்தியத்திற்கு ப தில் கிடைக்கும்வரையில் பொறுத்திருங்கள். யோஜனை குறைவால் உங்கள் வாள்களை இரத்தக்கறைப்படுத்திவிடப் போகிறீர்கள். நாமிவ்விடத்தில் போர்புரிந்து ஸ்தாபிக்க எத்தனிக்கும் சுதந்தரத்தை, என்னிறைவர், ஜட்டிலன் சமாதானத்துடன் இங்க்லன்டிலிருந்து கொணரக்கூடும், அப்படியானல் அவசரப்பட்டு கோபாவேசத்தில் விருதா வாய் சிந்தச்செய்த ஒவ்வொரு துளி இரத்தத்திற்கும் நாம் மனவருத்தப்படவேண்டியதாயிருக்கும்.

(ஜட்டிலன் வருக.)

**விலிப் மன்.**—ஓர் அதிசயமே குலமக்களே! இதோ உம்முடைய கோரிக்கைபிரகாரம் நம்முடைய தூதர் ஜட் டிலன் வந்துவிட்டார்! இங்க்லன்ட் அரசர் ஏன்ன சொல் கின்ருரென்பதை சுருக்கமாய் சொல்லும் சாந்தகுண பிர புவே; நீர் பேசும்பொருட்டு நாம் பேச்சை நிறுத்தி அம ரிக்கையாயிருக்கின்ருேம்; ஜட்டிலனே பேசும்.

**ஜட்டி**—அப்படியானால், உங்களுடைய ஸைன்யங்களை இச்சொற்ப முற்றுகையிலிருந்து திருப்பி பலத்த வேலைக்கு தயாராகும்படி தூண்டிவிடுங்கள். இங்க்லன்ட் அரசர் தங்களுடைய ஞாய கோரிக்கைகளைக் கேட்டு ஆத்திரங்கொண்டு ஆயுதபாணியாய்விட்டார். நான் புறப்பட்ட நேரத்தில் காற்றுவாகு பிரதிகூலமாயிருந்தபடியால் அது மாறுமட்டும் நான் தங்கவேண்டியதாயிற்று; அத்தவக்கத்திற்குள் அவர் முஸ்திப்புசெய்துகொண்டு, அவரும் என்னோடுகூடவே, தன்னுடைய படைகளோடு வந்து இறங்கிவிட்டார்; அவர் அதிவேகமாய் தன்னுடைய சேனைகளை செலுத்திக்கொண்டு இப்பட்டணத்தை நோக்கி வருகின்றனர்; அவருடைய ராணுவங்களோ ஏராளமானது, அவருடைய வீரர்களோ தைரியசாலிகள். அவரோடுகூட அவருடைய தாய் ராணியும் வந்திருக்கின்றாள், அவளோ ஏட்டி * என்னும் பெண் பேயே, அவனை சண்டைசெய்யும்படிக்கும், இரத்தசேதஞ்செய்யும்படிக்கும் தூண்டிக்கொண்டிருக்கப்பட்டவள்; அவளோடு அவள் மகள்வழியில்பௌத்திரியாகிய ஸ்பெய்ன் ராஜ்யத்தின் இராஜ புத்திரி லேடி பிளாஞ்சும் † வந்திருக்கின்றனள்; இவர்களோடு ராஜாவின் காலஞ்சென்ற சகோதாருடைய சோரகுமாரனும், இன்னும் சுதேசத்தில் நிலையற்ற பிழைப்புள்ள நிதானமற்றவர்களும், ஆத்திரப்பட்டவர்களும், சிந்தனையற்ற குணமுள்ளவர்களும், அக்கினி உக்கிரமுடையவர்களுமான வலியசேவிப்

---

* க்ரீக் புராணங்களின்பிரகாரம் ஏட்டியென்பது ஸெயுஸ், ஈரிஸ், என்கிற இவ்விரு தேவதைகளுக்கும் குமாரத்தியாக பிறந்த துஷ்ட தேவதை. இத்தேவதைக்கு நரமனிதனை முரட்டுவேலைக்கும், மதிகெட்ட செய்கைகளுக்கும் தூண்டிவிடுவதே வேலை.

† ஜானின் தங்கையாகிய எலினோர் என்னும் ராஜபுத்திரி கஸ்டீல் அரசனான அல்வான்சோ மன்னனை மணம்புரிந்து பெற்ற பெண், லேடி ப்ளாஞ்ச். ஆகையால் தாய் ராணி எலினோருக்கு பௌத்திரி.

போரும், ஆகிய எல்லோரும் வந்திருக்கின்றூர்கள்; இவ் வலிய சேவிப்போர், ஸ்திரிகள் முகங்களைப்போல மயிரற்ற முகமுடையவர்களாயிருந்தாலும், பயங்கரமான நாகத்தின் நெஞ்சம்படைத்தவர்கள், இவர்கள் தங்கள் சொந்த தேசத் திலிருந்த ஆஸ்திகளை விற்று, செலவழித்து போர்கோலம் பூண்டு, தாங்கள் உயர்குலத்தில் பிறந்த பெருமையை மாத் திரமே கௌரவத்துடன் தலைமேல்கொண்டு, இவ்விராஜ்யத் தில் புதிய சம்பத்துகள் சம்பாதிக்கலாமென்று துணிந்து வந்திருக்கப்பட்டவர்கள். சுருக்கமாய் சொல்லவேணுமா ஞல், இங்கிலீஷ் கப்பல்கள் எப்படிப்பட்ட போறுக்கியெடு த்த அஞ்சா தைரிய வீரரை இப்போது அடக்கிக்கொண்டு மிதந்துவந்திருக்கின்றனவென்றூல், கிறீஸ்துவ ராஜாங்கங் களுக்கு துன்பமும், நாசமும் உண்டுபண்ணும்பொருட்டு, எக்காலத்திலும், எக்கப்பல்களும், இவர்களைப்போலொத்த தைரிய வீரரை அடக்கிக்கொண்டு, எழும்பும் அலைமீது மிதக்கவேயில்லை. (பேரிகை சப்தம் ஒலிக்கவும்.) காதுக் கருவருப்பான அவர்களுடைய பேரிகைகளின் பேரொலி இடைஞ்சலால் மீதிவிஷயம் பேசக்கூடுமாயில்லை: அவர் கள் சமீபித்துவிட்டார்கள், ஒன்று ராஜி சம்பாஷணை பேச வேண்டும், அல்லது யுத்தஞ் செய்யவேண்டும்; ஆகையால் தயாராகுங்கள்.

**விலிப் மன்.**—இப்படையெழுச்சி எவ்வளவு எதிர் பாராத விஷயமாயிருக்கின்றது!

**ஆஸ்ட்.**—எவ்வளவுக்கு எதிர்பாராத விஷயமாயிருக் கின்றதோ அவ்வளவுக்கும் நம்மை ஆதரித்துக்கொள்ள நாம் முயற்சிக்கவேண்டும்; ஏனென்றூல் சமயத்திற்கு தக்கினுப்போல் தைரியம் எழும்பும் என்பது வசனம்: ஆகவே அவர்கள் நன்றூய் வரட்டும்; நாம் தயாராயிருக் கின்றேம்.

[ஜான் மன்னன், எலினோர், ப்ளாஞ்ச், பாஸ்டார்ட், பிரபுக்க ளுடனும், ஸைன்யங்களோடும் வருக.]

**ஜான் மன்.**—நமக்கு சொந்தமாகிய இப்பட்டணத்திற்குள் ஞாயத்துடனும், வம்ஸவரிசைக் கிரமத்துடனும் நாம் உட்பிரவேசிப்பதற்கு, வ்ரான்ஸ் அரசர் சமாதானத்துடன் அனுமதி கொடுப்பாரானுல், வ்ரான்ஸ் அரசர் சமாதானமாய் வாழ்க; இல்லாவிடில், வ்ரான்ஸ் ராஜாங்கம் இரத்தஞ் சிந்தக்கடவது, சமாதானம் வானத்திற்கு செல்லக்கடவது, அப்போது கடவுளால் அனுப்பப்பட்ட சமாதானத்தை பழையபடி வானத்திற்கே, தங்களுடைய அலட்சிய செறுக்கால், அடித்து துரத்தியவர்கள்பேரில் கடவுள் கடுங்கோபங்கொண்டு, அவர்களை கண்டிப்பதற்காக அவரால் ஏற்படுத்தப்பட்ட காரிய கர்த்தனுக நாமிருந்து, அவர்களுக்குப் புத்தி படிப்பிப்போமாக.

**விலிப் மன்.**—இங்கிலன்டிலிருந்து வ்ரான்ஸுக்கு வந்திருக்கும் சண்டைக்காரர் பழையபடி இங்க்லன்டுக்கே திரும்பிப்போய், சமாதானமாய் வாழ்ந்திருப்பார்களானுல், இங்க்லன்ட் அரசர் சமாதானமாய் வாழ்க. இங்க்லன்ட் ராஜாங்கத்தை நாம் நேசிக்கின்ளுேம்: அந்த இங்க்லன்டுக்காகவே நம்முடைய யுத்த கவஜத்தை சுமந்துகொண்டு நாமிங்கு வெயர்வை சிந்துகின்ளுேம். நம்முடைய இந்த பிரயாசம் உம்முடைய வேலையாயிருக்கவேண்டியது; ஆனுல் நீர் இங்க்லன்டை நேசிக்கவேண்டிய ஸ்தானத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கின்றீர் என்ருல் அதனுடைய நியாயமான ராஜாவை ரகசிய வேலை நடத்தி விலக்கிவிட்டீர், வம்ஸ வரிசைக் கிரமத்தைத் துண்டித்துவிட்டீர், சிசுத் தன்மையை முறைத்துப் பார்த்து முகத்தாலடித்துவிட்டீர், கன்னிகையின் கற்பைப்போலிருக்கப்பட்ட கிரீடத்தின் கௌரவத்தை கற்பழிப்பதுபோல் தூரா

கிருத பங்கப்படுத்திவிட்டீர். உம்முடைய தமையன், ஜெவ்ரோயினுடைய, முகமேயென்று சொல்லக்கூடிய இம்முகத்தைப் பாரும்; இக்கண்களும், இப்புருவங்களும் அவருடைய கண்களிலிருந்தும், அவருடைய புருவங்களிலிருந்தும் உருவமைக்கப்பட்டவைகளே; இந்த சின்ன சுருக்கத்தில், ஜெவ்ரோயோடு அழிந்துபோன, அந்தப் பெரிய விரிவு அடங்கியிருக்கின்றது, நாளாவிர்த்தியில் இச்சுருக்கம் அதே பிரமாண்டமாய்விடும். ஜெவ்ரோ உமக்கு மூத்தவராய் பிறந்த தமையன், இவன் அவர் மகன்; இங்க்லன்ட் அரசாட்சி ஜெவ்ரோயுக்கு சுதந்தரம், இவன் இப்போது ஸ்தாபிக்கும் (15)சுதந்தரம் ஜெவ்ரோயினுடைய சுதந்தரமே: ஆகவே கடவுள் (16)நாமத்தைக்கொண்டு கேட்கின்றேன், இப்போது நீர் பலவந்தமாய் வசப்படுத்திக்கொண்டிருக்கும் கிரீடத்திற்கு பாத்தியஸ்தனை இப்பிள்ளையின் பொரிகளில் உயிர் சூட்டுடன் ஓடுகின்ற இரத்தம் துடித்துக்கொண்டிருக்கையிலேயே நீர், தாமே ராஜாவென்று சொல்லிக்கொள்வதற்கு முகாந்தரமென்ன?

**ஜான் மன்.**—நம்மிடமிருந்து உம்முடைய பிரிவுகளுக்கு பதில் வாங்கக்கூடிய இவ்வளவு பெரிய அதிகாரத்தை நீர் யாரிடமிருந்து பெற்றீர், வ்ரான்ஸ் அரசே?

**விலிப் மன்.**—நீதிக்கு விரோதமாய் தோன்றும் மாசுக்களையும், கறைகளையும் சுத்தப்படுத்தும்படிக்கு, பலத்த அதிகாரம் வகித்தவர்கள் எல்லாருடைய மனதிலேயும் நல்ல எண்ணங்களை தூண்டிவிடுகின்ற அந்த பராபர நியாயாதிபதியிடமிருந்துதான் பெற்றிருக்கின்றேன்: அந்நியாயாதிபதிதான், இப்பிள்ளைக்குக் காவலாளியாக என்னை நியமித்திருக்கின்றார்: அவருடைய அதிகாரப் பத்திரிகை

(15), (16) See Appendix.

யின் கீழ் உமது தீமையைச் சுட்டிக்காட்டி, உமதுபேரில் குற்றஞ் சாட்டுகின்றேன், அவருடைய பேருதவியைக் கொண்டு அத்தீமைக்குத் தண்டிப்புக் கொடுக்கக் கருது கின்றேன்.

**ஜான் மன்.**—ஐயோ, நீர் அதிகாரத்தை அபகரிக் கின்றீர்.

**விலிப் மன்.**—(17)மன்னிக்கவும்; அப்படியிருந்தாலுங் கூட, அபகரித்துக்கொண்டிருக்கப்பட்டவர்களை அடக்க வேண்டியதற்காகத்தான்.

**எலினோர்.**—நீர் யாரை அபகரித்துக்கொண்டவனென் று சொல்லுகின்றீர், வ்ரான்ஸ் அரசே?

**கான்ஸ்ட.**—நான் பதில் சொல்லுகிறேன்; அபகரித் துக்கொண்டிருக்கப்பட்ட உன் மகனைத்தான்.

**எலினோர்.**—அப்பாலே போடி அகந்தைக்காரி! உன் சோரப்பிள்ளை அரசனவான், அப்போது நீ ராக்கினியா யிருந்து உலகத்தை ஆளலாமென்று எண்ணங்கொண்டிருக் கின்றாய்!

**கான்ஸ்ட.**—அடி, உன்னுடைய படுக்கை உன் புரு ஷனுக்கு எவ்வளவு உண்மையாயிருந்ததோ, அதைப் போலவே என்னுடைய படுக்கையும் உன் பிள்ளை, ஜெவ் ரோயுக்கு எப்போதும் உண்மையாயிருந்ததே; நீயும் ஜானும் பழக்க வழக்கத்தில் எவ்வளவு ஒத்திருக்கின்றீர்களோ, அதைவிட அதிகமாய், உருவத்தில் இப்பிள்ளை அவன் தகப்பன் ஜெவ்ரோயுக்கு ஒத்திருக்கின்றானே; மழையுந் தண்ணீரும் ஒத்திருக்கிறாப்போலும், (18)பேயும் அதன்

(17), (18) See Appendix.

தாயும் ஒத்திருக்கிறுப்போலும், விஷயங்கள் ஒத்திருக்கின்றனவே. என் பிள்ளையா சோரப்பிள்ளை! என்னுடைய ஆத்ம இரட்சணியத்தின்மேல் ஆணையிட்டுச் சொல்லுகின்றேன், இப்பிள்ளையின் தகப்பன் அவ்வளவு சரியான வழியில் ஒருக்காலும் பிறந்திருக்கமாட்டானென்று நினைக்கின்றேன்: நீ அவருடைய தாயாயிருந்தால் அது முடியவே முடியாத காரியம்.

**எலினோர்.**—உன் தகப்பனுடைய கௌரவத்தை கறைப்படுத்துகின்ற நல்ல தாய், அதோ இருக்கின்ருளப்பா.

**கான்ஸ்ட.**—உன்னுடைய கௌரவத்தையே கறைப்படுத்துகின்ற நல்ல பாட்டி, அதோ இருக்கினருளப்பா.

**ஆஸ்ட்.**—பேசாதிருங்கள்.

**பாஸ்ட்.**—கட்டியக்காரன் கூறுவதைக் கேளுங்கள்.

**ஆஸ்ட்.**—என்னடா, நீ என்ன பிசாசா?

**பாஸ்ட்.**—ஐயா, உன்னை உன்னுடைய தோல் போர்வையோடு தனிமையில் பிடித்துக்கொள்வேனுனல் உனக்கு பிசாசு கொடுக்கக்கூடிய வாதனை கொடுக்கக்கூடியவன் தான், நான்: உயிரற்ற சிங்கத்தின் மீசையை பிடித்திழுக்க வல்ல தைரியமுள்ள முயலென்று, பழமொழியில் சொல்லியிருக்கின்றதே, அந்த முயல் நீதான்: நானுன்னை சரியான பிரகாரம் பிடித்துக்கொள்வேனுனல் நீ அணிந்திருக்கும் தோல் சட்டையை பஞ்சாய் பறக்கச் செய்வேன்; அடே ஐயா, அதைக் கவனி; மெய்யாகவே செய்வேன், மெய்யாகவே செய்வேன்.

[19](எலினோர்)—சிங்கத்தினிடமிருந்து அதன் உடையை கழட்டிய அவனுக்கு (ரிச்சர்டுக்கு) அந்த சிங்கஉடை நன்ருய்ப் பொருந்தியிருந்தது.

**பாஸ்ட்.**—கீர்த்திபெற்ற * அல்சிடீசுடைய பாதரட்சை ஒரு கழுதை முதுகில் தொங்கினுல் எவ்வளவு கம்பீரமாய்[20]தோன்றுமோ, அவ்வளவு கம்பீரமாய்தான், இவனணிந்திருக்கும் சிங்கவுடை இவன் முதுகில் தொங்குகின்றது. ஆயினும், கழுதை, ஒன்று, சுமைபோலிருக்கப்பட்ட அந்த சிங்க உடையை உன் முதுகிலிருந்து எடுத்துவிடுவேன், அல்லது அவ்வுடையின் பேரிலேயே எப்படி சாத்துவேனென்ருல் உன் முதுகு நெரிந்துபோகும்.

**ஆஸ்ட்.**—இவனென்ன வெடிவெடிக்கிறவனுயிருக்கின்ருனே, அனுவசியமாய் ஏராள இரைச்சல் போட்டுக்கொண்டு நம்முடைய காதுகளையெல்லாம் செவிடாகும்படி செய்கின்ருனே என்ன ?

**விலிப் மன்.**—[21]லுவி, நாம் உடனே நடத்தப்போகிற காரியத்திற்கு ஆகவேண்டிய விஷயங்களைப்பற்றி தீர்மானி ; பெண்பிள்ளைகளே, மூடர்களே, உங்கள் பேச்சை நிறுத்துங்கள். ஜான் மன்னு, எங்களுடைய மொத்த கருத்து இதுதான் ; இங்லன்டையும், ஐர்லன்டையும், ஆஞ்ஜோ, டுரெய்ன், மெய்ன், இவைகளையும் ஆர்தருக்கு அவைகள் பேரிலுள்ள பாத்தியதையைக்கொண்டு அவைகளை நானும்

---

(19), (20), (21) See Appendix.

* அலசிடீஸ் அல்லது எர்க்குலீஸ் என்னும் அதிசய வல்லமை புருஷர் நீமின்காட்டு சிங்கத்தை குத்திக் கொன்றவர். அதனுல் அவருடைய உருவம் சித்தரிக்கப்படும்போது அவர் தோளில் சிங்கப்போர்வை அணிந்திருப்பதுபோல் சித்தரிக்கப்பட்டிருக்கின்றது.

மிடமிருந்து சர்வ ஊரிமையுடன் கேட்கின்றேன்; அவை களை நீர் ஒப்புக்கொடுத்துவிட்டு, உம்முடைய யுத்த கவஜங் களை கழட்டுவீரா என்ன?

**ஜான் மன்.**—அதைவிட என் ஜீவனையே ஒப்புக் கொடுத்துவிடுவேன், வ்ரான்ஸ் அரசே உம்மை விரோதி த்து எதிர்க்கின்றேன். பிரிட்டேன் மார்கான அரசாட்சி யின் ஆர்தரே, உன்னை நீ என்வசம் ஒப்புவி; உன்மட்டில் எனக்குள்ள அன்பினுல், இந்த கோழை வ்ரான்ஸ் அரசர் தன் கையால் காலமெல்லாம் உனக்கு ஜெயித்து கொடுப் பதைவிட அதிகமாகவே, உனக்கு நான் கொடுப்பேன்: ஆகையால் எனக்குள் அடங்கிவா பிள்ளாய்.

**எலினேர்.**—குழந்தை, உன் பாட்டியாரிடம் வா.

**கான்ஸ்ட.**—அப்படியே செய், குழந்தை, பாட்டியா ரிடம் போ, குழந்தை; பாட்டியாரிடம் ராஜாங்கத்தை கொடுத்துவிடு, அதற்கு பாட்டியார் உனக்கு ப்ளம் பழம், ச்செரிபழம், அத்திப்பழம் இதெல்லாம் கொடுப்பார்கள்: அப்படிப்பட்ட நல்ல பாட்டியாரப்பா அவர்கள்.

**ஆர்தர்.**—என்னுடைய நல்ல தாயே பேசாதிருங் கள்: இதைவிட நான் என் கல்லறையில் ஆழத்தில் புதை க்கப்பட்டிருக்கவேணுமென்று விரும்புகிறேன்: என்னை முன்னிட்டு நடக்கும் இவ்விவாதத்திற்கெல்லாம், நான் பாத் திரவானல்ல.

**எலினேர்.**—அவன் தாய் அவனை இப்படியெல்லாம் வெட்கப்படும்படி செய்கின்றுள், பாவம், பரிதாபத்திற் குரியு பைய்யன் அழுகின்றுன்.

**கான்ஸ்ட.**—அடி, வெட்கங்கெட்டவளே, அவன் தாய் அவனை அவமானத்திற்குட்படுத்துகிருளோ இல்லையோ அது போகட்டும்! அவன் தாயால் விளையும் அவமானங்களல்ல, ஆனல் அவன் பாட்டியினுடைய தீமைகள் தான், அவனுடைய பரிதாபந்திற்குரிய கண்களிலிருந்து தெய்வசந்நிதானம் வரையில் எட்டக்கூடிய முத்துபோன்ற கண்ணீர்துளிகளை உதிரச்செய்கின்றன. இக்கண்ணீர் முத்துகளை கடவுள் தனக்கு செலுத்திய காணிக்கைதான் என்பதாக அங்கீகாரம் செய்துகொள்வாராக; அடியே, பளிங்கு மணிகளைப்போலிருக்கப்பட்ட இக்கண்ணீர்துளிலஞ்சத்தை கடவுள் அங்கீகாரஞ்செய்துகொண்டு, இவனுக்கு நீதிபரிபாலனஞ் செய்வதுமல்லாமல் உன்னைப் பழிவாங்குவாரென்பதும் உறுதி.

**எலினோர்.**—பரலோகத்தைப்பற்றியும், பூலோகத்தைப்பற்றியும் தூஷணம் பேசுகின்ற மகா கொடிய புரணிக்காரிடீ, நீ!

**கான்ஸ்ட.**—பரலோகத்திற்கும், பூலோகத்திற்கும் தீங்கு உண்டுபண்ணுகின்ற மகா கொடிய விஷமக்காரிடீ, நீ, என்னை புறணிக்காரியென்று சொல்லாதேடீ: நீயும் உன் மகனும் கொடுமைக்குள்ளாகியிருக்கும் இக்குழந்தையின் அரசாட்சிகளையும், ராஜரீகங்களையும், சுதந்தரங்களையும் அபகரித்துக்கொண்டீர்கள்: இவன் உன் மூத்த பிள்ளையின் பிள்ளை, உன்னை பாட்டியாகக் கிடைக்கப்பெற்றதனல் நிர்ப்பாக்கியனேயொழிய வேறு எவ்விதத்திலுமில்லை: உன்னுடைய பாவங்களுக்காக இப்பரிதாபத்துக்குரிய குழந்தை வேதனைக்குள்ளாகியிருக்கின்முன்; பாவம் உற்பத்தி செய்யும் உன் வயிற்றிலிருந்து ஜனித்த இரண்டாந் தலை

முறையைத்தான் சேர்ந்தவனுனபடியால் தெய்வ* சட்டம் இவன் தலையில் விதிக்கப்பட்டிருக்கின்றது.

**ஜான் மன்.**—பித்தர்களே, பேச்சை நிறுத்துங்கள்.

**கான்ஸ்ட.**—நான் சொல்லப்போகிறது இவ்வளவு தான், அதாவது அவளுடைய பாவங்களுக்காக இவன் வேதனை அனுபவிக்கிறதுமல்லாமல், அவள் பாவங்களையும் அவளையுமே, அவளைவிட்டு ஒரு தலைமுறை விலகிய சந்தான மாகிய இப்பிள்ளைக்கு, வேதனைகளாக கடவுள் ஏற்படுத்தி யிருக்கின்ருர். இவன் அவளுக்கேற்பட்ட ஆக்கினைகளையே, அவளுக்கு பதிலாய், அனுபவிக்கின்ருன்; அவளுடைய பாவங்களே இவனுடைய தீமைகளாகவும், அவளுடைய தீய செயல்களே, அவள் பாவங்களுக்கேற்பட்ட தண்டனைகளை நிறைவேற்றும் சேவகனுகவும் ஏற்படுத்தப்பட்டு, அவள் இயற்கனவே செய்திருக்கும் பாவங்களுக்காகவும், இப் போது சுமத்திக்கொள்ளும் பாவங்கள், ஆகிய எல்லா பாவங் களுக்காகவும் இக்குழந்தை தண்டனைகளுக்குள்ளாகியிருக் கின்ருன். எல்லா தண்டனைகளும் அவளுக்கு பதிலாகத் தான் இவன் அனுபவிக்கின்ருன்: அவள் ஒரு கொள்ளை யில் போக!

**எலினேர்.**—அடி, மதிகெட்ட வாய்ப்பட்டி, உன் பிள் ளையின் பாத்தியதையை ரத்துசெய்யும் சாசனத்தை நான் காண்பிக்க முடியுமடீ.

**கான்ஸ்ட.**—அடியே, அதை யார்டீ சந்தேகிக்கின் றது? ஒரு சாசனந்தான்! ஒரு துரோக சாசனந்தான்! ஸ்திரி சாசனந்தான்; பிளவை வைத்த கிழப்பாட்டி சாசனந் தான்டீ!

---

* உன் தேவனுகிய நாம் நீதியில் வைராக்கியமுள்ள கடவுள், தாய் தந்தையர் என்ன பகைத்து சுமத்திக்கொள்ளும் பாவங் களுக்காக அவர்களுடைய பிள்ளைகளை 4, 5 தலைமுறைவரையில் தெண்டிப்போம் என்பது தெய்வ சட்டம்.

**விலிப் மன்.**—குலமகளே, பேசாதிரும்! ஒன்று சாந்தமாய் பேசும், அல்லது பேச்சை நிறுத்தும்: நீங்கள் இரைச்சலிட்டுக்கொண்டு சொன்னதையே திருப்பித் திருப்பி சொல்வதை இங்கு வந்திருக்கப்பட்ட நாங்கள், அப்படியே (22) ஆகக்கடவதுஎன்று சொல்வதுபோல்,மௌனமாய் கேட்டுக்கொண்டிருப்பது எங்களுக்கழகல்ல. இந்த ஆஞ்சியர்ஸ் பட்டணத்து மனிதர்களை கோட்டை சுவற்றுக்கருகில் வரும்படி செய்ய யாராகிலும் ஒருவர் தாரை ஊதுங்கள்: அவர்கள் சொல்வதை கேட்போம், யாருடைய பாத்தியதையை அவர்கள் அங்கீகரிக்கின்றார்களென்று பார்ப்போம், ஆர்தருடையதையா, அல்லது ஜானுடையதையாவென்று தெரிந்துகொள்வோம்.

[தாரை ஊதவும்; சில நகரத்தார் கோட்டை மதிலுக்கு மேல் தோன்றவும்.]

**முதல் நகரத்தான்.**—எங்களை கோட்டை மதிலுக்கருகில் வரும்படி கூப்பிட்டது யார்?

**விலிப் மன்.**—இங்க்லன்ட் அரசருக்கு பதிலாய், வ்ரான்ஸ் அரசராகிய நாம்தான் கூப்பிட்டோம்.

**ஜான் மன்.**—இங்க்லன்ட் அரசு தனக்காகதாமே கூப்பிட்டது. ஆஞ்ஜியர்ஸ் நகரத்து மனிதர்களே, என் நேச பிரஜைகளே,—

**விலிப் மன்.**—ஆஞ்ஜியர்ஸ் நகரத்து நேசமுள்ள மனிதர்களே, ஆர்தரின் பிரஜைகளே, எங்கள் தாரைதான் உங்களை இந்த அன்பான ராஜி சம்பாஷணைக்கு கூப்பிட்டது,—

**ஜான் மன்.**—அப்படி கூப்பிட்டது நம்முடைய அனுகூலத்திற்காகதான்; ஆகையால் நாம் சொல்லப்போகிற

(22) See Appendix.

த்தை முதலில் கேளுங்கள். இந்நகரத்தாராகிய நீங்கள் பார்க்கக்கூடிய சமீபத்திலும், உங்கள் கோட்டை வாசலுக்கெதிராகவும், ப்ரஞ்ச் கொடிகளை பிடித்துக்கொண்டு வந்திருக்கும் இந்த ப்ரஞ்ச் ஸைன்யங்கள் உங்களை நாசஞ்செய்யும்பொருட்டு இங்கு செலுத்திவரப்பட்டிருக்கின்றன : அவர்களுடைய பீரங்கிகள் வயிற்றில் அப்பீரங்கிகளின் கடுங்கோப பிரயோகங்களாகிய குண்டு மருந்தை நிரம்ப திணிக்கப்பட்டு, அவைகளுடைய கோபவேகத்தை வீசும் போது, உங்கள் கோட்டை மதில்களின்மேல், இரும்பு குண்டுகளை யெறிந்து தாக்கும்பொருட்டு, அவைகளை தயாராக, தக்க ஸ்தானங்களில் அமைக்கப்பட்டுள : இரத்த சேத முற்றுகைக்கும், இரக்கமற்ற நடவடிக்கைகள் நடத்துவதற்குமான ஆயத்தங்களெல்லாம் உங்கள் பட்டணத்து கண்காட்சிக்கு முன்னாலும், (23) கண்ணிமைபோல் திறந்து மூடக்கூடிய கோட்டைக் கதவுகள் சமீபத்திலும் நடந்தேறி வருகின்றன ; நாம் மாத்திரம் இப்போது இங்கு வந்திராவிட்டால், உங்கள் பட்டணத்தை ஓர் இடுப்புடையைப்போல் சுற்றிக்கொண்டிருக்கும் கோட்டை மதில்களில், படுக்கையாய் அடுக்கப்பட்டு, அசைவற்றிருக்கும் கருங்கல்கள், அவைகளுடைய கெட்டியான சுண்ணும்பு படுக்கைகளிலிருந்து, அவர்களுடைய பீரங்கிகள் வேகத்தால், வெளிப்படுத்தப் பட்டு, இரத்தசேதஞ் செய்யும் படை உட்பிரவேசித்து, உங்கள் வாழ்க்கையை அழிக்கும்பொருட்டு வெகு நாசஞ் செய்யப்பட்டிருக்கும். இவ்விதம் அபாயத்திற்குட்பட்டிருந்த உங்கள் கோட்டையின் பக்கசுவர்களில்கூட ஒரு கீறல் முதலாய் நேரிடாமல் காப்பாற்றும்பொருட்டு, படைக்குப் பதில் படை உங்கள் கோட்டை கதவுகளுக்கு சமீபத்திலேயே வெகு கஷ்டத்தோடும், மகா வேகத்தோடும், செலுத்

---

(23) See Appendix.

திக்கொண்டுவந்து வைத்திருக்கும் உங்களுடைய கிரமமான ராஜாவாகிய நம்மை கண்டதும், ஃவ்ரஞ்ச்சுக்காரர் பிரமித்துப் போய், ராஜி சம்பாஷணைக்கு சம்மதப்பட்டார்கள் பார்த்தீர்களா? அக்கினி மயமான குண்டுகளை உங்கள் மதில்களின்பேரில் பாயச்செய்து, அம்மதில்களை நடுக்குச்சுர உதறலைப்போல் உதறச்செய்வதற்கு பதிலாக, அவர்கள் தங்கள் ஆவி புகை சூழ்ந்த சாந்த வார்த்தைகளை இப்போது உங்கள் காதுக்கினிமையாக பேசி, நீங்கள் அறியாமையால் பிசகும்படி செய்ய பார்க்கின்றார்கள். பட்சமுள்ள நகரவாசிகளே, நாமிப்போது சொன்ன யாவையும் வாஸ்தவமென்று நம்புங்கள், உங்களுடைய சொந்த ராஜாவாகிய நம்மை உள்ளே விடுங்கள், அதிவேகமாய் சேனையை செலுத்திவந்த பிரயாசத்தால் உழைத்துக் களைத்துப்போன நாம், உங்கள் கோட்டை மதில்களுக்குள்ளே இளைப்பாறவேணுமென்று, மன்றாடுகின்றோம்.

**விலிப் மன்.**—நாம் சொல்லவேண்டியதையும் சொன்னபிறகு, எங்கள் இருவர் கேள்விகளுக்கும் ஒரு வழியாய் மறுமொழி சொல்லுங்கள். இதோ, என்னுடைய இந்த வலது கை பக்கத்தில், இளம் பிளான்டாஜனட் வம்ஸத்தான் நிற்கின்றான், அவனை பிடித்துக்கொண்டிருக்கப்பட்ட, இவ்வலதுகையின் ஆதரவை, அவனுக்குள்ள பாத்தியதைகளை ஸ்தாபிக்கவேண்டிய விஷயமாய், அளிக்கிறதென்று மகா தெய்வீக தன்மையுடன் நாம் பிரதிக்கினை செய்திருக்கின்றோம்: இவன் இம்மனிதனுடைய தமையன் பிள்ளை, ஆகையால் இவருக்கும் ராஜா, இவரனுபவிக்கும் சகலத்திற்கும் ராஜா: காலில் போட்டு மிதித்து நடக்கப்பட்டிருக்கின்ற இத்தர்ம நீதியை நிலைநாட்டும்பொருட்டுத்தான், நாம் இந்த போர்கோலமாய் படையெடுத்து, உங்கள் நகரத்துக்கு முன்னால் படர்ந்திருக்கும் பசும்புல்லைத்தான் மிதித்து நடந்து

வந்திருக்கின்றோம். கொடுமைக்குள் அகப்பட்டிருக்கும் இக்குழந்தைக்கு சகாயஞ்செய்யும்படி, திவ்வியமாதிரியாய் தூண்டப்படுகிறபிரகாரம், உதவிபுரியும் வைராக்கியத்திற்கு கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறோமே இது தவிர, வேறு எவவிதத்திலும் நாங்கள் உங்களுக்கு சத்துருவல்ல. ஆகையால் நீங்கள் உள்ளபடி செலுத்தவேண்டிய கடமையை, யாருக்கு அது உரித்தானதோ, அவருக்கு அதை செலுத்த தயைபுரியுங்கள்; அதாவது, இந்த இளவரசுக்கு; அப்படிச் செய்வீர்களானால், எங்களுடைய யுத்தாயுதங்களாகிய பீரங்கி, துப்பாக்கி முதலியவைகள், வாய்பூட்டப்பட்ட கரடியைப்போல், பார்வைக்குமாத்திரம் பயங்கர தோற்றமுடையவைகளாயிருப்பதைத் தவிர்த்து, அவைகளால் விளையக்கூடிய தீமைகளெல்லாம், அவைகளைவிட்டு வெளிப்படாமல், அவைகளுக்குள்ளேயே அடைந்திருக்கும்படி மூடி முத்தரிக்கப்படும்: எங்கள் பீரங்கிகளின் விஷமத்தை, காயப்படுத்தக்கூடாத மேகங்களை நோக்கி வெடித்து, வேடிக்கையில் செலவழிக்கப்படும்; துண்டிப்பதற்கு உபயோகப்படுத்தப்படாத வாள்களோடும், கொஞ்சமும் நசுக்குப்படாத யுத்த தலைச்சீராக்களோடும், யாதொரு வருத்தமின்றி, மனமங்களமாய் திரும்பிப்போவோம்; நாங்கள் உங்கள் பட்டணத்தை தாக்கும் போரில் இரத்தஞ் சிந்துவதற்கென்று இவ்விடம் கொணர்ந்திருக்கும் பலத்த வீரர்களை பழையபடி எங்கள் ஊருக்கே திரும்பவும் கொண்டுபோவோம்; உங்கள் குழந்தைகளையும், உங்கள் மனைவிகளையும், உங்களையும் மனசமாதானத்துடன் வாழ்ந்திருக்கும்படிவிட்டுப் போவோம். அதற்கு விரோதமாய் நாம் வலிய கொடுக்கும் நம்முடைய இச்சமாதான ஏற்பாட்டை உங்களுடைய மதிகேட்டால் நிராகரிப்பீர்களானால், பண்டைக்காலத்து பார்வையுடைய உங்கள் கோட்டைச்சுவர்கள் உங்கள் பட்டணத்தைச்சுற்றி

காபந்து செய்துகொண்டிருப்பதனாலேயே, எங்களுடைய யுத்தப்பிரயோகங்களிலிருந்து, நீங்கள் உங்களை காப்பாற்றிக் கொள்ளலாமென்று எண்ணுகிறீர்கள்; இங்கிருக்கப்பட்ட இங்கிலீஷ்காரரையெல்லாம் தங்கள் ராணுவங்களோடு, உங்களுடைய பருத்த கோட்டை மதில்களுக்குள் பந்தோபஸ்துக்காக, நீங்கள் வைத்துக்கொண்டிருந்தாலுஞ் சரியே. ஆகவே சொல்லுங்கள், உங்கள் நகரத்தார் நாம் யாருக்காக உங்களை போர்க்கழைக்கின்றோமோ அவருக்கு பதிலாய் நம்மை ராஜாவாக ஒப்புக்கொள்வார்களா? அல்லது நாம் ஆக்ருஷ்ணங்கொண்டு யுத்தாரம்பம் செய்யும்படி கொடி பேசி, இரத்தவெள்ளத்தில் வழிகிழித்துவந்துதான் உங்கள் பட்டணத்தை வசப்படுத்தவேண்டுமா?

**மு. நகரத்.**—சுருக்கமாய் சொல்லவேணுமானால், நாங்கள் இங்கலன்ட் ராஜாங்கத்தின் ராஜனுடைய பிரஜைகள்: நாங்கள் அவருக்காக, அவருக்குள்ள சுதந்தரத்தைக்கொண்டு, இப்பட்டணத்தை எங்கள் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கின்றோம்.

**ஜான் மன்.**—அப்படியானால், இங்க்லன்டின் ராஜாவாகிய நம்மை உங்களுடைய ராஜாவாகவும் அங்கிகராம் செய்துகொண்டு, நாம் உள் செல்ல விடுங்கள்.

**மு. நகரத்.**—அப்படி எங்களால் செய்யமுடியாது; ஆனால் எவரொருவர், தாம் தான் ராஜாவென்று நிரூபிக்கின்றாரோ, அவருக்குதான் நாங்கள் ராஜபக்தி காண்பிப்போம்: அது வரையில் உலகத்திலுள்ள எந்த அரசரும் பிரவேசிக்காவண்ணம் எங்கள் கோட்டைக்கதவுகளை இறுகமூடி தாளிட்டுவிட்டோம்.

**ஜான் மன்னன்.**—இங்க்லன்ட் ராஜரீகத்தின் கிரீடத்தை தரித்திருக்கப்பட்டவர்தான் இங்கலன்டின் ராஜா

வென்று நிரூபிக்கவில்லையா? அப்படி கிரீடம் ரூபிக்காவிட்டாலுங்கூட, பதினையாயிரத்தோடு பதினையாயிரம் உயர் குலபிரபுக்களை நம்பக்ஷம் சாட்சிகளாகக் கொணர்ந்திருக்கின்றோம்—

**பாஸ்ட்.**—சில சோர குமாரரும், இன்னும் மற்றவர்களும்.

**ஜான் மன்.**—அத்தனை ஆயிரம் பிரபுக்களும் தங்களுடைய ஜீவன்களையே செலவழித்தாகிலும், நம்முடைய சுதந்தரத்தை ஸ்தாபிக்கவேண்டியதற்காக வந்திருக்கின்றார்கள்.

**விலிப் மன்.**—அப்பிரபுக்களைப்போலவே அவ்வளவு உயர்குலத்திலுதித்தவர்களும், அப்பிரபுக்கூட்டத்திற்கு சமதையான அத்தனை ஆயிரம் பிரபுக்கள்—

**பாஸ்ட்.**—சில சோரகுமாரருங்கூடவோ?

**விலிப் மன்.**—இவர் முகதாவிலேயே நின்று, இவருடைய சுதந்தரத்தை ஆட்சேபிக்க வேண்டியதற்காக வந்திருக்கின்றார்கள்.

**மு. நகரத்.**—யாருடைய சுதந்தரம் அதி பாத்திரமானதென்று உங்களுக்குள் தீர்த்துக்கொள்கிறவரையில், இப்பட்டணத்தின் சுதந்தரத்தை அப்படிப்பட்ட அதிபாத்திரருக்கென்று, உங்களிருவருக்கும் கொடாமல் நிறுத்தி வைத்திருக்கின்றோம்.

**ஜான் மன்.**—அப்படியானால், நம்முடைய ராஜாங்கத்தின் ராஜா இன்னதென்று தீர்மானிக்கும்பொருட்டு நடக்கப்போகின்ற விசாரணையாகிய இப்பயங்கரப்போரில், இன்றைய அந்திப்பனி மூடலுக்குமுன் மடிந்து, தங்களு

டைய நித்திய இளைப்பாற்றிக்கு பறந்துபோகும் ஆன்மாக் களின் பாவங்களை கடவுள் பொறுத்தருள்வாராக.

**விலிப் மன்.**—ஆமென்சேசு, அப்படியே ஆகக்கடவது! வீரர்களே, குதிரைமேலேறுங்கள்! ஆயுததாரி யாகுங்கள்!

**பாஸ்ட்.**—ஒருகாலத்தில் பறவை நாகத்தைப் பிடித்து சுழட்டிய அத்தியக்ஷ *ஜார்ஜுவே, அதிலிருந்து இதுவரை யில் என் அன்ன சத்திரக்காரி வாசற் கதவுக்குமேல் குதிரைமீது வீற்றிருக்கப்பட்டவரோ, எங்களுக்கு கொஞ் சம் கத்தி சிலம்பம் கற்றுக்கொடும்! (ஆஸ்ட்ரியாவைப் பார்த்து) பயலே, உன் வீட்டில், அதாவது உன் பெண் சிங்கத்தோடு இருக்கப்பட்ட உன் குகையில், பயலே, நானு மிருப்பேனுனல் உன்னுடைய சிங்க உடைக்கு ஜவாப்பாக ஒரு எருது தலை வைத்து, உன்னை நான் ஒரு வேதாள மாக்கிவிடுவேன்.

**ஆஸ்ட்.**—அடே அடக்கு! ஜாஸ்தி பேசாதே.

**பாஸ்ட்.**—ஓ எல்லாரும் நடுங்குங்கள், ஏனென்றால் சிங்கம் கர்ச்சிப்பதை கேட்கின்றீர்கள்.

---

* அர்ச். ஜார்ஜ என்பவர் இங்க்லன்டினருடைய குலகுரு முனிவர். சரித்திரத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம், இவர் ஒரு பயங்கரமான பறவை நாகத்தைக் கொன்று ஓர் ராஜ கன்னிகை யை ஆபத்திலிருந்து விடுவித்து ஒரு ராஜாங்கத்தையும் காப்பாற் றினூர். அப்பறவை நாகத்தை காலில் மிதித்த வண்ணம் தோன் றும் அர்ச். ஜார்ஜுவின் சித்திரந்தான் இங்க்லன்டிலிள்ள அன்ன சத்திரங்களுக்கு அறிகுறி அடையாளம். பாஸ்ட்டார்ட் இங்கு சொல்லுகிற பிரகாரம் இம் முனிவர் அப்படிப்பட்ட சில அறிகுறி பலகைகளில் குதிரைமேல் வீற்றிருப்பதுபோல் காண்பிக்கப்பட் டிருப்பதாக ஏற்படுகின்றது.

**ஜான் மன்.**—குன்றின்மேல் அதிக உயரத்திலிருக்கப்பட்ட மைதானத்திற்கு செல்லுங்கள்; அங்கே நம்முடைய ராணுவங்களையெல்லாம் வசதியான ஸ்தானங்களில் அணிவகுத்து நிறுத்துவோம்.

**பாஸ்ட்.**—அப்படியானால் ஓடுங்கள்; போர்க்களத்தில் வசதியான ஸ்தானங்களை வசப்படுத்திக்கொள்ளுங்கள்.

**விலிப் மன்.**—அப்படியே செய்யட்டும்; மற்றொரு குன்றின்மேல் பாக்கியாய் நிற்கும் நம்முடைய ராணுவங்களை நிறுத்திவைக்கும்படி உத்தரவுசெய். நம் பக்ஷம் ஞாயமிருக்கிறபடியால் கடவுளுமிருப்பார்!

---

## இரண்டாவது காட்சி (அதே இடம்.)

[பேரிரைச்சல் உண்டுபண்ணுக. பிறகு ப்ரஞ்ச்தூதன் தாரை ஊதிக்கொண்டு கோட்டை வாசற்படிக்கு வரவும்.]

**ப்ரஞ்ச் தூதன்.**—ஆஞ்சியர்ஸ் நகரத்தின் மனிதர்களே, உங்கள் கோட்டை கதவுகளை விரிய திறவுங்கள், பிரிட்டேன் மாகாணத்தின் இறைவராகிய பாலிய ஆர்தரை உள்ளே விடுங்கள், அவர் ப்ரானஸ் அரசர் உதவியால் அநேக இங்கிலீஷ் தாய்மார் கண்களில் கண்ணீர் பெருகும்படியான வேலை அதிகம் செய்திருக்கின்றனர், அத்தாய்மாரின் குமாரர்கள் இரத்தம் பெருகிக்கொண்டிருக்கப்பட்ட போர்க்களத்தின் தரைமீது சிதறி கிடக்கின்றார்கள்; விதவைகளாய் போன அநேக ஸ்திரிகளுடைய கணவன்மார், இரத்த நிறத்தால் தன்னிறம் மாறி செந்நிறமாய்ப்போன தரை

ணை, தங்களுடைய எரித்துப்போன கைகளால், தாவிப்பிடிக்கும் வண்ணம் புரண்டுகிடக்கின்றார்கள்; சொற்ப சேதத்தைக்கொண்டே, காற்றில் ஆடிக்கொண்டிருக்கப்பட்ட வ்ரன்ச் கொடிகளில் வெற்றி விளங்குகின்றது, வ்ரன்ச்சுக்காரர், கம்பீரமாய் அக்கொடிகளை பிடித்துக்கொண்டு, ஜெயசீலராய் உங்கள் கோட்டைக்குள் பிரவேசித்து, பிரிட்டேன் மகாணத்தின் இறைவராகிய ஆர்தர்தான் இங்கலன்டினுடையவும், உங்களுடையவும் ராஜாவென்று பிரசித்தப்படுத்தும் பொருட்டு, சமீபத்தில் வந்துகொண்டிருக்கின்றார்கள்.

[இங்கிலீஷ் தூதன் தாரை ஊதிக்கொண்டு வரவும்.]

**இங். தூதன்.**—ஆஞ்சியர்ஸ் நகரத்தின் மனிதர்களே, சந்தோஷங் கொண்டாடுங்கள், உங்கள் மணிகளை அடியுங்கள்; உங்களுக்கும் இங்கலன்டுக்கும் ராஜாவாகிய ஜான் அரசர், காங்கையானதும், பகைமுற்றியதுமான இந்நாளில், பிரசித்திபெற்ற சர்வாதிபதியாக சமீபத்தில் வருகின்றார், வெள்ளிபோல் பிரகாசித்த யுத்த கவஜங்களை அணிந்துகொண்டு, இவ்விடத்தை விட்டுப்போன இங்க்லிஷ் வீரர்கள் அக்கவஜங்களுக்கு வ்ரஞ்ச்சுக்காரருடைய உதிரத்தால் முலாம் பூசிக்கொண்டு வருகின்றார்கள்; இங்க்லிஷ்காரர் தலைச் சீராக்களின் உச்சியிலுள்ள சிறகு முடிச்சுவின் ஒரு சிறகை முதலாய், வரஞ்ச்சுக்காரருடைய தண்டத்தால் கூட, தள்ளமுடியவில்லை; நாங்கள் யுத்தத்திற்கு புறப்பட்டபோது எங்கள் கொடிகள் எங்களுடைய எந்தவீரர்கள் கையில் பறந்துகொண்டு போயினவோ, அதே வீரர்கள் தான் அவைகளை திரும்பவும் கொண்டுவருகின்றார்கள்; பலம் பொருந்திய எங்கள் இங்கிலீஷ் வீரர்கள், கொண்டாட்டங்கொண்ட வேட்டைக்கார கும்பலைப்போல், களிப்புடன் வருகின்றார்கள்; அவர்களுடைய கைகளெல்லாம்,

சாகின்ற தங்களுடைய சத்துருக்களை சம்ஹாரஞ் செய்த சாயவேலையில் சாயம் தோய்க்கப்பட்டதுபோல், சிகப்பா யிருக்கின்றன: ஆகையால் உங்கள் கோட்டைக் கதவு களைத் திறந்து, வெற்றியடைந்தவர்களுக்கு வழிவிடுங்கள்.

**மு. நகரத்.**—தூதர்களே, நாங்கள் எங்கள் கோபுரங் களிலிருந்தே சண்டை துவக்கத்திலிருந்து கடைசிமட்டும் பார்க்கக்கூடுமாயிருந்தது; உங்களுடைய இரு பக்க சேனை கள் எதிர்த்ததையும், பின்னடைந்ததையும் பார்த்துக் கொண்டிருந்தோம்; இரண்டு சேனைகளும் எவ்வளவு சம மாயிருந்தனவென்றால், நாங்கள் எவ்வளவு பிரயாசப்பட்டு பார்த்தும், எந்தப் பக்கமாவது மேலென்று எங்களால் தீர் மானிக்கமுடியவில்லை: ஒவ்வொரு பக்கமும் தாங்கள் இரத் தஞ் சிந்தியதற்கு பதிலிரத்தஞ் சிந்தும்படி செய்தது; அடிவாங்கியதற்கு பதிலடி கொடுத்தது; பலத்துக்குப் பலம் ஈடாயிருந்தது; பராக்கிரமத்துக்கு பராக்கிரமம் எதிர்த்துநின்றது; ஆகவே இரண்டு பக்கங்களும், எல்லா விஷயத்திலும், சமதையாயிருந்தன; அப்படி சமமா யிருக்கவேணுமென்பதுதான் எங்கள் கோரிக்கை எந்த பக்கமாவது ஒருபக்கம் மகா சிறந்ததாய் விளங்கவேண்டும்: இரண்டு பக்கங்களும் திராஸ் முனைபோல் சமானமாயிருக் கும்போது நாங்கள் எங்கள் பட்டணத்தை தற் சமயம் உங்களிருவருக்கும் விடமாட்டோம்; ஆயினும் உங்களிரு வருக்காகத்தான் காபந்து செய்துகொண்டிருக்கின்றோம்.

[இரண்டு ராஜாக்களும் தங்களுடைய ராணுவங்களோடு வெவ்வேறு வழியாக வருக.]

**ஜான். மன்.**—வ்ரான்ஸ் அரசே, வீணாய் சேதஞ்செய் வதற்கு இன்னும் மேற்கொண்ட இரத்தம் வைத்திருக்கின் றீரோ? அல்லது சொல்லும், நம்முடைய சுதந்தரம் என்

னும் நீரோட்டத்தைக் கிரமமாக நேரே (24)ஓடவிடுவீரா என்ன? அந்நீரோட்டம் உம்முடைய தடங்கலால் தொல்லலப்பட்டிருக்கின்றது; அந்நீரோட்டத்தின் வெள்ளி நீரை அமரிக்கையாய் சமுத்திரத்திற்கு ஓடும்படி நீர் விட்டாலொழிய, அது தன்னுடைய கிரமபோக்கை விட்டு தயங்கி, அலைமோதலுண்டாகி, தன்னுடைய சொந்த வாய்க்காலை விட்டு வெள்ளம் பெருகி வெளிப்பட்டு, உம்முடைய சுதந்தரமென்னும் நீரோட்டத்திற்கு அணைகளாயிருக்கப்பட்ட கரைகளை முதலாய் அடித்துக்கொண்டு போய்விடும்.

**விலிப் மன்.**—இங்க்லன்ட் அரசே, இக்கொடிய யுத்தத்தில், வ்ரான்ஸ் ராஜ்யத்தினராகிய நாங்கள் சிந்திய இரத்தத்தைப் பார்க்கிலும் ஒரு துளி முதலாய் குறைவாய் சிந்திய அனுகூலத்தைக்கூட நீங்கள் அடையவில்லை; அதற்கு விரோதமாய் எங்களைவிட அதிக சேதமடைந்திருக்கின்றீர். இவ்வாகாயத்தின் கீழுள்ள பூமியை ஆளும் இவ் வலது கையின்பேரில் ஆணையிட்டுச் சொல்லுகின்றேன், உம்மை வெல்லவேண்டியதற்காக இந்த யுத்த கவஜங்களை நாம் அணிந்திருக்கின்றோம், தர்மசிந்தனையோடு நாம் பூண்டிருக்கும் இக்கவஜங்களை கழட்டுவதற்கு முன்னதாகவே நாமும்மை தோற்கடிப்போம்; அப்படி அது சாத்தியப்படாவிட்டால், இறந்தவர்கள் ஜனத்தொகையோடு ராஜாவாகிய நம்மையும் சேர்த்து, இந்த யுத்த சேதத்தை காண்பிக்கும் பட்டோலையில் சம்ஹாரமானவர்களுக்குள் ராஜாக்களுடைய பெயரும்இருக்கும்படி செய்து, அப்பட்டோலையை கௌரவப்படுத்துவோம்.

**பாஸ்ட்.**—ஆகா, ராஜ மகத்துவமே! ராஜாக்களுடைய உயர்ந்த இரத்தம் உஷ்ணமாய்விட்டபோது உங்களுடைய

(24) See Appendix.

மகிமைபிரதாபம் எவ்வளவு உன்னதமாய் உயர்கின்றது! ஐயோ, இப்போது இயமன் தன்னுடைய ஜீவநாசஞ்செய்யும் வாய்க்கு எஃகு உறைபோட்டுகொள்கின்றான்; வீரர்களுடைய வாள்கள்தான் அவனுக்கு பற்களும் நகங்களும்; ராஜாக்களுக்குள் ஏற்படும் முடிவுபெறாத வழக்குகளால் கிடைக்கும் மானிட மாமிசத்தை இயமன், சுண்டெலியைப் போல் ஒளிந்திருந்து திருடி, இப்போது விருந்தாடுகின்றான். ஏன் இந்த ராஜ தலைமை கர்த்தர்கள் இவ்விதம் மலைத்து நிற்கின்றார்கள்? ராஜாக்களே, நாச ஆஞ்ஞை கூறுங்கள்; சம வல்லப அதிபதிகளே, அக்கினிமய வீரிய வீரர்களே! இரத்தக்கறை படிந்திருக்கும் போர்களத்திற்கு திரும்பவும் செல்லுங்கள்; ஒரு பக்கத்தின் தடுமாற்றம் மற்றொரு பக்கத்திற்கு மயக்கமற்ற வெற்றியை கொடுக்கட்டும்; அதுவரையில் வெட்டு குத்தும், இரத்த சேதமும், கொலையுமே!

**ஜான் மன்.**—இப்போதாகிலும் இந்நகரத்தார் எந்த பக்கத்தை அங்கீகாரம் செய்வார்கள்?

**விலிப் மன்.**—நகரத்தாரே பேசுங்கள், இங்கலன்டின் நன்மையைக் கருதி பேசுங்கள்; உங்கள் ராஜா யார்?

**மு. நகரத்.**—இங்க்லன்ட் ராஜாங்கத்தின் ராஜா இன்னாரென்று எங்களுக்குத் தெரிந்தால், அந்த ராஜாதான் எங்களுக்கும் ராஜா.

**விலிப் மன்.**—இங்க்லன்ட் ராஜாவின் சுதந்தரத்தை இவ்விடத்தில் நிலைநாட்டுகின்ற நம்மை, உங்கள் ராஜாவாக தெரிந்துகொள்ளுங்கள்.

**ஜான் மன்.**—நம்மை தெரிந்துகொள்ளுங்கள், நமக்கு நாமே மகா பெரிய பிரதிஸ்தராயிருக்கின்றோம், நம்முடைய தன்மைக்கு நாமே ஸ்தானபதியாயிருக்கின்றோம்;

நாமிங்கு பிரசன்னமாயிருப்பதை பஹிரங்கப்படுத்தும் காரண கர்த்தாவர்கவும் இந்த ஆஞ்சியர்ஸ் பட்டணத்திற்கும், உங்களுக்கும் அதிபதியுமாகவுமிருக்கின்றோம்.

**மூ. நகரத்.**—உங்களுக்கெல்லாம் மேலான (25) அதிகாரம் நீங்கள் சொல்வதையெல்லாம் நிராகரிக்கும்படி செய்கின்றது; எங்களுடைய சந்தேகம் நிவர்த்தியாகும்வரையில், எங்களுக்கு இயற்கனவேயுள்ள அச்சம் எங்களைவிட்டு விலகாதானபடியால், அவ்வச்சத்துடனேயே எங்கள் கோட்டை கதவுகளை நாங்கள் கெட்டியாய் தாளிட்டு வைத்திருக்கின்றோம்; யாராகிலும் ஒரு ராஜா அரசிழந்து அசக்தராய்ப் போனதைக் கண்டு எங்கள் பயந்தெளிந்தாலொழிய, அதுவரையில், எங்கள் பயந்தான் எங்களுக்கு தற்சமயம் ராஜா.(26)

**பாஸ்ட்.**—கடவுள் சாட்சியாய் மன்னர்களே, இந்த ஆஞ்சியர்ஸ் பட்டணத்து அற்ப பயல்கள் உங்களை அலட்சியம் செய்கின்றான்கள், அவன்கள் நாடகமேடைமீது நிற்பதுபோல், தங்களுடைய கோபுரங்களின்மீது சௌக்கியமாய் நின்றுகொண்டு, நீங்கள் கஷ்டப்படும் காட்சிகளையும் கொலைபுரியும் குரூரத்தையும் பார்த்து கொட்டாவி விட்டுக்கொண்டு ஒருவனுக்கொருவன் சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கிறான்கள். இச்சமயம் தங்கள் இரு ராஜ சமுகங்களும் எனக்குக் கட்டுப்படுங்கள் : *ஜெருசலேமா நகரின் அக்காலத்து

---

(25), (26) See Appendix.

*ஜெருசலேம் என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தை, டீட்டஸ் என்னும் இராயனின்கீழ், ரோமாபுரியார் முற்றுகைசெய்துகொண்டிருந்தபோது, அதுவரையில் அந்நகரில் மூன்று கட்சிகளாக ஒருவருக்கொருவர் ஒவ்வாமலிருந்த அந்நகரத்தார், சடுதியில் ஒன்று சேர்ந்து, திடீரென்று தங்கள் கோட்டை கதவுகளை திறந்து கொண்டு, அவர்களில் திடமானவர்களெல்லாம் பேரிரைச்சல் செய்துகொண்டு வெளியே ஓடிவரவே, ரோமாபுரியார் பயந்து போய் புறங்காட்டி ஓட, அத்தருணத்தில் ஜெருசலேம் நகரத்தார் தங்கள் சத்துருக்களை சுலபமாகத் தாக்கித் துரத்திவிட்டதாக சரித்திரம்.

குழப்பக்காரரைப்போல் சற்றுநேரம் இருவரும் சிநேகமா யிருங்கள், இருவரும் ஒன்றுசேர்ந்து இப்பட்டணத்தின் பேரில் உங்கள் கடுங்கோபத்தில் செய்யக்கூடிய அதி கொடூர வீரிய செய்கைகளையெல்லாம் பிரயோகஞ்செய்யுங் கள், கிழக்குதிசையில் வ்ரஞ்சுக்காரரும், மேற்குத் திசை யில் இங்க்லிஷ்காரருமாக, தங்களுடைய தகர்க்கக்கூடிய பீரங்கிகளை ஏற்றிஸ்தாபித்துக்கொண்டு, அவைகளில் வாய் மட்டும் குண்டு மருந்தை திணித்து, உயிர் நடுங்கச்செய்யும் அவைகளுடைய பேரிரைச்சலோடு, இரும்பு மாரொலும் பைப்போலிருக்கப்பட்ட இந்த கர்வங்கொண்ட பட்டணத் தின் கோட்டை மதில்களை, அவைகள் உடைத்துத் தகர் த்து, தரைமட்டமாகும்படி செய்கிறவரையில், பீரங்கி பிர யோகம் செய்யுங்கள். நானும், இக் கையாலேலாதபயல் கள் தங்கள் மதில்களை காபந்துசெய்துகொள்ளாவண்ணம், தடுத்துக்கொண்டு, எவ்வித தங்குதடையுமில்லாமல் பட்ட ணம் பாழாய்போய், கட்டுக்கடங்காத காற்றைப்போல் வெறுமையாக இவன்களுக்கு எவ்வித காபந்துமில்லாமல் போகும்வரையில், நான் இடைவிடாது வேறுபக்கத்தில் இவன்களை இம்சித்துக்கொண்டிருக்கிறேன். இப்படி செய் தபிறகு, ஒன்றுசேர்ந்த உங்கள் ராணுவங்களை பிரித்துக் கொள்ளுங்கள், கலந்திருக்கும் உங்கள் கொடிகளை மறுபடி யும் வேறுபடுத்திக்கொள்ளுங்கள்; முக முகமாய் மாறுங் கள், இரத்தக் கறைபிடித்த கத்திமுனையை கத்திமுனை தாக் கட்டும்; அப்போது ஒரு க்ஷணப்பொழுதில் அதிர்ஷ்ட தேவதை, ஒரு பக்கத்திலி ந்து தன்னுடைய பிரியனை தெரிந்தெடுத்து, அவருக் த் தன் பட்சத்தை காண்பிக் கும்பொருட்டு, அவரை இ ில் பிரசித்திபெறும் சர்வாதி பதியாக்கி, உன்னத கீர் கொடுக்கக்கூடிய ஜெயத்தை அவர்க்களித்து, அவரை மைப்படுத்துவாள். வல்லப

அரசர்களே, என்னுடைய இம்முரட்டு யோஜனை உங்களுக்கு எவ்விதம் தோன்றுகின்றது? கொஞ்சமேனும் அரசு முறையுள்ளதாய் தோன்றவில்லையா?

**ஜான் மன்.**—நம் தலைமீது கவிழ்ந்திருக்கப்பட்ட ஆகாயத்தை நோக்கியே இப்போது சொல்கின்றேன்! எனக்கு இந்த யோஜனை ரொம்பவும் பிரியப்படுகின்றது. வ்ரான்ஸ் அரசே, நாம் நம்முடைய ராணுவங்களை ஒன்றுசேர்த்து தாக்கி, இந்த ஆஞ்சியர்ஸ் பட்டணத்தை தரைமட்டமாக்கிவிடலாமா? அதற்குப்பிறகு இப்பட்டணத்திற்கு ராஜா இன்னார் என்பதைப்பற்றி நாம் நமக்குள் சண்டை செய்து தீர்த்துக்கொள்ளலாமா?

**பாஸ்ட்.**—தங்களுக்கு அரசருக்குரிய ரோஷமிருக்குமானல், நாம், வெடுவெடுத்த இந்நகரத்தாரால் அலட்சியம் செய்யப்பட்டிருக்கிறபடியால், நாங்கள் செய்வதுபோல நீங்களும் உங்கள் துப்பாக்கி, பீரங்கி இவைகளின் வாய்கள், அவமதிக்கும் இப்பட்டணத்தின் மதில்களுக்கு, நேராயிருக்கும்படி நாட்டி ஸ்தாபியுங்கள்; நாம் அவைகளை தரைமட்டமாகும்படி உடைத்து தகர்த்தபிறகு நாம் ஒருவருக்கொருவர் சபதங்கூறிக்கொண்டு, நமக்குள் யாராகிலும் பாக்கியம் பெறுவதற்கோ, அல்லது நிர்ப்பாக்கியத்தை அடைவதற்கோ, நமக்குள் கும்பலாய் சண்டை செய்துகொள்வோம்.

**விலிப் மன்.**—அப்படியே ஆகட்டும். நீர் எந்தப் பக்கத்திலிருந்து தாக்கப்போகின்றீரென்பதைச்சொல்லும்.

**ஜான் மன்.**—நாம் மேற்குத் திசையிலிருந்து, இப்பட்டணத்தின் மத்தியபாகமே பாழாகும்படி, தாக்குவோம்.

**ஆஸ்ட்.**—நான் வடக்குத்திசையிலிருந்து தாக்குகிறேன்.

**விலிப் மன்.**—இடிமுழக்கஞ் செய்யும் நம்முடைய பீரங்கிகள், தெற்கு திக்கிலிருந்து, அவைகளுடைய இரும்பு குண்டுகளை இப்பட்டணத்தின்மீது, சரமாரியாய்பொழியும்.

**பாஸ்ட்.**—(பக்கத்தில்) ஆஹா, எச்சரிக்கை முற்றிய யுத்தாப்பியாசமே! வடக்கிலிருந்து தெற்கே, அப்படியானுல் ஆஸ்ட்ரியரும் வ்ரஞ்சுக்காரரும் ஒருவர் வாயில் ஒருவர் சுட்டுக்கொள்ளட்டும்; அவர்கள் அதே பிரகாரம் செய்யும்படி தூண்டிவிடுகிறேன்.—வாருங்கள், செல்வோம், செல்வோம்.

**மு. நகரத்.**—மகாராஜாக்களே, நாங்கள் சொல்லப் போகிறதைக் கேளுங்கள்: சற்று நேரம் தங்க தயை புரியுங்கள், சமாதான ஏற்பாட்டையும், நீங்கள் பிரியப்படக் கூடிய ஞாயமான உடன்படிக்கையையும், உங்களுக்கு நான் எடுத்துக்காண்பிக்கின்றேன்; வெட்டுகொடாமலும், காயப் படாமலும் இப்பட்டணத்தை வசப்படுத்திக் கொள்ளுங்கள்; போர்க்களத்தில் பலியாகும்பொருட்டு இங்கு வந்து இப் போதுஜீவனேடிருக்கும் அத்தனை வீரர்களையும் காப்பாற்றி, அவர்களுக்கு விதி முடிந்து, தங்கள் சொந்தப் படுக்கைகளி லிருந்து, உயிர்விடும்படிச் செய்யுங்கள்: பிடிவாதம் செய்யாதீர்கள், அதற்கு விரோதமாய் நான் சொல்லப்போகிற தைக் கேளுங்கள், வல்லப அரசர்களே.

**ஜான் மன்.**—எங்களுக்கு சம்மதம்; அச்சமற்றுப் பேசு; நீ சொல்வதைக் கேட்க இஷ்டப்படுகின்றோம்.

**மு. நகரத்.**—ஸ்பெயின் ராஜ்யத்தின் ராஜபுத்திரியாகிய லேடி ப்ளாஞ்ச் இங்க்லன்ட் அரசுரிமைக்கு (27) நெருங்கிய டாத்தியஸ்திரி: அந்த அழகிய கன்னிகையின் பிராயத்தையும், டாவீனுகிய லூயிஸ் ராஜகுமாரனுடைய பிராயத்தையும் ஒத்திட்டுப் பாருங்கள்: காதல் நேசங்கொண்ட

(27) See Appendix.

வன் அழகைத் தேடிப்போவானானால், ப்ளாஞ்சின் அழகை விட சிறந்த அழகை வேறு எங்கே காணப்போகின்றான்? புண்ணிய விரத வைராக்கியகாதலன் கற்பைத்தேடிப் போவானானால், ப்ளாஞ்சின் கற்பைவிட களங்கமற்ற கற்பை வேறு எங்கே கண்டுபிடிக்கப் போகின்றான்? மேன்மைத் தன்மைக்கு ஆசைப்பட்டவன் உயர்குலபிறப்பைத் தேடிப் போவானானால், லேடி ப்ளாஞ்சின் நாளங்களில் ஓடும் இரத்தத்தைவிட உயர்ந்த இரத்தம் யாரிடம் காணப்போகின்றான்? இவ்வாறு, அழகு, கற்பு, குலம், முதலிய சகலமும் பொருந்தியவளாக அவளிருப்பதுபோலவே, டாவீன் இளவரசும் அதேபிரகாரம் சகலமும் பொருந்தியவனாயிருக்கின்றான்: எவ்விதத்திலாகிலும் அவன் (28) சுயமாய் சம்பூரணமல்லவென்று சொல்வதாயிருந்தால், அவன் அவளாயில்லையென்றுதான் சொல்லலாம்; அவளுக்கும் குறையென்று சொல்லக்கூடிய குறைவு யாதொன்றுங் கிடையாது, குறை உண்டென்று சொல்லுகிறதாயிருந்தால், அவள் அவனல்லவென்றுதான் சொல்லலாம்: அவன் சர்வபாக்கியசாலி என்று சொல்லக்கூடிய பதவியில் சரிபாதி பாக்கியத்தைத் தான் அனுபவித்துக்கொண்டிருக்கின்றான், ஆகையால் அப்படிப்பட்ட (29) அவளால்தான் பூரண பாக்கியவானாகவேண்டியவனாயிருக்கின்றான்; அவளும் சரிபாதியாய்ப் பிரிக்கப்பட்டுள்ள மாட்சிமை அரசியாக இருக்கின்றாள்; ஆகையால், அவளும் அவனால்தான் சம்பூரணமாகவேண்டியவளாய் இருக்கின்றாள். ஆஹா, இப்படிப்பட்ட இரண்டு வெள்ளி நீரோட்டங்கள் ஒன்றுகூடும்போது அவைகளுக்குஅணையாயிருக்கப்பட்ட கரைகளையுங்கூட பிரகாசிக்கச்செய்கின்றன; இவ்விரண்டு ராஜபுத்திரருக்கும் கலியாணம் முடித்து வைப்பீர்களானால், மேற்சொன்னபிரகாரம் ஒன்றுகூடும்

(28) and (29) See Appendix.

இருநீரோடைகளின் கரைகளாகவும், அந்நீரோடைகளை அடக்கிக்கொண்டிருக்கப்பட்ட இரண்டுஅணைகளைப்போலவும் இருப்பீர்கள், மன்னர்களே. கெட்டியாய் மூடப்பட்டிருக்கும் எங்கள் கோட்டைக் கதவுகளை திறக்கவேண்டிய விஷயமாய் உங்கள் பீரங்கிகளைக்கொண்டு அடையக்கூடிய அனுகூலத்தைப் பார்க்கிலும் அதிக அனுகூலம் இவ்வொற்றுமையால் உங்களுக்குக் கிடைக்கும்; அதெப்படியென்றால் இம்மண சம்மந்தம் முடிவானஉடன், உங்கள் குண்டு மருந்து தள்ளுகிற வேகத்தைவிட அதிகவேகம் உண்டு பண்ணக்கூடிய எங்கள் மனோ வேகத்துடன், எங்கள் கோட்டைவாசல் வழியை விரிய திறந்துவிட்டு உங்களை உபசரணையுடன் உள்ளழைப்போம்; அதற்கு விரோதமாய் இம்மண சம்பந்தம் முடியாவிட்டால், கொந்தளித்துக் குமுறுகின்ற கடல்முதலாய் நாங்கள் செவிடாயிருப்பதில் பாதி செவிடாய் கூட இராது, சிங்கங்கள் முதலாய் நாங்கள் அச்சமற்றிருப்பதைப்பார்க்கிலும் மேம்பட்ட அச்சமற்ற நிலைமையில் இரா, மலைகளும் கற்பாறைகளுமுதலாய் நாங்கள் அசைவற்று இருப்பதைப்பார்க்கிலும் மேம்பட்ட அசைவற்ற நிலைமையில் இரா, இல்லை, இயமன்முதலாய் உயிரைப்புறித்துப் போகவரும் கோபாவேசத்தில் கூட நாங்கள் இப்பட்டணத்தை காபந்து செய்துகொள்ள வேண்டியதினிமித்தம் இருக்கும் பிடிவாதத்தில் பாதி பிடிவாதமுள்ளவனுகக் கூட இருக்கமாட்டான்.

**பாஸ்ட்:**—இப்போது ஓர் (30) தயக்கம் உண்டாகி விட்டது, அத்தயக்கம் பண்டைக்காலத்தில் இறந்து அழுகிப்போன பிணத்தையே அதனுடைய கந்தைகளை உதறி விட்டு வெளிப்படச் செய்கின்றது! மெய்யாகவே, இவனொரு பெருவாயனே, மரணம், மலைகள், கற்பாறைகள்,

---

(30) See Appendix.

கடல்கள், இவைகளாகவே கொப்பளிக்கின்றான், பதின் மூன்று வயதுள்ள அறியாப்பெண்கள் தங்கள் நாய் குட்டிகளைப்பற்றி எவ்வளவு அலட்சியமாய் பேசுவார்களோ அவ்வளவு அலட்சியமாய்தான் இவன் சிங்கங்களைப்பற்றி பேசுகின்றான்! எப்படிப்பட்ட பீரங்கித்தடியன் இப்படிப்பட்ட பெருந்தடியனைப் பெற்றிருப்பான்? பீரங்கி வாயிலிருந்து என்னென்ன வருமோ அவைகள்தான் இவன் வாயிலிருந்து வார்த்தைகளாக வருகின்றன, அவையாவையென்றால் நெருப்பு, புகை, முழக்கம், இவைகள்தான் இவன் நாவில் உதிக்கும் வாக்கைக்கொண்டே குதிகாலடி தண்டனையின் உபத்திரவம் கொடுக்கின்றான்: இவன் வார்த்தைகள் எங்கள் காதில் தடியடிபோல் விழுகின்றன; இவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் குத்துதான், அக்குத்தோ வ்ரஞ்சுக்காரர் கைப்பொத்துக் குத்தைவிட பலத்த குத்துதான்: * ஐந்துகாயமே! நானென் தம்பியின் தகப்பனை அப்பாவென்று கூப்பிட்டதுமுதல் இதுவரையில் நான் இப்படிப்பட்ட வார்த்தை அடிபட்டதேயில்லை.

**எலினோர்**:—மகனே, இச்சம்மந்தத்திற்கு இணங்கு, இக்கலியாணத்தை முடி; நம்முடைய பெண்ணுக்கு போதுமான அளவு பெரிய ஸ்திரீதனமாகவே கொடு; ஏனென்றால் இந்த ஐக்கிய பந்தனமானது தற்சமயம் உனக்கு பட்டத்திற்குள்ள சுதந்தரம் சந்தேகமாயிருக்கப்பட்டதை எவ்வளவு கெட்டியாக்கி விடுமென்றால், அபார பழத்தை

---

* சேசுக்கிறீஸ்துநாதரை சிலுவையிலறைந்தபோது அவரது இரண்டு கைகளிலும் இரண்டு ஆணிகளாலும், இரண்டு கால்களிலும் ஒரு ஆணியால் சேர்த்து உண்டுபண்ணிய காயங்களாகிய நான்கு காயங்களையும், அவரது இடது விலாவில் ஈட்டியால் குத்தியதனால் உண்டான காயம் ஒன்று, ஆக மொத்தம் ஐந்து காயங்களையும் குறிப்பிட்டு, வேதகட்டளையை கவனியாதவர்கள் செய்யும் ஓர்வித பிரமாணிக்கம்.

தரக்கூடிய ஓர் புஷ்பத்தைப்போலிருக்கப்பட்ட அவ்வழி யாப் பையனுக்கு பழமாக்குவதற்கு அவசியமான சூரியனே இல்லாமற்போகும். பிரான்ஸ் அரசன் முகத்தில் சம்மதம் விளங்குவது எனக்கு புலப்படுகின்றது; அவர்கள் எப்படி ரகசியம் பேசிக்கொள்ளுகிறார்கள் பார்: அவர்கள் மனம் பொருளாசையால் பீடிக்கப்பட்டிருக்கும்போதே அவசரப் படுத்தி காரியத்தை முடி, இல்லாவிட்டால் அவர்கள் வந் திருக்கப்பட்ட காரியத்தின்பேரில் அவர்களுக்குள்ள வை ராக்கியம் இப்போது இம்மெளட்டீக[31] மன்றாட்டின் காற் றாதலால் இளகியிருக்கப்பட்டதை பரிதாபமும், பச்சாத் தாபமும், பழையபடி மேலாடி, குளிரச்செய்து, அதை முன்போலவே கெட்டியாக்கிவிடும்.

**மு. நகரத்.**—பயமுறுத்தப்பட்ட பட்டணத்தாராகிய நாங்கள், எங்கள் சிநேக வாஞ்சையோடு, வெளிப்படுத்திய உடன்படிக்கைக்கு இரட்டை ராஜமகத்துவங்களாயிருக்கப் பட்ட தாங்கள் இருவருமே, ஏன் பதிலளிக்க தயைபுரியா திருக்கின்றீர்கள்?

**விலிப் மன்.**—இங்கலன்ட் அரசே, நீர்தான் முதலில் பேசும், ஏனென்றால், ஆரம்பத்தில் இப்பட்டணத்தாரோடு பேசவேண்டிய பாடத்தில் நீர் தான் முந்திக்கொண்டீர். ஆகையால் இப்போது என்ன சொல்லுகின்றீர்?

**ஜான் மன்.**—அதோயிருக்கப்பட்ட டாவீன் என்னும் உம்முடைய ராஜபுத்திரன் இக்கன்னிகையின் முகமாகிய சௌந்தரியம் என்னும் புத்தகத்தில் 'நான் நேசிக்கின் றேன்,' என்னும் வசனத்தை வாசித்து சொல்வானானல் இப்பெண்ணுக்குக் கொடுக்கப்படும் ஸ்திரீதனம் ஓரு ராணி க்குக் கொடுக்கப்படும் ஸ்திரீதனத்திற்கே சமானமாயிருக்

(31) See Appendix.

கும் என்பதற்கு கிஞ்சிற்றும் ஐயமில்லை. அதெப்படியென்ருல், இப்போது எங்களால் முற்றுகை செய்யப்பட்டிருக்கும் இந்த ஆஞ்சியர்ஸ் பட்டணந்தவிர மற்றுமுள்ள ஆஞ்சோ நகரமும், அழகிய டூரோய்ன் நகரமும், மெய்ன், பாய்க்ட்டியர்ஸ் முதலிய, நம்முடைய அரசுக்கும் ஆட்சிக்கும் உட்பட்டு கடலுக் கிக்கரையிலிருக்கப்பட்டவைகளான சகல மாகாணங்களும் அவளுக்கு சுதந்தரப்படுத்தப்பட்டு அவளுடைய மணப்படுக்கைக்கு கௌரவம் ஏற்படுத்தப்படும், அதனுல், அவள், அழகிலும், கல்வியிலும், குலத்திலும் சிறந்து எப்படிப்பட்ட ராஜகன்னிகைக்கும் நிகராய், இருப்பதுபோலவே பட்டங்களாலும், மாட்சிமைகளாலும் உன்னத பதவிகளாலுங்கூட மேன்மைப் படுத்தப்படுவாள்.

**விலிப் மன்.**—என்ன சொல்லுகின்ருய் என் குழந்தாய் ? அக்கன்னிகையின் முகத்தை கவனித்துப்பார்.

**லூயி.**—என்னரசே, நான் பார்த்துக்கொண்டுதானிருக்கின்றேன் ; அவளுடைய கண்ணில் ஒரு அதிசயத்தையுங் காண்கின்றேன், சரியாய் சொல்லவேணுமானுல், அதிசயிக்கதக்க அற்புதமென்றே சொல்லலாம், அதாவது, என்னுடையதாகிய என் சாயை அவள் கண்ணில் உண்டாகி இருக்கின்றது, அச்சாயையானது தங்களுடைய மகனுகிய என்னுடைய கேவல நிழல் பிரதிபிம்பமாயிருந்தபோதிலும் அவள் கண்ணில் துலங்கப்பெற்றதினிமித்தம் ஒரு சூரியனுகவே மாறிவிடுகிறபடியால், தங்களுடைய நிஜமகனுகிய என்னை, ஓர் வெறும் நிழலாக மாற்றி, கேவலப்படுத்திவிடுகின்றது ; சித்திர மேசைபோலிருக்கப்பட்ட அவளுடைய கண்ணில் என்னுடைய உருவம் சித்திரமாய் கிழிக்கப்பட்டு துலங்குவதை நான் கண்ட இந்நிமிஷம் வரையில்

என்னை நான் அவ்வளவு அருமையாய் பாவிக்கவில்லை யென்று நான் உறுதியாய்ச் சொல்லுகின்றேன்.

(லூயிஸ் ப்ளாஞ்ச்சோடு ரகசியம் பேசுகிருன்.)

**பாஸ்ட்.**—(பக்கத்தில்) அவளுடைய கண்ணுகிய சித்திர மேசையில் கிழிக்கப் பட்டானும்! அவளுடைய நெற்றியின் கோபக்குறி சுருக்கத்தில் தூக்கிடப்பட்டானும்! அவளுடைய இருதயத்தில் நாலாக்கப்பட்டானும்! தானெரு கள்ளகாதலன் என்பதையும் அவன் நன்கு உணர்கின்ருன்: இப்படிப்பட்ட காதலால் தூக்கிடப்பட்டும், கிழிக்கப்பட்டும், நாலாக்கப்பட்டும் இருக்கின்றேனென்று சொல்லும் ஈனமூடனும் இக்காலத்தில் இருக்கின்ருனே, இதுவும் ஓர் விசனிக்கத்தக்க விஷயமே.

**ப்ளாஞ்ச்.**—இது விஷயத்தில் என்னம்மானுக்கு எது இஷ்டமோ அதுதான் எனக்கும் இஷ்டம்: தங்களிடத்தில் அவர் பிரியப்படக்கூடிய விஷயம் ஏதாகிலும் அவர் காண்பாரானல், அப்படி அவருக்குபுலப்பட்டு, அவருக்குப் பிரியங்கொடுக்கக்கூடிய அவ்விஷயத்தை, எனக்கும் பிரியங்கொடுக்கக்கூடியதாய், நான் எளிதில் மாற்றிக்கொள்வேன். இன்னும் சரியாய் சொல்ல வேணுமானல், அப்படிப்பட்ட விஷயம் எனக்குப் பிரியப்படாமற் போனபோதிலுங்கூட, தாங்கள் கோரும்பட்சத்தில், அவ்விஷயம் எனக்கும் பிரியமாகும்படி மனக்கஷ்டமில்லாமலே பலபந்தம் செய்துகொள்வேன். என்னிறைவ, நான் இவ்வளவுதான் சொல்வேன், அதாவது, குறைகூறும் குணத்தோடேயே தங்களைப்பற்றி தீர்மானிக்கிறதாயிருந்தாலுங்கூட தங்களை வெறுக்கக்கூடிய விஷயம் யாதொன்றும் தங்களிடம் எனக்கு புலப்படவுமில்லை; என்னல் கண்டுபிடிக்கவும் முடியவில்லை; இதற்கு மேற்கொண்டு தங்களிடம் எனக்கு தோன்றுகின்றவை

களெல்லாமே நேசிக்கத்தக்கவைகளே என்று, இச்சகம் பேசி, தங்களை நான் புகழமாட்டேன்.

**ஜான் மன்.**—இச்சிறுவர்கள் என்ன சொல்லுகின்றார்கள்? என் மருமகளெ, நீ என்ன சொல்லுகின்றாய்?

**ப்ளாஞ்ச்.**—தங்கள் மருமகளுக்கு தங்களுடைய ஞான சக்தியைக்கொண்டு தாங்கள் எக்காலத்தில் என்ன கட்டளையிட பிரியப்படுவீர்களோ அக்கட்டளையை அவள் எக்காலத்திலும், அவளுக்கு தங்கள் மட்டிலுள்ள சங்கையை முன்னிட்டு, நிறைவேற்ற கடமைப்பட்டிருக்கின்றாள்.

**ஜான் மன்.**—அப்படியானால் ராஜகுமார டாவினே, நீ சொல்லு; இப்பெண்ணை நீ நேசிக்க முடியுமா?

**லூயி.**—அல்ல, அதற்கு விரோதமாய் அப்பெண்ணை நான் நேசிக்காமலிருக்க முடியுமோ வென்று கேளுங்கள்; ஏனெனில் நான் அவளை வெகு ஊக்கத்துடன் நேசிக்கின்றேனே.

**ஜான்-மன்.**—அப்படியானால், அவளை நான் உனக்கு கன்னிகாதானஞ் செய்துகொடுப்பதோடு, வால்குயஸ்ஸன், டூரேய்ன், மெய்ன், பாய்க்ட்டியர்ஸ், ஆஞ்ஜோ ஆகிய இவ்வைந்துமாகாணங்களையும் அவளுக்கு ஸ்திரீ தனமாகக் கொடுக்கின்றேன். அவைகளோடுங்கூட இதையும் கொடுப்பேன், அதாவது, இங்க்லீஷ் நாணயமாகிய மார்க் நாணயத்தில் சொச்சமறபூர்த்தியாய் 30,000 நாணயங்களும் கொடுப்பேன். வ்ரான்ஸ் ராஜ்ய விலிப் அரசே, இவைகளைக்கொண்டு நீர் திருப்தியடைவீரானால் உம்முடைய மகனையும் மருமகளையும் கைகோர்த்துக்கொள்ளும்படி உத்தரவு செய்யும்.

**விலிப் மன்.**—நமக்கு மிக்க திருப்திதான்; இளமிராஜ மக்களே, நீங்கள் கைகோர்த்துக்கொள்ளுங்கள்.

**ஆஸ்ட்.**—உங்கள் உதடுகளையும் ஒன்றுபடுத்திக் கொள்ளுங்கள்; ஏனெனில் எனக்கு முதல்முதல் நிட்சயார்த்தம் ஆனபோது நானப்படிதான் செய்தேனென்று எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கின்றது.

**விலிப் மன்.**—ஆஞ்சியர்ஸ் பட்டணத்து நகரவாசிகளே, இப்போதாகிலும் உங்கள் கோட்டை கதவுகளைத் திறவுங்கள், நீங்களே எங்களுக்குள் உண்டுபண்ணின நேச சமாதான ஏற்பாட்டுடன் நாங்கள் உள்செல்லவிடுங்கள்; ஏனென்றால் தக்ஷணமே அத்தியக்ஷ மரியாயி ஆலயத்தில் கலியாண மகோற்சவம் கொண்டாடப்படும். இக்கூட்டத்தில் லேடி கான்ஸ்டன்ஸ் இல்லையா? அவள் இல்லையென்பது எனக்கு புலப்படுகின்றது. ஏனெனில் அவளிருந்திருப்பாளானால் நாம் இப்போது முடிவு செய்த சம்மந்தத்திற்கு வெகு தடை ஏற்பட்டிருக்கும். அவளும் அவள் மகனும் எங்கேயிருக்கின்றார்கள்? யாருக்காகிலும் தெரியுமானால் சொல்லுங்கள்.

**லூயி.**—அவள் தங்கள் ராஜமாட்சிமை கூடாரமாளிகையில் தான், விசனத்துடனும், கடுங்கோபத்துடனுமிருக்கின்றாள்.

**விலிப் மன்.**—மெய்யாகவே, நாம் இப்போது செய்து கொண்ட இச் சமாதான உடன்படிக்கை அவளுக்குள்ள மனவருத்தத்திற்கு எவ்வித சாந்தியும் செய்யாதுதான். இங்க்லன்ட் அரசராகிய என் சகோதரரே, இவ்விதவை பெருமாட்டியை நாமெப்படி மன சமாதானப்படுத்தலாம்? அவள் சுதந்தரத்தை நிலைநாட்டும்பொருட்டு நாங்கள் இங்கு படையெடுத்துவந்தோம்; கடவுள்சித்தம், நாங்கள் அப்படி வந்ததை, வேறு விதமாய் எங்களுடைய சொந்த அனுகூலத்திற்கென்றே மாற்றிக்கொண்டிருக்கின்றோமே.

**ஜான் மன்.**—நாமெல்லோரையும் சந்தோஷப்படுத்தி விடலாம்; அதெப்படியென்றால் சிறுவன் ஆர்தரை பிரிட்

டேன் மாகாணத்தின் இறைவனாகவும், ரிச்மான்ட் மாகாணத்தின் பிரபுவாகவும் ஏற்படுத்திவிடுவோம்; ஐசுவரியமும் அழகும் பொருந்திய இப்பட்டணத்திற்கும் அதிபதியாக நியமித்துவிடுவோம். லேடிகான்ஸ்டன்ஸை கூப்பிடுங்கள்; யாராகிலும் ஒரு துரித தூதன் ஓடிப்போய் அந்தம்மாளை நம்முடைய கலியாண வைபவத்திற்கு வரும்படி சொல்லுங்கள்: நாம் அவள் எண்ணத்தை அவள் ஆசிக்கிற அளவு பூர்த்திசெய்யாவிட்டாலும் அவளை ஒருவாறு திருப்தி அடையும்படி செய்யலாமென்று நம்புகின்றேன். நாமப்படிச் செய்வது அவளுடைய ஓலத்தை நிறுத்துவதற்காவது ஓர் மார்க்கமாகும். கொஞ்சமும் எதிர்பாராததும் யாதொரு முஸ்திப்புமின்றி நடைபெறச்செய்ய வேண்டியதுமாயிருக்கப்பட்ட ஆடம்பரத்துக்கு எவ்வளவு சீக்கிரம் போகமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் போவோமாக.

(பாஸ்ட்டர்ட்தவிர எல்லோரும் செல்க.)

**பாஸ்ட்.**—பைத்தியக்கார உலகம்! பைத்தியக்கார ராஜாக்கள்! பைத்தியக்கார கோட்பாடு! ஆர்தருக்கு ராஜரீகத்துக்குள்ள சுதந்தரத்தை அடியோடு துலைக்கவேண்டியதற்காக ராஜாங்கத்தின் ஓர்பாகத்தை ஜான் மனப் பூர்வமாய் கொடுத்துவிட்டான்: வ்ரான்ஸ் அரசனோ கடவுளாலனுப்பப்பட்ட சுத்த வீரனைப்போல் மனப் புழுக்கத்தினால் யுத்த கவஜம் பூண்டு, வைராக்கியத்துடனும் தர்ம சிந்தனையுடனும் போர்க்களத்திற்கு வந்தவன் சுய கருத்தை வேறுகருத்தாய் மாற்றவல்ல, அந்த சுய நன்மை என்பதால், காதில் ஓதப்பெற்று மாறிவிட்டான். அந்த

---

ஆர்தரின் பாட்டனாரும் கானஸ்டன்ஸின் தகப்பனாருமான கோனன்-லெ-பெட்டிட் என்பவர் பிரிட்டேன் மாகாணத்து இறைவர். இவர் ரிச்மான்ட் மாகாணத்திற்கும் தானே இறைவரென்று பட்டங்கட்டிக்கொண்டாராம்.

சுயநன்மை என்பதோ உணர்ச்சி கிஞ்சிற்றும் உண்டுபண்ணுமல் உட்புகும் ஓர் பிசாசு, ஓர்வித தாகன், எப்போதும் சத்தியத்தின் தலையை உடைக்கின்றவன், தினந்தோறும் வாக்கு புரளச் செய்கின்றவன், ராஜாக்களாயிருந்தாலுஞ் சரி, யாசகராயிருந்தாலுஞ்சரி, வயோதிகராயிருந்தாலுஞ் சரி, பாலியராயிருந்தாலுஞ்சரி, கன்னிகையானாலுஞ்சரி, யாராயிருந்தாலும் எல்லோரையும் தன்வசமாக்கிக்கொள்கின்றவன், கன்னிகைகளுக்கோ, கன்னிகை என்கிற பட்டத்தைப் பார்க்கிலும் பத்திரங்கமாய் இழக்கக்கூடிய வஸ்து வேறொன்றுங் கிடையாது, ஆயினும் அவளை ஏமாற்றி அப்பட்டத்தை அவளிடமிருந்து பிடுங்கிவிடுகின்றது; பால்வடியுமுகத்தை யுடைய அந்த கோபமற்ற துரை, மோகிக்கச் செய்ய வல்ல சரக்கு, உலகத்தையே சரி மார்க்கத்தைவிட்டு வேறு வழியாய் உருண்டோடச்செய்யும்சரக்கு, உலகமோ இயற்கையில் வெகு நன்றாய் அமைக்கப்பெற்று, சமமான தரையின்மீது சமமாய் ஓடும்படி உண்டுபண்ணப்பட்டிருக்கையில், மத்தியில் குறுக்கிடும் இந்த அனுகூலமென்பது, அதாவது இழிவுபக்கம் இழுக்கும் பாரம், எல்லாவற்றையும் அசைக்கவல்ல இந்த அதிகாரம், இப்படிப்பட்ட இந்த சரக்கு, எவ்வித பற்றற்றவர்களையுங்கூட தன்னிலையை தவிர்த்து, தவறு விஷயத்தில் தலைப்படும்படி செய்து, அவர்களுடைய சுய நோக்கத்தையும், சுய கருத்தையும் அவர்களுடைய வழக்கப்போக்கையும், நல்லெண்ணத்தையும் மாற்றும்படி செய்துவிடுகின்றது: இப்படிப்பட்ட இந்தபாரம், இந்தசரக்கு, இந்த சங்கம்வாங்கி, இந்த தாகன், எல்லோரையும் வாக்கு புரளச்செய்யுமிவன், உறுதியற்ற ஃபிரான்ஸ் அரசனுடைய அஞ்ஞான கண்களுக்கு முன்னால், மலைப்புகாட்டி, போர்புரிந்து உதவிசெய்ய வேணுமென்று தீர்மானித்துவந்த அவ்வரசனுடைய சுயகருத்தையும், யுத்தந்தொடுக்கத்தான் வேண்டுமென்று வைராக்கியத்துட

னிருந்த அவனுடைய கௌரவமான தீர்மானத்தையும் மாற்றும்படிசெய்து, மகா இழிவானதும், கேவல விஷயத்தை முன்னிட்டு முடிவுபெற்றதுமான உடன்படிக்கைக்கு இணங்கும்படி செய்துவிட்டது. இப்படிப்[32]பட்ட சரக்கைப்பற்றி நானேன் தூஷிக்கின்றேன்? ஏனென்றால், அது இதுவணாயில் என்னிடம் நேசம் காண்பிக்கவில்லையென்கிற காரணந்தான்: * சம்மனசுக்கள் என்று வழங்கும் அச்சரக்கின் அழகிய பொன் நாணயங்கள் என்னுள்ளங்கையில் வந்து உட்கார்ந்து என்னை வணங்கும்போது என் கையை இழுத்துக்கொள்வதற்கு எனக்கு சக்தியிருக்குமென்று நான் சொல்லவில்லை. அதற்கு விரோதமாய் என்னுடைய கை, அப்படிப்பட்ட சோதனைக்குள்ளாகாமல், இருக்கிறபடியால்தான், ஏழைப்பிச்சைக்காரன் ஐசுவரியவானைப் பார்த்து தூஷிப்[33]பதுபோல, நானும் தரித்திரனாயிருக்கும் இங்கிலைமையில் நன்றாய் தூஷித்து, ஆஸ்திக்காரனாயிருப்பதைப் பார்க்கிலும் கொடிய பாவம் வேறொன்றும் கிடையாதென்று சொல்லுவதுதான்சரி; நானே ஆஸ்திக்காரனாய் விட்டதும், யாசிக்கிறதைப் பார்க்கிலும் கொடிய துன்மார்க்கம் வேறொன்றும் கிடையாதென்று சொல்லுவதுதான், என்னுடைய அக்காலத்து நற்கிருத்தியமாகும். இப்படிப்பட்ட சரக்கின்நிமித்தம் ராஜாக்கள்முதலாய் சத்தியத்தைத் தவிர்த்துவிடுகிறபடியால், ஆதாயமே, எனக்கும் நீ ஆண்டவனாயிரு, ஏனெனில் நானும் உன்னை வணங்கி ஆராதிப்பேன்.

---

(32) & (33) See Appendix.

* சம்மனசென்பது பத்து ஷில்லிங் மதிப்புள்ள அக்காலத்து ஓர் பொன் நாணயம். இந்நாணயத்தின் ஒரு பக்கத்தில் அதிதூதரான அர்ச். மிக்கேல் சம்மனசானவர் நரகப் பிசாசாகிய பறவை நாகத்தைக் குத்திக்கொல்லும் பாவனையாக உருவமைக்கப்பட்டிருந்ததாம். அதனால் அந்நாணயத்துக்கு சம்மனசென்று பெயர் வழங்கிவந்தது.

## மூன்றாம் பிரிவு.

### முதல் காட்சி:—வீராஞ்சு ராஜாவின் கூடார மாளிகை.

கான்ஸ்டன்ஸும், ஆர்தரும், சாலிஸ்பரியும் வருக.

**கான்ஸ்ட.**—கலியாணஞ் செய்துகொள்ள போய்விட்டார்களோ! சமாதான உடன்படிக்கையை சத்தியஞ் செய்து உறுதிப்படுத்திக்கொள்ள போய்விட்டார்களோ! அபத்த இரத்தம் அபத்த இரத்தத்தோடு கலந்துவிட்டதோ! சிநேக உறவு கொண்டாட போய்விட்டார்களோ! ப்ளாஞ்சா லூயிஸுக்கு மனைவியாகிறது? ப்ளாஞ்சுக்கா அம்மாகாணங்களெல்லாம் சேருகிறது? அப்படிக்கிராது; ஒன்று நீ பிசகாய் சொல்லியிருக்கின்றாய், அல்லது பிசகாய் கேள்விப்பட்டிருக்கின்றாய்; நன்றாய் நிதானித்துக் கொண்டு உன் கதையை இன்னொருதரம் சொல்லு; அப்படிக்கிருக்கவேமாட்டாது; அப்படித்தானென்று நீ சொல்லுகின்றாய்தான்: ஆனால் உன்னை நான் நம்பலாகாதென்று எனக்குத் திண்ணமாய்த் தோன்றுகின்றது; ஏனென்றால் உன்னுடைய வார்த்தை சாமானிய மனிதனாகிய உன் வாய்ச்சொல்தானே: ஓ மனிதா, நீ சொன்ன விஷயத்தை நான் நம்பவே இல்லையென்று நீ நம்பு; ஏனெனில், ஒரு ராஜாவாயிருக்கப்பட்டவர் எனக்களித்த சத்திய வாக்கு நீ தெரிவிக்கும் சமாசாரத்திற்கு விரோதித்திருக்கின்றது, நீ இவ்விதம் என்னைப் பயமுறுத்தினதற்காகத் தண்டிக்கப்படுவாய், ஏனென்றால் நான் காயலாவாயிருக்கின்றேன், ஆகையால் பயப்படக்கூடிய நிலைமையில் இருக்கின்றேன், நானாவித தீங்குகளால் துன்பத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றேன், ஆதலால் பயம் நிறைந்த உள்ளமுள்ளவளாயிருக்கின்றேன், ஓர் விதவையும் நாதனற்றவளாகவுமிருக்கின்றேன், ஆனபடியால் சாதாரணமாகவே பயத்துக்குட்பட்டவளாயுமிருக்கின்றேன், அன்றியும் இயற்கை

யிலேயே பயப்படக்கூடிய சுபாவத்தோடு பிறந்த ஸ்திரி ஜாதியர்கவுமிருக்கின்றேன்; நீ இப்போது பரிகாசமாகத் தான் சொன்னேனென்று பச்சாதாபப்பட்டாலுமே சஞ்சலமடைந்த இந்த மன நிலைமையில் நானுன்னோடு (34) சமாதானமாகவே முடியாது, ஏனெனில் என் மனது இன்று முழுவதும் அதிர்ச்சிக்கும், நடுக்கத்திற்கும் உள்ளாகியிருக்கும். உன் தலையை ஆட்டுகின்றாயே, அதன் அர்த்தமென்ன? என் பிள்ளையை ஏன் நீ அவ்வளவு விசனத்தோடு பார்க்கின்றாய்? உன் கையை உன் மார்பின்மேல் அவ்விதம் வைத்திருக்கின்றாயே, அதன் அர்த்தமென்ன? ஒரு மகாநதி வெள்ளப் பெருக்கால் கரை புரளுஞ் சமயத்தில் நீர் ததும்பிக்கொண்டிருப்பதுபோல், உன் கண்களில் ஏன் பிரலாபத்துக்குரிய கண்ணீர் ததும்பிக்கொண்டிருக்கின்றது? இவைகளெல்லாம் நீ சொன்ன வார்த்தைகளை உறுதிப்படுத்தும் துக்கக் (35) குறிகளாயிருக்கவேண்டுமென்றா? அப்படியானல் இன்னொருதரம் சொல்லு; உன்னுடைய பழைய கதையெல்லாம் வேண்டாம், இந்த ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லு, அதாவது, நீ சொன்ன சதை உண்மைதானவென்பதைமாத்திரம் சொல்லு.

**சாலிஸ்.**—அவர்கள் சதிகாரர்தானென்று, தாங்கள் நம்புகின்றீர்கள் என்பதை நான் நம்புவது, எவ்வளவு உண்மையான விஷயமாயிருக்குமோ, அவ்வளவே உண்மையான விஷயந்தான், என் கதையும், அவர்களைத் தாங்கள் சதிகாரரென்று நம்புவதே நான் சொன்ன விஷயத்தை வாஸ்தவமென்று நிரூபிக்கின்றது.

**கான்ஸ்ட.**—ஐயோ, இந்தத் துக்க விஷயத்தை நான் நம்பத்தான் வேண்டுமென்று நீ எனக்குக் கற்பிப்பாயானல் இத்துக்க விஷயத்திற்கும் என்னைக் கொல்லும்

(34) (35) See Appendix.

வகை கற்றுக்கொடு; இரண்டு கொடிய மனிதர்கள் கடுங் கோபங்கொண்டு எதிர்க்கையில் ஒருவரையொருவர் தாக்கின அந்த க்ஷணத்திலேயே இருவரும் விழுந்து மடிவது போல, உன் கதையை நான் நம்புதலும், என்னுடைய பிராணனும், அவ்விதமே ஒன்றையொன்று தாக்கி, இரண்டும் மடியட்டும். லூயிஸ் ப்ளாஞ்சையா கலியாணஞ் செய்து கொள்ளுகிறது! அப்படியானால் ஐயோ மகனே, நீ எத்தனை காதத்திற்கப்பால் இருப்பாய்? வ்ரான்ஸ் அரசனும் இங்லன்ட் அரசனும் ஒருவருக்கொருவர் சிநேகிதர்களாகிவிட்டால் என் கதி என்ன? ஏ பயலே, நீ ஓடிப்போ: உன்னைப்பார்க்க எனக்கு சகிக்கவில்லை: நீ கொணர்ந்த இத்துர் சமாசாரம் உன்னை மகா அவலக்ஷணமுள்ளவனாகச் செய்துவிட்டது.

**சாலிஸ்.**—மற்றவர்களால் விளைந்த தீமையை தெரிவித்தேனேயல்லாது, வேறு என்ன தீமை, நான் செய்தேன், நற்குண மாதரசே?

**கான்ஸ்ட.**—அத்தீமைதான் எவ்வளவு பாதகமான தாயிருக்கின்றதென்றால், அதைப்பற்றி பேசுகிறவர்களெல்லாரையுமே தீமையுடையவர்களாய் செய்துவிடுகின்றது.

**ஆர்தர்.**—அம்மா, உங்களை நான் மன்றாடுகின்றேன், பொருமையாயிருங்கள்.

**கான்ஸ்ட.**—என்னை பொறுமையாயிருக்கும்படி மன்றாடும் நீ அந்தகேடுள்ளவனாகவும், அவலட்சணமானவனாகவும், உன்னைப் பெற்ற வயிற்றுக்கு நிந்தனை சம்பாதித்துக் கொடுக்கக்கூடியவனாகவும், விகாரமான மருக்களும் பார்க்கச் சகியாத தேமல்களும் நிறைந்தவனாகவும், நொண்டியாயும், மூடனாகவும், கூனனாகவும், கறுப்பனாகவும், கண்ணுக்கு வெறுப்புக் கொடுக்கக்கூடிய வடுக்களாலும்,

அசுசிய மச்சங்களாலும் மூடப்பட்ட அதிசய விகாரரூபனு யிருப்பாயானுல் நான் கவலைப்படமாட்டேன், அப்படிக் கிருந்தால் நான் பொறுமையாயிருப்பேன், ஏனென்ருல், என்னுல் உன்னை நேசிக்க முடியாது, மெய்யாகவே, முடியாது, நீயும் உன்னுடைய மேன்குலத்திற்கு உரித்தான வனுகவுமிருக்கமாட்டாய், முடி தரித்துக்கொள்வதற்கு பாத்திரனுகவுமிருக்கமாட்டாய். ஆனுல், என் அருமை மகனே, நீ வெகு அழகாயிருக்கின்ருய், உனது ஜனன தருணத்தில் சிருஷ்டிகர்த்தாவும் அதிர்ஷ்டதேவதையும், உன்னை சிலாக்கியப்படுத்தும் பொருட்டு, ஒன்று கூடினுர்கள்; சிருஷ்ட்டி கர்த்தா உனக்களித்த வரங்கள் எப்படிப்பட்டவைகளென்ருல், லிலிபுஷ்பத்திற்கும், பாதி வெடித்த ரோஜாமலருக்கும் அமைத்திருக்கப்பட்ட இலட்சணங்களுக்கே ஓத்தவைகளாகும். ஆனுல், அதிர்ஷ்ட தேவதையோ, ஐயோ, அவள் கெட்டுப்போய்விட்டாள், மாறிவிட்டாள்; உன்வசமாயிருந்தவள் வேறுவசமாகிவிட்டாள், ஒருமணி நேரத்திற்கொருதரம் உன் சிற்றப்பன் ஜானேடு சம்போகஞ் செய்கின்ருள், தன்னுடைய பொன் துலங்குங் கையால் வ்ரான்ஸ் அரசனைப் பிடித்து இழுத்து ராஜரீகத்தின் உன்னத கௌரவத்தை காலில்போட்டு மிதித்து நடக்கும்படி செய்துவிட்டாள். ராஜ மகத்துவம் பொருந்திய அவ்வரசனை தங்களி(36)ருவருக்கும் சங்கம்வாங்கியாகும்படி செய்துவிட்டாள். அதிர்ஷ்ட தேவதைக்கும் ஜான் ராஜாவுக்கும் வ்ரான்ஸ் அரசன் சங்கம்வாங்கியாக இருக்கின்ருன்; அபகரித்துக்கொண்ட அந்த ஜான் என்பவனும் அந்த வேசி அதிர்ஷ்ட தேவதையும் துலைய! அடே பயலே, நீ சொல்லு, வ்ரான்ஸ் அரசன் பொய் சத்தியஞ் செய்தவனுகவில்லையா? வார்த்தைகளாலாகிலும் நீ அவனைத்

(36) See Appendix.

தூஷி, இல்லாவிட்டால் இவ்விடத்தைவிட்டு ஓடிப்போ, எனக்கு விளைந்திருக்கப்பட்ட துன்பங்கள் என்னுடேயே இருக்கட்டும், அவைகளை நானேதான் சகித்துத் தீர்க்க வேண்டியவளாயிருக்கின்றேன்.

**சாலிஸ்.**—என்னை மன்னிக்கவேணும் அம்மணி, தங்களையல்லாது நான் மாத்திரம் ராஜாக்களிடம் போகலாகாது.

**கான்ஸ்ட.**—நீ போகலாம், நீ போகத்தான்வேண்டும்; நான்உன்னோடு வரமாட்டேன்: நான் என் சஞ்சலங்களுக்கு இறுமாப்பு தான் கற்றுக்கொடுப்பேன்; ஏனென்றால், துக்க மென்பது இறுமாப்புள்ளது, ஆகையால் அது தன்னையடைந்தவர்களையும்[37] கூட இறுமாப்புடையவர்களாகச் செய்துவிடுகின்றது. ஆகவே, எனக்கு முன்னாலும், என்னுடைய மகா துக்க கொலுவுக்கு முன்னாலும் ராஜாக்கள் வந்து கூடட்டும்; என்னுடைய துக்கமானது எவ்வளவு பெரிதானதென்றால், பிரமாண்டமானதும், கெட்டியானதுமான இப்பூமி தவிர, வேறு எவ்வித ஆதரவாலும் அதை தாங்க முடியாது: இவ்விடத்தில் தான் நானும், என் சஞ்சலங்களும் உட்கார்ந்திருக்கின்றோம்; இவ்விடந்தான் என்னுடைய சிங்காசனம், இச்சிங்காசனத்திற்கு முன்னால் ராஜாக்களை வந்து வணங்கச் சொல்.

(தரையின்மீது உட்காருகின்றாள்.)

[ஜான் ராஜா, விலிப் ராஜா, லூயிஸ், ப்ளாஞ்ச், எலினோர், பாஸ்ட்டர்ட், ஆஸ்ட்ரியா ஆகிய இவர்களெல்லாம் சிப்பந்திகளுடன் வருக.]

**விலிப் மன்.**—அது மெய்தான், அழகிய[38] மகளே, இந்தப் பாக்கியமான நாளை, வ்ரான்ஸ் ராஜ்யத்தில் எக்காலத்திலும் உற்சவ நாளாகக் கொண்டாடப்படும்: ஜோதி மகி

(37, (38) See Appendix.

மையுள்ள சூரியன், இந்நாளை அலங்காரப்படுத்தும் பொருட்டு, தன்னுடைய போக்கைத் தவிர்த்து நின்று, தன்னுடைய உன்னத பிரகாச கதிர்களால், இக்கேவல மண்ணாங்கட்டி பூமியை, தகதகவென்று தங்கமயமாக மாற்றி, இரசவாதி வித்தை செய்துகொண்டிருக்கின்றான்: வருஷவாரியில் இந்நாள் வரும்போதெல்லாம், இந்நாளை ஓய்வு நாளாகவே எக்காலத்திலும் அனுசரிக்கப்படும்.

**கான்ஸ்ட.**—(எழுந்துகொண்டே) ஓரு பொல்லாத நாள், திருநாளல்ல! இந்நாளுக்கு என்ன சிலாக்கியம் உண்டாகிவிட்டது? இந்நாளை, பஞ்சாங்கத்தில் பொன்னெழுத்துகளால், பெரிய திருநாட்களுக்கு மத்தியில் அமைப்பதற்கு, இந்நாளில் என்ன காரியம் முடிந்துவிட்டது? அப்படிக்கல்ல, அதற்கு விரோதமாய் இந்நாளை வார நாட்களிலிருந்து விலக்கிவிடும், அபகீர்த்தியும், குரூரமும், பொய் சத்தியமும் நிறைந்த இந்நாளை; இல்லாவிடில், இந்நாளும் எப்போதும்போல இன்னும் நிலைத்திருக்கவேண்டுமானால், குழந்தைகளைக் கர்ப்பத்தில் சுமந்திருக்கப்பட்ட தாய்மார், இந்நாளில் தங்கள் சுமை கழியாமலிருக்கும்படி, கடவுளைப் பிரார்த்திப்பாராக, ஏனென்றால், தங்கள் பேரெண்ணங்களுக்கு காரணமாயிருக்கும் தங்கள் பேறு பலன்களாகிய குழந்தைகள், அதிசய விகார ரூபிகளாக பிறக்கும்; சமுத்திரவாசிகள் இந்நாள்தவிர, மற்ற எந்நாளிலும், தங்கள் கப்பற் சேதத்தைப்பற்றி பயப்படவேண்டியதில்லை; இந்நாளில் ஏற்படாத பேரங்கள், இந்நாளில் முடிவுபெறாதிருக்கக்கடவனவாக: இந்நாளில் துவக்கின சகல காரியங்களும் பாதகமாகத்தான் முடியும், ஆம், சத்தியமே புகலான, கேவல அபத்தமாய் மாறிவிட்டதே!

**விலிப் மன்.**—குலமகளே, கடவுள் சாட்சியாய் சொல்லுகின்றேன், இந்நாளில் நடந்தேறிய சிறந்த நட

வடிக்கைகளைப்பற்றி நீர் சபிக்கும்படியான காரணம் உமக்கு யாதொன்றுமிராது: நானென் ராஜ மகத்துவத்தை ஜாமீன் படுத்தியில்லையா?

**கான்ஸ்ட.**—ராஜ மகத்துவத்தைப்போல் காணப்படுகின்ற போலி மகத்துவத்தைக்கொண்டுதான், என்னை ஏமாற்றிவிட்டீர்; அம்மகத்துவத்தைத் தொட்டு, உறைத்து, சோதித்து பார்க்குமளவில் மதிப்பற்ற மாற்றுள்ளதாய் ஏற்படுகின்றது: நீர் பொய்சத்தியஞ் செய்துவிட்டீர், பொய்சத்தியஞ் செய்துவிட்டீர்: நீர் என் சத்துராதிகள் (39) இரத்தத்தைச் சிந்துவதற்கென்று யுத்தகவஜம் பூண்டு வந்தீர், ஆனால் இப்போதோ அக்கவஜத்தோடேயே நீர் உம்முடைய ஸைன்யங்களுடன் அவர்களோடு ஒன்று சேர்ந்து அவர்களைப் பலப்படுத்திவிட்டீர்: பதைத்துத் துடித்துக்கொண்டிருக்கவேண்டிய வீரத்தன்மையும், போர்மூர்க்க வெடுவெடுப்பும் மாறி, (40) பகட்டான உடன்படிக்கைக்கிணங்கி, சிநேக வாஞ்சை மேலாடி, மனங்குளிர்ந்திருக்கின்றது. எங்கள் கொடுமைக்கென்றே இவ்வுடன்படிக்கை ஏற்பட்டிருக்கின்றது. ஓ, கடவுளே, பொய்ச் சத்தியஞ் செய்திருக்கப்பட்ட இவ்விராஜாக்களை ஒழிக்க போர்புரிய வாரும், போர்புரிய வாரும்! ஓர் விதவை நான் கத்துகின்றேன்; கடவுளே, நீரே எனக்குப் பர்த்தாவாயிரும்! தெய்வபயமற்ற இந்நாளின் எல்லா பொழுதும் நல்ல பொழுதாக, சமாதான சந்தோஷத்தில் கடவாமலிருக்கும்படி செய்யும்; அதற்கு விரோதமாய், இன்று சூரிய அஸ்தமிப்புக்கு முன்னதாகவே, பொய்சத்தியஞ் செய்திருக்கப்பட்ட இவ்விராஜாக்களுக்குள், ஆயுத போர் தொடுக்கும், பகை உண்டுபண்ணும்! ஓ கடவுளே, என் மன்றாட்டைக் கேளும், என் மன்றாட்டைக் கேளும்!

---

(39), (40) See Appendix

**ஆஸ்ட்.**—கான்ஸ்டன்ஸ் பெருமாட்டியே, மன சமாதானமாயிரும்!

**கான்ஸ்ட.**—சண்டைதான்! சண்டைதான்! சமாதானமே கூடாது; உங்கள் சமாதானந்தான் என் சண்டைக்கு ஆஸ்பதம். ஓ லிமோஜிஸ் என்பவனே! ஓ ஆஸ்ட்ரியாக்காரா! உதிரங் கொட்ட, கொட்ட உரித்தெடுத்த அச்சிங்க உடையை நீ அகௌரவப்படுத்துகின்றாய்: ஏய் அடிமையே, ஏய் பாதகா, ஏய் பயங்காளி, ஏய் வீரியத்தில் வெகு சின்னவனும், துரோகத்தில் மகா பெரியவனே, ஏய் எப்போதும் பலத்தபக்கம் பார்த்து சேர்ந்துகொள்வதில் மகா சூரத்தனக் கெட்டிக்காரா! ஏய் அதிர்ஷ்ட தேவதையின் ரணவீரா! பகுடி குணமுள்ள அப்பெருமாட்டி, உன் பக்கத்திலிருந்து, பயப்படாதே என்னும் பாடம் சொன்னொலொழிய பகைவனை எதிர்க்க ஏலாதவனே! நீ கூடத்தான் பொய்சத்தியம் செய்துவிட்டு, உன்னைவிட மேன்மைப்பட்டவர்களென்று உனக்குத் தோன்றுகின்றவர்களுக்கு, இப்போது இச்சகம் பேசி பிரியப்படுத்துகின்றாய். எப்படிப்பட்ட மடையனாயிருக்கின்றாய், துள்ளிக் குதிக்கும் மடையன், என் கட்சியைச் சேர்ந்தவனென்பதாக வீம்பு பேசினாய், காலை உதைத்துக்கொண்டாய், சத்தியமுஞ் செய்தாய்! ஏய், ஈரமற்ற நெஞ்சம் படைத்த ஈன அடிமையே, என்னுடைய யுத்த வீரன் என்பதாக சத்தியஞ் செய்துவிட்டு, என் கட்சியிலிருந்துகொண்டு இடிமுழக்கம்போல் நீ பேசவில்லையா? உனக்குள்ள யோகத்தின்பேரிலும், உன்னுடைய செல்வாக்கின்பேரிலும், உன்னுடைய பராக்கிரமத்தின் பேரிலும் என்னை நம்பிக்கை வைக்கும்படி நீ சொல்லவில்லையா? இப்போது என் சத்துராதிகள் பக்கமா ஓடிப்போய் சேர்ந்துகொள்கின்றாய்? நீயும் ஒரு சிங்கத்தோலைப் போர்த்துக்கொண்டிருக்கின்றாயே! வெட்கங்

கொண்டு அதை உரித்தெடுத்துவிட்டு, பீதி நிறைந்த அவ்வங்கத்தின்மீது, ஒரு கன்றுக்குட்டித் தோலை தொங்கவிட்டுக்கொள்.

**ஆஸ்ட்.**—ஓ, ஒரு ஆண்பிள்ளை இப்படிப்பட்ட வார்த்தைகளை என்னைப்பார்த்து பேசுவானானால்!

**பாஸ்ட்.**—பீதி நிறைந்த அவ்வங்கத்தின்மீது ஒரு கன்றுக்குட்டுத் தோலை தொங்கவிட்டுக்கொள்.

**ஆஸ்ட்.**—அடே துஷ்டா, உன்னுயிரைப் பத்திரம் பண்ணிக்கொள்ளவேணுமானால் இவ்விதம் பேசத் துணியாதே.

**பாஸ்ட்.**—பீதி நிறைந்த அவ்வங்கத்தின்மீது ஒரு கன்றுக்குட்டித் தோலை தொங்கவிட்டுக்கொள்.

**ஜான் மன்.**—இதெல்லாம் நமக்குப் பிடிக்காது; நீ உன்னை மறந்துபோகின்றாய்.

(பான்டல்வ் வருக.)

**விலீப் மன்.**—பாப்பானவருடைய சங்கைக்குரிய பிரதிநிதி வருகின்றார்.

**பான்ட.**—கடவுளுடைய பிரதிநிதிகளாய் விளங்கும் தீட்சைபெற்ற மன்னர்களே வாழ்க! ஜான் மன்னா, நாமும் மிடந்தான் நம்முடைய திருக்காரியமாக வந்திருக்கின்றோம். அழகிய மிலான் பட்டணத்து கார்டினலும், இன்னசென்ட் பாப்பானவருடைய ஸ்தானாபதியாக இங்கு வந்திருக்கும், பான்டல்வ் என்னும் பெயருள்ள நாம், மேற்சொன்ன பாப்பானவருடைய பெயரால் மதானுசார முறைமைப்படி கேட்கிறதென்னவென்றால்:—நீர் ஏன், நம்முடைய பரிசுத்த தாயாகிய திருச்சபையை விரோதித்து

வேணுமென்று அதை அலட்சியம் செய்கின்றீர்? கான்டர் பரி * மேற்றிராசனத்திற்கு நியமிக்கப்பட்ட ஸ்டீவன் லாங்க்ட்டன் என்பவரை அத்திரு குருவாட்சியிலிருந்து பலாத்காரமாய் ஏன் தள்ளியிருக்கின்றீர்? இவ்விஷயத்தைப்பற்றி, மேற்கூறிய ஞான தந்தையாகிய இன்னசென்ட் பாப்பானவர் பெயரால், நாமும்மை கேள்வி கேட்கின்றோம்.

**ஜான் மன்.**—வேதாகம முறைமைப்படி நியமிக்கப் பெற்று, சகலரையும் கேள்வி கேட்கக்கூடிய ஸ்தானத்தி லிருக்கும் ராஜாவாகிய நம்மை, எந்த நரமனிதனுடைய பெயரைக்கொண்டு, கேள்விக்கு பதில்சொல்லும்படி கட்டா யப்படுத்தக்கூடும்? கார்டினலே, என்னிடம் பதில்வாங்கு வதற்கென்று, மகா கேவலமானதும், அதி அபாத்திரமான தும், நிந்தைக்குரியதுமான பாப்புவின் பெயரைத் தெரிந்து கொண்டீர்; அதைவிட இன்னும் கேவலமான பெயரை

---

* இங்க்லன்டிலுள்ள கான்டர்பரி குருவாட்சியின் அதிமேற்றி ராணியாராயிருந்த ஹூபர்ட்வால்ட்டர் என்பவர் இறந்துபோகவே, அக்குருவாட்சிக்கு யாரை நியமிக்கிறதென்கிற விஷயத்தில் கட்சி ஏற்பட்டு, வயதில் சிறிய சந்நியாசிகள் தங்களுக்குத் தலைவரா யிருந்த ரெஜினல்ட் என்பவரை தெரிந்துகொண்டார்கள். ஜான் ராஜா நார்விச் குருவாட்சியின் மேற்றிராணியாராயிருந்த ஜான்-தே-க்ரே என்பவரை நியமித்தார். வயது முதிர்ந்த சந்நியாசிக ளும், இன்னும் சிலரும் ராஜா நியமித்தவர் பக்கம் சார்ந்திருந்தார் கள். இந்நிலைமையில் விஷயங்கள் ரோமாபுரியிலிருக்கும் திருச் சபைக்குத் தலைவரான பாப்பானவருக்குத் தெரிவிக்கப்பட்டன. அவர் மேற்கண்ட இருவரையும் அங்கிகாரம் செய்யாமல், ஸ்டீவன் லாங்க்ட்டன் என்பவரைத் தாமே நியமித்து அனுப்ப, ஜான் அவரை அங்கீகரிக்காமல் தள்ளிவிட்டார். அதனால் ஜான் திருச் சபையிலிருந்து விலக்கப்பட்டதுமல்லாமல், இங்க்லன்டில் குருப் பிரசாதிகளால் நிறைவேற்றப்படும் தேவ ஆராதனைகளும் நிறுத் தப்பட்டன.

உம்மால் கண்டுபிடிக்க முடியாதுதான். என்னுடைய இவ் வாக்கியத்தை நீர் அவருக்கு நான் சொன்ன பிரகாரமே தெரியப்படுத்தும்; அதோடுங்கூட இங்க்லன்ட் அரசராகிய நம்முடைய வாயிலிருந்து வரப்போகிற அடியிற்கண்ட விஷயத்தையும் சேர்த்துச்சொல்லும், அதாவது, இட்டாலி தேசத்து குரு எந்த குருவானாலுஞ்சரி, நம்முடைய ராஜ்யத்தில் பத்தில் ஒருப்பங்கு பகுதியாவது அல்லது வேறு எவ்வித வரியாவது வசூலிக்கவேகூடாது; நாம், கடவுளுக்கு அடுத்தபடியில், அதிஉன்னத தலைமைஸ்தானத்தை வகித்திருக்கிறபடியால், நாம் ஆளும் ராஜ்யத்தில் அப்பேர்ப்பட்ட உன்னத மேன்மைத்தன்மையை, அவருக்குமாத்திரம் கீழ்ப்பட்டு, நாமே சுயமாய்ச் சாதிப்போமேயொழிய, அவ்விஷயத்தில் வேறொரு நரமனிதனுடைய உதவியையும் நாடமாட்டோம்; இதேபிரகாரம் நீர் பாப்புவினிடம் சொல்லும்; அப்படிச்சொல்லும்போது அவருக்கும், அவர் ஆக்கிரமித்து வகித்துக்கொண்டிருக்கும் அதிகாரத்திற்கும், எவ்வித சங்கையும் பாராட்டாமல் பேசும்.

**விலிப் மன்.**—இங்க்லன்டின் அரசராகிய சகோதரரே, நீர் இவ்விதம் பேசுவது தேவதூஷணமே.

**ஜான் மன்.**—நீரும், கிறீஸ்துவ சமய சர்வராஜாங்கங்களிலுமுள்ள சகல ராஜாக்களும், பணத்தைக் கொடுத்து பரிகரித்துக்கொள்ளக்கூடிய சாபத்துக்குப் பயந்து, தமக்கு சம்மந்தமில்லாத விஷயங்களில் தலையிடுகின்ற இப்பாதிரிக்குக் கட்டுப்பட்டு, கேவலமாய் அமைந்திருந்தாலுஞ் சரியே, கைக்கூலிக்கு கிடைக்கும் ஒரு நரமனிதன் மன்னிப்பை கேவல பொன்னைக்கொண்டோ, அதன் களிம்பைக் கொண்டோ, அதன் தூசியைக்கொண்டோ விலைக்கு வாங்கினாலுஞ் சரியே, அம்மனிதனே இப்படிப்பட்ட வியாபாரத்

தில் விற்பனைசெய்வது தன்னுடைய சொந்த (41) மன்னிப்பே யொழிய கடவுளுடைய மன்னிப்பல்ல, ஆகவே, நீருட்பட மற்றுமுள்ள சகல ராஜாக்களும் இப்படிப்பட்ட கேவலத்திற்கெல்லாம் உடன்பட்டு, இந்திரஜாலங்காட்டும் இம்மாந்திரிய வித்தைக்கு வருமானம் உண்டுபண்ணி, பரிபாலித்து வந்தாலுஞ்சரியே, அப்போதுகூட நான்மாத்திரம், தனிமையில், இப்பாப்புவை விரோதித்து எதிர்ப்பேன், அவருடைய சிநேகிதர்களை என்னுடைய சத்துருக்களாக பாவிப்பேன்.

**பான்ட.**—அப்படியானல், நமக்கிருக்கும் திருச்சபைச் சட்ட அதிகாரத்தைக்கொண்டு, நீர் நம்மால் சபிக்கப்பட்டும் திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டும் இருக்கக்கடவீர்: உம்முடைய பிரஜையில், யாராயிருந்தாலுஞ்சரி, அவன் தன்னுடைய இராஜ பக்தியைத் தவிர்த்து, ஒரு வேத புரட்டனேடேயே சேர்ந்தாலுங்கூட, அவன் பாக்கியவானே. அருவருக்கத்தக்க உன்னுயிரை ரகசியமாய் எவ்வித தந்திர உபாயத்தாலாகிலும் பறிக்கக்கூடியவன் புகழப்பட்டும், மகாத்மாவாக்கப்பட்டும், ஒரு முனிவராகவும் அங்கீகரிக்கப்பட்டு வணங்கப்படுவான்.

**கான்ஸ்ட.**—ரோமான் திருச்சபையோடு சேர்ந்துகொண்டு, நானும் கொஞ்சநேரம் சபிப்பதற்கு இடம்வாய்த்திருக்கிறபடியால், நானிப்போது சபிக்கப்போகிறதுங்கூட கிரமமாவதாக! கார்டினல் என்னும் நல்ல தகப்பனே, நான் சபிக்கப்போகிற ஊடுருவக்கூடிய சாபங்களுக்கு, அப்படியே ஆகக்கடவதென்று, சொல்லும்; எனக்கு விளைவித்திருக்கப்பட்ட தீமைகளைப்போலொத்த தீமைகளை அடையப்பெறாத மற்ற யாராலும் தக்கவிதமாய் அவனை சபிக்க இயலாது.

---

(41) See Appendix.

**பான்ட.**—குலமகளே, நாம் சபிப்பதற்கு சட்டமும் இடங்கொடுக்கின்றது, அதிகாரமுமிருக்கின்றது.

**கான்ஸ்ட.**—என் சாபத்துக்குக்கூடத்தானிருக்கின்றது: சட்டத்திற்கு கிரமத்தை நிறைவேற்றுவதற்கு சக்தியில்லாமற்போனால், தப்பிதத்தை கண்டிப்பதற்கு சட்டத்திற்கு சக்தியில்லாமற்போவதுங் கிரமந்தான்: சட்டத்திற்கு, இதோ இருக்கின்ற என் குழந்தையின் ராஜாங்கம் என் குழந்தைக்கு கிடைக்கும்படி செய்ய, இயலவில்லை. ஏனென்றால், இக்குழந்தையின் ராஜாங்கத்தை கைப்பற்றிக்கொண்டிருக்கப்பட்டவர் கையில்தான் சட்டமுமிருக்கின்றது; ஆகையினாலே சட்டமே பூரண சங்கட்டமாகிவிட்டது, அப்படிக்கிருக்கையில், அப்படிப்பட்ட சட்டத்தால், எப்படி என் நாவை, சபிக்கவொட்டாமல் கட்டமுடியும்?

**பான்ட.**—வ்ரான்ஸ் ராஜரீகத்தின் விலிப் அரசே, அந்த தலைமை வேத புரட்டனுடைய கையை விலக்கிவிடும், அன்றேல் நீரும் சாபக்கேட்டுக்குள்ளாவீர்; ரோமன் திருச்சபையின்கீழ் அம்மனிதன் பணிந்துவந்தாலொழிய, வ்ரான்ஸ் ராஜரீகவல்லபம் பூராவையும், அம்மனிதன் தலைமேல், தாக்கும்படி செய்யும்.

**எலினோர்.**—நீர் ஏதுக்காக வெளுத்துப்போகின்றீர், வ்ரான்ஸ் அரசே? உம்முடைய கையை விலக்கிக்கொள்ளாதேயும்.

**கான்ஸ்ட.**—அந்த பசாசைப்பார்; சிலசமயம் வ்ரான்ஸ் அரசர் மனந்திரும்பி, தன் கையை பிரித்துக்கொண்டால், நரகத்துக்குப் போய்ச் சேரவேண்டிய ஆத்மாக்களில் ஒரு ஆத்மா நஷ்டமாய்விடுமேயென்று, வெகு கவலைபடுகின்றது!

**ஆஸ்ட்.**—விலிப் அரசே, கார்டினல் சொல்லும் புத்தியைக் கேளும்.

**பாஸ்ட்.**—பீதிநிறைந்த அவனங்கத்தின்மீது ஒரு கன்றுக்குட்டித் தோலைத் தொங்கவிடுங்கள்.

**ஆஸ்ட்.**—நல்லது, துஷ்டா, உன்னுடைய நிந்தைகளையெல்லாம் நான், தற்சமயம், சட்டை சாக்கில் போட்டு வைப்பதுபோல், சகித்துத்தானிருக்கவெண்டும்; ஏனென்றால்.—

**பாஸட்.**—வெகுவாய் கொள்வதற்கு மிக்கத்தகுதியான உன்னுடைய நீண்ட கால்சட்டை சாக்குகள் என் நிந்தைகளை நன்றாய் வைத்திருக்கட்டும்.

**ஜான் மன்.**—விலிப் அரசே, கார்டினலுக்கு என்ன உத்தரம் சொல்லப்போகின்றீர்?

**கான்ஸ்ட.**—அவர் என்ன உத்தரம் சொல்லுகிறது? கார்டினல் கருத்துப்பிரகாரம் நடக்கவேண்டியதுதான்.

**லூயி.**—பிதாவே, நன்றாய் ஆலோசித்துப்பாருங்கள்; ஒன்று ரோமன் திருச்சபையின் கனத்த சாபத்துக்குள்ளாகவேண்டும், அல்லது இங்லன்ட அரசரின் சிநேகத்தை இழக்கவேண்டிய சொற்ப நஷ்டத்தை அடையவேண்டும், இதுதான் வித்தியாசம்: இவ்விரண்டில் எது அற்ப விஷயமோ அதற்கு உடன்படுங்கள்.

**ப்ளாஞ்ச்.**—அதாவது, ரோமன் திருச்சபையின் சாபத்துக்குள்ளாவதற்குதான்.

**கான்ஸ்ட.**—ஓ லூயி, உறுதியாய் ஊன்றிநில்! (42) உன்னதமாய் அலங்கரிக்கப்பட்ட புதுப் பெண் வேஷம் பூண்டு பிசாசு உன்னை இச்சமயம் மயக்கப்பார்க்கின்றது.

(42) See Appen dix.

**ப்ளாஞ்ச்.**—கான்ஸ்டன்ஸ் சீமாட்டி இவ்விதம் வேதம் போதிப்பது தனக்குள்ள தெய்வ பக்தியைக்கொண்டல்ல, ஆனால் தனக்கேற்பட்ட தேவையை முன்னிட்டுதான்.

**கான்ஸ்ட.**—ஐயோ, தெய்வபக்தி உங்களுக்கு அற்றுப்போனபடியால்தான் எனக்கு தேவை ஏற்பட்டது; ஆகவே என்னுடைய தேவையைத் தீர்த்துவிடுவீர்களானல், என்னுடையதேவை இவ்வுண்மையை அறிந்துகொள்ளும்; அதாவது, தேவை ஒழிந்துவிட்டபடியால் இனி தெய்வ பக்தி தலையெடுக்கும் என்பதை. ஆனபடியால் ஐயோ, என்னுடைய தேவையைமாத்திரம் உங்கள் காலில் போட்டு மிதித்தழுத்துங்கள், தெய்வபக்தி தனனலே மேலேறி விடும்; ஆனல் என்னுடைய தேவையை உயரத்திலேயே இருக்கும்படி செய்வீர்களானல் தெய்வபக்தியைதான் காலில்போட்டு நடந்துவிட்டதாகும்!

**ஜான் மன்.**—ராஜாவுக்கு பிரமிப்பு உண்டாகிவிட்டது, இதற்கெல்லாம் ஒன்றும் பேசாதிருக்கிறர்.

**கான்ஸ்.**—ஐயோ, அவரை விட்டு எட்ட வந்து, கிரமமான பதில் கொடுமே!

**ஆஸ்ட்.**—பிலிப் அரசே, அப்படியே செய்யும்; இன்னமும் சந்தேக ஊஞ்சலில் தொங்கிக்கொண்டிராதேயும்.

**பாஸ்ட்.**—நீர் கன்றுக்குட்டி தோலையல்லாது வேறெதையும் தொங்கவிட்டுக்கொள்ளாதேயும், அத்தி ஆனந்தமளிக்கும் நிர்மூட கோணங்கி.

**பிலிப் மன்.**—நானிப்போது திகைப்புற்றிருக்கின்றேன், இன்னது சொல்லுவதென்று எனக்குத் தெரியவில்லை.

**பான்ட்.**—நீர், திருச்சபையிலிருந்து விலக்கப்பட்டும், சபிக்கப்பட்டும் இருப்பீரானல், இன்னும் அதிக திகைப்புற்

திருப்பீரோ, அப்போது உம்மால் என்ன (43) சொல்ல முடியும்?

**விலிப் மன்.**—சங்கைக்குரிய நல்ல தகப்பனே, என் ஸ்தானத்தில் தங்களை வைத்துக்கொள்ளுங்கள், அப்போது தாங்கள் எவ்விதம் நடந்துகொள்வீர்களென்பதை எனக்கு தெரிவியுங்கள். இவ்விராஜகையும் என்னுடைய கையும் சற்று முன்னேதான் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கின்றன, உள்ளந்தரங்கமான எங்கள் இருமனங்களின் ஒற்றுமையாகப்பட்டது, உடன்படிக்கை என்னும் விவாக பந்தனத்தால் பொருந்தப்பெற்று, சகல தேவதிரவிய அனுமானங்களையுங்கொண்டு உறுதிபடுத்தப்பட்ட தெய்வீக பிரமாணிக்கங்களால், இணைக்கப்பட்டும், பிணைக்கப்பட்டுமிருக்கின்றது; தாங்கள் வருவதற்குமுன் கடைசியாய் எங்கள் ஆவிபரிந்து உச்சரித்த வார்த்தைகள் எப்படிப்பட்டவைகளென்றால், ஆணை பலம் புகட்டிய விசுவாசத்தைப்பற்றியும், சமாதானத்தைப்பற்றியும், நட்பைப்பற்றியும், என்றும் மாறா அன்பைப்பற்றியுமே, அதாவது, எங்கள் இரு ராஜாங்கங்களுக்குள் மாத்திரமல்ல, ராஜ சமுகங்களாகிய எங்கள் இருவருக்குள்ளேயுந்தான்; இப்படிப்பட்ட உடன்படிக்கை, முடிந்தும் முடியாமல் புதிதாயிருக்கும்போதே, அதாவது சமாதானமென்னும் இவ்விராஜபேரம் முடிந்த தற்கடையாளமாக, எங்கள் கைகளை மனரம்மியமாய், நாங்கள் அலம்புவதற்கு முன்னதாகவே, கடவுளுடைய சித்தம், இக்கைகள் இயமனுடைய பூசுகோலால் மைதடவப்பட்டும், ஏறுமாறாக கறைபடுத்தப்பட்டும், இன்னும் இக்கைகளில் ஆக்ருஷ்ணங்கொண்ட ராஜாக்களின் அகோர விரோதத்தை பழிவாங்குகை என்னும் பிசாசு சித்தரிக்கின்றதுபோலும் தோன்றுகின்றதே: சற்று முன்னேதான்

(43) See Appendix.

இரத்த கறைகளையெல்லாம் போக்கி, புதிதாக நட்பு என்னும் கயிற்றால் கட்டப்பட்டு, (44) இவ்விரு விஷயங்களிலும் உறுதியுடன் இறுகியிருக்கப்பட்ட இக்கைகளை, இத்தகைய அன்பு மிகுந்த வந்தனோபசார பொருத்தத்திலிருந்து, பிரித்துக்கொள்ளவா வேண்டும்? சத்தியத்தோடு லகுபிகுவிளையாட்டா விளையாடுகிறது? இப்போது உள்ளங்கையை உள்ளங்கை பற்றியிருக்கும் ஒற்றுமையிலிருந்து திரும்பவும் பிடுங்கிக்கொண்டு, செய்த சத்தியத்தை ரத்துசெய்ய எதிர் சத்தியம்பண்ணி, எங்களையே நாங்கள் கிஞ்சிற்றும் உறுதியற்ற பிள்ளைகளாக செய்துகொண்டால் கடவுளோடு பரிகாசஞ் செய்கிறதுபோலாகாதா? உடன்படிக்கை என்னும் சம்மந்தத்தாலான மணக்கோல மனமங்கள சந்தர்ப்பத்தில் இரத்த சேதஞ்செய்யும் சேனையை உட்செலுத்தி, சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு சாந்தம் வகித்திருப்பவர்களுக்கு விரோதமாய், கலகம் செய்யலாமா? ஓ, திவ்விய ஐயா, எனது சங்கைக்குரிய தகப்பனே, அப்படிக்கெல்லாம் வேண்டாம்! தாங்கள் கருணைகூர்ந்து வேறு ஏதாகிலும் சுலபமான முறைமையை ஆலோசித்துச் சொல்லுங்கள், அதை எங்களுக்கு சட்டமாக திட்டஞ்செய்யுங்கள், அல்லது அதை தங்களுடைய கட்டளையாக எங்களுக்கு விதியுங்கள்; அப்படி செய்வீர்களானால் நாங்கள், தங்கள் இஷ்டத்தை முற்றிலும் பூர்த்திசெய்து, தங்கள் ஆசீர்வாதத்தையும் பெற்று, நாங்களிருவரும் சிநேகிதர்களாகவே இருந்து வருகிறோம்.

**பான்ட:**—இங்கலன்ட் அரசன் சிநேகத்தைத் தவிர்த்து, அவனை விரோதிப்பது தவிர, வேறு எந்த முறைமையும் முறைமையல்ல, வேறு எந்த ஆசாரமும் ஆசாரமல்ல. ஆகையால் யுத்தத்திற்கு தயாராகுவீராக! நம்முடைய திருச்சபையின் யுத்தவீரனாக விளங்கும், இல்லாவிடில் நமது தாயாகிய திருச்சபை, அதன் சாபத்தை உமது

(44) See Appendix.

மீது, உச்சரிக்கும்படிசெய்துகொள்வீர், அது எப்படிப்பட்ட சாபமாயிருக்குமென்றால், தனக்கு விரோதமாய் கலகஞ் செய்யும் தன் மகன்பேரில் தாய் போடும் சாபத்திற்கு, சரி கடுமையுள்ளதாகும். ப்ரான்ஸ் அரசே, இப்போது நீர் பிடித்திருக்கப்பட்ட அக்கரத்தை கலக்கமற்று உமது கைகளில் வைத்திருப்பதைப் பார்க்கிலும், ஓர் சர்ப்பத்தையே, அதன் நாக்கை கைப்பற்றி, பிடித்திருக்கலாம், அல்லது அடைபட்ட[45]சிங்கத்தின் அறைந்துகொல்லும் கையையும் பிடித்திருக்கலாம், அல்லது பசியால் வருந்தும் புலியை முதலாய், அதன் பல்லையே கைப்பற்றி, இதைவிட பயக் குறைவோடு பிடித்திருக்கலாமென்பதை நீரறியும்.

**லிப் மன்.**—என் கையை வேண்டுமானால் நான் பிரித்துக்கொள்வேன், ஆனால் என் வாக்குறுதியை மாத்திரம் என்னால் மாற்றமுடியாது.

**பான்ட.**—அப்படியானல் ஒரு உறுதிக்கு மற்றொரு உறுதியை விரோதித்திருக்கும்படி செய்கின்றீர்; உள்நாட்டு கலகத்தைப்போல் ஒரு சத்தியத்துக்கு மற்றொரு சத்தியத்தைக்கொண்டு போட்டி ஏற்படுத்துகின்றீர், ஒரு வாக்குத்தத்தத்தோடு இன்னொரு வாக்குத்தத்தத்தை மோதவிடுகின்றீர். கேளும், நீர் முதலில் தெய்வத்துக்குக் கொடுத்த பிரமாணிக்கத்தை தெய்வத்துக்கு முதலில் நிறைவேற்றும், அதாவது, நம்முடைய திருச்சபையின் போர் வீரராயிருப்பேனென்று சொல்லியிருக்கப்பட்ட வாக்குறுதியை. நீர் இப்போது ஆணையிட்டிருப்பது உமமுடைய பிரதிகூலத்திற்காகதான் ஆணையிட்டிருக்கிறபடியால், அப்படிப்பட்ட ஆணையை நீரோ நிறைவேற்றலாகாது; ஏனென்றால் நீர் ஓர் தப்பிதத்தை செய்வேனென்று சத்தி

(45) See Appendix.

யஞ் செய்திருந்தாலும், அத்தப்பிதத்திற்குப் பதிலாய் ஓர் கிரமத்தை செய்து முடிப்போனல் அது தப்பிதமாகாது; ஒரு காரியத்தை செய்வதால் தீமை விளைகிறதாயிருக்கும் பட்சத்தில், அக்காரியத்தை முடிக்காமலிருக்கும் மன நிலையில், அக்காரியத்தை செய்வதற்கு விரோதமாய், அதைமுற்றிலும் விலக்கிவிட மனத்திடம் கொள்வதுதான் மகா உத்தமம்: ஏதாகிலும் ஓர் விஷயத்தில் பிசகிவிட்டால் அப்பிசகை சீர்திருத்த இன்னொரு பிசகு செய்வதும் மேலான காரியமே; இவ்விதம் செய்வது ஒழுங்கீனமாகபோதிலும், மேற்கண்டவாறு காரியஞ் சீராகிவிடுகிறபடியால், ஒழுங்கீனம் ஒழுங்காகவே மாறிவிடுகின்றது. சமீபத்தில் சுடப்பட்ட திரோகத்தின் தீய்ந்த உதிரத் தாரைகளில் எற்பட்ட தீப்புண்ணுக்கு தீத்திராவகம் முதலியவற்றைக் கொண்டு குணப்படுத்துவதுபோல், ஓர் அபத்தத்தை மற்றொரு அபத்தத்தைக்கொண்டுதான் செவ்வைப்படுத்த வேண்டும். மதந்தான் சத்தியங்களுக்கெல்லாம் சக்தி கொடுக்கின்றது; ஆனல் நீரோ மதத்துக்கு விரோதமாகவே சத்தியஞ் செய்திருக்கின்றீர், ஆகவே நீர் எந்த விஷயத்தின் சக்தியைக்கொண்டு சத்தியஞ் செய்வீரோ அவ்விஷயத்துக்கே விரோதமாய் சத்தியஞ் செய்தபோதும், இயற்கனவே செய்திருந்த சத்தியத்துக்கு விரோதித்து நடப்பது உறுதியென்று இன்னொரு சத்தியத்தை உத்திரவாதப்படுத்தியபோதும், எந்த சக்தியைக்கொண்டு சத்தியஞ் செய்தீரென்பது நமக்கு[46]விளங்கவில்லை: ஒரு காரியத்தின் நேர்மை இன்னதென்று உமக்கு சந்தேகமாயிருந்த தருணத்தில் முதலாய் நீர் அக்காரியத்தைப் பற்றி சத்தியஞ் செய்திருந்தாலுமே, அப்படிப்பட்ட சத்தியத்தைக் கூட தாபரிக்கவேண்டியது அவசியமே; இல்லாவிட்

---

(46) See Appendix.

டால் சத்தியஞ் செய்வது எப்படிப்பட்ட பழிப்பான காரியமாகும்! நீர் இயற்கனவே செய்திருக்கும் சத்தியத்தை பொய்சத்தியமாக்குவதற்குதான் இப்போது சத்தியஞ் செய்திருக்கின்றீர்; ஆகவே, நீர் இப்போது செய்த சத்தியத்தை நிறைவேற்றுவீரானல், எல்லாப் பொய் சத்தியங்களிலும் மகா பெரிய பொய் சத்தியஞ் செய்தவராவீர். அன்றியும், நீர் சமீபத்தில் செய்த பிரதிக்கினைகள் நீர் முதலில் செய்திருக்கும் பிரதிக்கினைக்கு விரோதித்திருக்கிறபடியால், உமக்குள்ளாலேயே உமக்கு விரோதமாக, குழப்பம் நடப்பதுபோலிருக்கின்றது; நீர் உமக்குள்ள உறுதி குணத்தையும், பெருந் தன்மையையும் திடப்படுத்திக் கொண்டு, இப்போது ஏற்பட்டிருக்கும் மயக்கக்கூடியதும், கேவலத்தை நாடியதுமான சமாதான நிபந்தனையை கிஞ்சிற்றும் மதியாது, நிராகரிப்பீரானல் நீர் இதுவரையில் அடைந்ததும், இனி நீர் அடையப்போகிறதுமான சகல ஜெயங்களிலும், பெரிய ஜெயமடைந்தவராவீர்: நீர் இஷ்டப்படும் பட்சத்தில், மேற்கண்ட உம்முடைய நற்குணங்கள் உமக்குள் மேலாடும்படி நாமும் நம்முடைய ஜெபத்தில், வேண்டிக்கொள்வோம். அப்படி நீர் செய்யாவிட்டால், நம்மால் உமக்கு விதிக்கப்படும் சாபங்களின் ஆபத்துக்குள்ளாவீரென்பதை, நீர் செவ்வையாயறிந்துகொள்ளும். அச்சாபங்கள் எவ்வளவு கொடுமையானவைகளாயிருக்குமென்றால், அச்சாபங்களால் சம்பவிக்கும் துன்பங்களிலிருந்து நீர் தப்பித்துக்கொள்ளமுடியாது; அதற்கு விரோதமாய் அச்சாப சங்கடத்தால் உமக்குண்டாகும் கடுஞ்சஞ்சலத்தின் கனத்த கொடுமையானது உம்மைக் கொன்றேவிடும்.

**ஆஸ்ட்**:--அமர்க்களந்தான், (47) அட்டியின்றி அமர்க்களந்தான்!

---

(47) See Appendix.

**பாஸ்ட்.**—அதுதான் நேராதா? (48) ஒரு கன்றுக் குட்டித் தோல்தான் உன் வாயை அடைக்காதா?

**லூயி.**—தந்தையே, யுத்தத்திற்கு புறப்படுங்கள்!

**ப்ளாஞ்ச்.**—தங்களுடைய மணமங்களமுகூர்த்த நாளிலேயா? தாங்கள் மணசம்மந்தஞ் செய்த கோத்திரத்துக்கு விரோதமாகவா? என்ன, வெட்டப்பட்ட மனிதர் மாமிசத்தைக்கொண்டா, நம்முடைய கலியாண மகோற்சவ விருந்து தயாராகவேண்டும்? நரக கூக்குரல் இரைச்சலேயென்று சொல்லக்கூடிய கமுதைகத்தல் தாரைகளும், காதுக்கருவருப்பான பேரொலி பேரிகைகளுமா, நம்முடைய கலியாண ஆடம்பர வாத்தியமாக வேண்டும்? ஓ என் பர்த்தாவே, எனக்கு சற்று செவி கொடும்! ஆ, ஐயோ, பர்த்தா என்கிற பதமே என் நாவுக்கு எவ்வளவு புதிய பதமாயிருக்கின்றதே! இதுபரியந்தம் என் நாவால் துதிக்கப்படாத அப்பதத்துக்காகவாகிலும் தயைசெய்யவேணுமென்று நான் முழங்காலிட்டு மன்றாடுகின்றேன், என் சொந்த அம்மானுக்கு விரோதமாக போர்புரிய போகாதேயுங்கள்.

**கான்ஸ்ட.**—ஓ புண்ணிய புருஷோத்தம டாவின் ராஜகுமாரா, முழங்காலிட்டு முழங்காலிட்டு, காய்ப்பு கட்டியிருக்கப்பட்ட என் முழங்காலிட்டு, உம்மை நான் மன்றாடுகின்றேன், தெய்வசித்தத்திலேயே உதிக்கப் பெற்றிருக்கப்பட்ட தீர்மானத்தை நீர் மாற்றாதேயும்.

**ப்ளாஞ்ச்.**—தங்களுக்கு என்மீதுள்ள நேசத்தை இப்போது நான் கண்டறிந்துகொள்வேன். மனைவியென்னும் பதத்திற்குள்ள மதிப்பைவிட வேறு எந்த நோக்கம் தங்களுக்கு பெரிதாயிருக்கக்கூடும்?

---

(48) See Appendix.

**கான்ஸ்ட.**—உன்னை மேன்மைபடுத்துகின்றவராகிய அவனை மேன்மை படுத்துகின்ற அந்த நோக்கந்தான்; அதாவது, அவருடைய கீர்த்தி நோக்கந்தான்: ஓ லூயிஸ், நின் கீர்த்தியில் நோக்கமிருக்கட்டும், நின் கீர்த்தி, கீர்த்தி!

**லூயி.**—பலத்த முகாந்தரங்கள் தங்களை பலபந்தமாய் போருக்கிழுக்கும்போது, தங்கள் ராஜமாட்சிமை இவ்வளவு கவனக்குறைவாயிருக்கிறதைப் பார்க்க எனக்கு வியப்பு உண்டாகின்றது.

**பான்ட.**—நாம் அவர் தலைமீது சாபம் போடவேண்டியதுதான்.

**விலிப்-ம.**—தாங்கள் சபிக்க வேண்டிய அவசியமில்லை. இங்கலன்ட் அரசே, நான் உம்மை விட்டு விலகி விடுவேன்தான்.

**கான்ஸ்ட.**—யதாஸ்தானத்தை விட்டு விலகிப் போயிருந்த ராஜமாட்சிமையின் சிறந்த திரும்புகை இதுவே!

**எலினோர்.**—வ்ரஞ்ச்சுக்காரருக்குள்ள உறுதியற்ற தன்மையால் உண்டான அருவருக்கத்தகுந்த விலகல் இதுவே!

**ஜான் மன்.**—வ்ரான்ஸ் அரசே, இம்மணி நேரத்தில் நீர் செய்த காரியத்திற்காக இம்மணி நேரத்திற்குள்ளாகவே மனவருத்தமடையப் போகின்றீரென்பது நிச்சயமே.

**பாஸ்ட.**— [தனக்குத்தானே] காலமென்னும் கிழவன், கெடிகாரங்களுக்கு வேலை கொடுக்கின்ற அவ்வயோதிகன், வழுக்கைத்தலை கல்லறைக்கார விருத்தாப்பியனைப் போல் தோன்றுகின்ற அந்த காலம், அது இட்டதுதான் சட்டமோ? அப்படியானல் நல்லது, வ்ரான்ஸ் அரசர் மனவருத்தத்திற்குள்ளாவார்தான்.

**ப்ளாஞ்ச்.**—சூரியனே இரத்தமயமாய் சூழப்பட்டு மங்கியிருக்கின்றது : மணமங்கள சிறந்த நாளே, நீயும் நானும் பிரிந்துவிட வேண்டியதுதான் ! ஆகக்கூடி நான் இப்போது எந்த பக்கம் போகிறது ? நான் இரண்டு பக்கத்தையும் சேர்ந்தவளாயிருக்கின்றேன் : ஒவ்வொரு சேனையும் என்னுடைய ஒவ்வொருகையையும் பிடித்துக்கொண்டிருக்கின்றது, நானும் இரண்டு சேனைகளையும் பிடித்துக்கொண்டிருக்கிறபடியால், அச்சேனைகள் அவைகளுடைய மூர்க்கமும்மூர தருணத்தில், என்னையும் பிடித்திழுத்துக்கொண்டு சுழலும்போது, என் கைவேறு, கால்வேறாக அங்கபங்கஞ் செய்துவிடும் என்பது நிச்சயமே. நாத, தாங்கள்தான் ஜெயமடைய வேணுமென்று நான் கடவுளை பிரார்த்திக்கலாகாது ; மாமா, தாங்கள் அவசியம் அபஜெயமடைய வேண்டுமென்றுதான் பிரார்த்திக்கவேண்டும் ; மாமனோ, தங்களுக்குதான் சம்பத்து உண்டாக வேணுமென்று நான் கோரலாகாது ; பாட்டியாரோ, தங்களுடைய எண்ணங்கள் நிறைவேற வேண்டுமென்று நான் விரும்பக் கூடாது : எந்த பக்கம் ஜெயமடைந்தாலும் அந்த பக்கத்தில்தான் எனக்கு நஷ்டம் ஏற்படும் ; பந்தயம் ஆரம்பிப்பதற்கு முன்னேயே எனக்கு நஷ்டந்தானென்பது நிச்சயமே.

**லூயி.**—பெண்ணே, என் பக்கந்தான் நின்கதி, நின் யோகக்ஷேமம் என்பாலுளதேயன்றி வேறெவ்விடத்துமில்லை.

**ப்ளாஞ்ச்.**—எவ்விடத்தில் எனக்கு யோகம் தங்கி(49) இருக்கின்றதோ அவ்விடத்தில்தான் என் ஆயுசுக்கும் பங்கம் ஏற்படப்போகிறது.

**ஜான் மன்.**—தம்பி, நீ போய் நம்முடைய, சைன்யங்களையெல்லாம் ஒன்று கூட்டு. (பாஸ்டார்ட் செல்க.)

(49) See Appendix.

வ்ரான்ஸ் அரசே, சுவாலை வீசும் கோபாக்கினி எனக்குள் பற்றி எரிகின்றது; அது எப்படிப்பட்ட கோப கொந்தளிப்பு, அதுவும் எவ்வளவு உஷ்ண ஸ்திதியிலிருக்கின்றது என்றால், அதன் வேகத்தை உதிரந்தவிர வேறு எப்படிப்பட்ட வஸ்துவினாலேயும் தணிக்க முடியாது; அதுவும் எப்படிப்பட்ட உதிரத்தாலென்றால், வ்ரஞ்ச் ராஜாங்கத்தால் மகா மகா அருமையாய் மதிக்கப்பட்ட நபரின் உதிரத்தால் தான்.

**விலிப் மன்.**—உம்முடைய கோபாக்கினியின் எரிச்சல் உம்மையே எரித்துவிடக்கடவதாக; அவ்வக்கினியை நம்முடைய இரத்தம் அவிப்பதற்குள்ளாக நீர் சாம்பலாய்ப் போகக்கடவீராக: நீர் உம்மைக் காப்பாற்றிக்கொள்ளப் பாரும், நீர் வெகு அபாயத்துக்குள்ளாகி இருக்கின்றீர்.

**ஜான் மன்.**—என்னை பயமுறுத்துகிறவர் இருக்கிற அபாயத்தைப்பார்க்கிலும் மேம்பட்ட அபாயத்தில் நாமில்லை. சரி, யுத்தத்திற்கு பறந்து செல்வோம்.

(எல்லோரும் செல்க.)

**இரண்டாவது காட்சி.—ஆஞ்சியர்ஸ் நகரத்துக்கு முன்னாலுள்ள மைதானம்.**

(உள்பக்கத்தில் பேரிரைச்சல் உண்டுபண்ணவும். உள் ஆர்பாட்டங்கள். பிறகு பாஸ்ட்டர்ட், ஆஸ்ட்ரியா இறைவன் தலையை கையில் பிடித்துக்கொண்டு வருக.)

**பாஸ்ட்.**—என்னுயிரின்மேல் சத்தியமாகவே, இந்நாள் இச்சமயம் ஆச்சரியப்படத்தக்க உஷ்ணமாகிக்கொண்டே வருகின்றது; ஆகாயத்தில், ஏதோ மாயப்பிசாசு ஒன்று, வட்டமிட்டுக்கொண்டு தீமைகளை பொழிந்து

கொண்டிருக்கின்றது. ஆஸ்ட்ரியாக்காரனுடைய தலை அதோ கிடக்கின்றது, ஆனால் விலிப் (50) அரசன் மாத்திரம் ஜீவித்திருக்கின்றான்.

(ஜான் மன்னனும், ஆர்தரும், யூபர்ட்டும் வருக.)

**ஜான் மன்.**—யூபர்ட்டே, இப்பிள்ளையை நீ பத்திரமாய் வைத்துக்கொள். விலிப்பே, நீ ஓடு: என் தாயாரை நம்முடைய கூடாரத்தில் தாக்குகிறார்கள், இதுவரையில் அநேகமாய் சிறையாக்கிவிட்டார்களோவென்று பயப்படுகின்றேன்.

**பாஸ்ட்.**—என்னரசே, நானவர்களை விடுவித்துவிட்டேன்; மேன்மை தங்கிய அவர்கள் பத்திரமாயிருக்கின்றார்கள், தாங்கள் பயப்படவேண்டாம்; ஆயினும், என்னிறைவ, மேலே நடக்கவேண்டியதைக் கவனியுங்கள்; ஏனென்றால் இன்னும் சொற்ப சிரமமெடுத்தால், நாம் பட்ட இப்பாட்டுக்கு, பாக்கியமுள்ள பலன் கிடைக்கும்.

(செல்க.)

### மூன்றாவது காட்சி.—அதே இடம்.

(உட்பக்கத்தில் பேரிரைச்சல், ஆர்பாட்டம், பின்வாங்கல் முதலியன. பிறகு ஜான் மன்னன், எலினோர், ஆர்தர், பாஸ்ட்டார்ட், யூபர்ட், பிரபுக்கள் முதலியோர் வருக.)

**ஜான் மன்.**—(எலினோரைப் பார்த்து) அப்படியே ஆகட்டும்; மேன்மைதங்கிய தாங்கள் இங்கேயே தங்கியிருக்கத்தான்வேண்டும், பலத்த ராணுவ பந்தோபஸ்தும் தங்களுக்கிருக்கின்றது. (ஆர்தரைப் பார்த்து) தம்பி, நீ விசனப்படாதே; உன் பாட்டியார் உன்னை நேசிக்கின்றார்கள்; உன்னுடைய சிற்றப்பாராகிய நானும், உன்மட்டில்

(50) See Appendix.

உன் தகப்பனுர் எவ்வளவு பட்சம் வைத்திருந்தாரோ அதே பட்சத்துடன், உன்னை பாதுகாத்துவருவேன்.

**ஆர்தர்.**—ஐயோ, என்னுடைய இங்கிலேண்மையினிமித்தம் என் தாயார், ஆருத் துயரடைந்து, இறந்துபோவார்களே !

**ஜான் மன்.**—(பாஸ்ட்டர்டைப் பார்த்து) தம்பி, புறப்படு இங்க்லன்டுக்கு! நமக்குமுன்னே நீ சீக்கிரமாய் போ: நாம் வருவதற்குள்ளாக சேர்த்து வைத்துக்கொண்டிருக்கும் சன்னியாசிகளுடைய பணப்பைகளை உதறி கொட்டிக்கொள்ளும் விஷயத்தில் உன்னுடைய கவனத்தை செலுத்து; சம்மனசுக்கள் உருவமடங்கிய பொன் நாணயங்கள் இது பரியந்தம் அடைப்பட்டிருந்தவை இப்போது விடுதலை அடையட்டும்: சுவஸ்தியிலிருக்கப்பட்டவர்கள் சேர்த்து வைத்திருக்கும் திரவியமாகிய கொழுப்பு பசையுள்ள எலும்பு கூடிய இறைச்சியைக்கொண்டுதான், இப்போதுயுத்த உழைப்பால் பசி களையாயிருக்கப்பட்டவர்கள் போஷிக்கப்படவேண்டும்: நம்முடைய இந்த அதிகாரத்தை கூடுமான அளவு கண்டிப்பாகவே செலுத்து.

**பாஸ்ட்.**—வெள்ளியுந் தங்கமும் என்னை உள்ளே வரும்படி சமிக்கை காட்டும்போது கோவில் * மணியும், ஜெபபுஸ்தகமும், மெழுகுவத்தியுமா என்னை மிரட்டி துரத்திவிடபோகின்றன? மேன்மைதங்கிய தங்களோடு நான் விடைபெற்றுக்கொள்கின்றேன். தாதம்மா, எப்போ

---

* ரோமன் திருச்சபைக்குட்பட்ட கோவில்களில் யாதாமொருவனை திருச்சபையிலிருந்து விலக்கும் சடங்கு நடத்தும்பொது கோவில் மணி, அடிபடும், சுவிசேஷகத்திலிருந்து சில வாக்கியங்கள் உச்சரிக்கப்படும், எரிந்துகொண்டிருக்கும் மூன்று மெழுகுவத்திகள் அவிக்கப்படும்; இன்னும் சில சாங்கியங்களும் அநுசரிப்பதுண்டு.

தாகிலும் என்னுள்ளத்தில் தெய்வபக்தி ஜனிக்குமானல், அப்போது தாங்கள் யோக க்ஷேமத்துடனிருக்கவேணு மென்று நான் கட்டாயம் கடவுளை பிரார்த்திக்கிறேன்; இவ் வெண்ணத்தோடு தங்கள் கையை முத்தமிடுகின்றேன்.

**எலினோர்.**—அன்புள்ள தம்பி, நானுனக்கு விடை கொடுக்கிறேன்.

**ஜான் மன்.**—தம்பி நானும் விடை கொடுக்கின் றேன்.

(பாஸ்ட்டர்ட் செல்க.)

**எலினோர்.**—சின்ன என்னினத்தானே, நீ இங்கே வா: நானுனக்கு சொல்லப்போகிற ஒரு புத்தியைக் கேள்.

**ஜான் மன்.**—யூபர்ட்டே, நீ இங்கே வா. ஓ எனது அன்புள்ள யூபர்ட்டே, நாமுனக்கு ரொம்பவும் கடமைப் பட்டிருக்கின்றோம்! இம்மாமிசகட்டடமாகிய நமக்குள்ளி ருக்கும் நம்முடைய பிராணன், உன்னை, தனக்கு கடனீந்த வனாக பாவித்து, உனது அன்புக்கு பதிலன்பு வட்டியோடு செலுத்த ஆசித்திருக்கின்றது: அன்றியும், என்னுடைய நல்ல நண்பனே, நீ முன்னே வலியசெய்த சத்திய பிரதிக் கினை, என் இம்மனதிலே இடைவிடாது குடிகொண்டு, எனக்கு மகிழ்ச்சி கொடுத்துக்கொண்டே இருக்கின்றது. உன்னுடைய கையை என்னிடம் கொடு. நான் உனக்கு ஒரு காரியம் சொல்லவேணுமென்றிருந்தேன்; ஆனல் அதை நான் இன்னொரு நல்ல சமயத்தில் உனக்குத்தெரி விக்கின்றேன். கடவுளறிய சொல்லுகின்றேன், யூபர்ட் டே, நானுன்மட்டில் எவ்வளவு மரியாதை வைத்திருக்கின் றேனென்றால், அதை என் வாயால் வெளியிட, வாஸ்தவ மாகவே, எனக்கு வெட்கமாயிருக்கின்றது.

**யூபர்ட்.**—நான் தான் தங்கள் ராஜமாட்சிமைக்கு ரொம்பவும் கடமை பட்டிருக்கிறேன்.

**ஜான் மன்.**—உத்தம மித்திரா, நீ அப்படி சொல்லுவதற்கு, உனக்கு இது பரியந்தம், யாதொரு காரணமுமிருந்ததில்லை, ஆனால் அப்படிப்பட்ட காரணம் சமீபத்தில் உண்டாகும்படி நான் செய்கின்றேன்: காலமானது எவ்வளவுதான் தாமதமாய் நகர்ந்து போனாலுஞ்சரியே, ஆனபோதிலும் உனக்கு நன்மை செய்யும்படியான ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிட்டும். நானுனக்கு ஒரு காரியம் சொல்ல வேணுமென்றிருந்தேன், ஆயினும் அது போகட்டும்: சூரியனோ ஆகாயத்தில் ஜொலித்துக்கொண்டிருக்கின்றான், இத்தினமோ சிலாக்கியமான நாளாயிருக்கின்றது, இத்தினத்தில் உலகத்தார் இன்பசுகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள், எங்கே பார்த்தாலும் அளவுக்கு மேற்பட்ட சிற்றின்ப கொண்டாட்டமாயும், அளவுக்கு மேற்பட்ட ஆடம்பர ஆர்பாட்டமாயுமிருக்கின்றது. ஆகையால் இச்சமயம், நான் சொல்லுவதை நீ கேட்பதற்கு, உசிதமான சமயமல்ல: நடுச்சாம மணியும், தன்னுடைய இரும்பு நாக்கைக்கொண்டு, தன்னுடைய பித்தளை வாயிலடித்து, அர்த்த ராத்திரியில் (51) பறந்து செல்லும் நல்ல நித்திரைவேளையில், மணி ஒன்று (51) அடிக்கும் சப்தம் கேட்குமானாலும், நாம் நிற்கின்ற இந்த இடமும் கோவில் கல்லறை தோட்டமாயிருந்தாலும், நீயும் ஆயிரம் கொடுமைக்குள்ளானவனாயிருந்தாலும், அல்லது கடூர குணமுள்ள அக்கொடுஞ் சஞ்சலமென்பது உன்னுதிரத்தை வேகவைத்து கனதியுள்ள தடிப்பாய் செய்திருந்தாலும் —(இல்லாவிட்டால் உதிரமென்பது சாதாரணமாய் இரத்த தாரைகள் வழியாய் கூச்சமென்னும் நல்லுணர்ச்சியுடன்

(51) See Appendix.

கீழும் மேலுமாயோடி பைத்தியக்காரனுக்குரித்தான நகைப்பு உண்டுபண்ணி வீண்காலம் போக்கும் அக்களிப் பால் மனிதர் முகங்கள் மலரவும், கண்கள் ஜொலித்துக் கொண்டிருக்கும்படிக்கும் செய்யும், ஆனல் அந்த அக் களிப்பு என்னும் மனவெழிற்சி என்னுடைய கருத்துக்கு மிக்கப் பகையானது,)—அல்லது உனக்குள்ள அறிவால் சிந் தனைமாத்திரம் செய்துகொண்டு, உன்னுடைய கண்களை உபயோகியாமல் என்னை நீ பார்க்கக்கூடுமானலும், உன் னுடைய காதுகளை உபயோகியாமல் நான் சொல்வதை நீ கேட்கக்கூடுமானலும், உன்னுடைய நாவை உப யோகியாமல் எனக்கு நீ பதில் சொல்லக் கூடுமான லும், கண்களில்லாமலும், காதுகளில்லாமலும், தீமை விளைவிக்கக்கூடிய சொற்கள் என்பவைகளின் சப்தமில்லா மலும் இருப்பாயானல், அதுதான், என் கருத்துக்கு அதி உசிதமான சந்தர்ப்பம்; அப்போது அவயங்காக்கும் பட் சியின் கவனத்தோடிருக்கும் பகல் பொழுதை கூட பறவா பண்ணுமல் நான் உன் மனதில் என் எண்ணங்களை புகட்டு வேன். ஆயினும், ஆ, நான்மாட்டேன்! ஆனல் நானுன்னை நன்ருய் நேசிக்கின்றேன்; என்னையும் நீ நன்ருய் நேசிக் கின்ருயென்று, மகா உறுதியாகவே, நான் நம்புகின்றேன்.

**யூபர்ட்.**—எவ்வளவு நன்ருயென்ருல் தாங்கள் என்னை நிறைவேற்றும்படி கட்டளையிடும்விஷயம், அவ்விஷ யத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கையிலேயே, என்னை அத்தியாவசிய மரணத்திற்குட்படுத்தக்கூடுமானதாயிருந் தாலுங்கூட, கடவுள் சாட்சியாய், நானவ்விஷயத்தை முடித் தே தீர்ப்பேன்.

**ஜான் மன்.**—நீ அவ்விதம் முடிப்பாயென்று எனக் குத்தெரியாதா? நல்ல யூபர்ட்டே, யூபர்ட்டே, யூபர்ட்டே, அதோ இருக்கின்ற அச்சிறு பையனை நீ கண்ணெக்கிப்

பார்: என் சிநேகிதா, அவன் எப்படிப்பட்ட ஜெந்து என்று நானுனக்குச் சொல்லுகிறேன் கேள், அவன் நான் நடக்கும் வழியில் கிடக்கும் சர்ப்பமே; நான் என்னுடைய இக்காலைக்கொண்டு எந்த இடத்தில் நடந்து போனாலுமே, அந்த இடத்தில் அது எனக்கு முன்னால் கிடக்கின்றது: என் கருத்தைக் கண்டுபிடித்துக்கொண்டாயா? அவனுக்கு நீதான் தற்சமய காவலாளி.

**யூபர்ட்.**—நான் அவனை எப்படிப்பட்ட காபந்துக்குள் வைத்திருப்பேனென்றால் அவனால், தங்கள் ராஜ மாட்சிமைக்கு எவ்வித சங்கடமும் உண்டாகாது.

**ஜான் மன்.**—மரணந்தான்.

**யூபர்ட்.**—(52)என்ன ரசே—

**ஜான் மன்.**—ஒரு கல்லறையே.

**யூபர்ட்.**—அவன் ஜீவித்திருக்கமாட்டான்.

**ஜான் மன்.**—அது போதுமானது. நான் இப்போது கவலையற்றிருக்கமுடியும். யூபர்ட்டே, நானுன்னை நேசிக்கின்றேன்; நல்லது, நானுனக்கு இன்னது செய்ய எண்ணியிருக்கின்றேனென்பதை நானிப்போது உனக்கு சொல்லமாட்டேன்: ஆனால் அது எப்போதும் ஞாபகத்திலிருக்கட்டும். அம்மா, நான் தங்களோடு விடைபெற்றுக்கொள்கின்றேன்: அந்த சைன்யங்களையெல்லாம் தங்கள் ராஜ மாட்சிமையினிடம் அனுப்புகின்றேன்.

**எலினேர்.**—என்னுடைய ஆசீர்வாதமும் உன்னோடு சென்று உன்னிடம் குடிகொண்டிருக்கக்கடவதாக!

**ஜான் மன்.**—தம்பி, நீ இங்க்லண்டுக்குப் போ. யூபர்ட் உன்னுடைய பாதுகாவலனாயிருப்பான்: உனக்கு

(52) See Appendix.

ஆகவேண்டிய காரியங்களை வெகு கவலையுடன் கவனிப்பான். ஓ இப்போது கலை பட்டணத்தை நோக்கிச் செல்ல வேணும்!

**நான்காவது காட்சி.—அதே இடம்.**

*வ்ரன்ச் ராஜாவின் கூடார மாளிகை.*

*விலிப் ராஜாவும், லூயிசும், பான்ட்ல்வும் சிப்பந்திகளுடன் வருக.*

**விலிப் மன்.**—கடல் வெள்ளப் பெருக்கால் அடித்த கர்ச்சனை இரைச்சல்போன்ற புயலால், தீவிரமாய் சோதிக்கப்பட்ட பாய்மரங்களையுடைய கப்பற்கூட்டம் சமஸ்தமும் கலைந்து, தனித்தனியாய் சிதறி ஓடிவிட்டன.

**பான்ட.**—தைரியத்தையும் மன உற்சாகத்தையும் கைவிடவேண்டாம்! கடைமுடிவில் உமக்கு எல்லாம் அநுகூலமாகவே முடியும்.

**விலிப் மன்.**—நமக்கு இத்தனை பிரதிகூலங்கள் நேர்ந்திருக்கும்போது அநுகூலமாய் முடியக்கூடிய விஷயம் அதென்ன? நாம் தோற்கடிக்கப்பட்டதில் சந்தேகமா? ஆஞ்சியர்ஸ் பட்டணம் இனி நமக்கில்லையென்று போனதில் சந்தேகமா? ஆர்தர் சிறையான விஷயத்தில் சந்தேகமா? அருமை சிநேகிதர் அநேகர் மாண்டதில் சந்தேகமா? வ்ரஞ்சுக்காரருடைய தண்டையை கிஞ்சிற்றும் லட்சியம் செய்யாமல், அந்த இரத்தப் பழிகார இங்க்லிஷ்காரன் இங்க்லன்டுக்குப்போய் சேர்ந்துவிட்டதில் ஏதாகிலும் சந்தேகமா?

**லூயி.**—எதெதை அவன் வென்று வசப்படுத்திக் கொண்டானோ, அவைகளைத் தக்கவிதமாய்ப் பலப்படுத்திக் கொண்டான்: எப்படிப்பட்ட கடூர வேகம், அதிலும் எவ்வளவு கணக்கான ஒழுங்கு, எப்படிப்பட்ட பயங்கர படு

களம், அதிலும் எவ்வளவு நிதானமான கிரம வரிசை, இத்தகைய போர்புரிதலுக் கிணையாக எந்த யுத்தத்தையும் ஒப்பிடமுடியாது: இதைப்போலொத்த யுத்தத்தைப் பற்றி யார்தான் படித்திருக்கக்கூடும், அல்லது கேட்டிருக்கக்கூடும்?

**விலிப் மன்.**—நாம் அபகிர்த்திக்கு ஆளானதற்கு, இங்கலன்ட் அரசனுக்குப் புகழ்ச்சியுண்டான இச்சந்தர்ப்பத்தை உதாரணமாய்க்கொண்டு, நாம் பொறுமையோடிருக்கத்தான் வேண்டும்.

(கான்ஸ்டன்ஸ் வருக.)

நம்மை நோக்கி இதோ வருகிறது யார் பார்! ஓர் பிராணனை அடக்கிக்கொண்டிருக்கும் சமாதியாயிருக்கப் பட்டவள்தான்; அந்த அந்தமிலா ஆவியை, கொஞ்சமும் மனமில்லாமலே, சஞ்சல சுவாசம் வீசுகின்ற அநித்திய அங்கமாகிய அச்சிற் சிறைச்சாலையில், அடக்கிக்கொண்டிருக்கப்பட்டவள்தான். நானும்மை கேட்டுக்கொள்கிறேன், குலமகளே, நீர் என்னோடு வெளியே வாரும்.

**கான்ஸ்ட.**—ஐயோ, இப்போது தெரிகிறதா! உங்கள் சமாதானத்தின் பலனை இப்போதாவது பாருங்கள்.

**விலிப் மன்.**—நற்குண குலமகளே, பொறுமையாயிரும், சாந்தகுண கான்ஸ்டனஸே மனந்தேரும்.

**கான்ஸ்ட.**—முடியாது, சகல புத்திமதிகளையும், சகல துயர பரிகாரத்தையும் நிராகரிக்கின்றேன், ஆனால் புத்திமதி சொல்வதற்கு நேர்ந்த அவசியத்தையே அடியோடு துலைத்து முடிவுபெறச் செய்கின்ற அவ்விஷயத்தைத்தான் கோருகின்றேன், அதுதான் சரியான பரிகாரம், அதாவது மரணம், மரணந்தான்; ஓ மனதுக்கினிய அழகிய மரணமே!

ஓ துர்க்கந்தம் கமழுகின்ற நாற்றமே! பூரணமாய் அழகிய ஊழலே! நீடித்த இரவின் படுக்கையைவிட்டு எழுந்து வா, க்ஷேமத்திலிருக்கப்பட்டவர்களுக்கு வெறுப்பும், பயங்கரமும் கொடுக்கக்கூடிய மரணமே, உன்னுடைய அருவருப்புக்குரிய அஸ்திகளை முத்தமிடுவேன், உன்னுடைய நெற்றியின்கீழ் ஏற்பட்டிருக்கும் குடைவுகளில் என் கண்விழிகளை வைப்பேன், உன் வீட்டாராகிய புழுக்கள் ராசியை, என் கைவிரல்களுக்கு மோதிரங்களாக, அணிந்துகொள்வேன். சுவாசிக்க ஏற்பட்டிருக்கும் இத்தொண்டைக் குழாவை துர்க்கந்த புழுதியைக்கொண்டு அடைத்துவிட்டு, உன்னைப்போலவே, நானும் பயங்கரவிகார ரூபியாயிருப்பேன்; வா, என்னைப்பார்த்து பல்லிளி, நீ புன்சிரிப்பு கொள்வதாய் பாவிக்கின்றேன், நானுன் பெண்சாதியே என்பதாய் நடித்து உன்னை முத்தமிடுகிறேன். ஓ நிர்ப்பாக்கியரின் நேசமே, ஐயோ, நீ என்னிடம் எழுந்தருளிவா!

**விலிப் மன்.**—துயரத்தையே உருவமாய்க்கொண்ட சௌந்தரியவதியே பொறுமையாயிரும்!

**கான்ஸ்ட.**—முடியாது, முடியாது, கத்துகிறதற்கு மூச்சு இருக்கிறவரையில் நான் கத்தாது, பொறுமையாயிருக்கமாட்டேன். ஐயோ, இப்போது என் நாவானது இடிமுழக்கத்தின் வாயிலிருக்கவேணுமென்று விரும்புகின்றேன்! அப்படியிருக்குமானால் நான் எவ்வளவு கடூரத்துடன் இரைச்சல் செய்வேனென்றால் அவ்விரைச்சலால் உலகத்தையே நடுங்கச்செய்வேன்; அந்தப் பயங்கரத்துக்குரிய என்பு மனிதனையும், அவனுடைய நித்திய தூக்கத்திலிருந்து, எழுப்பிவிடுவேன்; ஒன்று, அம்மனிதனுக்குஸ்திரியாகிய என்னுடைய ஈனசுரக்குரல் கேட்கவில்லையோ, அல்லது என்னுடைய சாமானிய வேண்டுகோளை அலட்சியம் செய்து, அதற்கிணங்கவில்லையோ, தெரியவில்லை.

**பான்ட.**—குல மகளே, நீர் பிதற்றுவது, பைத்தியப் பேச்சேயல்லாது, விசனபுலம்பலல்ல.

**கான்ஸ்ட.**—என்னைப்பற்றினவரையில் இவ்விதம் நீர் அபத்தம் சொன்னபடியால் நீர் சங்கைக்குரியவரல்ல; நான் பைத்தியக்காரியல்ல; இதோ பிய்க்கின்ற இந்த மயிர் என்னுடையதுதான்; என் பெயர் கான்ஸ்டன்ஸ்; நான் ஜெவ்ரோயுக்கு பெண்சாதியாக வாக்கப்பட்டேன்; இளை ஞன் ஆர்தர் என் மகன், அவனை நான் இழந்துபோனேன்: நான் பைத்தியக்காரியல்ல, நான் பைத்தியக்காரியாய் ஆகி றதாயிருந்தால் நான் கடவுளுக்கு துதி செலுத்துவேன்! ஏனென்றால் அப்போது, அநேகமாய், என்னையே நான் மறந்துபோவேன்: ஐயோ, அப்படியே என்னை நான் மற ந்துபோகக்கூடுமானால் எவ்வளவோ துயரங்களை மறந்து துலைப்பேனே! கார்டினலே, எனக்குப் பைத்தியம்பிடிக்கும் படிசெய்வதற்கு ஏதாகிலும் ஞானோபதேசம் செய்யும், அப் படிச்செய்வீரானால் நீர் மகாத்மாவாக்கப்படுவீர்: பைத் தியமில்லாமல் எனக்குள்ள துக்கத்தை நான் சரிவர உண ருகிறபடியால்தான், எனக்குள்ளிருக்கும் புத்தி என்னும் அம்ஸம், இத்துன்பங்களிலிருந்து எப்படி விடுவித்துக் கொள்ளலாமென்கிற அறிவை, எனக்குள் உண்டுபண்ணு கின்றது; அதாவது, கொலைசெய்துகொள்ளும்படிக்காவது, அல்லது தூக்கிட்டுக்கொள்ளும்படிக்காவது கற்பிக்கின் றது: நான் உண்மையாக பைத்தியக்காரியாயிருந்தால் என் குழந்தையை நான் மறந்துபோவேன், அல்லது அவன் ஒரு சிலை பொம்மையென்று பைத்தியக்காரத்தன மாய் நினைப்பேன்: ஆகையால் நான் பைத்தியக்காரியல்ல; அந்தந்த பொல்லாப்பின் அந்தந்த உபத்திரவத்தை வெகு நன்றாய், வெகு நன்றாய், உணர்கின்றேன்.

**விலிப் மன்.**—உம்முடைய அம்மயிர்த் தோகையைக் கட்டும். ஓ, அவ்வோராளமான மயிர்த்திரளில் எப்படிப்

பட்ட அழகுவாய்ந்திருக்கின்றது! ஆனால் அத்திரளில் அகஸ்மாத்தாய் எங்கேயோ ஒரு நரை வெள்ளிக்கம்பி போல் விழுந்திருக்கின்றது. அந்நரையைக்கூட மெல்லிய கம்பிபோன்ற பதினைபிரக்கணக்கான கறுப்பு மயிர்க்கூட்டம், உண்மையுள்ளவர்களும், பிரிக்கக்கூடாதவர்களும், விசுவாசமுள்ளவர்களுமான அன்னியோன்னிய சிநேகிதர்கள் ஆபத்து வேளையில் ஒருவரோடொருவர் ஒன்றித்திருப்பதுபோல, ஒன்றோடொன்று அந்நரைமயிரைச் சுற்றிலும் ஒட்டிக்கொண்டு, அதை மறைத்துக்கொண்டிருக்கின்றன.

**கான்ஸ்ட.**—உங்களுக்கு மனமிருந்தால் இங்கலன்டுக்கு(53)போங்கள்.

**விலிப் மன்.**—உம்முடைய மயிரை கட்டும்.

**கான்ஸ்ட.**—சரி, அப்படியே கட்டுவேன்; எதற்காக அப்படிச் செய்வேன் தெரியுமா? அவைகளை அவைகளுடைய கட்டுகளிலிருந்து அவிழ்த்துக்கொண்டே பின் வருமாறு உரத்த சப்தமாய் கூவினேன்; அதாவது, "ஐயோ, இம்மயிர்களுக்கு விடுதலை கொடுக்க இக்கைகளுக்கு சக்தியிருப்பதுபோலவே என் பிள்ளைக்கும் விடுதலை கிடைக்கும்படி செய்ய இக்கைகளுக்கு சக்தியிருக்கவேணும்!" என்று தான். ஆனால் இப்போது இம்மயிர்களின் விடுதலையைப்பார்க்க எனக்கு பொறாமை உண்டாகின்றது, ஆகையால் அவைகளைத் திரும்பவும் அவைகளுடைய கட்டுகளுக்குள் பந்தனப்படுத்துவேன், ஏனென்றால் என்னுடைய பரிதாபத்துக்குரிய குழந்தை சிறையாயிருக்கின்றான். கார்டினல் என்னும் தகப்பனே, நாம் மோட்சத்தில் நம்முடைய சிநேகிதர்களைக் காண்போம், அவர்களை அறிந்து

---

(53) See Appendix.

கொள்வோமென்று, தாங்கள் சொல்ல, நான் கேட்டிருக்கின்றேனே, அது உண்மையானால் என் குழந்தையை நான் மறுபடியும் காண்பேன்; சுலபமாகவும் தெரிந்துகொள்வேன், ஏனென்றால் ஆதி ஆண் குழந்தையாகிய காயின் முதற்கொண்டு, நேற்றையதினந்தான் பிறந்து சுவாசிக்க ஆரம்பித்த குழந்தை வரையிலுள்ள, குழந்தைகளிலெல்லாம் ஒரு குழந்தையாவது இவ்வளவு சிறப்புவாய்ந்த குழந்தையாய் பிறக்கவேயில்லை. ஆனால் துளைத்துக்கொண்டு போகும் புண்ணைப்போலொத்த துயரம் என்பது இப்போது என் புஷ்ப மொக்கை தின்று விடுமே, அவனுக்கு பிறப்பிலமைந்த வர்ண அழகை அவன் கன்னங்களிலிருந்து அது ஓட்டி விடுமே, ஆத்துமத்தைப்போல் வெறும் அஸ்தியாயிருப்பானே, அல்லது குளிர் காய்ச்சலில் வருந்துவோனைப்போல் ரூப அழகற்று, இளைத்து மெலிந்து, எலும்புந் தோலுமாயிருப்பானே, அப்படிப்பட்ட நிலைமையில் இறந்து போவானே, அதே நிலைமையில் அவன் எழுப்பப்பட்டு, நான், அவனை தேவ சந்நிதியில், சந்தித்தால் என்னால் அவனை கண்டுபிடிக்க முடியாதே: ஆகையால் என்னுடைய அழகிய ஆர்தரை இனி எப்போதுங் காணமாட்டேன் தான், இனி எப்போதுங் காணமாட்டேன்தான்.

**பான்ட.**—நீ துயரத்திற்கு அளவுக்கு மிஞ்சின, அருவருக்கத்தக்க, மதிப்பு கொடுக்கின்றாய்.

**கான்ஸ்ட.**—என்றும் புத்திரனற்ற போதகர், இன்று எனக்கு, போதிக்கின்றார்.

**விலிப் மன்.**—நீ உன் குழந்தைமீது எவ்வளவு பிரியம் வைத்திருக்கின்றாயோ, அதேபிரியந்தான் உன் துயரத்திற்கும் காண்பிக்கின்றாய்.

**கான்ஸ்ட.**—துயரமாகப்பட்டது, உள்ளில்லாமல் வெளிப்பட்டுப்போயிருக்கும் என் குழந்தையின் அறையை,

நிரப்பிக்கொண்டிருக்கின்றது, அவனுடைய படுக்கையிலும் படுத்துக்கொண்டிருக்கின்றது, என்னோடு கூடவே மேலுங்கீழும் நடந்துகொண்டிருக்கின்றது, அவனுடைய அழகிய தோற்றங்களை காண்பித்துக்கொண்டிருக்கின்றது, அவனுடைய சொற்களை உச்சரித்துக்கொண்டிருக்கின்றது, அவனுக்குள்ள சிறப்புகளையெல்லாம் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கின்றது, அவனுடைய வெறுமையான உடுப்புகளை, அவனுடைய உருவம் நிரப்புவதுபோல, நிரப்பிக் காட்டிக்கொண்டிருக்கின்றது; இப்படியானல், நான் அத் துயரத்தின்பேரில் பிரியம் வைத்திருப்பது கிரமந்தானே. நீங்கள்தானே சுகமாயிருங்கள்: எனக்கு நேர்ந்த நஷ்டத்தைப்போலொத்த நஷ்டம் உங்களுக்கு நேர்ந்திருக்குமானல், நீங்கள் எனக்கு கொடுக்கும் ஆறுதலைவிட மேலான ஆறுதல், உங்களுக்கு நான் கொடுப்பேன். என் தலைக்கு உள்ளே எனக்கு அறிவு இப்படி தடுமாறியிருக்கும்போது, என் தலைக்குமேலே மாத்திரம், இப்படிப்பட்ட நேர்மை (54) நான் வைத்திருக்கவேண்டியதேயில்லை.

(கூந்தலைப் பிரித்துத் தொங்கவிடுகின்ருள்.)

ஓ கடவுளே! என் குழந்தாய், என்னுடைய ஆர்தரோ, என்னழகிய மகனே, என்னுருயிரோ, என் பாக்கியமே, என் ஆகாரமே, என் பூலோகமே, நான் விதவையின் ஆறுதலே, என் துன்பத்தில் இன்பமே!

(வெளியே செல்கிருள்.)

**விலிப் மன்.**—ஏதாகிலும் அடாதகாரியம் செய்து கொள்வாளென்று பயப்படுகிறேன். அவள் பின்னல் நான் போகின்றேன்.

(விலிப்டும் செல்க.)

**லூயிஸ்.**—இவ்வுலகின்கண் எனக்குச் சந்தோஷம் கொடுக்கக்கூடிய விஷயம் யாதொன்றும் கிடையாது.

(54) See Appendix.

சொன்ன கதையையே, திரும்பவும், இரண்டாந்தடவை தூக்கக் கலக்கமாயிருக்கிறவனுடைய மந்த செவியில் உபத்திரவப்படுத்திச்சொன்னால், கேட்டுக்கொள்கின்ற அவனுக்கு, எவ்வளவு கஷ்டமாயிருக்குமோ அதே கஷ்டத்தைத்தான் ஜீவியம் என்பது இப்போது எனக்குக் கொடுக்கின்றது; கசப்பான வெட்கமாகப்பட்டது, இவ்வுலகிலுள்ள இன்பசுகங்களையெல்லாம் கெடுத்துவிட்டபடியால், எனக்கிப்போது உலகத்தில் கிடைக்கக்கூடியது வெட்கமும் கசப்புந்தவிர வேறொன்றுமில்லை.

**பான்ட்.**—ஒரு கடின வியாதியிலிருந்து குணப்படுவதற்குமுன்னே, அதாவது, சொஸ்தமும், சுகமும் ஆரம்பித்திருக்கும் அத்தருணத்தில்தான், வியாதி கடுமையாயிருக்கும்; துலைந்துபோகும் துன்பங்கள், துலையுந் தருணத்தில் தான், படாத மகா கஷ்டத்தைக் கொடுக்கும். இன்றைய அப ஜெயத்தால் நீ என்ன நஷ்டமடைந்துவிட்டாய்?

**லூயி.**—இதுவரையில் அடைந்திருந்த மகிமைப்பிரதாபம், மனதில் அநுபவித்துக்கொண்டிருந்த ஆனந்தம், மகிழ்ச்சி, ஆகிய இவைகளை இழந்த நஷ்டந்தான்.

**பான்ட்.**—இன்றைய ஜெயத்தை நீ அடைந்திருந்தால்தான், அவைகளெல்லாம் உன்னிடம் கட்டாயம் நிலைத்திருந்திருக்கும், இல்லாவிட்டால், இல்லையென்று எண்ணுகின்றாய். அப்படிக்கல்ல, பரிச்சேதம் அல்ல; அதற்கு விரோதமாய், அதிர்ஷட தேவதை யாதாமொரு மனிதனுக்கு மகா பெரிய நன்மை செய்ய எண்ணங்கொண்டிருந்தால்தான், அந் நன்மை செய்வதற்கு சற்றுமுன்னே, அவனை சொற்ப கஷ்டங்களுக் குட்படுத்தும். ஜான், சந்தேகமற ஜெயித்துவிட்டதாய், நினைத்திருக்கும் இந்த யுத்தத்தில், அவன் எவ்வளவு சேதமடைந்திருக்கின்றானென்பதை நாம் யோசிக்குமளவில், நமக்கு வியப்பை விளைவிக்

கின்றது. ஆர்தரை அவன் சிறையாக்கிவிட்டானேயென்று, உனக்கு வெகு வருத்தமல்லவா?

**லூயி.**—ஜானுக்கு, ஆர்தர் தன் வசமாய்விட்டானென்று, எப்படி மனப்பூர்த்தியாக சந்தோஷமாயிருக்கின்றதோ, அதே மனப்பூர்த்தியாக எனக்கு வருத்தந்தான்.

**பாண்ட்.**—உன் திரேகம் எவ்வளவு இளமையாயிருக்கின்றதோ, அதே பிரகாரம் உன் மனமும் இளமையாகவே, எவ்வித அனுபவமுமில்லாததாயிருக்கின்றது. ஓர் தீர்க்கதரிசியின் நிச்சயத்துடன், நாம் இப்போது சொல்லப்போகிறதைக் கேள்; நாம் இப்போது பேசப்போகிறேமே, அப்போது வீசும் நம்முடைய சுவாசமுதலாய், உன்னை இங்க்லிஷ் சிங்காசனத்திற்கு நேராய்க் கொண்டுபோகக்கூடிய பாதையிலிருக்கும் யாதாமொரு தூளோ, துரும்போ, சிறு தடையோ இவைகளையும், ஊதித் தள்ளிவிடும்; ஆகையால் கவனமாய்க்கேள். ஜான் ஆர்தரைப் பிடித்துக்கொண்டான்; அக்குழந்தையின் தாரைகளில் உயிராகிய உதிரம் உஷ்ணத்துடன் ஓடிக்கொண்டிருக்கும்வரையில் துராகிருதமாய் சிங்காசனமேறிய ஜான், ஒருமணி நேரமாவது, ஒரு நிமிஷமாவது, அல்லது சாதாரணமாய் சுவாசிக்கும் ஒரு சுவாசப்பொழுதாவது, கவலையற்றிருக்கமாட்டான். முரட்டுக்கையால் கைப்பற்றப்பட்ட செங்கோலானது, எவ்வித பலவந்தத்தால் வசப்படுத்தப்பட்டதோ, அப்படிப்பட்ட பலவந்தத்தால்தான் நிலைநிறுத்தப்படவேண்டும்; வழுக்குந்தரையில் நிற்கின்றவன், தன்னை நிலைநிறுத்திக்கொள்ளும்பொருட்டு, தனக்கெதிர்ப்படும் எவ்வித கேவல பிடிப்பையும் பிடித்துக்கொள்வதற்கு கிஞ்சிற்றும் ஆலோசியான்: ஆகவே, ஜான் நிலைத்திருக்கவேண்டியதற்காக, ஆர்தர் அவசியம் ஒழியவேண்டியதுதான்; அப்படியே நடக்கட்டும், ஏனென்றால், அப்படிக்கில்லாமல் வேறுவிதமாயிருக்க, எவ்வித வழியுமில்லை.

**லூயி.**—அப்படி ஆர்தர் ஒழிவதால் எனக்கென்ன பிரயோஜனம் கிடைக்கும்?

**பான்ட்.**—உன் பெண்ஜாதியாகிய லேடி ப்ளாஞ்ச்சுக்குள்ள பாத்தியதையைக்கொண்டு, ஆர்தர் இங்கலன்ட் ராஜரீகத்திற்கு எவ்வித சுதந்தரம் கொண்டாடினனே, அதே சுதந்தரம் நீயும், அப்போது, கொண்டாடலாம்.

**லூயி.**—சரி, ஆர்தர் அவ்விராஜரீகத்தையும், அவனுடைய பிராணனேயும், ஆகிய சகலத்தையும் இழந்தது போலவே, நானும் சகலத்தையும் இழக்கவேண்டியதுதான்.

**பான்ட்.**—நீ எவ்வளவு அனுபவம் போதாதவனயிருக்கின்ருய், இப்பழைய உலகத்தில் எவ்வளவு புதிய மனிதனயிருக்கின்ருய்! ஜான், தான் செய்யுங் காரியத்தின் பலனின்னதென்று அறியாமையால், தன் அனுகூலத்திற்கென்று, தந்திரோபாயங்களெல்லாம் செய்துகொண்டு வருகிருன். ஆனல், அவ்வுபாயங்கள், கடைமுடிவில்(55) உனக்குத்தான் அனுகூலத்தைக் கொடுக்குமேயொழிய, அவனுக்குத் தீமையைத்தான் விளைவிக்கும். கால சந்தர்ப்பங்களும் உனக்கு அனுகூலமாகவே நடந்தேறிவருகின்றன; அன்றியும், எவனெருவன் உத்தமர் உதிரத்தை ஓடவிட்டு, அதன்மேல் தன்னுடைய க்ஷேமத்தை ஸ்தாபிக்கப் பார்க்கின்ருனே, அவன், தானே உதிரம் சிந்தவேண்டிய போலிக்ஷேமத்தைத்தான், அடைவான் என்பது திண்ணம். அவனுடைய இப்படிப்பட்ட கொடிய செய்கை, அவனுடைய பிரஜைகளுக்குள்ள ராஜபக்தியை முற்றிலும் போக்கி, அவர்களுக்கு அவன்பேரில் எவ்வளவு வெறுப்பு உண்டாக்கிவிடுமென்ருல், அவனுடைய ஆட்சியை தடுப்பதற்கு ஆதாரமாயிருக்கக்கூடிய சொற்ப சந்தர்ப்பமுதலாய் எதிர்ப்பட்டாலுங்

(55) See Appendix.

கூட, அதையும் தக்க காரணமாக தாபரித்து, வெகு கவலே யடைந்த ஸ்திதியிலிருப்பார்கள்; ஆகாயத்தில் சாதாரண மாய் பரவியிற்கும் நீராவியானுலுஞ்சரி, இயற்கையின் அமைப்பாயிருந்தாலுஞ்சரி, இடி மின்னல் தினமாயிருந் தாலுஞ்சரி, சாதாரண காற்ருயிருந்தாலுஞ்சரி, வழக்கப் படி நேரிடும் சம்பவமாயிருந்தாலுஞ்சரி, அவைகளுக்குள்ள வாஸ்தவ காரணங்களே, வேணுமென்று, விலக்கிவிட்டு அவைகளே விண்வீழ் கொள்ளிகளென்றும், ஆச்சரிய உற்பாதங்களென்றும், அசந்தர்ப்ப அறிகுறிகளென்றும், அகால சம்பவங்களென்றும், கேட்டுக்குமுன் தோன்றும் காட்சிகளென்றும், இவைகளெல்லாம், ஜான்மீது கடவு ளுக்கு ஏற்பட்டிருக்கும்பழிவாங்கும் தீர்மானத்தை, வியக்த மாய் வெளிப்படுத்துகின்ற கடவுளுடைய பாஷைகளே என வும் கூறுவார்கள்.

**லூயி.**—இப்படியுமிருக்கலாம், அவன் ஆர்தருடைய பிராணனுக்கு எவ்வித அபாயமும் தேடாமலே, அவனே கடுஞ்சிறையில் மாத்திரம் வைத்திருக்கலாம்.

**பான்ட்.**—ஓ ஐயா, நீ படையெடுத்துப்போவதை ஜான் கேள்விப்படுவானுனல், இத்வாயில் சிறுவன் ஆர் தர் ஒழிந்துபோயில்லாவிட்டாலுங்கூட, இச்செய்தி ஜானுக் கெட்டின அங்கிமிஷமே ஆர்தர் சாவது நிச்சயம்; அதன் பிறகு, அவனுடைய பிரஜைகளுக்கு அவனுக்கு விரோத மாய் மனக்குரோதம் ஏற்பட்டு, எதாகிலும் புதிய மாறு பாடு எதிர்ப்பட்டால் அதை வெகு ஆவலுடன் அங்கீகரிப் பார்கள். இரத்தக்கறை படிந்திருக்கும் ஜான் கையின் வேலையாகிய இக்கொலே பாதகத்தை, அபார காரணமாகக் கொண்டு பழிவாங்கத்தான் வேண்டுமென்று, கலகத்துக்கு ஆரம்பிப்பார்கள்: இக்குழப்பம் இயற்கனவே ஆரம்பித்து விட்டதுபோல், நமக்குத் தோன்றுகின்றது: ஆஹா! நாமு

னக்கு இப்போது சொல்லிவந்தவைகளைவிட, எப்படிப் பட்ட மேலான சந்தர்ப்பம் இன்னென்று, உன் அனுகூலத் திற்கென்று முற்றிக்கொண்டிருக்கின்றது தெரியுமா? அந்த சோரகுமாரன், வால்கன் ப்ரிட்ஜ் என்பவன், இப் போது இங்க்லன்டில் கோவில்களை கொள்ளையடித்துக் கொண்டும், தர்மங்களை அழித்துக்கொண்டுமிருக்கின்றான்: இந்த சமயம் ஒரு டஜன் ஃப்ரஞ்சுக்காரர் மாத்திரம் ஆயுத தாரிகளாக அவ்விடத்திற்கு போவார்களானல், அவர்களை இங்க்லிஷ்காரர், அவர்களோடு வந்து சேரும்படி தங்களை அழைக்கவந்த போர்வீரர்களாக பாவித்து, அவர்கள் பின் னல், பதினயிரக் கணக்காய், திரண்டு வந்துவிடுவார்கள்; அது எதைப்போலவென்றால், ஒரு சிறு பனிக்கட்டி மற்ற பனிக்கட்டிகளின் மீது விழுந்து உருண்டோடுமானல், க்ஷணப் பொழுதில் அது ஒரு பெரிய பர்வதமாய்விடுவது போலதான். பெருந்தகைமை பொருந்திய டாவீன் ராஜ குமாரா, நம்மோடுகூட ராஜாவிடம் வா; அவர்கள் இப்ப டிப்பட்ட மனக்கலக்கம் அடைந்திருக்கும் சமயத்தில், எப் படிப்பட்ட காரியங்களையெல்லாம் நாம் முடித்துக்கொள்ள லாமென்று நினைக்கும்போது, நமக்கு மிக்க ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது; இப்போதோ, அவர்களுடைய மனங்கள், கடுங்குரோத மிகுதியால், குமுறிக்கொண்டுதானிருக்கின் றன. ஆகையால், தாமதமின்றி, உடனே இங்க்லன்டுக்குப் புறப்படு. நாம், ராஜாவையும் சம்மதிக்கும்படி, செய்விக் கின்றோம்.

**லூயி.**—பலத்த முகாந்தரங்கள், (56) விபரீத காரியங்க ளுக்குப் பாத்தியப்படும்படிதான், செய்கின்றன: வாருங்கள் போகலாம்: தாங்கள் ஒன்று ஆகவேண்டுமென்று சொன் னல், ராஜா கூடாதென்று சொல்லமாட்டார்தான்.

---

(56) See Appendix.

## நான்காம் பிரிவு.

**முதல் காட்சி.—கோட்டைக்குள்ளுள்ள ஓர் அறை.**

யூபர்ட்டும் கொலேஞரும் வருக.

**யூபர்ட்.**—இவ்விரும்புக் கோல்களை பழுக்கக் காய்ச்சுங்கள்; காய்ச்சிக்கொண்டு வந்து, திரைமறைவில் கவனத்தோடு, நின்றுகொண்டிருங்கள்: நான் தரையை காலால் உதைத்தேனுனல் உடனே ஓடிவாருங்கள், அச்சமயம் எனக்கு சமீபத்தில் உட்கார்ந்திருக்கும் பையனே, நாற்காலியோடு சேர்த்து கெட்டியாய், கட்டிவிடுங்கள்: உற்றுக் கேட்டுக்கொண்டிருங்கள்: இவ்விடத்தைவிட்டு போய் விடுங்கள், கவனமாயிருங்கள்.

மு. **கொலே.**—உமக்கிருக்கும் கட்டளே, தாம் எங்களுக்கு உத்தரவு செய்யும் கிரியைக்கு, அதிகாரங் கொடுக்கின்றதோ, என்னவோவென்று சந்தேகிக்கின்றேன்.

**யூபர்ட்.**—அந்த சந்த(57) மற்ற சந்தேக அவதாரங்களே! நீங்கள் அதைப்பற்றி அச்சுற வேண்டியதில்லே: நானிட்ட கட்டளேயை நிறைவேற்றுங்கள்.

(கொலேஞர் செல்க.)

சின்ன வாலிபா, வெளியே வா; நானுன்னேடு சில விஷயம் பேசவேண்டும்.

(ஆர்தர் வருக.)

**ஆர்தர்.**—நல்ல வந்தனம், யூபர்ட்டே.

**யூபர்ட்.**—நல்ல வந்தனம், சிறிய ராஜகுமாரா.

**ஆர்தர்.**—பெரிய ராஜகுமாரனுய் விளங்க எவ்வளவோ பெரிய சுதந்தரமிருந்தும், எவ்வளவு சிறிய ராஜகுமாரனுயிருக்கக்கூடுமோ, அவ்வளவு சிறிய ராஜகுமாரனுய்தா

---

(57) See Appendix.

னிருக்கின்றேன். அது போகட்டும், நீ துக்கமாயிருக்கின்றாயே.

**யூபர்ட்.**—வாஸ்தவமே, இதைவிட சந்தோஷகரமாய்த்தான், இதுவரையில் இருந்து வந்தேன்.

**ஆர்தர்.**—கடவுள் என் பேரில் இரக்கம் வைப்பாராக! என்னைத்தவிர, வேறு யாரும் துக்கப்பட ஞாயமில்லையென்று, நான் நினைத்திருந்தேன். ஆனால், நான் வ்ரான்ஸில் இருந்தபோது, வாலிப குலமக்கள் துன்மார்க்க விஷயத்தால் மட்டும் இருளைப்போலொத்த துக்க கோலம் பூண்டிருப்பதை, நான் கண்டிருக்கின்ற ஞாபகம் வருகின்றது. நான் கிறீஸ்துவனாய் இருப்பதனால், நான் எதிர்பார்த்திருக்கும் மோட்ச(58)ராஜ்யத்தின் பேரில் ஆணையிட்டு சொல்லுகின்றேன், நானுந்தான், இச்சிறைச்சாலையை விட்டு வெளிப்பட்டு போய், ஆடு மேய்க்கிறவனாயிருந்தாலுங்கூட, நாள் முழுவதும் சந்தோஷமாகவே இருப்பேன்; இங்கேயுந்தான் அதே பிரகாரம் சந்தோஷமாயிருப்பேன், ஆனால் என் சிற்றப்பார், எனக்கு இன்னும் மேற்கொண்ட தீமை விளைவிக்க, முயன்றுகொண்டிருக்கின்றார் என்கிற பயத்தால் வருந்துகின்றேன்: என்மட்டில் அவருக்கு பயம், அப்படியே அவர்மட்டில் எனக்கும் பயந்தான்: நான் ஜெவ்ரேயுக்கு பிள்ளையாய் பிறந்தது என்னுடைய தப்பிதமா? இல்லையே, வாஸ்தவத்தில் அப்படிக்கில்லையே; கடவுள் என்னை உன் பிள்ளையாய் பிறப்பித்திருக்கக்கூடாதா, அப்படிக்கிருந்தால், நீ என்னை (59) நேசிப்பாயே யூபர்ட்டே.

**யூபர்ட்.**—(பக்கத்தில்) நான் இவனோடு பேசிக்கொண்டிருந்தால், அவனுடைய மாசற்ற மழலைச் சொற்

(58) & (59) See Appendix.

களால், என்னிடம் தற்சமயம் சுத்தமாயற்றுப்போயிருக்கின்ற, இரக்கத்தை தூண்டிவிடுவான்; ஆகையால் நான் அவசரப்படுத்தி, காரியத்தை கடும்விளைவில்,(60) முடிக்க வேண்டும்.

**ஆர்தர்.**—தேக அசௌக்கியமாயிருக்கின்ருயா, என்ன, யூபர்ட்டே! இன்றைக்கு நீ வெளுத்தாப்போல் காணப்படுகின்ருயே: வாஸ்தவமாகவே, நீ கொஞ்சம் அசௌக்கியமாயிருக்கவேணுமென்று நான் விரும்புகின்றேன், ஏனெனில், உன்னேடு இராமுழுவதும் உட்கார்ந்திருந்து, உனக்கு நான் உற்றேவல் செய்யவேண்டியதற்காகத்தான். நான் நிச்சயமாய் சொல்லுகின்றேன், நீ என்னே நேசிப்பதைப்பார்க்கிலும், அதிகமாகவே, நான் உன்னே நேசிக்கின்றேன்.

**யூபர்ட்.**—(பக்கத்தில்) அவனுடைய வார்த்தைகள் என் மனதைக் கவர்கின்றன.

(ஒரு கடிதத்தை காட்டிக்கொண்டு)

இதை வாசித்துப்பார் சிறிய ஆர்தரே.

(பக்கத்தில்) ஏனிப்படி மூடத்தன்மை கண்ணீர் துளிகளே! சற்று மிரக்கமற்று சாத்தியமாகும்படி செய்யவேண்டிய சித்திரவதை கிருத்தியத்தை, வெளியே துரத்தப்பார்க்கின்றீர்கள்! நான் சுருக்குப்படுத்தவேண்டும், இல்லாவிட்டால் நான் செய்திருக்கும் தீர்மானம், ஸ்திரிகளுக்குத்தான் உரித்தான உருக்கமுள்ள கண்ணீர் துளிகளாய், கரைந்து, என் கண்கள்வழியாய் ஒழுகிப்போய்விடும்.

இதை உன்னல் வாசிக்கமுடியவில்லையா? இதென்ன, நேர்த்தியாய் எழுதப்பட்டில்லையா?

**ஆர்தர்.**—அதிலடங்கியிருக்கும் அவ்வளவு கொடிய விஷயத்திற்கு, அளவுக்கு மேம்பட்ட நேர்த்தியாய்தான் எழு

(60) See Appendix.

தப்பட்டிருக்கின்றது, யூபர்ட்டே. என்னுடைய இரு கண்களையும், காய்ச்சின இரும்புக்கம்பிகளால், நீயே, தீய்க்கத்தானவேண்டும்?

**யூபர்ட்.**—சிறுபையா, நான் தீய்க்கத்தான்வேண்டும்.

**ஆர்தர்.**—ஆனல், நீ அப்படி செய்வாயோ ?

**யூபர்ட்.**—ஆயினும், நான் அப்படியே செய்வேன் தான்.

**ஆர்தர்.**—உன் மனம் ஒவ்வுமோ ? நீ சொற்ப தலைவலியால் மாத்திரம் வருந்தியபோது, நான் என்னுடைய கைக்குட்டையை உன் நெற்றியைச் சுற்றிலும் கட்டி வைத்தேனே. அக் கைக்குட்டைதான் எனக்கு இவ்வுலகிலுள்ள வஸ்துக்களிலெல்லாம் அதிக அருமையானது; ஏனெனில் அதை ஓர் ராஜகன்னிகை எனக்கு பின்னிக்கொடுத்தாள்; அதை நான், உன்னிடமிருந்து திரும்பவும், கேட்கவேயில்லை; அர்த்தராத்திரியில் முதலாய் உன் தலையை என் கைகளால் பிடித்துக்கொண்டிருந்தேனே; ஒரு மணி நேரத்திற்குள்ள் நிமிஷங்கள், அம்மணி நேரத்தை பூர்த்தி செய்ய வேண்டியதற்காக, எவ்வளவு கவனமாய் தவருது அடித்துக்கொண்டிருக்கின்றனவோ, அப்படிப்பட்ட கவனத்தோடேயே, 'உனக்கென்னவேண்டும்?', 'உனக்கெங்கே வலிக்கின்றது?', 'இன்னும் வேறு என்னென்ன உற்றேவல் என்னல் உனக்காகவேண்டும்?' என்று கேட்டுக்கொண்டு, உன்னுடைய வருத்த நேரத்தில், உன்னை நான் அப்போதைக்கப்போது சந்தோஷப்படுத்திக் கொண்டிருந்தேனே; எப்படிப்பட்ட எளிய மனிதன் பிள்ளை முதலாய், அந்நேரத்தில், சுவஸ்தியாய் படுத்துத் தூங்கிக்கொண்டிருப்பானே, ஒரு அன்பான வார்த்தை முதலாய், அந்நேரத்தில், அவன் உனக்குசொல்லமாட்டானே; ஆனல் உன்னு

டைய காயலா காலத்தில், ஓர் ராஜகுமாரனுகிய என்னே, உன்னுடைய வேலேக்காரனுய், நீ உடைத்தாயிருந்தாய். நானிதைப்பற்றி சொல்வது சரியல்ல, ஏனென்ருல், நான் உனக்கு அப்போது காண்பித்த அன்பை, தந்திரோபாய அன்பென்று, நீ இப்போது நினேக்கக்கூடும், அவ்வன்பை ஓர் தந்திரயுக்தியே, என்று நீ சொல்லவுங்கூடும்; உன் மனம் ஒவ்வுமாளுல், அப்படியே செய்: நீ எனக்கு தீங்கு செய்யவேணுமென்பதும் கடவுளுக்குச் சித்தமாளுல், ஆட்சேபனேயென்ன, நீ அப்படித்தான் செய்யவேண்டும். ஆயினும், என் கண்களே அவிக்க, உனக்கு மனம் வருமா? உன்னே இதுபரியந்தம் கோபமாய் முதலாய் பார்க்காதவைகளும், இனிமேலும் பார்க்கமாட்டாதவைகளுமாகிய கண்களாச்சுதே, என்னுடைய இக்கண்கள்.

**யூபர்ட்.**—நான் அப்படியே செய்வேனென்று சத்தியஞ் செய்துவிட்டேன்; காய்ச்சின இரும்பு கோல்களால் அவைகளே நான் தீய்க்க வேண்டியது தான்.

**ஆர்தர்.**—ஐயோ! இக்கலியுகத்திலுள்ளவர்கள் தவிர வேறு யாரும் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யமாட்டார்கள்! இரும்பே, சிவக்க காய்ச்சபட்டதாயிருந்தாலுங்கூட, தானே, தன்னிச்சையாய் என்னுடைய இக்கண்களுக்கருகில் நெருங்கிவருமாளுல், என்னுடைய மாசற்ற தன்மையைக் கண்டு, என்னுடைய கண்ணீரையே குடித்துவிட்டு, தன்னுடைய அக்கினிமய எரிச்சலேதணித்துக்கொள்ளுமே; இதுமாத்திரம் அல்ல, அதன்பிறகு, என்னுடைய கண்களுக்கு தீங்கு செய்வதற்கென்று தனக்குள் நெருப்பை அடக்கிக்கொண்டிருந்ததற்காகவே, மனஸ்தாபப்பட்டது போல், துரு பிடித்து அழிந்துபோமே. நீ மாத்திரம், சம்மட்டியாலடிக்கப்பட்டு, உருவமைக்கப்பட்ட இரும்பைவிட, கொஞ்சமும் இளகாத அதி கெட்டி நெஞ்சமுடையவனு?

ஒரு தேவ தூதனே, என்னிடம் வந்து, யூபர்ட் உன் கண்களை அவித்துவிடுவானென்று சொன்னாலுமே, நான், அத்தேவ தூதனை கூட, நம்பமாட்டேனே. யூபர்ட் வாக்கைத் தவிர வேறெந்தவாக்கையும்—

**யூபர்ட்.**—அடே வெளியே வாருங்கள்.

(இப்போது யூபர்ட் தரையை உதைக்கின்றான். தாம்புடனும் இரும்புகோல்களுடனும் கொலைஞர் வருக.)

அடே, நான் சொல்லுகிறபிரகாரம் நீங்கள் செய்யுங்கள்.

**ஆர்தர்.**—ஐயோ, எனனை காப்பாற்று, யூபர்ட்டே, என்னை காப்பாற்று! உதிரப் பிரீதியுள்ள இம்மனிதரின் பயங்கர பார்வையே, என் கண்களை பிதுங்கச் செய்து விடுகின்றதே.

**யூபர்ட்.**—அடே கவனியுங்கள், இரும்பை என்னிடம் கொடுத்து விட்டு, இவனை இதோடு சேர்த்து கட்டி விடுங்கள்.

**ஆர்தர்.**—நீர் இவ்வளவு கடூர மூர்க்கமாயிருப்பதற்கு அவசிய மென்ன ? நான் மல்லுகட்டமாட்டேன், கருங்கலைப்போல் அசைவற்று நிற்கின்றேன்; யூபரட்டே, சுவாமி முகத்தைப்பார்த்து என்னை கட்டுவதற்கு மாத்திரம் உத்தரவு செய்யாதேயும்! ஐயோ என் மன்றாட்டைக் கேளும் யூபர்ட்டே : இம்மனிதர்களையும் துரத்திவிடும், நான், ஒரு ஆட்டுக்குட்டியைப்போல், அமரிக்கையாய் உட்கார்ந்து விடுகின்றேன்; நான் நகரவுமில்லை, துடிக்கவுமில்லை, ஒரு வார்த்தை முதலாய் பேசவுமில்லை, இரும்பைக்கூட கோபத்துடன் பார்க்கவுமில்லை : இம்மனிதர்களை மாத்திரம் ஓட்டிவிடும், நீர் என்னை எப்படிப்பட்ட வேதனைக்குட்படுத்தினாலும், அதையுங்கூட நான் பொறுத்துக்கொள்ளுகிறேன்.

**ஹூபர்ட்.**—அடே, நீங்கள் போய் உள்ளேதானே இருங்கள், நானே, தனிமையில் இவன் காரியத்தை, முடிக்கின்றேன்.

**மு. கோலே.**—இப்படிப்பட்ட காரியத்தில் நான் கிஞ்சிற்றும் சம்மந்தப்படாமலிருக்க, எனக்கு மெத்த சந்தோஷம்.

(கொலேஞர் செல்க.)

**ஆர்தர்.**—ஐயையோ, அப்படியானால் என்மீது அன்புள்ள சிநேகிதனையல்லவா நான் கடுந்து துரத்திவிட்டேன்! அவன் கடுமையுள்ள பார்வையுடையவனாக இருந்தாலும், இரக்கமுள்ள இருதயமுடையவனாயிருக்கின்றானே: அவன் திரும்பவும் இங்கே வரட்டும், அவனுக்குள்ள இரக்கம், உமக்குள் இப்போது அவிந்து போயிருக்கப்பட்ட இரக்கத்தை, தூண்டிவிடும்.

**ஹூபர்ட்.**—வா, பையா, தயாராகு.

**ஆர்தர்.**—வேறு எவ்வித பரிகாரமுமில்லையா ?

**ஹூபர்ட்.**—உன் கண்களை இழக்கவேண்டியது தவிர, வேறு எவ்வித பரிகாரமும் கிடையாது.

**ஆர்தர்.**—ஓ கடவுளே, என்ன செய்வேன். உம்முடைய கண்ணில் தற்சமயம் ஒரு துரும்போ, ஒரு நுண் மணலோ, ஒரு தூளோ, ஒரு கொசுவோ, அல்லது காற்றில் பறக்கின்ற சிறு மயிர் துண்டோ, இருக்கவேணுமென்று கோருகின்றேன், அவைகள் முதலாய், அவ்வுன்னத புலனாகிய கண்ணுக்கு, எவ்வளவோ உபத்திரவம் கொடுக்குமே! அவ்வளவு சின்ன வஸ்துக்கள், அந்த இடத்தில், எவ்வளவோ பிரமாதப் படுத்தக் கூடியவைகளென்று, நீர் உணர்வீரானால், அதன்பிறகு, உம்முடைய

இந்த கொடிய எண்ணம், மகா குரூரமானதாக உமக்கே, அவசியம் தோன்றும்.

**யூபர்ட்.**—இதுதானு உன்னுடைய வாக்குத்தத்தம்? உளருதே, உன் நாக்கை அடக்கு.

**ஆர்தர்.**—யூபர்ட்டே, ஒரு ஜதை கண்களுக்காக, ஒரு கட்டு நாக்குகள், பரிந்து பேசி வழக்காடினலும், கண்கள் இரண்டுக்காக, எவ்வளவு மன்ருட்டு மன்ருடவேணுமோ அவ்வளவு மன்ருட்டும், அக்கட்டு நாக்குகளால் முதலாய் மன்ருட முடியாதே: ஆகையால் என் நாக்கை அடக்கும் படி சொல்லாதேயும், அப்படி சொல்லாதேயும், யூபர்ட்டே; அதற்கு பதிலாய், யூபர்ட்டே, உமக்கிஷ்டமானல் என் நாக்கை வெட்டிவிடும், அப்படியாவது என் கண்கள் மாத்திரம் எனக்கிருக்கட்டும்: ஐயோ, என் கண்களை காப்பாற்றும். அவைகள், வேறு எவ்வித உபயோகத்துக்கில்லாவிட்டாலும், உம்மையே எப்போதும் இடைவிடாமல் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதற்காக மட்டும், இருக்கட்டும்! மெய்யாகவே இதோ, இந்த கருவிகூட குளிர்ந்து விட்டது, அது எனக்கு தீங்கு செய்யாது.

**யூபர்ட்.**—நான் திரும்பவும் அதை காய்ச்சிக் கொள்வேன், குழந்தாய்.

**ஆர்தர்.**—அதி உண்மையாகவே அது சாத்தியமில்லை. ஏனென்றால் நெருப்பே, தான் மனிதருடைய சௌகரியத்துக்காக சிருஷ்டிக்கப்பட்டிருக்கையில்,(61)நாவால் துதிக்க முதலாய் மனம் ஒவ்வாத, மகா கொடும் பாதகங்களுக்கு உபயோகமாக வேண்டியிருந்தமையால் தாங்காதுக்கமடைந்து, இறந்த ஜெந்துவைப்போல் குளிர்ந்துவிட்டது: என்னை நம்பாவிட்டாலும் நீரோ பாரும்; இக்கொள்ளியில் முதலாய்

(61) See Appendix.

தற்சமயம் எரியும் (62) வன்மமில்லை; கடவுளுடைய சுவாசமே அதனுடைய அக்கினிவேகத்தை ஊதிபோக்கடித்து, அதன் தலைமீது, அதனுடைய மனஸ்தாபத்தைக் காட்டுவதுபோல், சாம்பலும் தெளிக்கப்பட்டிருக்கின்றதே.

**யூபர்ட்.**—அப்படியானால், அதை என்னுடைய சுவாசத்தைக்கொண்டு ஊதி, மறுபடியும் எரியும்படி செய்து கொள்வேன், பிள்ளாய்.

**ஆர்தர்.**—நீர் அப்படிச் செய்வீரானால், அதை நாணங்கொண்டு தான் சிவக்கும்படி செய்வீர், நீர் நடத்தும் நடவடிக்கையைப் பார்க்க, அதற்கு உண்டாகும் வெட்க அக்கினியால்தான், அதை நீர் எரியும்படி செய்வீர், யூபர்ட்டே: அன்றியும், சண்டை செய்யும்படி கட்டாயப் படுத்தப்பட்ட நாயானது, பிறகு, தன்னை தாமதிக்கவும்(63) செய்கின்ற தன் எஜமானையே கவ்விக்கடிப்பதுபோல, சில வேளை அக்கொள்ளியிலிருந்து தீப்பொறிகள் உம்முடைய கண்களிலேயே பறந்துவந்து விழுந்தாலும் விழும். * நீர் எனக்கு தீங்கு செய்வதற்கென்று உபயோகிக்க எத்தனிக்கும் சகல வஸ்துக்களும், தங்கள் தங்கள் தொழிலை, செய்ய மாட்டேனென்கின்றனவே: இரக்கமே சற்றுமற்ற சித்திரவதை கிருத்தியங்களுக்கு உபயோகமாக முதன்மையாயிருக்கும் வஸ்துக்களாகிய கொடிய நெருப்பும், கடின இரும்பும், இப்போது எனக்கு காண்பிக்கும் இரக்கமென்

(62) & (63) See Appendix.

* துரியோதனன் வேண்டுகோளுக்கிணங்கி, காளமாமுனி இயற்றிய வேள்வியில் தோன்றின அரக்கன், முனிவர் ஏவிய பிரகாரம், பாண்டவரை கொல்ல தேடிச்சென்று, அவர்கள் ஐவரும் நச்சுப் பொய்கைக் கரையில் உயிர்த்துறந்து கிடப்பதைக்கண்டு, தன்னை முனிவன் இறந்தவரை கொல்லவா ஏவினனென்று சினந்து சென்று, அம்முனிவனையே கொன்றுவிட்டனனாம்.

னும் அந்நற்குணம், உம்மிடத்தில் மாத்திரம், அற்றுப் போயிருக்கின்றதே.

**யூபர்ட்.**—நல்லதப்பா, நீ தீர்க்காயுசாய் வாழ்ந்திருக்கிறதை(64)பாரப்பா. உன் சிற்றப்பன் எனக்கு வெகுமானஞ் செய்வதாய் எனக்கு வாக்குக் கொடுத்திருக்கப்பட்ட திரவியம் பூராவும், எனக்கு கிடைக்கிறதாயிருந்தாலுங்கூட, நானுன் கண்களை தொடகூடமாட்டேன். அப்படிக்கிருக்க, எவ்விதமாகவோ இதே இரும்பு கோலால் உன் கண்களை தீய்ப்பேனென்று சத்தியமும் செய்தேன், எண்ணமுங் கொண்டேன், குழந்தாய்!

**ஆர்தர்.**—அப்பா, இப்போதுதான் சரியான யூபர்ட்டு போல் தோன்றுகின்றாய்! இதுபரியந்தம் வேஷம் போட்டுக்கொண்டிருந்தாய்.

**யூபர்ட்.**—சத்தஞ் செய்யாதே; இனி ஒரு வார்த்தை கூட பேசாதே. நான் போய்வருகிறேன். உன் சிற்றப்பாருக்கு நீ இறந்துவிட்டாயென்று தெரிவிக்க வேண்டுமேயல்லாது, வேறெதுவும் அவருக்கு தெரியக்கூடாது; நாய்குட்டிகளைப்போல் காலைச் சுற்றிக்கொண்டிருக்கும் அவ்வேவுகாரர்களுக்கு கட்டுக்கதையெல்லாம் சொல்லி, அனுப்பிவிடுகிறேன்: அழகிய குழந்தாய், உலகத்திலுள்ள செல்வமெல்லாம் யூபாட்டுக்கு கிடைக்கிறதாயிருந்தாலுங்கூட, அவன் உனக்கு எவ்வித தீங்கும் செய்யமாட்டானென்று நம்பி, கிஞ்சிற்றும் அச்சமற்று, நித்திரை செய்.

**ஆர்தர்.**—ஓ கடவுளே, உமக்கு ஸ்தோத்திரம், யூபர்ட்டே, உமக்கு முழு மனதோடு வந்தனம் செலுத்துகின்றேன்.

---

(64) See Appendix.

**யூபர்ட் :**—சந்தடி செய்யாதே; இனி ஒரு வார்த்தை கூட பேசாதே; என்னேடு ஒட்டிக்கொண்டே வந்துவிடு: உன் நிமித்தம் நான் வெகு அபாயத்திற்குள்ளாகியிருக் கின்றேன்.

**இரண்டாவது காட்சி.—ஜான் ராஜாவின் அரண்மனை.**

(ஜான் ராஜா, பெம்ப்ரோக், சாலிஸ்பரி இன்னுமற்ற பிரபுக்களோடும் வருக.)

**ஜான் மன்.**—இன்னெரு முறை கிரீடந் தரித்துக் கொண்டு, இன்னெருமுறை இச்சிங்காசனத்தின்மீது வீற் றிருக்கின்ரேம்; நீங்களும் நம்மை களிப்புடன் பார்த்து, மகிழ்ச்சியடைகின்றீர்களென்று நம்புகின்ரேம்.

**பெம்ப்ரோக்.**—மேன்மைதங்கிய தங்களுக்குத்தான் பிரியப்பட்ட இந்த இன்னெருமுறைதான், ஒருமுறை அதி கத்தால், அளவுக்கு மேம்பட்ட அனுவசியமாய் இருந்தது; தாங்கள் முன்னெருமுறை முடி சூட்டப்பட்டீர்கள், அப் போது முடி சூட்டப்பெற்று, தங்களுக்கு அளிக்கப்பட்ட உன்னத ராஜரீக அதிகாரத்தை, இதுபரியந்தம் யாராலும் பிடுங்கப்படவுமில்லை, பிரஜைகளுக்குள்ள ராஜ பக்தியும் கலக சிந்தனையால் களங்கமாகவுமில்லை; நீடித்தகாலம் ஆசித்திருந்த ஓர் நிலையான மாற்றத்தையோ, அல்லது இன்னும் மேலான அரசாட்சியையோ, உத்தேசித்து, இவ்விரண்டில் ஒன்று சமீபத்தில் நேர்ந்துவிடுமென்கிற கருத்தோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்ற நிலைமையில், தேசத்தில் நேரிடக்கூடிய குழப்பமுமில்லை.

**சாலிஸ்.**—ஆகையால், இவ்விதம் இரட்டை ஆடம் பரம் செய்துகொண்டது எப்படியிருக்கின்றதென்ருல், ஏற்கனவே ஜொலித்துக்கொண்டிருந்த சரிகை தகட்டி

போலிருந்த சுதந்தரத்திற்கு காக்காய்ப்பொன் புள்ளி ஒட்டி அலங்கரிப்பதுபோலும், புடமிட்ட தங்கத்திற்கு முலாம் கொடுப்பதுபோலும், லிலிபுஷ்பத்திற்கு வெள்ளை வர்ணம் பூசுவதுபோலும், வாசனைபொருந்திய நீலோற்பவ நாண் மலருக்கு வாசனை தெளிப்பதுபோலும், பனிகட்டிக்கு மழமழப்பு உண்டுபண்ணுவதுபோலும், அல்லது வான் வில்லுக்கு இன்னொரு வர்ணம் கூட்டுவதுபோலும், அல்லது வானத்தின் கெம்பீர நேத்திரம்போலிருக்கப்பட்ட சூரியனுடைய ஜோதியை மெழுகுதிரி வெளிச்சத்தைக் கொண்டு அதிகரிக்க முயல்வதுபோலுமிருக்கின்றது ; இப்படிப்பட்ட காரியங்கள் எவ்வளவு வியர்த்தமானவைகளும், பழிப்புக்குரிய அபரிமிதங்களாகத் தோன்றுகின்றனவோ, அதேபிரகாரந்தான் மேற்சொன்ன இரட்டை ஆடம்பரமும் காணப்படுகின்றது.

**பேம்ப்.**—ஆனபோதிலும் தங்களுடைய ராஜசித்தம் நிறைவேறவேண்டியதுதான், ஆயினும், இக்காரியம் எப்படி இருக்கின்றதென்றால், பண்டைக்காலத்து பழங்கதையை இப்போது புதிதாய் சொல்வதுபோலிருக்கின்றது, அப்படிப்பட்ட கதையை பலதடவை சொல்லியிருந்தும், கடைசியாய் இன்னொருமுறை, அசந்தர்ப்ப நேரத்தில், சொல்ல ஆரம்பித்தால் கேட்டுக்கொள்கிறவனுக்கு உபத்திரவமாய்த் தானிருக்கும்.

**சாலிஸ்.**—இவ்விரட்டை ஆடம்பரத்தால் பூர்வீகமானதும், புகழ் பெற்றதும், ஒப்பசெப்பமுமான பழைய ஏற்பாடு வெகுவாய் உருமாறிவிட்டதுபோல் தோன்றுகின்றது; கப்பல் பாய் மரத்தில், மாறி மாறி, அடிக்கின்ற சுழல் காற்றானது அக்கப்பலை எவ்வித அலைக்கழிப்புக்குள்ளாக்குமோ, அவ்விதமே ஜனங்களுடைய யோசனையை ஒருவாக்கில் மென்மேல் செல்லவொட்டாமல், யோசித்ததையே,

திரும்பவும் திரும்பவும், யோசிக்கும்படி செய்கின்றது; அப்படி தீர்க்காலோசனை செய்தும், கடைமுடிவில், திடுக்கிடும்படிக்கும், பயப்படும்படிக்குந்தான் செய்கின்றது; இப்படிப்பட்ட நூதனமாதிரியான ஆடம்பர ஆடை அணிந்துகொண்டதானது, ஆழ்ந்து யோசித்து, மாறு அபிப்பிராயம் வகித்திருக்கிறவர்களை முதலாய் மனக்குழப்பமடையும்படிக்கும், சத்தியத்தை முதலாய் சந்தேகிக்கும்படிக்கும் செய்துவிடுகின்றது.

**பெம்ப்.**—தொழிலாளிகள் தங்கள் கைவேலையை சிரேஷ்டத்திற்கும் மேம்பட்டதாய் அமைப்பிக்க முயன்றால், தங்களுடைய கைத்தொழில் சாதுர்யத்தை, தங்கள் பேரவாவால், இழந்து, வேலையை கெடுத்துவிடுவார்கள். ஒரு உடையிலுண்டான சின்ன கிழிவுக்கு ஓட்டுப்போட்டு தைத்து மறைப்பதானது, அக்கிழிவால், அவ்வுடைக்கு ஏற்கனவே, ஏற்பட்டிருந்த விகாரத்தைவிட அதிக விகாரம், அவ்விதம் ஓட்டுபோடுவதால், உண்டாகிறதுபோல, யாதாமொரு குற்றத்திற்கு மன்னிப்படையும் பொருட்டு சொல்லும் சாக்குபோக்கு, அக்குற்றத்தை, அற்பமாக்குவதற்கு பதிலாய், கனத்த குற்றமாய்தான் செய்துவிடுகின்றது.

**பெம்ப்.**—தாங்கள் மறுமுறை மகுடாபிஷேக சடங்கு நடைபெற செய்வதற்கு முன்னமேயே, இந்நியாயங்களையெல்லாம் நாங்கள் தங்களுக்கு எடுத்துரைத்து ஆலோசனை சொன்னோம்: ஆனால், அவ்வாலோசனையை தவிர்த்துவிடத்தான் வேண்டுமென்பது தங்களுடைய சித்தமாயிருந்தது; ஆயினும், நாங்கள் எவ்வளவு எடுத்துரைக்கக்கூடியதோ, அவ்வளவுமேயல்லாது, அவ்வளவில் எள்ளளவு முதலாய், தங்கள் உள்ளத்தின் சித்தத்திற்கு விரோதித்து,

உட்பிரவேசியாது, அங்கீகரிக்கப் பெறு நிற்கும் இங்கிலே மையில், தங்கள் மனதிற்கு எவ்வித மனக்குறையும் ஏற்படாமலிருக்கிறதனுலேயே, நாங்கள் வெகுவாய் திருப்தியடைந்திருக்கின்ருேம்.

**ஜான் மன்.**—நாமிவ்விதம் இருமுறை மகுடாபிஷேகம் செய்துகொண்டதற்குள்ள சில முகாந்தரங்களே, நாமுங்களுக்கு ஏற்கனவே, அறிவித்திருக்கின்ருேம், அவைகளே, தக்க முகாந்தரங்களென்று நம்புகின்ருேம்; அவைகளேவிட அதிகமானவைகளும், அவைகளேவிட பலத்தவைகளுமான வேறு முகாந்தரங்களே, நமக்குள்ள பயம் கொஞ்சம் தெளிந்தவுடன், நாமுங்களுக்கு தெரிவிக்கின்ருேம். இதற்கு நடுவில், நேர்மை தவறியிருக்கும் எவ்விஷயத்திலாவது சீர்திருத்தமாகவேணுமென்று நீங்கள் அபேட்சிக்கும் பட்சத்தில், எவ்வளவு பிரியத்துடன் உங்கள் வேண்டுகோள்களுக்கு செவி கொடுக்கின்றேனென்பதையும், அவ்வேண்டுகோள்களுக்கிணங்கி, எவ்வளவு பிரியத்துடன் உத்தரவளிக்கின்றேனென்பதையும், நீங்கள் வியக்தமாய் தெரிந்துகொள்வீர்கள்.

**பேம்ப்.**—அப்படியானல், இங்கிருக்கப்பட்ட இவர்கள் எல்லாருடைய மனநோக்கத்தையும் வெளிப்படுத்துகின்ற நாக்குபோலிருக்கப்பட்ட நான், எனக்காகவும், அவர்களுக்காகவும், எல்லாவற்றிற்கும் மேலாக, நானும் அவர்களும் வெகுவாய் முயற்சிக்கும், தங்களுடைய க்ஷேமத்தை உத்தேசித்தும், ஆர்தரை விடுதலே செய்ய உத்தரவளிக்கும்படி, என் முழுமனதோடு மன்ருடுகின்றேன்; அவனே சிறையில் வைத்திருப்பதானது, ஏற்கனவே மனக்குறையடைந்து, குறைகூறுவதே தொழிலாயிருக்கப்பட்டவர்களே, ஆபத்து விளேவிக்கக் கூடிய, அடியிற்கண்ட தர்க்கங்களே பேசுவதற்கு இடங்கொடுக்கின்றது.—

அவை யாவையென்ருல், இப்போது தங்கள் வசத்தில், (65) அசைக்கக்கூடாமலிருக்கப்பட்ட அரசாட்சியை, தங்களுக் குள்ள சுதந்தரத்தைக்கொண்டு, வகித்திருப்பீர்களானுல், தங்களுக்குபயமிருக்கவேண்டிய அவசியமென்னவென்றும், அப்பயமாகப்பட்டது, அவர்கள் சொல்லுகிறபிரகாரம், தங்களை தீயசெய்கைகளுக்கு தூண்டிவிடுகின்றதென்றும், அன்றியும், தங்களுடைய இளம்பிராய இனத்தானை தாங் கள் ஏன் அடைத்து வைத்திருக்கவேண்டுமென்றும், அவ ன் வாழ்நாளை பாழ்நாளாகும்படி அவனை ஏன் மூடனுக அஞ்ஞான இருளில் மூழ்கியிருக்கும்படி செய்யவேண்டு மென்றும், அவன் பாலிய பருவத்தில் பயிலவேண்டிய வித் தைகளில் தேர்ச்சியடைந்து, கல்விச் செல்வத்தின் பயனை அவன் அடையாமலிருக்கும்படி ஏன் தடைசெய்ய வேண்டு மென்றுந்தான். ஆகவே, தங்களுடைய தற்கால சத்துருக் கள், மேற்கூறியவாறு, காலசந்தர்ப்பத்திற்கு தக்கினுப் போல்பேசாவண்ணம், தாங்களே எங்களை அவனுடைய விடு தலையைக்கேட்டு மன்ருடும்படி உத்தரவளித்ததின்பேரில், நாங்கள் செய்துகொண்ட விண்ணப்பமாக அங்கீகாரம் செய்துகொள்ளும்படி பிரார்த்திக்கின்ருேம்; இப்படி அவ னுடைய விடுதலையை நாங்கள் மன்ருடுவது, எங்களுடைய சுய நன்மையை மாத்திரம் நாடி நாங்கள் மன்ருடவில்லை, சரியாய் சொல்லவேணுமானுல், எங்களுடைய க்ஷேமம் தங்களுடைய க்ஷேமத்தைத்தான் சார்ந்திருக்கிறபடியால், அவனை சிறையிலிருந்து விடுதலை செய்வது, முற்றிலும் தங்களுடைய க்ஷேமத்திற்கென்றே சொல்லலாம்.

(யூபர்ட் வருக.)

**ஜான் மன்.**—அப்படியே ஆகட்டும்: அவனு டைய பாலிய பருவத்தை, உங்களுடைய பராமரிப்பின்

---

(65) See Appendix.

கீழ், கழிக்கும்படி அவனை உங்கள் வசம் ஒப்புவிக்கின்றேன். என்ன சமாசாரம் கொணர்ந்திருக்கின்றாய், யூபர்ட்டே ?

[ராஜா யூபர்ட்டை தனியே அப்புறம் அழைத்து செல்கிறார்.]

**பேம்ப்.**—இம்மனிதன் தான் அக்குரூர கொலை புரிய நியமிக்கப்பட்டவன்; கொலைபுரிவதற்கு தனக்கு கொடுபட்ட அதிகார பத்திரிகையை என் சிநேகிதர் ஒருவருக்கு காண்பித்தானும்: கொடிய கொலை பாதக குற்றமே உருவாக அமைந்து அவன் கண்ணில் துலங்குகின்றது; அவனுடைய (66) கடுகடுத்த முகத்தோற்றம் வெகுவாய் குழம்பிக்கொண்டிருக்கப்பட்ட அவனுடைய மன நிலைமையை வெளிப்படுத்துகின்றது; நிறைவேற்ற வேண்டியவன் இவன் என்று நியமிக்கப்பட்ட இவனிடம், ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றதேயென்று, நாம் அவ்வளவு பயந்திருந்தோமே, அக்காரியத்தை நிறைவேற்றிவிட்டுதான் வந்திருக்கிறானென்று, நிச்சயமாகவே, எனக்கு தோன்றுகிறபடியால், எனக்கு மிக்க அச்சமாயிருக்கின்றது.

**சாலிஸ்.**—அணிவகுத்து அமைக்கப்பட்டுள்ள இரண்டு பயங்கர சேனைகளுக்கு நடுவில் தூதர்கள் நடமாடுவதுபோல, ராஜாவினுடைய முகவர்ணம் (67) தன் சுயகாரிய சித்தியின் சிந்தனை மேலாடுவதற்கும், தன் மனச்சாட்சி தன்னைகுத்தி இம்ஸிப்பதற்கும், தக்கினுப்போல் ஒத்திருக்கும்படி, வருவதும் போவதுமாக, அதாவது சிகப்பாயும் வெள்ளையாயும் மாறிக்கொண்டு இருக்கின்றது: இப்போது அவருடைய மனக்கலக்கம் எவ்வளவு முற்றிப்போன நிலைமையில் இருக்கிறதென்றால், கட்டாயம் அது வெடித்துத் தான் வெளிப்படவேண்டும்.

---

(66), (67) See Appendix.

**பேம்ப்.**—அப்படி வெளிப்பட வெடிக்கும்போது, அவ்வெடியிலிருந்து, ஒரு இனிமையான குழந்தையின் சாவு என்று உச்சரிக்கப்பட்ட, துர்க்கந்த் நாற்றம் வீசும், சுவாசபுகைதான் வெளிப்படும்.

**ஜான் மன்.**—நற்குண பிரபுக்களே; மரணத்தின் வல்லபமுள்ள கையை நம்மால் தடுக்கமுடியாது: உங்கள் வசம் ஒப்புவிக்கவேணுமென்று நான் கொண்ட மனத்திர்மானம் என்மனதில் இன்னமும் குடிகொண்டிருக்கையில்தானே, நீங்கள் மனுபண்ணி கேட்டிருக்கும் ஜீவன் இறந்து கெட்டுப்போய் விட்டதாம்: ஆர்தர் சென்றிரவு இறந்துவிட்டானென்று, இவன் நமக்கு தெரிவிக்கின்முன்.

**சாலிஸ்.**—மெய்யாகவே, அவனை பீடித்திருந்த வியாதி சொஸ்தப்படுத்தக்கூடாத வியாதியேயென்றறிந்து, பயந்துதானிருந்தோம்.

**பேம்ப்.**—மெய்யாகவே, வியாதி குழந்தையினருகில் அணுகாமலிருக்கும்போதே, அவன் மரணத்திற்கு வெகு சமீபத்திலேயே இருந்தானென்று, ஏற்கனவே, நாங்கள் கேள்விப்பட்டுதானிருந்தோம்: இவ்விஷயத்தைப்பற்றி இவ்வுலகத்திலாகிலும், மேலுலகத்திலாகிலும், உத்தரம் சொல்லித்தான் ஆகவேண்டும்.

**ஜான் மன்**.—ஏன் இப்படிப்பட்ட கடூர முகத்தோடு என்னை பார்க்கின்றீர்கள்? விதியின் கயிற்றை வெட்டும் *

* க்ரீக் புராணங்களின் பிரகாரம் மானிட ஜீவியத்தை கைக்கொண்டிருக்கப்பட்ட தேவதைகள் மூவர்; அவர்கள் பெயர், க்ளோதோ, லாச்சிஸிஸ், அட்றப்போஸ். இவர்களில் முதலிருவரும் ஒவ்வொரு மனிதனுடைய ஜீவியமென்னும் கயிற்றை பின்னிக்கொண்டு போவதாயும், மூன்ருவது தேவதையாகிய அட்றப்போஸ். யாதாமொரு மனிதனுக்கு விதி முடிந்து, மரணம் சம்பவிக்கவேண்டிய வேளை வந்ததும், அவனுடைய ஜீவிய கயிற்றை, தன் கையிலுள்ள கத்தரியால், வெட்டிவிடுகிறதாகவும் ஐதிகம்.

கத்தரியை என் கையில்தான் வைத்திருக்கின்றேனென்று நீங்கள் நினைக்கின்றீர்களா என்ன? எனக்கு உயிரின் ஜீவநாடியின்பேரில்கூட அதிகாரம் இருக்கின்றதோ?

**சாலிஸ்**—இது, பிரத்தியக்ஷ, குரூர கொலை; உயர்ந்த பதவியிலிருக்கப்பட்டவர்கள் இப்படிப்பட்ட துர்க் கிருத்தியங்களுக்கு பாத்தியப்படுவது வெட்கத்துக்குரிய விஷயமே: ஆகவே, தாங்கள், தங்களுடைய உபாயங்களைக் கொண்டே, விர்த்தியடைந்து, க்ஷேமமாயிருங்கள்! ஆகை யால், நான் இவ்வளவோடு விடைபெற்றுகொள்கிறேன்.

**பெம்ப்**.—சாலிஸ்பரி பிரபுவே, சற்று நில்லும்; நானும் உம்மோடுகூடவே வந்துவிடுகிறேன், பரிதாபத்துக் குரிய இப்பாலன் சுதந்தரித்துக்கொண்ட பூமியை, அதாவது இக்குழந்தையை பலவந்தமாய் அடக்கம்செய்யப்பட்டிருக் கும் கல்லறையாகிய அதனுடைய சிறு ராஜாங்கத்தை, கண்டுபிடிப்போம். இவ்விங்க்லன்ட் தீவின் விஸ்தீரணத் திற்கெல்லாம் அதிபதியாகவேண்டிய இம்மேன்குல மகனை, இத்தீவின் மூன்றடி மண்தான் அடக்கிக்கொண்டிருக்கின் றது: தற்காலம் வெகு கெட்ட உலகமாய்தானிருக்கின்றது! தற்சமயம் நாம் பொறுத்திருக்கவேண்டியிருப்பதுபோல், எப்போதுமே சகித்திருக்கலாகாது: அதிசீக்கிரத்தில் தானே, நாமெல்லோரும் துக்கிக்கும்படியாகவே, இது விஷயத்தை முன்னிட்டு, பெருங் கலகம் சம்பவிக்குமென்று நான் பயப்படுகின்றேன்.

(பிரபுக்கள் செல்க.)

**ஜான் மன்**.—அவர்கள் கோபாக்கினியால் பற்றி எரி கின்றார்கள். எனக்கும் மனஸ்தாபமாய்தானிருக்கின்றது: இரத்தசேதஞ்செய்து சித்திபெற்ற காரியம் ஸ்திரமான

காரியமல்லதான், ஜீவவதை செய்து, தனக்கு நீடித்த ஜீவியத்தை, நிலைக்கவைக்க எத்தனிப்பதும் அசாத்தியமே.

(ஒரு தூதன் வருகிருன்.)

நீ ஒரு பயங்கர பார்வை உடைத்தாயிருக்கின்ருயே: உன்னுடைய அந்த கன்னஙகளில் குடிகொண்டிருக்க நான் கண்டிருக்கும், அந்த இரத்தவர்ணம் எங்கே? இப்படிப் பட்ட கார்மேக மந்தாரம், கடும்புயலடியாது, வெளிச்சமா காதுதான்: ஆகவே, நீ அடக்கிக்கொண்டிருக்கப்பட்ட சமாசாரத்தொகுதியை மழைபோல் பொழி: வ்ரான்ஸில் நம்முடைய காரியங்கள் எப்படி நடந்தேறிவருகின்றன?

**தூதன்.**—வ்ரான்ஸிலிருந்து இங்க்லன்ட்வரையிலு மே. அன்னிய ராஜாங்கத்தின்மீது படையெடுக்கவேண்டி யதினிமித்தம், இதுபரியந்தம் எக்காலத்திலும், மண்மீது இப்படிப்பட்ட சேனை கூட்டப்பட்டு, அமைக்கப்படவில்லை. தங்களுடைய துரித உற்சாகத்தை அவர்களும் பாடம் பண்ணிக்கொண்டார்கள்; அவர்கள் தயாராகின்ருர்கள், என்கிற செய்தி, கொணரவேண்டிய தருணமாகிய இத்தரு ணத்தில்தானே, அவர்களெல்லாம் வந்து இறங்கிவிட்டார் களென்கிற செய்தி கொணர்ந்திருக்கிறேன்.

**ஜான் மன்.**—நம்முடைய தூதாட்களெல்லாம் எங் கே குடித்துக்கொண்டிருந்தான்கள்? எங்கே தூங்கிக் கொண்டிருந்தான்கள்? என் தாயாரின்(68)கவனிப்பு இது தானு? வ்ரான்ஸில் இப்படிப்பட்ட ராணுவம் கூட்டப் பட்டிருக்க, அவர்கள் கேள்விப்படாமல் போனதென்ன?

**தூதன்.**—என்னரசே, அவர்களுடைய காது புழுதி யால் அடைபட்டுபோய்விட்டது: ஏப்ரில் மாதம் முதல்

(68) See Appendix.

தேதி தங்களுடைய கனம்பொருந்திய தாயார் இறந்து போனார்கள்; இதற்கு மூன்று நாளைக்குமுன், லேடி கான்ஸ்ட்டன்ஸும் பைத்தியம் பிடித்து இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன்: ஆனால் இது ஊர் பிரஸ்தாபம், இது தற்செயலாய் என் காதில் விழுந்தது; அது மெய்யோ, பொய்யோ, எனக்குத் தெரியாது.

**ஜான் மன்.**—பயங்கரத்துக்குரிய தற்சமயமே, உன்னுடைய வேகத்தைத் தணி! ஓ, அதிருப்தியடைந்திருக்கும் என்னுடைய பிரபுக்களை நான் சந்தோஷிப்பிக்கிறவனாயில் என்னோடு ஒப்பந்தம் செய்துகொள்! என்ன! தாயார் இறந்துவிட்டார்களா! அப்படியானால் எனக்கு வ்ரான்ஸிலுள்ள சொத்துகளின் பரிபாலனம் எவ்வளவு தாறுமாறாக நடந்தேறிவரவேணும்! வந்து இறங்கிவிட்டார்களென்று இவ்வளவு நிச்சயமாய் சொல்லுகின்றாயே, அந்த வ்ரஞ்ச் சைன்யங்களெல்லாம், யாருடைய ஆளுகையின்கீழ், வந்திருக்கின்றன?

**தூதன்.**—டாவீனின் ஆளுகையின்கீழ்தான்.

**ஜான் மன்.**—இப்படிப்பட்ட துர்ச் செய்திகளைக் கொண்டு, என்னை மதிமயங்கி, பிரமிக்கும்படி செய்துவிட்டாய்.

(பாஸ்ட்டர்டும் பாம்ப்ரட் தேசத்து பீட்டரும் வருக.)

சரி, உன்னுடைய நடவடிக்கைகளைப்பற்றி உலகம் எவ்விதம் பேசிக்கொள்கின்றது? நீ இன்னும் மேற்கொண்ட துர்ச் சமாசாரங்களை என் தலையில் திணிக்கப் பார்க்காதே, ஏனென்றால் அது ஏற்கனவே நிரம்பியிருக்கின்றது.

**பாஸ்ட்.**—எல்லாவற்றிலும் மகா கேடான விஷயத்தை அறிந்துகொள்ள பயப்படுவீர்களானால், அவ்விஷயத்

தைப்பற்றி தாங்களுக்கு யாதொன்றும் தெரியாமலிருக்கும் சந்தர்ப்பத்தில்தானே, அவ்விஷயத்தின் கொடுமை தங்கள் தலையில் தாக்கும்படி செய்துகொள்ளுங்கள்.

**ஜான் மன்.**—தம்பி, என்னை மன்னி; நான் அலைக்குள் அகப்பட்டுக்கொண்டு திகைப்புற்றிருந்தேன்; இப்போது வெள்ளத்துக்குமேல் தலையை தூக்கிக்கொண்டு சுவாசிக்கின்றேன், ஆகையால் இப்போது, உனக்கும், இன்னும் எல்லாருக்கும், செவி கொடுக்க முடியும், என்ன விஷயமாயிருந்தாலும் அதை எனக்குத் தெரிவி.

**பாஸ்ட்.**—நான் குருப்பிரசாதர்களிடம் எவ்வளவு பரபரப்பாய் வேலை முடித்துக்கொண்டேனென்பதை, நான் வசூலித்திருக்கப்பட்ட தொகைகளைக்கொண்டு, தாங்கள் நிதானித்துக்கொள்ளலாம். ஆனால், நான் இவ்விடம் திரும்புவதற்கென்று கரை மார்க்கமாய் பிரயாணப்பட்டு வருகையில், வழியில் ஜனங்கள் வியக்கத்தக்க வீணெண்ணங்கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள்; பற்பல பிரஸ்தாபங்களைக் கேள்விப்பட்டு, பலவித அசந்தர்ப்ப சம்பவங்களைப்பற்றி மௌட்டியமாய் சிந்தித்துக்கொண்டும், இன்னதற்காக பயப்படுகிறோமென்று தெரிந்துகொள்ளாமலே பயம் நிறைந்தவர்களாயுமிருக்கவுங் கண்டேன்: இதோ ஒரு தீர்க்*கதரிசி, இவனை நான் கையோடு கொண்டு வந்தேன், இவன் பாம்ஃப்ரட் ஊரின் தெருக்கள் வழியாய்

---

* அக்காலத்தில் பீட்டர் என்னும் ஒரு வனவாசி யார்க் மாகாணத்தின் சுற்றுப்பக்கங்களில் வசித்து வந்தனராம். இவர் மட்டில் பொதுஜனங்களுக்கு மிக்க மதிப்புண்டாயிருந்ததாம். ஏனென்றால், இவர் ஒன்று, தேவ ஏவுதலாலோ, அல்லது தேர்ந்த மாந்திரிய வித்தையைக்கொண்டோ, வருங்காலத்தில் நடக்கப்போகிற விஷயங்களை முன்னடியே ஜனங்களுக்குத் தெரிவித்து வந்தனராம்.

நூற்றுக்கணக்கான ஜனங்கள் இவன் காலை சுற்றிக்கொண்டு பின்செல்ல, காதுக்கு அருவருப்பு கொடுக்கக்கூடிய சீர்பிரமாணமற்ற செய்யுள் தொகுதியை, அவர்களுக்கு இவன் பாடிக்கொண்டு போகக் கண்டேன்: அச்செய்யுளின் கருத்தென்னவென்றால், அடுத்த திருநாளாகிய கர்த்தர் மோட்†சத்துக்கு ஆரோகணமான திருநாளன்று பகல் பொழுதுக்குமுன், தாங்கள், தங்கள் கிரீடத்தை, ஒப்புக்கொடுத்து விடவேண்டுமாம்.

**ஜான் மன்.**—அடே வேலையற்ற கினவுகாரா, நீ ஏன் அவ்விதம் பாடினாய்?

**பீட்டர்.**—அவ்விதந்தான் நடக்குமென்பது, எனக்கு முன்னாலேயே நிச்சயமாய் தெரிந்தபடியால்தான்.

**ஜான் மன்.**—யூபர்ட், அவனை கொண்டுபோ; அவனை சிறையில் வை; நான் ஏதோ ஒரு தினத்தில், கிரீடத்தை ஒப்புக்கொடுத்துவிடவேண்டுமென்று சொல்லுகின்றானே, அத்தின பகலில்தானே, அவனைத் தூக்கிவிடும்படி செய். அவனை தக்க காவலுக்குள் வைத்துவிட்டு, நீ திரும்பி வா; ஏனென்றால், உன்னால் எனக்கு காரியமாகவேண்டும்.

(யூபர்ட்டும் பீட்டரும் செல்க.)

---

† சேசுக்கிறீஸ்துநாதர், ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம், பெரிய வெள்ளிக்கிழமையன்று மரணித்து, மூன்றாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் உயிர்த்தெழுந்தருளினார். பிறகு, நாற்பது நாள் பூலோகத்தில், தன்னுடைய சீஷர்களை வேதசத்தியங்களில் ஸ்திரப்படுத்தும்பொருட்டு, அவர்களுடனிருந்து, நாற்பதாம்நாள் மோட்சத்துக்கெழுந்தருளினார். அந்நாளை சகல கிறீஸ்துவர்களும் ஒரு பெரிய திருநாளாகக் கொண்டாடிவருகின்றார்கள்.

ஓ என் பட்சமுள்ள தம்பி, ஊர் சமாசாரம் இன்ன தென்று கேள்விப்பட்டாயோ? யார் வந்து இறங்கி இருக் கின்றார்களென்று தெரியுமோ?

**பாஸ்ட்.**—வ்ரன்ச்சுக்காரர், என்னிறைவ, ஜனங்கள் வாய் ஓயாமல் அதைப்பற்றிதான் பேசுகின்றார்கள்: அன்றி யும், பிகட் பிரபுவையும், சாலிஸ்பரி பிரபுவையும் நான் கண்டேன், அவர்கள் கண்கள் சற்றுமுன் தான் மூட்டிய நெருப்புத் தணல்போல் சிவப்பாயிருந்தன; அவர்களோடு இன்னும் சிலரும் சேர்ந்துகொண்டு, ஆர்தருடைய கல் லறையைக் கண்டுபிடிக்கப் போகின்றார்கள்; அவன் தங்க ளுடைய தூண்டுதலால்தான், சென்ற இரவு, கொல்லப்பட் டானென்று, அவர்கள் சொல்லுகிறார்கள்.

**ஜான் மன்.**—பட்சமுள்ள சுற்றத்தானே, நட, அவர் களுடைய கூட்டத்தில் நீயும் போய் சேர்ந்துக்கொள்: அவர்களுடைய அன்பை திரும்பவும் நான் பெறுவதற்கு, எனக்கு ஒருவழியிருக்கின்றது; என்னிடம் அவர்களைக் கொண்டுவா.

**பாஸ்ட்.**—நான் போய் அவர்களை கண்டுபிடிக்கின் றேன்.

**ஜான் மன்.**—அல்ல, அது போதாது, அவசரப் பட்டுபோ; இன்னும் வேகமாய் கால் போட்டு நட. ஓ, அன்னிய சத்துருக்கள், பலத்த படையெழுச்சியின் பயங் கரமான ஆடம்பர ஆர்பாட்டத்தால், என்னுடைய பட்ட ணங்களை நடுங்கும்படி செய்துகொண்டிருக்கும்போது, என் னுடைய பிரஜைகளே எனக்கு சத்துராதிகளாக இருக்க லாகாது! மெர்க்கரி என்னும் தேவதூதனைப்போல், இறக்கை கட்டிக்கொண்டு பறந்துபோ, பிறகு நினைவு பறப்பதுபோல், அவர்களிடமிருந்து என்னிடம் பறந்து வா.

**பாஸ்ட்.**—இக்கால படபடப்பு எனக்கும் கடும் விரைவு கற்பிக்கக்கடவதாக.

**ஜான் மன்.**—வீரியம் பொருந்திய மேன்குலப் பிரபுவைப்போலவே விடையளித்தாய். (பாஸ்ட்டர்ட் செல்க.) அவன் பின்னல் நீயும் போ; சில சமயம் எனக்கும் என் பிரபுக்களும் நடுவே, போக வர, ஒரு தூதன் அவனுக்கு வேண்டியதாயிருக்கக்கூடும்; நீ அந்தத் தூதனயிரு.

**தூதன்.**—என்னரசே, மனப்பூர்வமாயப்படியே.

(தூதன் செல்க.)

**ஜான் மன்.**—என்ன தாயார் இறந்துவிட்டார்களா!

(யூபர்ட் திரும்பி வருகிருன்.)

**யூபர்ட்.**—என்னரசே, நேற்றிரவு * ஐந்து சந்திரன்கள் தோன்றியதாக ஜனங்கள் பேசிக்கொள்ளுகிருர்கள்; அவைகளில் நான்கு நிலையாயிருந்தனவாம், ஐந்தாவது, மற்ற நான்கு நிலையாயிருந்தவைகளைச் சுற்றிலும், ஆச்சரியப்படத்தக்க வேகத்துடன், சுழன்று வந்ததாம்.

**ஜான் மன்.**—ஐந்து சந்திரன்களா!

**யூபர்ட்.**—கிழவன்களும், கிழவிகளும் தெருக்களில், அதைப்பற்றி தீர்க்கதரிசனம் சொல்வதுபோல், பயங்கரமாய் வியாக்கியானம் செய்கின்றுர்கள்: சிறு ஆர்தர் இறந்துபோன விஷயந்தான் அவர்கள் எல்லோருக்கும் பொதுப் பேச்சாயிருக்கின்றது: அவனைப்பற்றி அவர்கள் பேசும் போது தங்கள் தலையை அசைத்துக்கொள்கின்றுர்கள், ஒருவர் காதில் ஒருவர் ரகசியம் ஓதுகிருர்கள்; செய்தி சொல்லுகிறவன், கேட்டுக்கொள்கிறவன் கைமணிக்கட்டைப்

---

* இவ்வற்புத காட்சி அக்காலத்தில் யார்க் மாகாணத்தில் ஜனவரி மாதத்தில் ஓரிரவு சுமார் 10 மணிக்கு காணப்பட்டதாம்.

பிடித்து, அழுத்துகின்றான்; அப்போது கேட்டுக்கொண்டிருக்கப்பட்டவன் நெற்றியை சுருக்கிக்கொண்டும், தலையை அசைத்துக்கொண்டும், கண்களை உருட்டிக்கொண்டும், இப்படிப்பட்ட பயங்கர கோரங்களையெல்லாம் காண்பிக்கின்றான். ஒரு கருமான் இந்நிலைமையில் தன்னுடைய சம்மட்டியை ஓங்கினவிதமாய் நிற்கக்கண்டேன், அவன் காய்ச்சி வைத்த இரும்பு பட்டடையில் குளிர்ந்துகொண்டிருக்க, வாயைப் பிளந்துகொண்டு, ஒரு தையற்காரன் சொல்லிக்கொண்டிருந்த செய்தியை கேட்டுக்கொண்டிருந்தான்; அத்தையற்காரனை கத்தரியையும் கெஜகோலையும் கையில் வைத்தவண்ணம், கடும் விரைவில் (69) கால் மாற்றி நொழுந்திக்கொண்ட பாதரட்சைகளுடன் நின்றுகொண்டு, கென்ட் மாகாணத்தில் அணிவகுக்கப்பட்டும், கிரம வரிசையாய் நிறுத்தப்பட்டுமுள்ள அநேகமாயிரம் யுத்த வீரிய வ்ரன்ச் சுக்காரரைப்பற்றி சொல்லிக்கொண்டிருக்கையில், ஸ்நானம் செய்தே அறியாது, இளைத்து மெலிந்த ஓர் சிற்பன், தையற்காரன் கதையை முறித்து, ஆர்தருடைய சாவைப் பற்றிப் பேசுகின்றான்.

**ஜான் மன்.**—நீ, இப்படிப்பட்ட பயங்கர செய்திகளைக்கொண்டு என்னை, ஏன் பயப்படும்படி செய்ய பார்க்கின்றாய்? ஆர்தருடைய சாவைப்பற்றி ஏன் அடிக்கடி ஞாபகப்படுத்துகின்றாய்? உன் கைதான் அவனை கொலை செய்தது: அவன் இறக்கவேண்டுமென்று நான் விரும்புவதற்கு, எனக்கு பலத்த முகாந்தரமிருந்தது, ஆனால் நீ அவனை கொல்வதற்கு, எவ்வித காரணமும் உனக்கு இருந்ததில்லை.

**யூபர்ட்.**—என்னரசே, இருந்ததில்லையா! ஏன் தாங்களே... அதற்கு என்னை... தூண்டிவிடவில்லையா?

(69) See Appendix.

**ஜான் மன்.**—ராஜாக்கள் வேடிக்கையாய் பேசுகின்ற விஷயங்களை யெல்லாம் அதிகாரமாகக்கொண்டு, ஜீவனுடைய (70) உதிரவீட்டை உடைத்தழிக்கும் அடிமைப் பயல்கள், அரசர் பக்கத்து பணிவிடைக்காரன்களாயிருக்க சம்பவித்திருப்பது, ராஜாக்களுக்கு ஏற்பட்ட சாபமே: அதிகாரம் வகித்திருக்கப்பட்டவர்கள் இமை கொட்டுவதை முதலாய் ஓர் சட்டமாக கொள்கின்றுன்கள்; *ஆபத்துக்கிருப்பிடமாகிய அரசாளுமன்னர் சிலசமயம் ஆழ்ந்து யோசியாது, அநேகமாய் பரிகாசகோஷ்ட்டியால் முகத்தை சுழித்தாலுமே, அதற்கும் ஏதோ அர்த்தம் செய்து கொள்கின்றுன்கள்.

**யூபர்ட்.**—நான் செய்த காரியத்துக்கு தங்களுடைய கையொப்பத்தோடும், முத்திரையோடும் இதோ இருக்கின்றதே!

**ஜான் மன்.**—ஓகோ, பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும், கடைமுடிவில், கடவுள் பொதுத்தீர்வை நடத்தும்போது, நம்முடைய கையொப்பமும், முத்திரையும் நம்மை நரகாக்கினைக்குட்படுத்த சாட்சியமாகட்டும்! தீயகாரியங்களுக்குதவும் தீங்கருவிகள் தென்படுவதாலேயே (71) அத்தீய காரியம் தீரும்படி சம்பவிக்கின்றது! ஈன காரியங்கள் முடிப்பதற்கு இயல்புள்ளவனுக, அங்கமச்ச அடையாளங்களோடு இயற்கை அமைப்புள்ள பயலாகிய நீ, என் பக்கத்திலிருந்திராவிட்டால், இக் கொலைபாதக எண்ணம் என் மனதில் ஜனித்தே இராது: ஆனல் அருவருப்புக்குரிய உன்

(70), (71) See Appendix.

* "பாம்பு முகர்ந்தாலும், அரசன் நகைத்தாலும், துர்ச்சனன் மரியாதை பண்ணினுலும் உயிர்ச்சேதம் வரும்" என்னும் தமிழ் வாக்கியத்தின் உண்மையை கவீசுரர் கருதினர் போலும்.

னுடைய அவலட்சண உருவத்தை நான் கவனிக்கும்படி நேரிட்டபடியாலும், குரூர கொடும்பாதக கொலேபுரிவதற்கு தக்க நபரென்றும், ஆபத்து வேலைகளுக்கு அமர்த்துவதற்கு அபிபாத்திரவானென்றும், நீ என்க்கு தோன்றியபடியாலும், நான் உனக்கு, ஆர்தருடைய கொலையைப்பற்றி, ஜாடையாய் சொன்னேன்; நீயோ, ஒரு ராஜாவின் தயவை சம்பாதிக்க வேண்டியதற்காக, ஒரு ராஜ குமாரனை, கொஞ்சமேனும் மன சாட்சியில்லாமலே மாய்த்துவிட்டாய்.

**யூபர்ட்.**—என்னரசே,—

**ஜான் மன்.**—மேலும், நான் கோரிய காரியத்தை, நான் உனக்கு மறைபொருளாய் தெரிவித்தபோது, நீ உன்னுடைய தலையையாவது அசைத்திருந்தாலும், அல்லது நீ சற்று தயக்கமாவது கொண்டிருந்தாலும், அல்லது நான் தெரிவித்த விஷயத்தை வியக்தமான வார்த்தைகளைக்கொண்டு, (72) வெளிப்படையாய் சொல்லவேணுமென்கிற நோக்கமுள்ள ஒரு சந்தேக பார்வையோடாவது, நீ என்னை பார்த்திருந்தாலுங் கூட, நான் மிக்க வெட்கமடைந்து, ஊமையைப்போல், வாயடைத்துப்போய், நான் கொண்ட எண்ணத்தைத் தவிர்த்திருப்பேன்; உனக்கு உண்டாகியிருக்கவேண்டிய பயம், எனக்கும் பயம் உண்டுபண்ணியிருக்கும்: ஆனால் நீ, நான் காண்பித்த ஜாடைகளைக் கொண்டே என் கருத்தை அறிந்துகொண்டாய், பிறகு (73) பாவாக்கிரம பிசாசுடனேயே ஜாடைகாட்டி, முகமுகமாய் சம்பாஷணை செய்தாய்; ஆம், கிஞ்சிற்றும் தயக்கமில்லாமலே, உன் மனம் குவியும்படி செய்துகொண்டாய், கடைமுடிவில் நம்மிருவர் நாக்குகளும் துதிப்பதற்கு முதலாய் இழிவானதாக பாவித்த காரியத்தை, உன்னுடைய துஷ்ட கையைக்கொண்டு செய்து முடித்தாய். என் கண்

(72), (73) See Appendix.

முன்னுல் நில்லாது ஓடிப்போ; இனி எப்போதும் என் கண்ணுக்கெதிர்ப்படாதே! என் பிரபுக்கள் என்னைவிட்டு விலகிவிட்டார்கள்; என் ராஜாங்கம் எதிர்க்கப்பட்டிருக்கின்றது, என் கோட்டை வாசலுக்கெதிரிலேயே, அன்னிய அரசு ஸைன்யங்கள் அணிவகுத்து அமைத்துள்ளன: அதுமாத்திரமல்ல, இந்த மாமிசபூமியாகிய என்னுடைய இந்த திரேகத்தில்தானே, அதாவது, இரத்தமும், சுவாசமும் அடங்கியிருக்கின்ற இவ்விராச்சியத்தில் தானே, உட்பகையும், உட்குழப்பமும் ஆட்சிகொண்டு, என்னண்ணன்மகன் கொலையும், என் மனச்சாட்சியும், போராடிக்கொண்டிருக்கின்றன.

**யூபர்ட்.**—தாங்கள் தங்களுடைய மற்ற சத்துருக்களை தாக்க வல்ல தயராகுங்கள்; நான் தங்களுக்கும், தங்கள் மனசாட்சிக்கும் ஏற்பட்டிருக்கிற உட்பகையைத் தீர்த்து, மனசமாதானப்படுத்துகின்றேன். இளைஞன் ஆர்தர் உயிரோடிருக்கின்றுன்: என்னுடைய இந்த கையாகப்பட்டது இதுபரியந்தம், அறியாப் பெண் கைபோலொத்த, குற்றமற்ற கையே; இக்கைகளில் செந்நீரின் செந்நிறக் கறை எப்போதும் பட்டதேயில்லை. என்னுடைய இந்த நெஞ்சத்தினுள், கொலைபாதக எண்ணத்தால் அடித்துக்கொள்ளும் பயங்கர துடிப்பு, எக்காலத்திலும் பிரவேசித்ததேயில்லை; தாங்கள் என்னுடைய விகார ரூபத்தைப்பார்த்து பழித்து, என்னைப் படைத்த கடவுளைத்தான் நிந்தித்தீர்கள், என்னுடைய இந்த உருவம், வெளித்தோற்றத்தில் எவ்வளவு அவலட்சணமுள்ளதாய் தோன்றியபோதிலும், ஒரு மாசற்ற குழந்தையை வதைத்துக் கொல்லும் எண்ணத்தை முதலாய் வகிக்கக்கூடாத நல்ல நெஞ்சத்தைதான், மூடிக்கொண்டிருக்கும் உறையாகவிருக்கின்றது.

**ஜான் மன்.**—ஆர்தர் உயிரோடிருக்கின்றுனே? ஓ, அப்படியானல், நீ என்னுடைய பிரபுக்களிடம் ஓடு, கடுங்கோபத் தீ பிடித்து, மூண்டு கொண்டுருக்கப்பட்ட அவர்களிடம் இச்செய்தியைச் சொல்லி, அவர்களுடைய கோபந்தணியும்படிசெய்து, அவர்களை என்னிடம் அடங்கி வரும்படி செய்! உன்னுடைய முகச்சாயலைப்பற்றி, நான் என் கோப வருத்த நேரத்தில் தூஷித்ததற்காக நீ என்னை மன்னி; ஏனென்றுல், என் கடுங்கோபத்தில் நான் கண்மூடியைப்போலிருந்தேன்: என் உத்தேசத்தில் புலப்பட்ட (74) அருவருக்கத்தக்க இரத்தக்கறைகளின் தோற்றம், நீ சாதாரணமாய் காணப்படுவதைப் பார்க்கிலும், அதிக அவலட்சணமுள்ளவனுக தோன்றும்படி செய்துவிட்டது. ஓ, பதில் சொல்ல ஆரம்பிக்காதே, அதற்கு பதிலாய் கோபங்கொண்டிருக்கப்பட்ட என்னுடைய பிரபுக்களை என்னுடைய உள்ளறைக்கு கடும்விரைவில் கொண்டுவா. நானுன்னை இப்போது வேண்டும் நேரம் தாமதம்; நீயோ இந்நேரத்துக்கும் குறைவான நேரத்திலேயே போய் சேரும்படி வெகு வேகமாய் ஓடவேணும்.

### மூன்றவது காட்சி.—கோட்டைக்கு முன்பாக.

(கோட்டை மதிலுக்குமேல் ஆர்தர் தோன்றவும்.)

**ஆர்தர்.**—சுவரோ உயரமாயிருக்கின்றது, இருந்தாலும் நான் குதிப்பேன்: நல்ல தரையே, என்பேரில் இரக்கமாயிரு, என்னை காயப்படுத்தாதே! என்னை அறிந்தவர்கள், இவ்விடத்தில், ரொம்ப சொற்பம், அல்லது ஒருவருமேயில்லை: என்னை அறிந்தவர் யாராகிலும் இருந்தாலுங்கூட, இத்தகைய கப்பல் பையன் மாறுவேஷம், என்னை முற்றிலும் மறைத்துக்கொண்டிருக்கின்றது. எனக்கோ பயமா

(74) See Appendix.

யிருக்கின்றது; இருந்தாலும் நான் குதிக்கத் துணிவேன். நான் கீழே குதித்து, என் கால் கையை ஒடித்துக்கொள்ளாமலிருப்பேனானால், நான் ஓடிப்போவதற்கு ஆயிரம் உபாயம் கண்டுபிடிப்பேன்; இவ்விடத்தில் தங்கியிருந்து மரணத்தை அடைவதைப்பார்க்கிலும், மரண அபாயத்திற்கு உட்பட்டாகிலும் ஓடிப்போவதே நலம்.

(குதிக்கின்றான்.)

ஓ இரட்சகா! என் பேரிலிரக்கமாயிரும்! என் சிற்றப்பாருடைய கொடுங்குணம் இக்கருங்கல்களிலும் அடங்கி இருக்கின்றதே: மெய்யுலக கர்த்தாவே, என் ஆத்மாவை ஒப்புக்கொள்ளும், இங்கலன்ட் தேசமே, என் எலும்புகளை பத்திரப்படுத்திக்கொள்!

(இறந்துபோகிறான்.)

(பெம்ப்ரோக், சாலிஸ்பரி, பிகட் வருக.)

**சாலிஸ்.**—பிரபுக்களே, நானவரை அர்ச். எட்மண்ட் ஆலயத்தில் போய் சந்திக்கின்றேன்: நானப்படி செய்தால்தான் நமக்கு க்ஷேமம், இவ்வாபத்து காலத்தில் நமக்கன்புடனளிக்கும் ஆதரவை நாம் அங்கீகாரம் செய்துகொள்ள தான் வேண்டும்.

**பேம்ப்.**—கார்டினலிடமிருந்து அக்கடிதத்தை இங்கு யார் கொணர்ந்தது?

**சாலிஸ்.**—வ்ரானஸ் தேசத்து மேன்குல பிரபுவாகிய கவுண்ட்மெலன் என்பவர் கொணர்ந்தார்; அவர் என்னுடன் தனிமையில் சம்பாஷித்தபோது, டாவின் ராஜகுமாரன் நம்பேரில் வைத்திருக்கும் அன்பைப்பற்றி அவர் எனக்கு தெரிவித்ததானது எவ்வளவென்றால், இக்கடிதத்தில் காண்பித்திருக்கும் அன்பைவிட, அதிக ஏராளமானதே.

**பிகட்.**—அப்படியானல், நாமவனை நாளை காலமே போய் சந்திப்போம்.

**சாலிஸ்.**—அதற்குப் பதிலாய் அவ்வேளையில் புறப்படுவோமென்று சொல்லும்: ஏனென்றல், பிரபுக்களே, நாம் போய் அவனை சந்திப்பதற்கு முன்னமே, பூரா இரண்டு நாள் பயணம் போயாகவேண்டும்.

(பாஸ்டர்ட் வருக.)

**பாஸ்ட்.**—மனவருத்தமடைந்திருக்கும் பிரபுக்களே, இன்றையதினம் இன்னெருமுறை சமயோசிதமாய் சந்திக்கின்றேம்! ராஜா உங்களை தாமதமின்றி, தன்னிடம் வரும்படியாக, என் மூலியமாய், கேட்டுக்கொள்ளுகின்றர்.

**சாலிஸ்.**—எங்கள்பேரில் ராஜாவுக்கிருந்த அதிகாரத்தை அவர் இழந்துவிட்டார்: அவருடைய கறைபிடித்த (75) மெல்லிய அங்கிக்கு, எங்களுடைய் தூய்மையான கௌர்வத்தைக்கொண்டு, உட்போர்வைபிடவுமாட்டோம், அவர் நடக்கிற இடமெல்லாம் உதிர முத்திரை வைக்கும் காலடியை பின்செல்லவுமாட்டோம். நீ திரும்பிப்போய் இதே பிரகாரம் அவருக்குச் சொல்லு: எங்களுக்கு நேரிடக்கூடிய தீங்குகளிலெல்லாம் மகா பெரிய தீங்கையும் நாங்கள் அறிந்துதானிருக்கின்றேம்.

**பாஸ்ட்**.-நீங்கள் எவ்வித அபிப்பிராயங்கொண்டவர்களாயிருந்தாலுங்கூட, நல்வாக்கே நல்லொழுக்கத்திற்கடுத்தது என்பதுதான், என்னபிப்பிராயம்.

**சாலிஸ்.**—எங்கள் துயரம் மண்டைக்கேறி, மதிமயங்கின நிலமையில் நாங்கள் சம்பாஷிக்கிறேமேயல்லாது, எங்களுடைய நல்லொழுக்கத்தை அனுசரிப்பதை காண்பிக்கவல்ல.

---

(75) See Appendix.

**பாஸ்ட்.**—உங்கள் துயரத்திற்கு எவ்வித ஞாயமு மில்லை, ஆகையால் நீங்கள் உங்கள் நல்லொழுக்கத்தை அனுசரிப்பது கிரமமே.

**பேம்ப்.**—ஐயா, ஐயா, ஆத்திரப்பட்டவர்களுக்கு, தம்அடக்கமாட்டா மும்முரத்தில், அடாது செய்யவும் பாத்தியமுண்டு

**பாஸ்ட்.**—வாஸ்தவமே, அப்பாத்தியம், அப்பாத்தியஸ்தனையே பாதிக்குமேயல்லாது (76) வேறு யாரையும் பாதிக்கமாட்டாது.

**சாலிஸ்.**—இதுதான் சிறைச்சாலை. ஆ! இதென்ன! இங்கே(77) செத்தா கிடக்கின்றான்!

(ஆர்தரை பார்த்துக்கொண்டு)

**பேம்ப்.**—ஓ மரணமே! துல்லிய தூய்மையாலும், ராஜ வடிவழகு சௌந்தரியத்தாலும் மகிமைபடுத்தப்பட்ட மரணமே! இப்படிப்பட்ட கிரியையை மறைப்பதற்கு, பூமியில் ஒருவனை முதலாய் அகப்படவில்லைபோலும்.

**சாலிஸ்.**—கொலை பாதகத்தின் அவதாரமாயிருக்கப்பட்ட இக்கொலைகாரனே, தான்புரிந்த இக்கொலையை தானே வெறுத்து, பழிவாங்குகை என்னும் பரிகாரத்தை தூண்டிவிட வேண்டியதற்காகவே, பஹிரங்கப்படுத்தி வைத்திருக்கின்றான்போலும்.

**பிகட்.**—அல்லது, இப்படிப்பட்ட அழகு சௌந்தரியத்தை அவன் குழியில் வைக்க எத்தனித்தபோது, மண்ணில் மறைக்க மனங்குவியாத மதிப்பிலடங்கா மாணிக்கமாகவும், மாட்சிமை மிகுந்த மகா ராஜரீகமாயும் தோன்றினதுபோலும்.

---

(76 & 77) See Appendix.

**சாலிஸ்.**—சர் ரிச்சர்டே, இப்படுபாதகத்தைப்பற்றி என்ன நினேக்கின்ருய்? இதைப்போலொத்த பாதகத்தை (78) பார்த்திருக்கிருயா, அல்லது படித்திருக்கிருயா, அல்லது கேள்விபட்டாவது இருக்கிருயா? அல்லது உன்னல் நினேக்கவாவது முடியுமோ? நீ இப்போது பார்க்கின்ற இக்காரியத்தை உன் கண்ணுல் பார்த்தாலுங்கூட, இப்படிப்பட்ட பாதகத்தின் கிட்டத்தில் முதலாய் உன் நினேவு எட்டுமோ? நினேவினுல் முதலாய், இதைப்போலொத்த மற்ருேர் பாதகத்தை, இப்பாதகத்தை பாராது, சிந்திக்கவாவது முடியுமோ? கொடுங் கொலேபாதகன் முடிக்கக்கூடிய நுனிஸ்தல வேலே யிதுவே, அவன் எட்டக்கூடிய உயரம் இவ்வளவே, அவன் வேலேக்கெல்லாம் சிகரவேலே இதுவே, அல்லது அச்சிகரத்திற்கே சிகரமிதுவே: இது குரூரத்திற்கெல்லாம் குரூரமான ஈனவேலேயே, காட்டு மிருகத்துக்குரிய துட்டாட்டங்களில் கொடிய துட்டாட்டமிதுவே; ஈரமுள்ள நெஞ்சத்தோர் இளகி கண்ணீர் சொரியுமாறு (79) கண் மூடியாய்போன கடுங்கோப உக்கிரக்காரனுலோ, வெறிக்க வெறிக்க, முறைத்து பார்க்கும் கோபவெறி பாதகனுலோ, முடிக்கப்பெற்று, கண்ணுக்கு காட்சியாய் காட்டப்பட்டிருக்கும் மகா ஈனபாதகமிதுவே.

**பேம்ப்.**—இதற்கு முன்னுல் நேர்ந்திருக்கப்பட்ட கொலேகளெல்லாம், இதன்முன்னே, மன்னிக்கப்படத்தக்கவைகளாகத் தோன்றுகின்றன. இவ்வொற்றையானதும், ஒப்பற்றதுமான இப்பாதகம், நாளடைவில் இனி சம்பவிக்கக்கூடிய சகல பாதக பாவத் (80) தொகுதிக்கே, பிராயச்சித்தம் செய்து, பரிசுத்தமாக்கிவிடும்; அன்றியும், இக்கொடிய காட்சியை உதாரணமாகக்கொண்டு, ஒத்திட்டுப் பார்க்கையில், உயிர் நடுங்கச் செய்யக்கூடிய கொடிய சம்

---

(78), (79), (80) See Appendix.

ஹாரம் முதலாய், வேடிக்கை விளையாட்டாக தோன்றுமே யல்லாது வேறல்ல.

**பாஸ்ட்.**—இது சபிக்கப்படத்தக்க ஓர் குரூர வேலை தான்; இது யாதாமொரு மனிதனுடைய கைவேலையா யிருக்கும்பட்சத்தில், கிஞ்சிற்றும் கருணையற்று, பழி பாதகத்தில் தேர்ச்சியடைந்த படுபாதகன் வேலையாய்தா னிருக்கவேண்டும்.

**சாலிஸ்.**—யாதாமொரு மனிதனுடைய கைவேலை யாவது! இன்னது நடக்குமென்பதைப்பற்றி, எங்களுக்கு ஏற்கனவே, ஒருவித புலம் கிடைத்திருந்தது: யூபர்ட் கையால் தீர்ந்த ஈனவேலைதானிது; ராஜாவின் உபாயத்தி னுடையவும், எண்ணத்தினுடையவும், நிறைவேற்றமும், இதுவே: அப்படிப்பட்ட இராஜாவுக்கு அமையவே பட்டா தென்று என் ஆத்துமத்திற்கே போதிக்கின்றேன்: இவ் விளிமையான உயிரை சேதஞ்செய்து, நிர்மூலமாக்கப்பட் டிருக்கும் இப்பிரேதத்திற்கு முன்னால், இப்போது நான் முழங்காலிட்டு, இச்சுவாசமற்ற மாட்சிமையின்மீது, நான் வீசுகின்ற இந்த என் சுவாசம் எதற்குப் பதிலென்றால், ஒரு நோன்புக்கு, அதாவது நானிப்போது தீர்மானிக்கும் ஒரு தேவ திவ்விய நோன்புக்கு, பிரதிக்கினைகள் செய்யும் இத்தருணத்தில் காணிக்கையாயளிக்கவேண்டிய, நறுமண தூபத்திற்கு பதிலாகத்தான், இந்நோன்பின் பிரதிக்கினை கள் யாவையென்றால், (81) இம்மாட்சிமைக்கு, பழி வாங் குகை, என்னும் ஆராதனையை நான் செலுத்தி, என்னு டைய இக்கைக்கு நான் கீர்த்தி சம்பாதிக்கும் வரையில், இவ்வுலக இன்ப சுகங்களை அனுபவிக்கிறதில்லையென்றும், ஆனந்த அகமகிழ்ச்சி அனுபவிப்பவர்கள் நடுவில் அகப் பட்டுக்கொண்டாலுமே, நான் மாத்திரம் களிப்பினால் பீடிக்

(81) See Appendix.

கப்படுகிறதில்லையென்றும், சுகத்தையும், சுவஸ்தியையும் கிஞ்சிற்றும் நாடுகிறதில்லையென்றும், உறுதிப்படுத்திக் கொண்ட மனத்தீர்மானங்களே.

**பேம்ப். பிகட்.**—எம்மனங்களும் உம்மனத்தின்கண் ஒருமனப்பட்டு, தெய்வ பயபக்தியுடன், உம்முடைய வார்த்தைகளை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

(யூபர்ட் வருக.)

**யூபர்ட்.**—பிரபுக்களே, உங்களைத் தேடி ஓடிவந்த வேகத்தால், நான் **அக்கினிமயமாய்விட்டேன்**: ஆர்தர் உயிரோடிருக்கின்றான்; ராஜா, உங்களை கூப்பிட்டு வரும்படி, என்னை அனுப்பிவைத்திருக்கின்றார்.

**சாலிஸ்.**—ஓ, அவன் துணிச்சலாய்த்தானிருக்கின்றான், கொலை செய்தபிறகுகூட, அவனுக்குக் கிஞ்சிற்றும் சஞ்சலமில்லை. ஓடிப்போடா, அருவருப்புக்குரிய சண்டாளா, இங்கே நிற்காதேடா!

**யூபர்ட்.**—நான் சண்டாளனல்ல.

**சாலிஸ்.**—(வாளை உருவிக்கொண்டு) என்னை சட்ட விரோதம் செய்ய சொல்கிறாயா, என்ன?

**பாஸ்ட்.**—ஐயா, உம்முடைய வாள் பளபளப்பாய்தானிருக்கின்றது; ஆகவே, அதை பழையபடி உறையில் போடும்.

**சாலிஸ்.**—கொலைபாதகனுடைய தோலுக்குள் நொழுந்தி, அத்தோல் இதற்கு சற்று நேரமாவது உறையாயில்லாதவனாயில், இவ்வாளை நான் உறையில் போடேன்.

**யூபர்ட்.**—எட்ட நில்லும் சாலிஸ்பரி பிரபுவே, எட்ட நில்லும், நான் சொல்லுகிறதைக் கேளும்; உண்மையா

கவே, என்னுடைய வாளும் உம்முடையதைப்போல் கூர்மையுள்ளதாய்தானிருக்கின்றது: பிரபுவே, உம்மை நீர் மறந்து நடப்பதை நானினி சகித்திருக்கமாட்டேன், (82) சட்டப்படி என்னை நான் தற்காத்துக்கொள்ள எத்தனிக்கையில் விளையக்கூடிய ஆபத்துக்கு, நீர் உம்மை உள்ளாக்கிக்கொள்ளாதேயும்; அன்றேல், உம்முடைய கோபா உக்கிரத்தைப்பார்த்து நானும் உக்கிரமடைந்து, உம்முடைய யோக்கியதையையும், உம்முடைய மகத்துவத்தையும், உம்முடைய பிரபுத்தனத்தையும், நானும் மறந்து நடக்கும்படி நேரிடும்.

**பிகட்** —எட்டப்போடா, குப்பைமேடே! ஒரு மேன்குல பிரபுவையா எதிர்க்க துணிகிறாய்?

**யூபர்ட்.**—என் பிராணன் போகிறதாயிருந்தாலுங்கூட நான் அப்படி செய்யமாட்டேன்: ஆனால், என் (83) மாசற்ற தன்மைக்கு பங்கம் வருகிறதாயிருந்தால், மகாராஜாவாகிய சக்கரவர்த்தியை முதலாய், எதிர்க்கத்தான் துணிவேன்.

**சாலிஸ்.**—நீ ஒரு கொலை பாதகனடா.

**யூபர்ட்.**—நீர் அப்படிப்பட்ட பட்டப்பெயர் வைத்து, என்னை கூப்பிட்டு, அப்பெயரை (84) ஸ்திரப்படுத்த பார்க்காதேயும்; நீர் அப்படி செய்தாலுங்கூட, நான் கொலைபாதகனேயல்ல: எவரொருவர் தம் நாவினால் சரியல்லாத விஷயத்தை பேசுகின்றார்களோ, அவர்கள், எப்படிப்பட்டவர்களாயிருந்தாலுங்கூட, உண்மை பேசத்தானில்லை; உண்மை பேசாதவர்கள் சொல்லும் வசனம் பொய்தான்.

**பேம்ப்** :—அவனை வெட்டி துண்டாடிவிடும்.

---

(82, 83 & 84) See Appendix.

**பாஸ்ட்.**—நான் சொல்லுகிறதைக் கேளுங்கள், பதறாதேயுங்கள்.

**சாலிஸ்.**—வால்கன் ப்ரிட்ஜே எட்டநில், இல்லாவிட்டால் உனக்கும் ஒரு வெட்டு கொடுப்பேன்.

**பாஸ்ட்.**—எனக்கு பதிலாய், ஒரு பிசாசுக்கு வெட்டு கொடும், சாலிஸ்பரி: நீர் என்னை கடுகடுத்த முகத்தோடு முதலாய் பார்த்தாலுஞ் சரி, அல்லது என்னை நோக்கி ஒரு அடி பெயர்த்து வைத்தாலுஞ்சரி, அல்லது உமது அவசரப்பட்ட குணத்தால் எனக்கு ஏதாகிலும் அவமானந் தேட கருதினாலுஞ்சரி, அந்த நிமிஷமே, நானும்மை சாவடிப்பேன். நல்ல நேரத்தில் உம்முடைய வாளை உறையில் போடும்; இல்லாவிட்டால், உம்மையும், பானவந்தனத்திற்குதவக்கூடிய உம்முடைய வாளாகிய இரும்புத் துண்டையும், எவ்விதம் த்ாக்கி வெட்டுவேனென்றால், பிசாசே நரகத்திலிருந்து வந்துவிட்டதென்று நீர் நினைக்கும்படி நேரிடும்.

**பிகட்**—கீர்த்திபெற்ற வால்கன் ப்ரிட்ஜே, ஒரு சண்டாளனும், கொலைபாதகனுமாயிருக்கப்பட்டவன் பக்ஷமா, சார்ந்து பேசுகிறாய்?

**யூபர்ட்.**—பிகட் பிரபுவே, நான் சண்டாளனுமல்ல, கொலைபாதகனுமல்ல.

**பிகட்.**—அப்படியானால், இவ்விராஜ குமாரனை யார் கொன்றது?

**யூபர்ட்.**—நான் அவரை பூரண சௌக்கியத்துடன் விட்டுப்பிரிந்து, இன்னும் ஒருமணி நேரமாகவில்லை: நான் அவருக்கு இதுபரியந்தம் மரியாதை செலுத்திவந்தேன், அன்புடன் அவரை நேசித்து வந்தேன், இப்போது அவரு

டைய இனிமையான உயிர் சேதத்திற்காக, என்னுடைய பாக்கி ஜீவியகாலமெல்லாம், கண்ணீர் சொரிய போகிறேன்.

**சாலிஸ்.**—அவன் கண்களிலிருந்து வடிகின்ற அக் கள்ளக்கண்ணீர் தாரைகளை நம்பாதேயும், ஏனென்றால் இவ்விதம் கண்ணீர் சொரிவது எல்லா பாதகருக்கும் சகஜம்; இவன், நீடித்த காலமாய், பாதகத்திலேயே பழகின வனானபடியால் வாஸ்தவமாய் மனஸ்தாபப்படுகிறவர்கள், கிஞ்சிற்றும் மாசற்றவர்கள், முதலியோர் கண்களிலிருந்து ஆறாய் பெருகும் கண்ணீர் பெருக்கைப்போல் தனக்கும் கண்ணீர் பெருகும்படி செய்துகொள்கின்றான். கசாயி தொட்டியின் அசுசிய துர்க்கந்தத்தால் உயிர் நடுங்கப்பட்ட வர்களெல்லாம் என்னோடு வந்துவிடுங்கள். ஏனென்றால் இப்படிப்பட்ட பாவச் சேற்று நாற்றத்தால் நான் திணறிப் போகின்றேன்.

**பிகட்.**—டாவீனிடம் போய் சேரும்பொருட்டு பரியை நோக்கிச் செல்லுங்கள்!

**பேம்ப்.**—அவ்விடத்தில்தான் எங்களைப்பற்றி விசாரித்து தெரிந்துகொள்ளலாமென்று, நீ ராஜாவுக்கு தெரிவி.

(பிரபுக்களெல்லாம் செல்க).

**பாஸ்ட்.**—தற்காலம் நல்ல உலகமாய்தானிருக்கின்றது! இந்த நேர்த்தியான வேலையைப்பற்றி உனக்கு ஏதாகிலும் தெரியுமோ? அந்தமில்லாததும், அணையற்றதுமான, இரக்கமென்னும் நற்குணத்தின் ஹத்தையும் மீறி, இக்கொலைபாதக கிருத்தியத்தை நீ செய்திருப்பாயானால், இக்ஷணமே நீ நரகாக்கினைக்குள்ளானாய், ஹூபர்ட்டே.

**யூபர்ட்.**—ஐயா, நான் சொல்வதையும் சற்று கேட்டுக்கொள்ளும்.

**பாஸ்ட்.**—ஆ! அது எப்படிப்பட்ட ஆக்கினையென்பதை சொல்கிறேன் கேள்; நீ எவ்வளவு கொடிய வேதனைக்குள்ளாகியிருக்கிறாயென்றால்,—ஓ, ஒன்றும் அவ்வளவு கடுமையானதாக தோன்றவுமில்லை, என்றால் நிதானிக்கவு முடியவில்லை; ஆனபோதிலும் சொல்லுகிறேன், நரகேந்திரன் லூஸிவருக்கே விதிக்கப்பட்ட தண்டனையைவிட, எத்தனையோ ஆயிரமடங்கு, அதிக கடுமையான தண்டனைக்கு உள்ளாகியிருக்கின்றாய்: இக்குழந்தையை நீ கொலை செய்திருப்பாயானால், நரகத்தில் நீ எப்படிப்பட்ட பிசாசாய் துலங்குவாயென்றால், நரகத்திலேயே இதுபரியந்தம், அப்படிப்பட்ட அவலட்சணப் பேய் இருந்தே இராது.

**யூபர்ட்.**—என்னுடைய ஆத்தும இரட்சணியத்தின் பேரில்—

**பாஸ்ட்.**—இம்மகா கொடிய குரூரக் கிரியையுக்கு நீ சம்மதப்பட்டிருந்தாலுங்கூட, உடனே ஓயா சஞ்சலத்துக்குள்ளாகு; உனக்கு ஒரு தாம்பு வேண்டுமானால், சிலந்தி தன் வயிற்றிலிருந்து நூற்த நூலிலெல்லாம் அதி நுண்ணிய நூலே உன்னை சுருக்கிக்கொல்லவல்ல கயிறாகும்; உன்னை தூக்கிட்டுக்கொள்ளவேணுமானால், ஒரு சிறு கோரையே உன்னை தாங்கக்கூடிய உத்திரமாகும்; அல்லது உன்னை நீ அமிழ்த்திக் கொல்ல மனமானால், ஒரு கரண்டியில் கொஞ்சமளவு தண்ணீர் ஊற்றிக்கொள், அத்தண்ணீரே இப்படிப்பட்ட சண்டாளனை திக்குமுக்குப்படுத்தி கொல்லக் கூடிய மகா சமுத்திரமாகிவிடும். நானுன்னைத்தான், வெகு வெகு நிச்சயமாகவே, சந்தேகிக்கின்றேன்.

**யூபர்ட்.**—நான் கிரியையினுலாவது, வாக்கினுலாவது, அல்லது நினைவினுலாவது, மண்ணோடுமண்ணுய்ப் போய் விட்ட, இப்படிப்பட்ட சுந்தர வழகமைந்த, இப்பிரேதத்தி னுள்ளிருந்த, இனிய உயிரை பறித்த குற்றத்திற்குள்ளாகி யிருப்பேனுனல், என்னை வதைக்க நரகத்திலுள்ள சகல வேதனைகளுமே எனக்கு போதாதுதான். நான் இக்குழந் தையை பூரண சௌக்கியத்துடன் விட்டுவந்தேன்.

**பாஸ்ட்.**—அவனைப்போய், நீ உன் கரங்களில் தூக் கிக்கொள். நான் பிரமித்துப் போகின்றேன், இவ்வுலகின் கண்ணுள்ள அபாயங்களின் நடுவிலும், முட்களைப்போல் குத்தி இம்ஸிக்கும் கஷ்டங்களுக்குள்ளாலும், நான் நேர் பாதையைவிட்டு தவறிவிடுவேன்போல் தோன்றுகின்றது. எவ்வளவு எளிதில் இங்கலன்ட் ராஜ்யத்திற்குள்ளதை யெ ல்லாம் எடுத்துவிட்டாய்! அழிந்துபோன ராஜ மாட்சி மையாயிருக்கப்பட்ட இச்சிறு துணிக்கையிலிருந்து இவ் விராஜ்யத்திற்குள்ள திறமை, பெருமை, நீதி முதலிய யாவற்றும் வானத்தை நோக்கி பறந்துவிட்டன; இங்கலன் டில் இப்பொழுது ஒன்றையொன்று பிடித்திழுக்கும்படி க்கும், அடித்து மோதிவிழுந்து பிடுங்கும்படிக்கும், இது பரியந்தம் கீர்த்தியில் அபிவிர்த்தியடைந்து வந்து, தற்சம யம் தக்கவரால் வகித்துக்கொள்ளாமலிருக்கப்பட்ட இவ் விராஜரீகத்தின் சுதந்தரத்தை கைப்பற்ற, பல்லால் கடித் திழுக்கும்படிக்கும் நேரிட்டுவிட்டது. கொஞ்சமும் மாமி சமில்லாமல் கொத்தித்தின்று, வெறுமையாக்கப்பட்ட எலும்பைப்போலிருக்கும் ராஜ மகத்துவத்தை கைக்கொள் வதற்கென்று, கடும்போர் என்னும் கோபவெறி நாய், தன் னுச்சிமயிரை சிலுப்பிக்கொண்டு, சமாதானத்தை முன்னி ட்டு சாந்த குணத்தை வகித்திருக்கும் இவ்விராஜ்யத்தார் கண்களுக்கெதிரிலேயே உறுமுகின்றது. தங்கள் சொந்த

ராஜ்யத்தைவிட்டு இவ்விராஜ்யத்தில் போர் புரிய வந்திருக்கும் ராணுவங்களும், இவ்விராஜ்யத்தில் மனக்குறையடைந்திருக்கப்பட்டவர்களுமான சேனைகளும் ஒன்றித்து, ஒரே வரிசையில் நிற்கின்றன ; வியாதியாய் கிடக்கும் மிருகம், எப்பொழுது இறக்குமோவென்று காத்திருக்கும், காகத்தைப்போல், ஏற்கனவே (85) சீரழிந்திருக்கும் இவ்விராஜாங்கத்தின் மகிமை பிரதாபம் இப்போது, அடியோடு, சமீபத்தில், அழியும் ஸ்திதியிலிருக்கப்பட்டதானது, அழிந்த அடுத்த க்ஷணமே, மகா பெரிய குழப்பம் நடைபெற காத்துக்கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட புசலில் தன்னை ஆதரித்துக்கொள்ளும்படியான போர்வையும்,(86) இடைக்கச்சையுமுடையவன் பாக்கியவானே. அக்குழந்தையை தூக்கிக்கொண்டுபோ, பிறகு என் பின்னால் கடும் விரைவில் வந்துசேர் : நான் ராஜாவிடம் போகின்றேன் : ஆயிரங் காரியங்கள் சடுதியில் கவனிக்கவேண்டியிருக்கின்றது, இத்தேசத்தின் மீது கடவுளே, கோபநோக்கத்தோடு பார்க்கின்றார்போலும்.

---

## ஐந்தாம் பிரிவு.

### முதல் காட்சி.—ஜான் ராஜா அரண்மனை.

*ஜான் ராஜாவும் பான்டல்வும் சிப்பந்திகளுடன் வருக.*

**ஜான்.**—இதோ, என்னுடைய மகிமைப் பிரதாபத்தின் வட்டம்போலிருக்கப்பட்ட என் கிரீடத்தை தங்கள் கையில் ஒப்புக்கொடுத்துவிட்டேன்.

**பான்ட்.**—(கிரீடத்தை கொடுத்துக்கொண்டே) உம்முடைய ராஜ மகத்துவத்தையும், அதிகாரத்தையும் பாப்பானவரிடமிருந்து பெற்றுக்கொண்டதற்கொப்பாக, நம்மு

(85), (86) See Appendix.

டைய இக்கைகளிலிருந்து,[88] திரும்பவும் இக்கிரீடத்தைப்[87] பெற்றுக்கொள்ளும்.

**ஜான் மன்.**—இப்பொழுது தங்களுடைய திருவாக்கை காப்பாற்றுங்கள் : வ்ரஞ்ச்சுக்காரரைப் போய் சந்தியுங்கள் : நாம் பற்றியெரிந்து போவதற்கு[89] முன்னே தானே, அவர்கள் படையெடுத்து நோக்கி வருவதை நிறுத்தும்பொருட்டு, அத்தியக்ஷ பாப்பானவரால் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சகல அதிகாரத்தையும் செலுத்துங்கள். மனக்குறையடைந்திருக்கும் சில மாகாணங்களில் ஏற்கனவே குழப்பம் ஆரம்பித்துவிட்டது ; நமமுடைய பிரஜைகள் நமக்கு அமைந்திருப்பதைத் தவிர்த்து, வேற்று இரத்தமும்[91] அன்னிய அரசனுமாயிருக்கப்பட்டவனுக்கு ராஜ பக்தியும்[90] உள்ளன்பும் காண்பிப்பதாய் பிரமாணிக்கம் செய்திருக்கின்றார்கள். இவ்விதம் கிரமநிலை தவறிய குழப்பத்தால் அலைமோதி நிற்கும் கலக வெள்ளம் தங்களாலதான் வற்றிப்போகவேண்டும். ஆகையால் தாமதியாதேயுங்கள் : தற்காலம் எவ்வளவு வியாதி முற்றிய காலமாயிருக்கின்றதென்றால், தக்ஷணமே மருந்து கொடுத்தாகவேண்டும், இல்லாவிட்டால் சொஸ்தப் படுத்தக்கூடாத அசந்தர்ப்பங்களெல்லாம் சம்பவிக்கும்.

**பாண்டல்ப்.**—நீர் பாப்பானவருக்கு விரோதித்து பிடிவாதமாக நடந்துகொண்டபடியால், இப்படிப்பட்ட போர்புசலை கிளப்பியது நம்முடைய சுவாசந்தான் ; ஆனால் நீர் இப்போது சீர்வழியில் திருந்திவந்த சாந்தகுண சீலராய்விட்டபடியால் நம்முடைய நாவே இப்போர் புசலை அமைதியாக்கிவிடும், புயல் காற்றடித்துக்கொண்டிருக்கும் உம்முடைய தேசத்தில் தென்னல் வீசும்படி செய்வோம். ஆனால் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்,

(87), (88), (89), (91) and (90) See Appendix.

கர்த்தர் மோட்சத்துக் காரோகணமான திருநாளாகிய இன்றையதினம், தாம் பாப்பானவருக்கு பணிந்திருப்பதாக கொடுத்த சத்திய வாக்கின்பேரில்தான், நாம் வ்ரஞ்ச்சுக்காரரிடம் போய், அவர்கள் பேரர் புரியாது, தங்களுடைய யுத்த கவஜங்களை கழட்டி வைத்துவிடும்படிக்கு செய்யப் போகின்றோம். (பான்டல்வ் செல்க.)

**ஜான் மன்.**—இன்றையதினம், கர்த்தர் மோட்சத்துக் கரோகணமான திருநாளா? கர்த்தர் மோட்சத்துக் காரோகணமான திருநாளன்று பகல்பொழுதுக்குமுன், நானென் கிரீடத்தை ஒப்புக்கொடுத்துவிட வேண்டுமென்று, அந்த தீர்க்கதரிசி சொன்னனல்லவா? அதே பிரகாரந் தான் நானும் ஒப்புக்கொடுத்துவிட்டேன்: கட்டாயத்தின் பேரில் அப்படி சம்பவிக்குமென்று, நான் அப்போது நினைத்தேன்; ஆனல், கடவுளுக்கு ஸ்தோத்திரம், அது என் மனசம்மதத்தின்பேரில்தான் நேர்ந்திருக்கின்றது.

(பாஸ்ட்டர்ட் வருக).

**பாஸ்ட்.**—கென்ட்மாகாணம் முழுவதும் பணிந்து விட்டது; டோவர் கோட்டை தவிர மற்றெதுவும் அங்கே எதிர்த்து நிற்கவில்லை: லண்டன் பட்டணம், அன்புள்ள ஓர் அன்னசத்திரக்காரனைப்போல், டாவினையும் அவனுடைய சைன்யங்களையும், அன்புடன் ஏற்றுக்கொண்டது: தங்களுடைய பிரபுக்கள் தங்கள் சொல்லுக் கிணங்கமாட்டோமென்று சொல்லிவிட்டு, தங்களுடைய சத்துருவுக்கு உதவி புரிய போய்விட்டார்கள், நிலையற்ற் விசுவாசமுள்ள தங்களுடைய சொற்ப சிநேகிதர்கள் முதலாய், வெகுவாய் மலைப் புற்று, இங்குமங்குமா யோடிக்கொண்டிருக்கின்றார்கள்.

**ஜான் மன்.**—என்னுடைய பிரபுக்கள், சிறுவன், ஆர்தர் உயிரோடிருக்கின்றனென்று கேள்விப்பட்ட பிறகு

கூடவா, என்னிடம் திரும்பிவரமாட்டோமென்று சொல்லி விட்டார்கள்?

**பாஸ்ட்.**—அவனே இறந்த பிணமாகவும், தெருவில் தூக்கி எறியப்பட்டுமிருக்கக் கண்டார்கள், ஜீவன் என்னும் இரத்தினமானது ஏதோ ஒரு சபிக்கப்பட்டகையால் திருடி அபகரித்து விட்டபிறகு, பாக்கி நிற்கும் வெறும் சிமிழாகத் தானிருந்தான்.

**ஜான் மன்.**—அந்த துஷ்டன், யூபர்ட், அவன் உயிரோடிருக்கின்முனென்று எனக்கு சொன்னுனே.

**பாஸ்ட்.**—சத்தியமாகவே, அவனுக்கு தெரிந்ததை அவனுக்குத் தெரிந்த பிரகாரம் சொன்னுன்தான். ஆயினும் தாங்கள் எதற்காக சோர்வடைகின்றீர்கள்? ஏன் விசனக் குறிகள் தங்கள் முகத்தில் தோன்றுகின்றன? நெஞ்சத்தில் எவ்வளவு பெரிய எண்ணங்களை எல்லாம் வகித்திருந்தீர்களோ, அப்படியே செய்கையிலும் பெருமையைக் காண்பியுங்கள்; தங்களுடைய ராஜ கம்பீர நேத்திரங்களின் ஜொலிப்பை, பயமும், விசனமும், அவநம்பிக்கையும் மேலாடி, அஜ்ஜொலிப்பை மங்கச்செய்வதை உலகமறியும்வண்ணம் செய்துகொள்ளாதேயுங்கள். காலசந்தர்ப்பங்கள் எவ்வளவு கடும் விளைவாயிருக்கின்றனவோ, அதைப்போலவே அவசரப்படுங்கள்; (92) நெருப்புக்கு நெருப்பாயிருங்கள்; பயமுறுத்துவோனை பயமுறுத்துங்கள், திகில் திடுக்கம் கொடுக்கக்கூடிய கூக்குரல் சம்ஹாரத்தையுமே, அதற்கெதிரிலேயே நின்று, முறைத்துப் பார்த்து, அடங்கும்படி செய்யுங்கள்: அப்படி செய்வீர்களானுல், மேலோரைப் பார்த்து தங்கள் நடவடிக்கையை சீர்படுத்திக்கொள்ளும் கீழோர், தங்களை உதாரணமாகக்

(92) See Appendix.

கொண்டு, மேன்மையான செயல்களுக்கு இயல்புள்ளவர்களாகி, கிஞ்சிற்றும் அச்சமற்ற ஊக்கத்துடன், மனோதைரியமுள்ளவர்களாக காணப்படுவார்கள். புறப்படுங்கள், போர்தேவதை, போர்களத்தை அலங்காரப்படுத்தும் பொருட்டு, தான் பிரசன்னமாகும்போது எவ்விதம் பிரகாசித்து துலங்குமோ, அவ்விதமே தாங்களும் துலங்குங்கள் : மனத்துணிவையும், தளரா உறுதியையும் காண்பியுங்கள். என்ன, சிங்கத்தை அதன் குகைக்கே தேடிப்போய், அங்கேயேயா அதை பயமுறுத்தப் பார்க்கின்றார்கள் ? அங்கேயேயா, அதை நடுங்கச் செய்யப் பார்க்கின்றார்கள் ? ஓ, இவ்விதம் ஜனங்கள் பேசிக்கொள்ளாவண்ணம் செய்துகொள்ளுங்கள் : (93) இரைதேட புறப்படுங்கள், கஷ்டமென்பது வீட்டுக்கு எட்டத்தில் வந்துகொண்டிருக்கும்போதே, ஓடிப்போய் அதை சந்தித்து, அக்கஷ்டம் வீட்டுக்குக் கிட்டத்தில் அணுகாவண்ணம், அதை சந்தித்தவிடத்திலேயே அதைக் கட்டிக்கொண்டு, மல்லுபிடியுங்கள்.

**ஜான்மன்.**—பாப்புவின் ஸ்தானபதி என்னிடம் வந்திருந்தார், நான் அவரோடு மனரம்மியமான சமாதான உடன்படிக்கை செய்துகொண்டேன் ; டாவீனல் செலுத்தி வந்திருக்கப்பட்ட ராணுவங்களை, தங்களூருக்கே திரும்பி விடும்படி செய்வதாக வாக்கு கொடுத்திருக்கின்றார்.

**பாஸ்ட்.**—ஓ, அகௌரவமான உடன்படிக்கையே! படையெடுத்துவந்த ராணுவங்கள் நம்முடைய பூமியில் கால் வைத்து (94) பிரவேசித்த பிறகு கூடவா, சரிசமான (95) பாதுகாப்புக்கு கட்டளை பிறப்பித்து, அவர்களோடு ராஜி பேசுதல், அவர்களிஷ்டத்துக் கிணங்கல், அவர்களோடு சம்பாஷணை செய்தல், கேவலமாய் போர் நிறுத்தல் ஆகிய இவை

(93), (94) and (95) See Appendix.

களுக்கெல்லாம் நாம் சம்மதப்படுகிறது? பட்டுடை அணிந்து, சரச சல்லாப உல்லாசத்தில் உண்டு, உழன்று திரியும், தாடி மீசை முளையா அறியாப் பையனு நம்முடைய சொந்த அமர்க்களங்களிலேயே யுத்தஞ்செய்ய துணிகிறது? வீரியம் பொருந்திய நம்முடைய இப்பூமி சாரத்தை அவனும் (96) கிரகித்துக்கொண்டு, அவனுமா மனோ தைரியமுள்ளவனுகி விடுகிறது? ஆகாயத்தையே பழிப்பதுபோல் பலவர்ண கொடிகளை (97) அர்த்தமில்லாமல் பறக்கவிட்டுக்கொண்டிருக்கின்றுனே, அவனுக்கு யாதொரு கண்டிப்பு, தண்டிப்பு இல்லையா? என்னிறைவ, சற்று சிந்தியுங்கள், நாமும் ஆயுதம் தரித்துக்கொண்டு யுத்தத்திற்கு தயாராயிருப்போம்: சிலசமயம் கார்டினலால் தாங்கள் கோரும் உடன்படிக்கையை முடிவு செய்யக்கூடாமல் போனுலும் போகலாம்; அல்லது அவர் அப்படியே முடிவு செய்தாலுங்கூட நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள நாம் ஒருவழி தேடிக்கொண்டிருந்தோமென்று அவர்கள் கண்டுதான் அவ்வுடன்படிக்கைக்கு இணங்கினுர்களென்முகிலும் இதாராளால் சொல்லும்படி செய்துகொள்வோம்.

**ஜான் மன்.**—நல்லது, தற்கால நடவடிக்கைகள் உன்னுடைய அதிகாரத்தின் கீழ் நடந்தேறிவரட்டும்.

**பாஸ்ட்.**—அப்படியானுல் தக்க மனோ தைரியத்துடன் புறப்படுங்கள்! எப்படியிருந்தாலும் நம்முடைய கட்சியைச் சேர்ந்தவர்கள், பெருமை காண்பிக்கும் டாவினைப் பார்க்கிலும் வாஸ்தவமாய் (98) பெருமைபொருந்திய சத்துருவையே, தாக்க வல்லவர்களென்று நான் நன்கறிவேன்.

---

(96), (97) and (98) See Appendix.

## இரண்டாவது காட்சி :—டாவீனுடைய கூடாரமாளிகை, அர்ச். எட்மன்ட் ஆலயத்தருகில்.

லூயிஸும், சாலிஸ்பரியும், மெலனும், பெம்ப்ரோக்கும், பிகட்டும் ஆயுதத்தாரிகளாக யுத்தவீரர்களோடு வருக.

**லூயிஸ்.**—மெலன் என்னும் என் பிரபுவே, இதற்கு கை நக்கல் எடுக்கும்படி செய்து, அதை நம்முடைய ஞாபகத்திற்காகவென்று தாங்கள் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள்: அசலை இப்பிரபுக்களிடம் திரும்பவும் கொடுத்து விடுங்கள் ; இவ்விதம் நம்முடைய பாரபட்சமற்றவைகளும், சரிசமானமான நிபந்தனைகள் எழுத்தில் எழுதப்பெற்று இருவர் வசத்திலுமிருக்குமானால், நாமும், அவர்களும், இச்சீட்டுகளை வாசித்துப் பார்க்கும்போதெல்லாம், நாம் ஏதுக்காக திவ்விய நற்கருணை பெற்றோமென்று உணர்ந்து, நாமிருதரத்தாருமே நம்முடைய மனத்தீர்மானங்களை உறுதிபடுத்திக்கொண்டு, அவைகளை மீறி நடவாதிருக்கக்கடவோம்.

**சாலீஸ்.**—நாங்கள் சம்மந்தப்பட்டவரையில், நாங்கள் கொடுத்த வாக்கை, நாங்கள் எக்காலத்திலும், மீற மாட்டோம். ஆயினும், மேன்மைதங்கிய டாவீனே, நீர் நடத்தும் நடவடிக்கைகளுக்கு நாங்களுமிணங்கி, உறுதியாயும், உண்மையாயுமிருப்போமென்று நாங்கள் வலிய சத்தியஞ் செய்திருந்தாலும், என்னை நம்பும், ராஜபுத்திரா, இக்கால அசந்தர்ப்பங்களால் ஏற்பட்ட கெடுதியாகிய புண்ணுக்கு நிந்தைக்குரிய குழப்பம் என்னும் சேர்வை போட வேண்டியிருக்கின்றதேயென்றும், புத்துலைத்து வேரூன்றியிருக்கும் பிளவைகாயம் ஒன்றை சொஸ்தப்படுத்தும் பொருட்டு, பல காயங்கள் உண்டுபண்ணவேண்டியிருக்கின்றதேயென்றும், நான் நினைக்கும்போது விசனமடை

கின்றேன். ஐயோ, என் சுதேசமாகிய என் மாதாவை அரசிழந்த விதவையாக்கும்பொருட்டு, என் வாளாகிய இந்த இரும்பை என்னுறையிலிருந்து உருவவேண்டியிருக்கின்றதேயென்று நினைக்கும்போது, என்னுயிர் நடுங்குகின்றது! ஐயோ, அதுவும் எவ்விடத்திலென்றாலோ பெருந்தகைமையுள்ளோர் தேசத்தைக் காப்பாற்றி பாதுகாக்கும் பொருட்டு பிரயத்தனஞ்செய்துகொண்டு சாலிஸ்பரியைக் காணுமல், அப்பெயரைக் கூவி,[99] கூப்பிடும் இடமாகிய, அவ்விடததிலேல்யேதான்! கால சுபாவம் எவ்வித தொற்றுங் குணமுடையதாயிருக்கின்றதென்றால், நம்முடைய சுதந்தரத்துக்கு ஏற்பட்டிருக்கும் கடுமையான அநீதியையும், பலவித தீமைகளையும் போக்கி, அச்சுதந்தரத்தை சரி நிலைமைக்கு கொண்டுவர வேண்டியதினிமித்தம், நாமும் அப்படிப்பட்ட அநீதிகளையும், தீமைகளையுந்தான் செய்யும்படியான அவசியத்திற்கு உள்ளாகியிருக்கின்றோம். ஓ, சஞ்சலமடைந்த என் சிநேகிதர்களே, இத்தீவில் பிறந்து வளர்ந்த புத்திரரும், பிள்ளைகளுமாயிருக்கப்பட்ட நாம், இப்படிப்பட்ட துக்க மணிநேரத்தை கண்ணுற்று, கலங்குவதற்கா பிறந்தோம்! இது ஒரு பரிதாபத்துக்குரிய காரியமல்லவா? இம்மணிநேரத்தில் நம்முடைய சுதேச மாதாவின் வயிற்றையே கிழித்து உட்செல்லும்[100] அன்னிய படையெழுச்சியை பின்சென்று, அவளுடைய சத்துராதிகளுடைய ராணுவ வரிசைகளை நிரப்பிக்கொண்டிருக்கின்றோம்,—நான் பின்னிடைந்துபோய், மேற்கூறிய கட்டாய உபத்திரவத்தால், நாம் புரியும் இத்தீய கிரியைகளால் உண்டான மனப்[101] புண்ணை நினைந்து, கண்ணீர் சொரிய வேண்டும்,—தூரதேசத்து கனவான்களை கௌரவப்படுத்தி வேற்றுக்கொடிகளையா பின்செல்லவேண்டும்?

---

(99) (100) and (101) See Appendix.

என்ன, இங்கேயேதானு அப்படி செய்யவேண்டும்? ஓ ராஜ்யமே, நீ அப்புறப்பட்டு போகக்கூடுமானல் உத்தமம்! உன்னைத் தழுவிக்கொண்டிருக்கும் கடல் தேவதையானது, தன்னுடைய கரங்களில் உனக்குத் தெரியாமல் உன்னைத் தூக்கிக்கொண்டுபோய், ஓர் அஞ்ஞான பிரதேசத்தில் ஸ்தாபிக்கக்கூடாதா! அவ்விடத்தில் இவ்விரண்டு கிறீஸ்துவ சேனைகளும், வன்மத்தால் உஷ்ணப்பட்டிருக்கும் தங்கள், தங்கள் இரத்தத்தை, அயல் ராஜ்யத்தாருக்கு அடாதவிதமாய், வீணில் சிலவழிக்காமல், அவ்விரத்தத்தை ஒன்றுபடுத்தி, ஒற்றுமை என்னும் இரத்தத்தாரையில் ஓடச்செய்வார்களே!

**லூயிஸ்.**—இப்பிரசங்கத்தால் உம்முடைய உன்னத குணத்தை வெளிப்படுத்துகின்றீர்; பெரிய, பெரிய சஞ்சலங்கள் உம்மனதில் போராடி, கடைசியாக அக்கினிமலை தனக்குள்ளுள்ள நெருப்பு, இரும்பு, கல் முதலியவற்றை எறிவதுபோல, உம்முடைய பிரபுத்தன்மைக்குள்ள குணங்களை வெளிப்படுத்துகின்றீர். உமது சுதேசத்தின் மட்டில் உமக்குள்ள மனஸ்தளரா மதிப்போடும், தற்சமயம், உமக்கேற்பட்டிருக்கும் அவசியம் என்னும் (102) கஷ்டத்தோடும், ஓ, நீர் எவ்வளவு மேன்மையான போராடியிருக்கின்றீர்! உம்முடைய கன்னங்களில், வெள்ளிபோல் பிரகாசித்துக்கொண்டு ஓடுகின்ற, பனிநீர்போன்ற, கௌரவத்துக்குரிய அக்கண்ணீரை நான் துடைக்கின்றேன்: ஸ்திரீகள் கண்ணீர் பெருகச்செய்வது சகஜமாயிருந்தும், நான், ஒரு ஸ்திரீயின் கண்ணீரைப் பார்த்து, மனமிளகிவிட்டேன்; ஆகையால், வீரிய புருஷராகிய நீர் சொரியும் இப்படிப்பட்ட கண்ணீர் பிரவாகம், அதாவது மனப்புயலடித்துப் பொழியும் இந்த பாட்ட மழைத்தாரைகளை நான் பார்க்கை

(102) See Appendix.

யில், என்னை திடுக்கிடும்படி செய்து, வில்வளைவாயிருக்கும் இவ்வான மண்டல முழுவதும் எரியும் விண்வீழ் கொள்ளி களால் நிரப்பப்பட்டிருந்தால், எனக்கு எவ்வளவு பிரமிப்பு உண்டாகுமோ, அதைவிட அதிக பிரமிப்புக்கு உள்ளாக்கி விட்டது. கீர்த்திபெற்ற சாலிஸ்பரி பிரபுவே, உம்முடைய முகத்தை நிமிர்த்தும், மன தைரியங்கொண்டு, உம்முடைய இந்த மனப்புயலை ஊதித் தள்ளும்: இப்பிரமாண்ட பூலோ கத்தின் கொந்தளிப்பை கண்டறியாதவர்களும், உற்சவ காலங்களில்தான் ஆனந்தமுண்டென்று, அக்காலத்தில் (103) மகா சுறுசுறுப்புடனும் களிப்புடனும் வீண் பேச்சு களை பிதற்றித்திரிகின்ற குழந்தைகளுடைய கண்ணுக்குத் தான், இக்கண்ணீர் தாரைகள் உரித்தானவையென்று, அவர்களிடமே அனுப்பிவிடும். அனுப்பிவிட்டு வாரும், வாரும், ஏனென்றால், ஐசுவரிய பெருக்குள்ள வாழ்வை அனுபவிப்பதற்காக ஞாயிஸாகிய நான் பொக்கிஷத்திலி ருந்து எவ்வளவு ஆழமாக கைவிட்டள்ளி, செலவிடுவேனோ, அதேபிரகாரம், நீரும் பொக்கிஷத்தில் ஆழமாகவே, அள்ளி அனுபவிப்பீர்; என்னுடைய ராணுவ பலத்துக்கு உபபலம் கொடுக்கின்ற மற்ற பிரபுக்களே, நீங்களும் அப் படியேதான்.

(பான்டல்வ் வருக.)

நான் சொன்ன வசனங்களை(104) ஒரு தேவதூதனு டைய வாக்கியங்களென்றே சொல்லக்கூடியதாய் எனக்கு தோன்றுகின்றது: ஏனென்றால், அதோ பாருங்கள், சங் கைக்குரிய ஸ்தானபதி வருகின்றார், நமக்கு கடவுள் காத் தாலேயே அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை அவர் நம்மிடம் கையளிக்கவேண்டியதற்காகவும், அவருடைய சுகிர்த வாக்கால் நம்முடைய நடவடிக்கைகளுக்கு 'சரி'

(103), (104) See Appendix.

யென்கிற பட்டம் கொடுக்கவேண்டியதற்காகவும், அதிக அவசரமாகவே வருகின்ருர்.

**பர்ண்ட்.**—வ்ரான்ஸ் ராஜ்யத்தின் உன்னத ராஜ குமாரா நீர் வாழ்க! மேல் நடக்கவேண்டியது இதுதான், ஜான்ராஜா ரோமான் திருச்சபையோடு சமாதான மாகிவிட்டார்; மகா பெரிய அத்தியக்ஷ சமஸ்தானமும், ரோமான் குருப் பீடமாயுமிருக்கின்ற திருச்சபையை அவ்வளவு விரோதித்திருந்த அவருக்கு சுயஞானம் வந்துவிட்டது: ஆகையால் பயம் விளைவிக்கின்ற உம்முடைய விருதுக் கொடிகளை இப்போது சுருட்டிவிடும்; பாழ்பண்ணும் யுத்தத்திற்குரிய நாசஞ்செய்யும் கடூரத்தை சாந்தப்படுத்திவிடும், ஏதுக்கென்ருல் கையில் வளர்க்கப்பட்ட சிங்கமானது பார்வையில்மாத்திரம் பயத்தைத் தருவதைத் தவிர்த்து வேறு எவ்வித தீமையுமற்றிருப்பதுபோல, அக் கடூரமாகப்பட்டது கெடுதியற்று, சமாதானமென்பதின் கால்மாட்டில் படுத்திருக்கும்படி செய்யும்.

**லூயிஸ்.**—தேவரீர் என்னை மன்னிக்கவேணும், நான் திரும்பிப் போகமாட்டேன்: உலக முழுவதுமுள்ள எந்த ராஜாங்கத்தாலும் என்னை ஆட்கொள்ளவாகிலும், அதிகாரத்தில் இரண்டாவதாக செய்வதற்காகிலும், இதராளுக்கு சேவித்து உதவியா யிருக்கும்படிக்காகிலும், உபகரண கருவியாகவாகிலும், செய்துகொள்வதற்குக் கூடாத ரொம்பவும் உயர்குலத்தில் பிறந்திருக்கின்றேன். யுத்தப் பிரீதி என்னும் தீத்தணல் என்னிடம் அவிந்துபோயிருந்ததை தாங்கள்தான், தங்கள் சுவாசத்தால், ஊதி எரியச் செய்து, இப்போது எனக்கு(105) படிந்துவிட்ட இவ்விராஜாங்கத்திற்கும் எனக்கும், ஆதியில் சண்டை மூட்டிவிட்

(105) See Appendix.

டீர்கள்; அத்தீ, மென்மேல், எரிவதற்கு வேண்டிய சாமக்கிரிகைகளேயும் தாங்களே கொணர்ந்தீர்கள்; இப்போது அத்தீ, மகா பிரமாண்டமானதாய், ஓங்கிவிட்டது, ஆகையால், ஆதியில் அதை மூட்டிய மெல்லிய காற்ருகிய தங்களுடைய சுவாசத்தாலேயே, அத்தீயை இப்போது ஊதி அவிக்கமுடியாது. கிரமமென்பதை நான் சரிவர தெரிந்து கொள்ளும்படி, தாங்கள்தான் எனக்கு கற்பித்தீர்கள், இவ்விராஜ்யத்திற்கு எனக்குள்ள சுதந்தரத்தையும், எனக்கு தெரிவித்தீர்கள், ஆம், தாங்கள்தான் இப்படையெழுச்சி எண்ணத்தையும் என் மனதில், உபத்திரவப் படுத்தி, புகட்டினீர்கள்; இப்போது ஜான் ரோமாபுரியோடு சமாதானமாய்விட்டானென்று சொல்லவருகிறீர்கள்? அச்சமாதானத்தால் எனக்காகவேண்டியதென்ன? என் கலியாண சம்பந்தத்தால் எனக்கு உதித்த பாத்தியதையைக்கொண்டு, ஆர்தருக்கு அடுத்தாப்போல், இவ்விராஜ்யத்திற்கு, நான் சுதந்தரங் கொண்டாடுகின்றேன்; அது இப்போது பாதி ஜெயித்தாய்விட்டது, ஜான் ரோமாபுரியோடு சமாதானமாய்விட்டான், ஆகையால், நான் திரும்பிவிடவேண்டுமோ? நானென்ன ரோமாபுரிக்கு அடிமையா? இப்போர் நடைபெற ரோமாபுரி ஒரு பைசா கொடுத்ததா, எவ்வளவு ஆள் மாகாணம் சேகரித்தது? எவ்வளவு யுத்த உபகரணங்கள் அனுப்பிவைத்தது? நானல்லவோ இந்த செலவெல்லாம் பொறுக்கவேண்டியவன்? நானும், என்னதிகாரத்திற் குட்பட்டவர்களும் தவிர, வேறு யார் இவ்வலுவலில் வெயர்வை சிந்தி, இந்த யுத்தத்தை நடத்துகின்றது? இத்தீவார் அவர்களுடைய பட்டணங்களின் எல்லேயோரம் நான் வந்து இறங்கினபோதே, எனக்கு ஸ்தோத்திரமாக, "ராஜாவே நீடூழிகாலம் வாழ்க!" வென்று இரைச்சலிட்டு ஆர்ப்பரித்தது எனக்கு கேட்கவில்லேயா? ஒரு கிரீடத்திற்கென்று ஆடப்பட்ட சுலபமான

இச்சீட்டாட்ட பந்தயத்தில், கெலிப்பு கொடுக்கக்கூடிய மேலான சீட்டுகள் இப்போது என் கையிலில்லையா? கெலிப்பு கொடுக்கக்கூடிய அப்படிப்பட்ட சீட்டடுக்கை இப்போது நான் கொடுத்துத்தான் விடவேண்டுமா? முடியாது, முடியாது, சத்தியமாகவே, அப்படி யாரும் சொல்லமாட்டார்கள்.

**பான்ட்.**—நீ இவ்வலுவலின் வெளிப்புறத்தைத்தான் கவனிக்கின்ருய்.

**லூயிஸ்.**—வெளிப்புறமோ, உட்புறமோ, என்னுடைய விருப்பத்துக்கு எவ்வளவு நிச்சயமிருந்ததோ, அவ்வளவு என்னுடைய பிரயத்தனத்தால் நிறைவேறி, எனக்கு கீர்த்தி கிடைக்காதவனாயில், நான் திரும்பிப்போகமாட்டேன்; அப்படிப்பட்ட நிச்சயம் எனக்கு ஏற்பட்டபிறகுதான், உலகெல்லாந்தேடி, இப்படிப்பட்ட நெருப்புமய வீரிய வீரரை பொறுக்கி எடுத்து, வீரியம் சம்பூரணமாய் பொருந்திய இத்தலைமை பட்டாளத்தைக் கூட்டி, எப்படிப்பட்ட அபாயத்தினடுவிலும், மரணநிழலிலும் முதலாய் நிலைத்து நின்று, ஜெயத்தையே உற்று நோக்கி, பற்றிப்பிடித்து, கீர்த்தி சம்பாதிக்கும்பொருட்டு, சேகரித்திருக்கின்றேன்.

(தாரை சப்தம் செய்யவும்.)

எப்படிப்பட்ட உரத்த சப்த தாரை நம்மை நாடுகின்றது?

(பாஸ்ட்டாட் சிப்பந்திகளுடன் வருக.)

**பாஸ்ட்.**—உலக கிரம ஆசார முறைமையின்பிரகாரம், எனக்கு பேட்டி கிடைக்கவேணும்: மிலான் நகரத்து என் திவ்விய பிரபுவே, (106) ராஜாவிடமிருந்து, பேசுவதற்கென்று, நான் அனுப்பப்பட்டிருக்கின்றேன்; அவருடைய

(106) See Appendix.

காரியத்தை தாங்கள் எவ்விதம் தீர்த்திருக்கின்றீர்களென்பதை தெரிந்துகொள்ளும்பொருட்டு, நான் வந்திருக்கின்றேன், தாங்கள் எனக்களிக்கும் பதிலுக்குத்தக்கினாற்போல், எனக்கு கொடுபட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு நான் எந்தமட்டில் பேசி நிறுத்தவேணுமென்பதை, நான் தெரிந்துகொள்வேன்.

**பான்ட்.**—டாவீன், எதையும் ஒத்துக்கொள்ளாமல், ரொம்பவும் தன்மூப்பாய், ஏறுமாறு பேசுகின்றார், நான் வேண்டுவதை முதலாய் கவனியாமல் சாந்தமாகமாட்டேனென்று சொல்லுகிறார்: தன்னுடைய யுத்த கவஜங்களை கழட்டமாட்டேனென்றும், வியக்தமாய் சொல்லிவிட்டார்.

**பாஸ்ட்.**—வீராவேசத்தால் முற்றிலும் உஷ்ணமடைந்த இரத்தக் கொதிப்புடன்தான், இவ்வாலிபர் தக்க பதிலளித்திருக்கின்றார். இப்போது எங்கள் இங்க்லிஷ் ராஜா சொல்வதைக் கேளுங்கள்; எப்படியெனில், அவருடைய ராஜமாட்சிமை அடியில் வருமாறு, என் மூலியமாய்தான் பேசுகின்றது. அவர் யுத்தத்திற்கு தயாராகிவிட்டார், அப்படியவர் தயாராவதற்கு தகுந்த முகாந்தரமும் உண்டு: இந்த அலங்கோல வானர படையெழுச்சியையும், ஆயுதம் பூண்ட வேஷத்தையும், ஒழுங்கற்ற கேளிக்கையையும், (107) கொம்புமுளையாக்காளையின் குறும்புத்தன இறுமாப்பையும், அறியாப் பையன்கள் பட்டாளத்தையும், ராஜா பார்த்து, வாஸ்தவமாகவே சிரிக்கின்றார்; இத்தகைய நகைப்புக்குரிய போலியுத்தம் புரியவந்த பேடிகளை, அவர்களுடைய விளையாட்டு சிற்றாயுதங்களுடன், ராஜா தன்னுடைய எல்லைக் கப்பால் சவுக்காலடித்துத் துரத்த சித்தமாயிருக்கின்றார். உங்கள் வீட்டு வாசற்படியண்டையிலேயே, உங்களை தடி

(107) See Appendix.

யால் புடைத்து, உங்களை உள்ளே ஓடிப்புகுந்து, தாளிட்டுக் கொள்ளும்படிக்கும், தரைமட்டமாய் (108) *மறைந்திருக்கும் கிணறுகளில் வாளிகளைப்போல் மூழ்கும்படிக்கும், உங்கள் குதிராலாய பலகைகள்மீது குவிந்து கிடக்கும் குப்பையோடு செத்தையாய் பதுங்கிக் கிடக்கும்படிக்கும், பெட்டிகளிலும் பெட்டகங்களிலும்(109) சொக்கட்டான் காய்களைப்போல் பூட்டி வைக்கப்படும்படிக்கும், பன்றிகளோடு பன்றிகளாய் ஒட்டிக்கொண்டிருக்கும்படிக்கும், நிலவறைகளிலும், சிறைச்சாலைகளிலும் மனச்சஞ்சலத்தை நிவர்த்திக்கும் தஞ்சம் தேடும்படிக்கும், உங்கள் தேசத்துக் காகம் கத்தினாலும், ஆயுததாரியான இங்க்லிஷ் போர்வீரனுடைய குரலோசையோ வென்று நினைத்து பயந்து, நீங்கள் திடுக்கிடும்படிக்கும், நடுங்கும்படிக்கும்செய்ய அந்த கைக்கு சக்தியிருந்ததே, அப்படிப்பட்ட வெற்றிக்கை, உங்கள் உள்ளறைக்குள்ளாலேயே உங்களுக்குத் தண்டனை கொடுத்த அந்தக்கை, இங்கேதானா பலவீனப்பட்டு போய்விடும்? பரிச்சேதமில்லை, தன் கூட்டின் கிட்டத்தில் பிரவேசித்து, தனக்கு தொந்தரவு கொடுக்க முயலும் ஜெந்தின்மேல் விழுந்தமுக்கும் எண்ணத்துடன், தன்னுடைய ஆகாய கோட்டைகளில் வட்டமிட்டுக்கொண்டிருக்கும் கழுகைப்போல், எங்கள் பராக்கிரம வேந்தர் ஆயுதபாணியாய்விட்டாரென்பதை, தீர்க்கமாய் அறிந்துகொள்ளுங்கள். உங்களைத்தான், சீரழிந்த ஈனர்களே, ஓ, நன்றிகெட்ட கலகக்காரரே, ஓ,

---

* "ஆழ்ந்த பாழ்ங் கிணறானது அழகிய புல், பூ முதலியவற்றால் தன்னை மறைத்துக்கொண்டு அபாயத்துக்கிடமாயிருப்பது போல," "நெஞ்சில் நஞ்சும் நாவில் தேனும்" என்னும் தமிழ் வாக்கியங்களின் கருத்தை புலவர் அங்கீகரித்தார்போலும்.

(108) and (109) See Appendix.

குரூரகுண தாய்வதை ‡நீரோக்களே, உங்களுடைய பட்சமுள்ள தாயாகிய இங்கலன்ட் தேசத்தின் வயிற்றைக் கிழித்துக்கொண்டா வந்திருக்கின்றீர்கள், வெட்கங்கொண்டு நாணுங்கள்; ஏனென்றால் உங்களுடைய சொந்த பத்னிகளும், வெண்முக புத்திரிகளும், * அமேஸானென்னும் யுத்த வீரிய ஸ்திரீகளைப்போல், பேரிகை ஒலிக்குப் பின்னால், நடன நடை போட்டு நடந்துவருகின்றார்கள், தங்கள் கை விரல் அங்குஸ்தான்களுக்குப் பதிலாய் சங்கிலிப் பின்னல் யுத்த கைக்கோதைகளை அணிந்துகொண்டார்கள், தங்கள் கை ஊசிகளுக்குப்பதிலாய் ஈட்டிகளை பிடித்துக்கொண்டார்கள், தங்களுடைய கருணை நிறைந்த மனங்களை பயங்கரத்துக்குரிய இரத்தசேதஞ்செய்ய விருப்பமுடையவைகளாய் மாற்றிக்கொண்டார்கள்.

**லூயிஸ்.**—உன்னுடைய வீரியப்பேச்சை அவ்வளவோடு நிறுத்தி மரியாதையோடு திரும்பிவிடு; நீ தூஷிப்பதில் எங்களைவிட கெட்டிக்காரனென்பதை, நாங்களே ஒப்புக்கொள்கிறோம்: நானுனக்கு விடை கொடுத்துவிட்

---

‡ நீரோ என்னும் ரோமன் சக்கரவர்த்தி தன் தாயாகிய அக்ரிப்பீனா என்பவளை கொலைசெய்யும்படி உத்தரவு செய்தனனாம். கொலைஞர், அவள் படுக்கையை சூழ்ந்துகொண்டு அவர்களில் ஒருவன் தன் தண்டத்தால் அவள் தலையில் முதலில் அடித்தனனாம். பிறகு மற்றொரு கொலைஞன் அவளை குத்துவதற்கு அவனுடைய வாளை உருவியபோது அவளே அவன் கிட்டத்திலணுகி தன்னுடைய கருப்பையை குத்திக் கிழித்துவிடும்படி சொன்னாளாம். சக்கரவர்த்தியின் ஆணையின்படி கொலைஞர், பிறகு அவளை பல விதமாய் இம்சித்து கொன்றுவிட்டனராம்.

* க்ரீக் புராணங்களின்பிரகாரம் யுத்தாப்பியாசம் பயின்று யுத்தம் புரிந்த ஓர் ஜாதி யுத்த வீரிய ஸ்திரீகளுக்கு 'அமேஸான்' என்று பெயர்.

டேன்; எங்கள் நேரம் எங்களுக்கு ரொம்பவும் அருமையானது, அப்படிப்பட்ட நேரத்தை, இப்படிப்பட்ட அலப்புவாயனோடு வீணில் செலவழிக்கமுடியாது.

**பான்ட.**—நான் பேசுவதற்கு சாவகாசம் கொடுங்கள்.

**பாஸ்ட்.**—இல்லை, நான்தான் பேசுவேன்.

**லூயிஸ்.**—நாங்கள் உங்களிருவருக்கும் செவி கொடுக்கமாட்டோம். பேரிகைகளை அடியுங்கள்; போர் பேரோசையே நமக்குள்ள சுதந்தரத்தையும், நாமிங்கு வந்திறங்கியிருப்பதையும் பஹிரங்கப்படுத்தட்டும்.

**பாஸ்ட்.**—வாஸ்தவந்தான், உங்கள் பேரிகைகளை அடித்தவுடன் சப்தமிடும், அப்படியேத்தான் நீங்களும் அடிபட்டவுடன் சப்தமிடப்போகின்றீர்கள் என்பது நிச்சயம்: உங்கள் பேரிகைகளின் பேரொலிக்கு மாரொலி உண்டாகும்படிதான் செய்யுங்கள், ஏனென்றால் சமீபத்தில் தானே, ஓர் பேரிகை இழுத்துக் கட்டப்பட்டு தயாராயிருக்கின்றது, அப்பேரிகை உங்களுடையவைகள் செய்யும் இரைச்சலவ்வளவு எதிர்பேரிரைச்சல் செய்யும்; இன்னொருதரம் அடித்து இரைச்சல் செய்யுங்கள், இன்னொரு பேரிரைச்சல் உங்களுடையதுபோலவே உரத்ததாகவே கேட்கும், இவ்விரைச்சல் ஆகாயமண்டலத்திலுள்ளோர் காதையே நெறுநெறிக்கச்செய்து, பாதாள தொனியுள்ள இடிமுழக்கத்தை முதலாய் கேவலமென்று பழிக்கும்படியான சப்தமாயிருக்கும்: இதோ தயங்கி நிற்கின்ற ஸ்தானபதியை, எங்கள் மன்னர் விளையாட்டுக்கென்று விட்டனுப்பினரோ யொழிய, அவருடைய அவசியத்தை முன்னிட்டு விட்டனுப்பவில்லை, ஆகையால் இவர்மீது யாது நம்பிக்கையும்வையாது, யுத்த வீரிய ஜான்மன்னர் சமீபத்தில்தான் வந்திருக்கின்ற

னர்; அவருடைய நெற்றியில் வெறும் அஸ்தியாயிருக்கப்பட்ட மரணமே வீற்றிருக்கின்றது, அதற்கு இன்றைய உத்தியோகமென்னவென்றால், ஆயிரக்கணக்கான வ்ரஞ்ச் சுக்காரரை சாப்பிட்டு விருந்தாடுவதுதான்.

**லூயிஸ்.**—சரி, நம்முடைய பேரிகைகளை அடியுங்கள், இப்படிப்பட்ட அபாயத்தைதான் போய் காண்போம்.

**பாஸ்ட்.**—கட்டாயம் காண்பீர், டாவினே, அதைப் பற்றி சந்தேகப்படாதேயும்.

### மூன்றவது காட்சி.—போர்க்களம்.

*பேரிகை ஒலிக்கவும் ஜான் ராஜாவும் யூபர்ட்டும் வருக.*

**ஜான் மன்.**—யூபர்ட்டே, ஓ, சொல்லு. இன்றைய தின நடவடிக்கைகள், நம்பட்சம் எவ்விதம், நடந்தேறி வருகின்றன?

**யூபர்ட்.**—கெடுதலாய்தானென்று பயப்படுகின்றேன். தங்கள் ராஜ மகத்துவத்தின் தேக சௌக்கியம் எப்படி இருக்கின்றது?

**ஜான் மன்.**—இத்தனை நாளாய் உபத்திரவப்படுத்திக்கொண்டிருந்த ஜுரம் இப்போது கடுமையாயிருக்கின்றது; ஐயோ, என் மனமும் புண்ணுயிருக்கின்றது!

(ஒரு தூதன் வருகின்றான்).

**தூதன்.**—என்னிறைவ, தங்களுடைய பராக்கிரம பந்துவாகிய வால்கன் ப்ரிட்ஜ், தங்களை போர்க்களத்தைவிட்டு போய்விடும்படிக்கும், தாங்கள் எந்த பக்கம் போகின்றீர்கள் என்பதை என்மூலியமாய் தனக்கு தெரிவிக்கும்படிக்கும், கோருகின்றனர்.

**ஜான் மன்.**—ஸ்வின்ஸ்டட்டை நோக்கி, அவ்விடத்திலுள்ள மடாலயத்திற்கு போகின்றேனென்று, அவனுக்குத் தெரிவி.

**தூதன்.**—தாங்கள் மனத்தேர்ச்சியடையுங்கள்; ஏனென்றால், இங்குவந்து சேர்ந்து விடுமென்று டாவீனால் எதிர் பார்க்கப்பட்டிருந்த உபபல ராணுவ முதலியவை, மூன்றுநாளைக்கு முன்னமேயே, *குட்வின் மண்மேட்டில் கப்பற் சேதமடைந்து, கெட்டுப்போய்விட்டதாம். இச் செய்தி ரிச்சர்டுக்குதான் (110) கிடைத்தது: இப்பொழுது தானே, வ்ரஞ்ச்சுகாரர் வேண்டா வெறுப்பாய் சண்டை செய்துகொண்டு, பின்னிடைகிறார்கள்.

**ஜான் மன்.**—சுவாமி என்னை இரட்சிக்கவேணும்! இந்த கொடிய ஜுரம் என்னை எரிக்கின்றது, இவ்வானந்த சமாசாரத்தை நான் காதுகுளிர கேட்க, அது இடங் கொடுக்கவில்லை. ஸ்வின்ஸ்டட்டை நோக்கி புறப்படுங்கள்: என்னுடைய தோளாவுக்கு உடனே என்னை கொண்டு போங்கள்; எனக்கு களைப்பு உண்டாகிவிட்டது, எனக்கு மயக்கமாயிருக்கின்றது.

---

* குட்வின் என்பது ஒரு காலத்தில் நிலமாயிருந்தது. அது மகா பிரபுவான குட்வின் என்பவருக்கு சொந்தமாயிருந்தது. ஆகையால் அதற்கு அவருடைய பெயர் வாய்ந்தது. அங்கிலம் கென்ட் மாகாணத்தின், வடகோடியில் தெம்ஸ் ஆற்றின் முகத் துவாரத்துக்கருகில் இருந்ததாம். அது 1100-ம் ஆண்டில் கடலால் மூடப்பட்டுபோயிற்றாம்.

(110) See Appendix.

**நான்காவது காட்சி :—போர்களத்தின் மற்றோர் பக்கம்.**

*சாலிஸ்பரி, பெம்பரோக், பிகட்வருக.*

**சாலிஸ்.**—ராஜாவுக்கு இத்துகை சிகேகிதர்கள் ரகசியத்தில் இருந்தார்களென்று நான் நினைக்கவேயில்லை.

**பெம்ப்.**—இன்னொரு தரம் பிரயத்தனப்படுவோம்; வஞ்ச்சுக்காரரை உற்சாகப்படுத்தும்: அவர்களுக்கு கெடுதிநேர்ந்தால் நமக்கும் கெடுதிதான்.

**சாலிஸ்.**— தப்பறை வழியில் பிறந்த பிசாசாகிய அந்த வால்கன் ப்ரிட்ஜ் என்பவன், எப்படி தாக்கினும் சட்டை செய்யாது, இந்நாள் ஜெயம் தங்களுக்குதான் என்று, நிலைத்து நிற்கின்றான்.

**பெம்ப்.**—ஜான் ராஜாவுக்கு வியாதி முற்றி, போர்க்களத்தை விட்டுப்போய்விட்டதாக பேசிக்கொள்ளுகின்றார்கள்.

(காயப்பட்ட மெலன் பிரபுவை சிப்பாய்கள் பிடித்து நடத்திவருகின்றார்கள்.)

**மெலன்.**—இங்கிருக்கப்பட்ட இங்க்லன்ட் தேசத்து குழப்பக்காரரிடம் என்னை அழைத்துப்போங்கள்.

**சாலிஸ்.**—நாங்கள் க்ஷேமத்திலிருந்தபோது எங்களுக்கு வேறு பட்டமிருந்தது.

**பெம்ப்.**—மெலன் பிரபுதான் இவர்.

**சாலிஸ்.**—மரண காயமல்லவோ அடைந்திருக்கின்றார்.

**மெலன்.**—பறந்துவிடுங்கள், கௌரவம் பொருந்திய இங்க்லிஷ்காரரே, பறந்துவிடுங்கள், கசாயிக்காரன் ஆடு

மாடுகளை உட்படுத்தும் மோசத்துக்குதான் நீங்களும் உள்ளாகியிருக்கின்றீர்கள்; குழப்பமென்னும் மூரட்டு ஊசியிலிட்டிருந்த நூலை (111) உருவிவிடுங்கள், நீங்கள் விலக்கித் தள்ளியிருந்த ராஜபக்தியை, உங்கள் மனத்தின் கண், திரும்பவும் வருத்துவித்துக்கொள்ளுங்கள். ஜான் மன்னனைப்போய், தேடி கண்டுபிடியுங்கள், கண்டுபிடித்து, அவர் காலில் விழுங்கள்; ஏனென்றால் (112) வ்ரஞ்சுக்காரர், இவ்வமர்க்களப்பட்ட நாளின் அதிபதியாவார்களானால், நீங்கள் எடுத்துக்கொள்ளும் பிரயாசைக்கெல்லாம், பிரதி பலனாக, உங்கள் தலைகளையெல்லாம் வாங்கிவிட, டாவின் எண்ணியிருக்கின்றான்: இவ்விதமாய்தான் அவன் சத்தியஞ் செய்திருக்கின்றான், அவனோடு நானுந்தான் சத்தியஞ் செய்தேன், என்னோடு இன்னும் அநேகரும் சத்தியஞ் செய்தார்கள், அர்ச். எட்மன்ட் ஆலயத்தின் பீடத்திற்கு முன்பாகதான் நாங்கள் அவ்விதம் சத்தியஞ் செய்தோம்; அதாவது, எந்த பீடத்துக்கு முன்னால் உங்களுக்கு உண்மையுள்ள அன்பும், என்றுமாறு நேசமும் காண்பிப்போமென்று சத்தியஞ் செய்தோமோ, அந்தப் பீடத்துக்கு முன்னால்தான், மேற்கண்ட சத்தியமும் செய்தோம்.

**சாலிஸ்.**—இப்படிகூட இருக்குமோ? இதுவும் உண்மையாகுமோ?

**மேலன்.**—கொஞ்சம் போதும் உயிராத்தான் என்னிடம் நிறுத்தப்பெற்று பயங்கரமான மரணத்தை நான் பிரத்தியக்ஷமாய் பார்த்துக்கொண்டிருக்கவில்லையா? அந்தக் கொஞ்ச உயிரும், * மெழுகுபொம்மை நெருப்புக்கு

(111 & 112) See Appendix.

* இது மாந்திரியகாரர் செய்யும் ஓர்வித குட்டிர யுக்தி. அதாவது, தங்களுக்கு ஆகாதவர் யாராகிலும் சாகவேணுமென்று

முன்னே உருகி உருவழிவதுபோல் என்னிடமிருந்து ஓழுகிக்கொண்டிருக்கின்ற இரத்தத்தின் மூலியமாய், ஓடிக்கொண்டிருக்கவில்லையா? எல்லா வஞ்சகத்தாலும் அடையக்கூடிய (113) எல்லா பலனையும் இழக்கவேண்டிய தருணமாகிய இத்தருணத்தில், உலகத்திலுள்ள எப்படிப்பட்ட வஸ்து என்னை வஞ்சிக்கும்படி செய்யக்கூடும்? நான் இப்போது இறப்பது மெய்யாகவும், இனி எனக்கு மெய்யுலகத்தில்தான் ஜீவியமென்றிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், நானேன் பொய் பேசவேணும்? இன்னொருதரம் சொல்லுகிறேன், இனறையதினம் லூயிஸ் ஜெயத்தை அடைந்து, நீங்களும், இன்னொரு நாள் கிழக்கே விடிவதை, உங்கள் கண்களைக்கொண்டு பார்க்கும் பாக்கியம் உங்களுக்கு கிடைக்குமானால், அவன் பொய் சத்தியந்தான் செய்தவனாவான்: ஆகையால், இன்றிரவே, இரவுக்குரித்தான இருண்ட அசௌகரிய ஆகாயம், ஏற்கனவே, சூரியனுடைய எரியுங் கதிரைச் சுற்றிலும் சூழ்ந்துகொண்டிருக்கின்றது, அச்சூரியனே, பழமையானதாகவும், வெப்பந்தனிந்ததாகவும், நாளெல்லாம் பிரகாசித்து மங்கிப்போனதாகவுமிருக்கின்றது, ஆகவே, இதே ஆகாத இரவில்தானே, உங்கள் எல்லாருடைய சுவாசமும் பறந்துவிடும், அப்படி நீங்கள் உங்கள் சுவாசத்தை இழந்து இறப்பதானது, நீங்கள் பங்கு வீதமாய் உங்கள் சுய ராஜ்யத்திற்கு செய்த சதி மோசத்துக்கு, கடவுளாலேயே உங்களுக்கு

---

எண்ணங்கொண்டால், அவ்வாகாதவர்களைப்போல் மெழுகினால் ஓர் உருவமைத்து, அவ்வுருவத்தை நெருப்புக்கு முன்னால் காட்டி அது உருகி ஓடும்படி செய்வது அவர்கள் வழக்கம். அப்படி செய்வதால் அவ்வாகாதவருடைய உயிரும் உருகி ஓடிப்போகுமென்பது அவர்கள் கொள்கை.

(113) See Appendix.

விதிக்கப்பட்ட, தண்டனையாகும், உங்களுடைய உதவியைக் கொண்டுலூயிஸ் இன்றைய ஜெயமடைவானுனல்,உங்களெல் லாருடைய பிராணன்களெல்லாம் அவனுல் சதிமோச மாய் பறிக்கப்பட்டுதான், தண்டிக்கப்படுவீர்கள். உங்கள் ராஜாவிடமிருக்கின்ற யூபர்ட்டுக்கு என்னைப்பற்றி சொல் லுங்கள்: அவர்மட்டில் எனக்குள்ள அன்பை முன்னிட்டும், அதோடுங்கூட, இன்னொரு காரணத்தை முன்னிட்டும், அதாவது, என் பாட்டனர் இங்கிலீஷ்காரராயிருந்தார், ஆகிய இவ்விரண்டு காரணங்களுந்தான், மேற்கண்ட விஷ யங்களையெல்லாம் உங்களுக்கு தெரிவிக்கும்படி என் மனச் சாட்சியை தூண்டிவிட்டன. இவ்விஷயங்களை நான் உங் களுக்கு அறிவித்ததற்கு பிரதி உபகாரமாக, இப்போர்க் களத்தின் சந்தடியையும், இரைச்சலையும் விட்டுவிலகும் பொருட்டு, என்னை அப்புறம் கொண்டுபோங்கள், அவ் விடத்தில் எனக்கு பாக்கியாயிருக்கும் சொற்ப நேரத்தில் எனக்குள் உதிக்கக்கூடிய எண்ணங்களை, மனதை சமாதா னப்படுத்துவதிலும், தேவ தியானத்திலும், பேரின்ப ஆசை வகிப்பதிலும், சிந்தித்துக்கொண்டே, இந்த என் சரீரத்தைவிட்டு என் ஆத்துமத்தைப் பிரித்துக்கொள் வேன்.

**சாலிஸ்.**—தாங்கள் சொல்வதை நாங்கள் முற்றிலும் நம்புகின்ரேம்: ஆகையால்தான் என்னுயிரையே நடுங்கச் செய்கின்றது, ஆனல் இந்த மகா நேர்த்தியான சந்தர்ப் பத்தால் கிடைத்த அனுகூலத்தையும், அவ்வனுகூலம் கிடைத்த விதத்தையும் நினைக்கும்போது, என் மனதுக்கு திருப்தியைக் கொடுக்கின்றது; இச்சந்தர்ப்பத்தினுல்தான் நம்முடைய ராஜ்யத்தைவிட்டு ஓடிவந்துவிட்ட சபிக்கப் பட்ட ஓட்டத்தை தவிர்த்து, திரும்பவும் நம்முடைய ராஜ் யத்தை நோக்கி செல்லப்போகின்ரேம்: வெள்ளம் வடி

ந்து வாய்க்காலுக்குள் திரும்பும் நீரோட்டத்தைப்போல், தாறுமாறுனதும், கிரமமற்றதுமான போக்கைத் தவிர்த்து, நாம் கடந்துபோன அணைகளுக்குள்ளால் அடங்கி, அடிமட்டத்தில் நிர்சப்தமாயும், அமரிக்கையாயும் ஓடி, நம்முடைய மகா ராஜாவாகிய ஜான் மன்னனென்னும் மகா சமுத்திரத்தினிடம் நேராய் போய்ச் சேருவோம். தங்களை இதைவிட்டு தூக்கிக்கொண்டு போவதற்கு, என்கரங்களாலேயே தங்களுக்கு நான் உதவி செய்கின்றேன்; ஏனென்றுல் மரண வேதனை குறிகளை தங்களுடைய கண்களில் நான் (114) பிரத்தியக்ஷமாய் காண்கின்றேன். என்னுடைய சிநேகிதர்களே, புறப்படுங்கள்! இன்னெரு புதிய ஓட்டம்; நமக்கு பழைய சுதந்தரத்தையே கொடுக்கக்கூடிய பாக்கியமான புதுமையே.

### ஐந்தாவது காட்சி:—வீரஞ்சுகாரர் பாளையம்.

(லூயிஸ் தன்னுடைய பரிவாரங்களுடன் வருக.)

**லூயிஸ்.**—வானத்தின் சூரியன் அஸ்தமிப்பதற்கு இஷ்டப்படாமலிருந்ததுபோல் எனக்கு தோன்றிற்று. அஸ்தமிப்பதற்குப் பதிலாய் தயங்கி நின்று, (115) இங்கிலிஷ்காரர் சோர்வடைந்து, பின்னிடைவதற்காக அடிமேல் அடிவைத்து, பின்தாங்குவதைப் பார்த்து, நாணத்தால் மேற்கு மண்டலத்தை சிவக்கும்படி செய்துகொண்டிருந்தது. ஓ, நாமோ பராக்கிரம பெருமையுடன் திரும்பினேம், அப்போது சோறு மாரியாய் வீணில் அநேக வெடிகள் சுட்டு, அப்படிப்பட்ட இரத்தக் களறிவேலை முடிவு பெற்றதற்காக ராவந்தனம் கூறிவந்தோம், போர்க்களத்தின் அதிபதிகள், அநேகமாய், நாம்தான் என்கிற முறைமையில் கடைசிவரையில் அங்கிருந்து, (116) காற்றிலாடிக்கொண்டிரு

(114, 115 & 116) See Appendix.

ந்த நம்முடைய கொடிகளை (117) கவலையற்று சாவகாசமாய் இறக்கி, சுருட்டிக்கொண்டு வந்தோம்!

(ஒரு தூதன் வருகின்றான்.)

**தூதன்.**—எங்கள் ராஜகுமாரர் டாவீன் எங்கே?

**லூயிஸ்.**—இதோ இருக்கின்றேன் :—என்ன சமாசாரம்?

**தூதன்.**—மெலன் பிரபு கொல்லப்பட்டார்: அவருடைய தூண்டுதலால் இங்க்லிஷ் பிரபுக்களெல்லாம் திரும்பிப் போய்விட்டார்கள்; இத்தனை நாளாய் தாங்கள் எதிர்பார்த்திருந்த உபபலமடங்கிய கப்பல், குட்வின் மண்மேட்டில், கவிழ்ந்துடைந்து, மூழ்கிப்போய்விட்டது.

**லூயிஸ்.**—ஆ, ஊடுருவக்கூடிய கொடிய சமாசாரம்! என்னுடைய இருதயத்தையே துளைக்கும்படியான சமாசாரம்! இச்சமாசாரம் என்னை மகா துக்கத்துக்குள்ளாக்கி விட்டது, இல்லாவிட்டால், இன்றிரவு எனக்கு கிஞ்சிற்றும் துக்கமிருக்குமென்று நினைக்கவேயில்லை. நம்முடைய களைப்புற்ற ராணுவங்கள் கலையுமாறு தடைபோல் (118) குறுக்கிட்ட, இரவுதுடங்க இரண்டொருமணி நேரப்பொழுது இருக்கும்போதே, ஜான் அரசன் ஓடிவிட்டானென்று நம்மிடம் சொன்னவன் யார்?

**தூதன்.**—யார் சொல்லியிருந்தாலும், அச்செய்தி வாஸ்தவமே, என்னிறைவ.

**லூயிஸ்.**—நல்லது; இன்றிரவு அவனவன், தன் தன் ஸ்தானத்தில், தங்கியிருந்து, விழித்திருந்து காவல்செய்யுங்கள்; நாளையதின யுத்தம் எவ்விதம் நடந்தேறுமென்று பார்க்க, பொழுது விடிவதற்குமுன், நான் எழுந்துவிடுவேன்.

(117) and (118) See Appendix.

**ஆறவது காட்சி :—ஸ்வின்ஸ்டட் மடத்துக்கு பக்கத்தி லுள்ள வெட்டார வெளி.**

பாஸ்டட்ர்ட் ஒரு பக்கமிருந்தும், யூபர்ட் மற்ருெரு பக்கமிருந்தும் வருக. (இருள்.)

**யூபர்ட்.**—யாரங்கே? ஓ பேசு! சீக்கிரம் பேசு, இல்லாவிட்டால் சுடுவேன்.

**பாஸ்ட்.**—ஒரு சிநேகிதன் தான்.

(119) (**யூபர்ட்.**)—நீர் எந்தப் பக்கத்தைச் சேர்ந்தவர்?

(**பாஸ்ட்.**)—இங்க்லன்ட் பக்கத்தைச் சேர்ந்தவன் தான்.

(**யூபர்ட்.**)—நீர் எங்கே போகின்றீர்?

(**பாஸ்ட்.**)—அதைப்பற்றி உமக்கென்ன? நீர் என்னுடைய காரியத்தைபபற்றி விசாரிப்பதுபோல், நானேன் உம்முடைய காரியத்தைப்பற்றி விசாரிக்கக்கூடாது?

(**யூபர்ட்.**—அப்படியானல் நானெப்படி உம்முடைய சிநேகிதனுயிருக்கக்கூடும்?)

**பாஸ்ட்.**—யூபர்ட்டென்று நினைக்கின்றேன்.

**யூபர்ட்.**—நீர் நல்ல ஞாபக சக்தியுள்ளவராயிருக்கின்றீர்: உம்மால் எனக்கு என்ன (120) ஆபத்து சம்பவிக்கிறதாயிருந்தாலுங்கூட, நீர் என் சிநேகிதரோயென்று உறுதியாய் நம்பிவிட்டேன், ஏனென்றுல் என்னுடைய குரல் உமக்கு இவ்வளவு நன்றுய் தெரிந்திருக்கின்றது. நீர் யார், சொல்லும்.

**பாஸ்ட்.**—உனக்குத் தோன்றியபிரகாரம் வைத்துக் கொள்: உனக்கு இஷ்டமானல், நான் ஒருவழியில் பிளன்

(119), and (120) See Appendix.

டாஜனட் வம்சத்தில் தோன்றியவனென்று நிதானித்துக் கொண்டு, எனக்கு நீ நண்பனுயிரு.

**யூபர்ட்.**—கேடுகெட்ட ஞாபகமே! நீயும் (121) கண் தெரியாமற் போகச்செய்யும் இருண்ட இரவுங்கூடி என்னை அவமானப்படுத்திவிட்டீர்கள்: பராக்கிரம வீரரோ, என்னை மன்னிக்கவேணும், நான் தங்களோடு இவ்வளவு பழகின வனுயிருந்தும், தாங்கள் துதிக்க ஆரம்பித்த ஒரு இசையைக்கொண்டே நான் தங்களை தெரிந்துகொள்ளவேண்டிய வனுயிருக்க, நானிதுவரையில் தங்களை தெரிந்துகொள்ளாமற்போனது பிசகுதான்.

**பாஸ்ட்.**—சங்கதியைச் சொல்லு, சங்கதியைச் சொல்லு, உபசார வார்த்தைகளெல்லாம் வேண்டாம், ஊர் சமாசாரமென்ன?

**யூபர்ட்.**—அதற்கென்ன, உம்மை கண்டுபிடிக்கவேண்டியதற்காகத்தானே இக்காரிருளில் தேடித்திரிகின்றேன்.

**பாஸ்ட்.**—அப்படியானுல் சுருக்கமாய்ச் சொல்லு; என்ன சமாசாரம்?

**யூபர்ட்.**—ஓ, என்னினிமையான ஐயா, இவ்விரவுக்குத் தக்கின சமாசாரந்தான், இருண்டதும், பயப்படக்கூடியதும், கவலை கொடுக்கக்கூடியதும், திடுக்கிடக்கூடியதுமே.

**பாஸ்ட்.**—இத்துர்சமாசாரத்தின் ஆதிமூலபொருளையே எனக்குத் தெரிவி. நான் ஸ்திரீயல்ல; நான் மயங்கி விழுந்துவிடமாட்டேன்.

**யூபர்ட்.**—ராஜாவுக்கு ஒரு சன்னியாசி * விஷங்கொடுத்துவிட்டானே என்று வருந்துகின்றேன்: ஏறக்குறைய

(121) See Appendix.

* ஜான், ஸ்வினஸ்டட் மடாலயஞ் சேர்ந்தபோது, தானியம் ஏராளமாயும், அகவிலை சரசமாயுமிருப்பதாக கேள்விப்பட்டு வரு

பேச்சு விழுந்துபோன ஸ்திதியில், நானவரைவிட்டு பிரிந்து வந்தேன்; இவ்வாபத்தை உமக்கு கூடிய சீக்கிரத்தில் தெரிவித்து, இவ்வபாயத்திற்கு தக்க முயற்சி நீர் எடுக்கும் பொருட்டுதான், நான் ஓடிவந்தேன்; திடீரென்று சடுதியில் இச்செய்தி உமக்கு கிடைத்தால், உம்மால் ஒன்றும் செய்ய முடியாமற் போகுமென்கிற கவலையும் எனக்குள் மேலாடிற்று.

**பாஸ்ட்.**—விஷத்தை அவர் எப்படி சாப்பிட்டார்? அவருக்கு யார் ருசிபதம் பார்த்து கொடுத்தது?

**யூபர்ட்.**—ஒரு சன்னியாசியென்று சொல்லுகின்றேனே, அவன் தேறின ஓர் துரோகி, அவன் வயிறு உடனே வெடித்து இறந்தான்: ராஜா இன்னும் பேசிக்கொண்டுதானிருக்கின்றார், சில சமயம் பிழைத்தாலும் பிழைக்கலாம்.

**பாஸ்ட்.**—அவராகிய ராஜ மகத்துவத்தை, யாருடைய பராமரிப்பின்கீழ், விட்டுவந்தாய்?

**யூபர்ட்.**—உமக்குத் தெரியாதா என்ன? பிரபுக்களெல்லாம் திரும்பிவந்துவிட்டார்கள், தங்கள் கூட்டத்தில் என்ற்ரீ ராஜா குமாரனையும் அழைத்துவந்தார்கள்; ராஜ

---

த்தப்பட்டனராம். ஏனென்றால் இங்க்லிஷ்காரர் தனக்கு விரோதமாக தன்னுடைய சத்துராதி வ்ரன்ச் லூயிசோடு சேர்ந்துகொண்ட துரோகத்துக்காக அவர்களை பகைத்து, சகல துன்பங்களுக்கும் அவர்களை உட்படுத்தவேண்டுமென்கிற கெட்ட எண்ணங்கொண்டு, நீண்டகாலம் தானியங்கள் உயர்ந்த விலைக்கு விற்கப்படவேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்போகிறதாய் கோபத்தில் சொன்னாராம்: இதைக் கேட்டிருந்த ஓர் சன்னியாசி தன் தேசத்தினருக்கு நேர இருந்த சங்கடங்களை விலக்கக் கருதி, சாராயத்தில் விஷத்தைக் கலந்து, அதை தானும் சாப்பிட்டு, ராஜாவுக்கும் கொடுத்தனராம்.

குமாரன் கேட்டுக்கொண்டதின்பேரில் ராஜா அவர்களை யெல்லாம் மன்னித்துவிட்டார். அவர்களெல்லாரும் ராஜா வை சூழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

**பாஸ்ட்.**—வல்லப கடவுளே! உம்முடைய கோபாக் கினையை நிறுத்தும், எங்கள் சக்திக்கு மேற்பட்ட சுமையை எங்கள்மீது சுமத்தாதேயும்! யூபர்ட்டே, உனக்கு சொல் லுகிறேன் கேள், என்னுடைய †ராணுவத்தில் பாதி ராணு வம், இவ்வெட்டாரவெளி மணலில் செல்கையில், வெள்ள உப்பத்தில் அகப்பட்டுக்கொண்டது; இந்த லின்தான் அலை மோதல் குடாவில் மூழ்கிப்போய்விட்டது; நான்மாத்திரம், நல்ல குதிரையின்மேல் ஏறியிருந்தபடியால், வெகு கஷ்டத் துடன் தப்பித்தேன். எனக்கு முன்னாலே போ: ராஜா விடம் என்னை கூட்டிப்போ; நான் போவதற்குமுன் அவர் இறந்துவிடுகிறாரோவென்று எனக்கு பயமாயிருக்கின்றது.

**ஏழாவது காட்சி:—ஸ்வினஸ்டட் மடத்தின் கனிவர்க்க சோலை.**

(என்ற்ரீ ராஜ புத்திரன், சாலிஸ்பரி, பிகட் வருக.)

**என்ற்ரீ ராஜபுத்திரன்.**—கடந்த விஷமமாய் போயி ற்று; அவருடைய இரத்தமெல்லாம் விஷம்பற்றி கெட்டுப்

---

† இங்கு பாஸ்ட்டார்டின் ராணுவம் சேதமாய்விட்டதென்று சொல்லியிருப்பது சரியன்று. ஜான் ராஜாவே தன்னுடைய நாடு எப்பக்கத்திலும் பாழ்படுத்தப்படவே, தன்னுடைய சேனைகளை துரிதமாய் முன்னோக்கி செலுத்திக்கொண்டுவருகையில், இவ்வலை மோதல் பக்கம் வந்தபோது அச்சேனையின் பெரும்பாகம் குதி ரைகள், வண்டிகள் முதலியன மூழ்கிவிட்டன. அதனால் ஜான் கோவில்கள், மடங்கள் முதலிய தேவாலயங்களை கொள்ளையிட்ட டைந்த சொத்துகளைக்கொண்டு சேகரித்த யுத்த சைன்யங்க ளெல்லாம் இவ்விதம் அழியவேணுமென்பது தேவ தண்டனையே யென்று ஜனங்கள் தீர்மானித்தார்கள். ஷேக்ஸ்பியர் இச்சம்ப வம் பாஸ்டர்டுக்கு நேர்ந்ததாய் காண்பித்திருக்கிறார்.

போய்விட்டது; சிலர் அபிப்பிராயப்படுகிறபிரகாரம் ஆத்மாவின் கேவல வாசஸ்தலமாயிருக்கப்பட்ட அவருடைய (122) தெள்ளிய மூளை வெளிப்படுத்தும் வீண் வியாக்கியானங்களினால், அழிந்துபோகும் ஜீவியத்தின் முடிவை, முன்னாலேயே நிச்சயமாய் தெரிவிக்கின்றது.

(பெம்ப்ரோக் வருக.)

**பெம்ப்.**—மேன்மைதங்கிய அவர் இன்னமும் பேசிக்கொண்டுதானிருக்கிறார், தன்னை வெட்டார்வெளியில் காற்றோட கொண்டுவந்தால் தன்னை நிர்பந்திக்கும் கொடிய விஷத்தின் எரிச்சல்குணம் குறையுமென்று நம்பி அவ்விதம் அபிப்பிராயப்பட்டிருக்கின்றார்.

**என்ற். ரா. பு.**—அப்படியானால் இக்கனிவர்க்க சோலைக்கு கொண்டுவரும்படி செய்யுங்கள். இன்னமும் ஆர்ப்பரித்து கோபிக்கின்றாரோ?

(பிகட் செல்க.)

**பெம்ப்.**—தாம் அவரைவிட்டு வந்தபோது இருந்த நிலைமையைவிட ரொம்பவும் சாந்தமாயிருக்கின்றார்; இப்பொழுதுகூட பாடினார்.

**என்ற். ரா. பு.**—ஓ வியாதியின் இறுமாப்பே! வியாதியஸ்தர்களுக்கு (123) தங்கள் அந்த்ய சமயத்தில் தங்களுடைய நிலைமையை அறிய சக்தியிராது. மரணமானது உடலின் வெளி பாகங்களுக்குள்ள தத்துவத்தை முற்றிலும் போக்கி, அப்பாகங்களில் எவ்வித ஜீவ குறிப்பும் (124) புலப்படாமற் செய்து, இப்போது மனதைத் தாக்கி, அநேக அணி அணியான வீண் எண்ணங்களைக்கொண்டு குத்தித் துளைக்கின்றது, இவ்வெண்ணங்கள் அதி நெருக்க கூட்டமாய் கடைசி ஜீவ ஸ்தலமாகிய மனதை அழுத்துவ

(122, 123 and 124) See Appendix.

தால், அவைகளே குழம்பிப்போகின்றன. சாகிறவர்கள் பாடுவது ஓர் அதிசயமே. தன்னுடைய மரணத்திற்கு தானே தேவாரம் பாடும், வெளுத்துக் களைத்துப்போன அன்*னத்தின் அன்னப் பறவைகுஞ்சு நான்தான், இவ் வன்னம், தன்னுடைய பலவீனமடைந்த சுரகுழாவைக் கொண்டு, தன்னுடைய ஆத்மாவையும் சரீரத்தையும், அவைகளுடைய நித்திய இளைப்பாற்றிக்கு அனுப்பும் பாட்டு, பாடுகின்றது.

**சாலிஸ்.**—ராஜகுமாரா மனந்தேறும்; ஏனென்றால், தம்மால்தான், அவரால் பூர்த்திசெய்யப்படாமல், அமைப் பற்றும், சீர்குறைந்தும் இருக்கப்பட்ட விஷயங்கள், சீர் திருத்தமடைந்து, அவைகளை ஒழுங்குப்படுத்துவதற்காக தான், தாம் பிறந்திருக்கின்றீர்.

**பிகட் பிரபுவும் சிப்பந்திகளும் ஜான் ராஜாவை நாற்காலியில் வைத்து தூக்கிக்கொண்டு வரவும்.**

**ஜான் மன்.**—ஆம், மெய்யாகவே இப்போது என்னுடைய ஆத்மாவுக்கு வேண்டிய அளவு இடம் கிடைத்து விட்டது; அது இப்போது ஜன்னல்வழியாலாகிலும், கதவு வழியாலாகிலும் வெளிப்பட அவசியமில்லை. என் வயிற்றினுள் எப்படிப்பட்ட உஷ்ண வேனிற்காலம் அடங்கியிருக்கின்றதென்றால், என் குடல் முதலியன சாம்பலாய்ப்போய் உதிர்கின்றன: நான் ஓர் தோல் பத்திரத்தில், ஒரு எழுதுகோலால், வரையப்பட்ட சீரற்ற சித்திரமானேன், ஆகையால் இப்படிப்பட்ட நெருப்புக்குமுன்னால், நான் சுருங்கிப் போகின்றேன்.

* அன்னப்பறவை, தான் இறக்கும் சமயத்தில் பாட ஆரம்பித்து, பாடிக்கொண்டே இறந்துபோகுமென்பது பழைய புராண கதை.

**என்ற். ரா. பு.**—தங்கள் ராஜ மகத்துவத்தின் சௌக்கியமெப்படி?

**ஜான் மன்.**—விஷங்கொடுபட்டேன்,—கஷ்ட நிலைமையிலிருக்கின்றேன்—இறக்கும் சமயத்தில் இருக்கின்றேன், கைவிடப்பட்டேன், தூக்கியும் எறியப்பட்டேன்: நீங்கள்யாரும் சீதள காலத்தை வரும்படி செய்து அதனுடைய பனிக்கட்டியா லமைந்த விரல்களை என்னுடைய இரைப்பையில் நொழுந்தும்படி செய்யவுமாட்டீர்கள், அல்லது என் ராஜாங்கத்திலுள்ள ஆறுகளையெல்லாம், பற்றி எரிகின்ற என் வயிற்றின் வழியாய், ஓடும்படி செய்யவுமாட்டீர்கள், அல்லது வடதிசையை மன்றாடி அதன் குளிர்காற்றையாகிலும் என்னுடைய உலர்ந்து வறண்டுபோன உதடுகளின்பேரில் வீசும்படியாவது செய்யமாட்டீர்கள், ஆகவே, எவ்வித குளிர்ச்சி சுகமும் எனக்கு நீங்கள் கொடுக்கமாட்டீர்கள். நான் பெரிய விஷயம் யாதொன்றும் கேட்கவில்லை, சொற்பமாகிய (125) குளிர்ச்சி சுகந்தான் நான் கேட்கின்றேன்; நீங்கள் எப்படிப்பட்ட லோபிகளும், எவ்வளவு நன்றிகெட்டவர்களாயுமிருக்கின்றீர்களென்றால், எனக்கு அந்த சொற்ப சுகத்தைமுதலாய் கொடுக்கமாட்டோமென்கிறீர்கள்.

**என்ற். ரா. பு.**—ஓ என் கண்ணீரிலாவது, தங்களுக்கு ஆறுதல் கொடுக்கக்கூடிய சக்தி இருக்கவேணுமென்று விரும்புகிறேன்!

**ஜான் மன்.**—உன் கண்ணீரிலுள்ள உப்பு உஷ்ணமானது. எனக்குள் ஒரு நரகமே இருக்கின்றது; அங்கே விஷமாகப்பட்டது, சுத்தி செய்யக்கூடாத என்னுடைய

(125) See Appendix.

கெட்டுப்போன இரத்தத்தை, கொந்தளிக்கச் செய்து, வாதிக்கும், அடைபட்ட பிசாசாயிருக்கின்றது.

(பாஸ்ட்டார்ட் வருக.)

**பாஸ்ட்.**—தங்கள் ராஜ மகத்துவத்தை காணவேணுமென்கிற அபேட்சையின் படபடப்பினாலும், ஓடிவந்த அவசர வேகத்தினாலும் நான் வெந்துபோகின்றேன்!

**ஜான் மன்.**—ஓ தம்பி, நீ என் கண்ணை அதக்கி மூடுவதற்குதான் வந்துசேர்ந்தாய்: என்னிருதயத்தின் கப்பியும் கயிறும், ஓடிந்தும், அறுந்தும், எரிந்தும்போயின; என்னுடைய ஜீவியமென்னும் கப்பல் ஓடுவதற்காக ஏற்பட்டிருந்த அண்டை பிடிப்பு கயிறுகள் அத்தனையும் அறுந்துபோய், அப்பாய்மரம் ஒரு நூல், அல்ல, ஒரு சின்ன மயிரிழை பிடிப்பில்தான் நிற்கின்றது: ஆகவே, என்னிருதயம் ஓரே அற்ப கயிற்றில்தான் தொங்கிக்கொண்டிருக்கின்றது, அக்கயிறும், நீ உன் சமாசாரத்தை சொல்லுகிறவரையில்தான், தாங்கிக்கொண்டிருக்கும்; அதன் பிறகு, நீ பார்க்கும் இவ்விராஜ மகத்துவம் வெறும் மண்ணுங்கட்டிதான், பாழாய்போன ராஜ மாட்சிமையின் உதாரணந்தான்.

